சூடிய பூ சூடற்க



நாஞ்சில் நாடன்

http://www.pustaka.co.in

சூடிய பூ சூடற்க

Soodiya Poo Soodarka

Author:

நாஞ்சில் நாடன்

Nanjil Nadan

For more books

http://www.pustaka.co.in/home/author/nanjil-nadan

Digital/Electronic Copyright © by Pustaka Digital Media Pvt. Ltd.

All other copyright © by Author.

All rights reserved. This book or any portion thereof may not be reproduced or used in any manner whatsoever without the express written permission of the publisher except for the use of brief quotations in a book review.

பொருளடக்கம்

1. ஈண்டு முயலப்படும்

2. கொங்கு தேர் வாழ்க்கை

3. வளைகள் எலிகளுக்கானவை

4. யாம் உண்பேம்

5. கதை எழுதுவதன் கதை

6. கடவுளின் கால்

7. படுவப் பத்து

8. பரிசில் வாழ்க்கை

9. கும்பமுனி முறித்த குடைக்காம்பு

10. தன்ராம் சிங்

11. செம்பொருள் அங்கதம்

12. தேர்தல் ஆணையத்துக்கு திறந்தவெளிக் கடிதம்

13. சங்கிலிப் பூதத்தான்

14. பழி கரப்பு அங்கதம்

15. மணமானவருக்கு மட்டும்

1. ஈண்டு முயலப்படும்

இரண்டாயிரத்து ஐந்து வரை எழுதியவை, கீறிக் களையாமல் வைத்திருந்த எண்பதும், 'நாஞ்சில் நாடன் கதைகள்' எனும் தலைப்பில் தொகுப்பாகி ஈராண்டுகள் ஆகிவிட்டன. எனது பணி நிறைவுக்கும் அதுவே நிலை. மற்றெவரையும் போல, 'நித்தம் நியமத் தொழிலராய் நிறையும் ஞானத்து உத்தமர் உறங்கினார், யோகியர் துயின்றார்' என ஓய்வெடுக்கத்தான் உண்டு.

திகைப்பும் சோர்வும் இயலாமையும் தோல்விகளில் சுய வெறுப்பும் ஆட்கொண்டிருந்த முந்தைய நாட்களில், நண்பரும் வியந்து நிற்கும் படைப்பாளியுமான ஜெயமோகன் எனக்குச் சொன்னார் - ஒரு சாதாரண சிறுகதை எழுத்தாளன் போல நிறைவு கண்டு நின்று விடலாகாது என்றும் படைப்பாளிக்கு அனுபவமும் வாசிப்பும் பக்குவமும் உச்சத்திலிருக்கும் காலகட்டமான இந்த வயதை வெறிதே தொலைத்துவிட வேண்டாம் எனவும்.

எனக்குள் ஊறிப் படர்ந்தது அது. இந்த ஈராண்டுகளில் பதினேழு சிறுகதைகளும் அதில் பாதியளவு கட்டுரைகளும் எழுத முடிந்ததன் பின்னணி அது. எனது முப்பத்திரண்டாண்டு இலக்கியப் பயிற்சியில் எப்போதும் இத்தனை வேகத்துடன் செயல்பட்டதில்லை. அணைகிற விளக்கு படர்ந்து எரியும் என்று கொண்டாலும்கூட ஒன்றும் மூழ்கிப் போய்விடாது.

தெரிந்தவை, அறிந்தவை, அனுபவப்பட்டவை எல்லாவற்றையும் இறக்கி வைத்துவிட்டு, காலியானதொரு பாத்திரமாக ஆகிவிட வேண்டும் என்பது எனது ஆசை. கம்பன் சொல்வது போல் 'பின்னை நின்று எண்ணுதல் பிழை.

ஆக, 'சூடிய பூ சூடற்க' எனும் தலைப்பில் புதிய கதைகள் பதினைந்து இங்கு தொகுப்பாகின்றன. ஒரு கணக்கில் எனது பதினேழாவது புத்தகம் இது. இன்னொரு கணக்கில் முதல் புத்தகம்.

வாசக, எழுத்தாள நண்பர்கள் பலர் சொன்னார்கள், சமீப கால எனது எழுத்துக்களில் இலேசான கசப்புத் தொனிக்கிறது என, அது இலேசான கசப்பு அல்ல, சமீப காலத்தியதும் அல்ல.

மூன்று வயதுப் பிராயத்தில், ரமண மகரிஷி தேன் சொட்டு ஒன்றைத் தொட்டு வைத்தார், கான சரஸ்வதி பட்டம்மாள் நாவில் என்பார்கள். எனில் என் நாவில் கசப்பைத் எவனென்று நெடுங்காலம் தேடிக்கொண்டிருக்கிறேன்.

கடுங் கசப்பு அது. கருப்பானது, அடர்த்தியானது,எண்ணெய்ப் பிசுக்குக் கொண்டது, கொல்வதது ஆலகாலம் உண்ட திருநீலகண்டன் மிச்சம் வைத்த நஞ்சு அது. எல்லாக் கலைஞர்களின் தொண்டையிலும் பங்கு பங்காகத் தங்கி நிற்பதது. பாற்கடலே ஆனாலும், மந்தார மலை மத்தே ஆனாலும், ஆதி சேடப் பாம்பு வடமே ஆனாலும் கடைந்தவர் வலுமிக்க தேவரும் அசுரரும் ஆனாலும், மொத்த நஞ்சும் திரண்டு வந்துவிட்டது என்றும் வாரி உண்ணப்பட்டு விட்டது என்றும் எதுவும்மிச்சமில்லை எனவும் கொள்ளலாகுமா?

சமூகம் எனும் பாற்கடலில் கரந்திருக்கும் படர்ந்திருகும் மிச்ச நஞ்சைத்தான் கலைஞன் அவனவன் பலத்துக்கும் பொறுமைக்கும் தக்க கடைந்து உண்டு கொண்டிருக்கிறான். அது மனித குலத்தை நஞ்சிலிருந்து காக்கும்; மீட்கும் முயற்சி. சில போதுகளில் படைப்பில் துளிகள் கலந்து வந்து விடுவது அவனது கவனக் குறைவினால்தான். உங்களை வந்தடையும் அந்த விடத்தின் கசப்பைப் பிரித்தெடுத்து உமிழ்ந்து விடலாம், அல்லது உண்டு படைப்பாளி கொள்ளும் பேரவலத்தின் சிறு பங்கைப் பாவிக்கவும் செய்யலாம்.

சில சமயம் தோன்றுகிறது, கண்டத்தில் சிக்கிக்கொள்ளும் கசப்பை விழுங்க ஒண்ணாமல் உமிழ்ந்து விடுகிறேன் என. அதற்ககாவே தேர்ந்த்த கதாபாத்திரம் கும்பமுனி. கும்பமுனி என்பவர் நேற்றைய நான், இன்றைய நான், நாளைய நான். உங்களைக் குலுங்கிச் சிரிக்க பவைக்கவோ, குதூகலப்படுத்தவோ, நானொரு எழுத்தாளன் அல்லன்.

மனித குலம் தீது சூழ்ந்து கிடக்கிறது. ஆனால் அது பற்றியே போத மற்றும் கையாலாகாமலும் வேடிக்கை பார்த்துக்கொண்டும் கேளிக்கைகளில் ஈடுபட்டும் கிடக்கிறது. தமக்கு கேன்சர் வராது, மாரடைப்பு வராது, சாவு வரவே வராது எனுமோர் மூடநம்பிக்கையில் மூழ்கி கிடக்கிறது. உருதுக் கவிஞன் ஒருவன் சொன்னான், அனைத்து வீட்டு வாசல்களில் இருந்தும் கண்ணுக்குப் புலப்படாத தடம் ஒன்று கப்ருஸ்தானை நோக்கிச் செல்கிறது என

அதிகாரம் கொண்டவர் அனைவரும் புறப்பாதுகாப்புக்களால்

சூழப்பட்டவர். ஆனால் பால் வாங்க, மருந்து வாங்க, பள்ளிக்குப் போய்த் திரும்பும் சிறுவரைக் கொணர, சோற்றுக்கு வழி பார்க்க, சாலையில் இறங்கி நடக்கும் நாம் எப்போது வேண்டுமானாலும்,எங்கு வேண்டுமானாலும் சாலை விபத்தில், குண்டு வெடிப்பில் சிதறிப் போகலாம். உமது காலென்று எண்ணி பிறதொரு மனிதக் காலைப் பொறுக்கிக்கொண்டு போக நேரலாம், சந்ததியினர் ஈமக்கடன் செய்ய. எந்த நொடியிலும் முன்னறிவிப்பு இன்றிப் புறப்பட்டுப் போகத் தயாராக இருங்கள் நண்பர்களே உங்கள் தேசத்தின் அரசியல் தீர்மானங்களை நீங்கள் எடுப்பதில்லை. உங்கள் நாட்டுக்கும் இன்னொரு நாட்டுக்கும் என்ன சிக்கல் என்றே உங்களுக்குத் தெரியாது. ஆனால் விலையை நீங்கள் சம்மதமின்றியே கொடுத்துக் கொண்டிருக்கிறீர்கள்.

எனவே கொடுக்கல் வாங்கல்களை இந்தக் கணம் வரைக்கும் சரி பார்த்து வைத்துக் கொள்ளுங்கள். நட்பை, உறவை எப்போது சந்தித்துத் திரும்பினாலும் அதுவே கடைசிச் சந்திப்பாக இருந்துவிடலாம் என்றெண்ணிக் கொள்ளுங்கள். சந்ததியினருக்கு உபதேசங்களை முன்பேறாக மொழிந்து விடுங்கள். நாளை என்பது நமனது நாளே! அதிகார வர்க்கத்தைப் பற்றி நீங்கள் அக்கறை கொள்ளத் தேவையில்லை, அவர்கள் எப்போதும் புறப்பாதுகாப்பைச் சிந்தித்து வாழ்பவர். கும்பமுனிக் கதைகளை அவ்வப்போது வாசித்துவிட்டுச் சில நண்பர்கள் கேட்கிறார்கள், போதாதா தோழரே, நிறுத்துக் கொள்ளக் கூடாதா என என்னால் சீரணிக்க முடியாத கசப்பை எப்படி உள்ளே வைத்துக்கொண்டிருப்பது? வாந்தியாக, மல மூத்திரமாக, வியர்வையாக, வளியாக அது வெளிப்பட்டுத்தானே ஆக வேண்டும்?

வேறு சில நண்பர்கள் சொன்னார்கள், சமீப காலமாய் எனது கதைகளில் கட்டுரைத் தன்மை வெளிப்படுகிறது என.

‘கடல் ஞாலம் செய்தேனும் யானே என்றும்

கடல் ஞாலம் ஆவேனும் யானே என்றும்’

எனும் திருவாய்மொழி ஞாபகம் வருகிறது எனக்கு. எல்லாம் அறிந்து செய்கிற வேலைதான். கட்டுரைகளும் கதை போல வாசிக்கப் பெற வேண்டும் எனும் கொள்கை உடையவன் நான். மேலும் கதைக்கும் கட்டுரைக்குமான ஆளுயரத் தடுப்புச் சுவர் இற்றும் இடிபட்டும் சிதிலமாகியும் வருகிறது தற்சமயம். எனினும் வாசிப்பு அனுபவத்துக்கு அது ஊறாக இருக்கிறது எனில் பிழை பொறுக்க!

படைப்பாளி எப்போதும் தன்னை நிரூபித்துக்கொள்ள வேண்டும் என்கிறார்கள். எதை நிரூபிக்க என்பதில் எனக்கு மயக்கமுண்டு. மேலும் ஆண்டுக்கு ஒருமுறை அளவுகோல்கள் சட்டப்படி சான்றிதழ் பெறும் விஷயமுமல்ல இது. அதற்கு ஈண்டு நான் முனையவும் இல்லை. ஆனால் நல்ல கதைகள் எழுத மீண்டும் முயன்று வருகிறேன்.

இந்தத் தொகுப்பு வெளியாகக் காரணமாக இருக்கும் 'தமிழினி' வசந்தகுமார் எனும் நட்பு, முகப்பும் அமைப்பும் செய்தவர், அச்சகத்தார் யாவர்க்கும் நன்றி.

மிக்க அன்புடன்

நாஞ்சில் நாடன்

***

2. கொங்கு தேர் வாழ்க்கை

லைன் வீடென்று சொல்வாரிங்கு. ஒருவேளை சென்னையின் ஸ்டோர் வீடுகள் இப்படித்தான் இருக்குமோ தெரியவில்லை. முதலில் நாற்பது அடி அகலமும் அறுபதடி நீளமும் கொண்ட காலிப் புரையிடம் ஒன்றை நினைவில் கொண்டுவரலாம். அதாவது ஒரு கிரவுண்ட் அல்லது ஐந்தே கால் சென்ட். தெருவில் இருந்து மனையின் அகலப் பக்கத்தின் நடுவில் முன்வாசல். தொடர்ந்து ஐந்து அடி அகலத்தில் பொதுவான நடைபாதை. அதுவே புழங்குமிடம் மொத்த லைனுக்கும். நடக்க, தண்ணீர் கோர, சைக்கிள் அல்லது டி.வி.எஸ்.50 நிறுத்த, ஓடை தள்ளும் கம்பு சாத்த, சீமாறு வைக்க. நடைபாதையின் இருபுறமும் லைன் வீடுகள். பக்கத்துக்கு ஐந்து அல்லது ஆறு. வீட்டுக்காரனின் மனோதர்மத்துக்கும் மன விசாலத்துக்கும் தகுந்தபடி. நடைபாதையில் இருந்து ஒரேயொரு படி ஏறினால் நீங்கள் ஒரு லைன் வீட்டுக்குள் ஏறிவிடலாம்.

எடுத்துக்காட்டாக பக்கத்துக்கு ஐந்து என மொத்தம் லைனுக்குள் பத்து வீடுகள் என வைத்துக்கொண்டால், முன்வாசல் கடந்து நுழைந்தவுடன், நல்ல தண்ணீர் தொட்டி ஒன்றும் உப்புத் தண்ணீர் தொட்டி ஒன்றும் தளத்துக்குக் கீழே இருக்கும். அதை சம்ப் என்றும் சொல்வார்கள். தெற்குப் பார்த்த வாசல் என்று கொண்டால், நுழைந்தவுடன் இடது கைப்பக்கம் தண்ணீர்த் தொட்டி என்றால் தொடர்ந்து பொதுச் சுவர் வைத்து ஐந்து வீடுகள். நடைபாதையைப் பார்த்து ஒரு கதவும் சன்னலும். வேறு சன்னல்கள் கிடையாது. வலது கைப்பக்கம் கோடியில் இரண்டு கக்கூஸ், குளிமுறி. மொத்த லைனுக்கும் மோட்டுக் கூரை போலக் கிடையாது. அடுத்தமனையில் வாரி வெள்ளம் விழக்கூடாது, சன்னல் திறக்கக் கூடாது என்பதால் நடைபாதையை நோக்கிச் சாய்ந்த கூரைகள். வானத்தை நோக்கியபடி மூடிய நாற்பதுக்கு அறுபது கதவு பாதிக்குப் பாதியாக உள்நோக்கித் திறந்ததுபோல். கிட்டத்தட்ட பொருளாகிறதா? இங்கொரு வரைபடம் போட்டுக் காட்ட ஆசைதான். பொம்மை போடுவதை விட அது உகந்ததுதான். எனினும் சாத்தியமில்லை என்பார்கள். பொம்மைக்கு மாற்றுச் சொல்ல இயலுமா?

லைன் வீடு எனில் முதலில் பத்துக்குப் பத்தில் ஒரு முறி. பத்துக்குப் பத்து எனும்போது இடைச் சுவர்களின் கனம் முக்காலடிவீதம் நீளவாக்கிலும் அகலவாக்கிலும் கழித்துக்கொள்ள வேண்டும். அதுவே வரவேற்பறை, ஹால், டைனிங், படுக்கை, பூஜை, விருந்தினர், ஓய்வு அறைகள்.

எப்பெயரிலும் அழைக்கலாம். எந்தப் பெயரிட்டு அழைத்தாலும் இறைவன் ஏகன் தானே!

அடுத்தது பத்துக்கு ஏழில். வீட்டின் ஒரு மூலையில் சமையலறையும் இன்னொரு மூலையில் மோரி அல்லது அங்கணம். நப்போல் வளை. அதில் பாத்திரங்களைப் போட்டுக் கழுவலாம். சுவரில் தொங்கிய கண்ணாடி பார்த்து முகம் வழிக்கலாம். பல் தேய்த்து, வாய் கொப்பளித்து முகம் கழுவலாம். சாப்பிட்டுக் கைகழுவலாம். மீன் முள் தொண்டையில் நின்றால் காறிக் காறித் துப்பலாம். இரவு நேரங்களில் ஒன்றுக்குப் போகலாம். உட்கார்ந்து துணி அலசலாம்.

சமையல் மேடைக்கும் அங்கணத்துக்கும் நடுவில் சிமன்ட் தொட்டி மூடியுடன். அல்லது செல்வாக்குடைய குடித்தனக்காரர் எனில் டிரம் பக்கத்தில் குடி தண்ணீர் நிறைந்த பித்தளை அல்லது செம்பு அல்லது கருக்காத இரும்பு அண்டாக்கள். பிளாஸ்டிக் குடங்கள், பிளாஸ்டிக் பக்கட், அலுமினிய வாளி, கக்கூசுக்குத் தண்ணீர் கொண்டு போகும் சின்ன வாளி. வெந்நீர் போட அலுமினியக் குண்டான். அடுப்புக்கு பக்கவாட்டில் சற்று உயரமாக ஒரு ஸ்டான்ட் அதில் தட்டு, கரண்டி, தம்ளர், கிண்ணம், சின்ன டப்பா, பாட்டில் . சுவரோடு சேர்ந்து ஒரு செல்ஃப். அதில் கடுகு, உப்பு, குருமிளகு, உளுந்தம் பருப்பு, துவரம்பருப்பு, அரிசி, சீனி, தேத்துள், கோதுமை மாவு…

அடுப்பு மேடைக்குக் கீழே வெங்காயம், உருளைக்கிழங்கு, பூண்டு கிடக்கும் கூடை, காய்கறிக் கூடை, அரிவாள்மணை, திருவலைக் குத்தி, முறம் எனும் சுளவு, பிரம்புக் கூடை, குக்கர், மிக்ஸி, சமையல் பாத்திரங்கள், இட்லிக் குட்டுவம், உட்காரும் உக்காரும் மணை.

முன்னறையில் ஒற்றைக் கட்டில், சிறிய மேசை, அதன்மேல் டி.வி. அல்லது டேப் அல்லது டிரான்சிஸ்டர். கட்டிலின் கீழே சுருட்டிய படுக்கை, இடுப்பளவு அல்லது முக்கால் சைஸ் பீரோ….

கணவன், மனைவி, இரண்டு குழந்தைகள் எனும் எண்ணத்துக்கு உள்ளே இருந்தால் மட்டுமே வாடகைக்குக் கிடைக்கும். இரண்டு குழந்தைகளுக்கு மேலே இருந்தால் வீடு கொடுப்பதில்லை என்பதில் அரசாங்கத்தை விடக் கெடுபிடியாக இருந்தனர் வீட்டுக்காரர்கள். வாடகைக்கு வரும்போது குடிவருவோரின் மொத்த எண்ணிக்கை நாலுக்குள்தான் என்றாலும், உத்தேசமாய் இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளுக்குள் இறந்து போகலாம் என்று எண்ணத்தக்க

வயதானபெற்றோர் இருந்தாலும் லைன் வீடுகள் வாடகைக்குத் தரப்பட மாட்டா.

இதற்குள் எப்படி ஐயா நான்கு பேர் போக்குவரத்து நெரிசல் இல்லாமல் வாழமுடியும் என்ற வினா கிளைத்துப் பெருகுகிற வாசக அன்பர்கள் ஒன்றை மனதில் கொள்ள வேண்டும். மும்பையில் தாராவியில், கோவண்டியில், சுன்னாபட்டியில், மான்கூர்டில், கோலிவாடாவில் இந்த லைன் வீட்டை மூன்றாகப் பிரித்து வீட்டுக்கு எட்டுப்பேர் ஆணும் பெண்ணுமாய் குழந்தையும் முதியவருமாய் தாயும் பிள்ளையுமாய் பிழைத்து வாழ்வார்கள். மனசிருந்தால் புளியிலையில் கூடமூன்று பேர் புரண்டு படுக்கலாம்.

பெரிய பூட்ஸ் ஒன்றினுள் குடித்தனம் நடத்திய கதை ஒன்று நம்மிடம் ஏற்கனவே உண்டு. உடம்பாடு இலாதார் வாழ்க்கை தான் குடங்கருள் பாம்பொடு உடன் உறைந்தற்று. லைன் வீட்டுக்காரர்கள்என்னதான் முன்னூற்று அறுபத்தாறு பிரிவுகளும் உப பிரிவுகளும் துணைப்பிரிவுகளும் பிற்சேர்க்கைகளும் கொண்ட வாடகைக் குடியுரிமை சட்டங்கள் செய்தாலும் உச்ச நீதி மன்றத்தின் துணை கொண்டு தம்பதியர் புணர்ந்தனர், கர்ப்பமுற்றாள், குழந்தை ஈன்றாள், பிறந்த நாள் கொண்டாடினர், நோயுற்றனர், நோய்நீங்கினர், மரணமுற்றனர், விருந்தினர் வந்தனர், பெண் குழந்தைகள் சமைந்தன, லைனுக்குள் சண்டை இட்டனர், சமாதானம் ஆயினர், தக்காளியும் தோசைமாவும் கடன் கொடுத்தனர், மீன் குழம்பு செய்து கிண்ணத்தின் மேல் கிண்ணம் வைத்து மூடிக் கொடுத்தனர். எல்லாம் இன்பமயம்.

நான் குடியிருக்கும் வீட்டின் எதிர்முகத்திலும் பக்கவாடுகளிலும் ஏழெட்டு லைன்கள் இருந்தன. நான் இருப்பதும் ஏகதேச உருவகமாக லைன் வீடுதான். எனினும் முதல் மாடியில் தனிப் பங்கு. எழுத, படிக்க, பாட்டுக் கேட்க, உறங்க, உரையாட மனமில்லாதபோது வெளி வராந்தாவில் போய் நிற்பேன். சட்டை கூடப் போடாமல், மன்னர்கள் உப்பரிகையில் நின்று குடிபடைகளைப் பார்வை இடும் தோரணையில், எழுத்தாளன் என்பதால் அக்கம்பக்கத்தில் யாரோடும் உரையாடும் வழக்கம் இல்லை. இந்த பதினான்கு ஆண்டு லைன் வாசத்தில் சிலர் மட்டும் அபூர்வமாய் எனது மோனோலிசா புன்னகை பெற்ற பாக்கியவான்கள். முதல் மாடி வராந்தாவில் நின்று வேடிக்கை பார்ப்பவனை எந்தக் கதாபாத்திரமும் பொருட்படுத்துவதுமில்லை. வேடிக்கை பார்ப்பேன் என்று நான் சொல்வதை எனது மனைமாட்சி

வாய்பார்ப்பேன் என்று சொல்வாள். வேடிக்கை பார்ப்பதற்கு குறிப்பாக எந்த சுவாரசியமும் இன்றி பொழுது போகாமல் நின்று பொதுவாகப் பார்ப்பது என்று அகராதிகள் கூறும். வாய்பார்ப்பது என்பது "வாய் நோக்கி' எனும் மலையாள வேர்ச்சொல்லில் இருந்து கிளைப்பது. இச்சையுடன் அலவலாதித்தனத்துடன் குறிப்பாகப் பெண்களை மட்டும் பார்ப்பது என்று பொருள். இருக்கலாம், இல்லாமலும் இருக்கலாம்.

ஏழைக்கேற்ற எள்ளுருண்டையாக பக்கத்தில் கல்யாணமண்டபம் ஒன்றுண்டு. நான் குடியிருக்கும் வீட்டின் மொட்டை மாடியில் நின்றால் கெட்டி மேளம் சத்தம் கேட்கும். காற்று தென்கிழக்கிலிருந்து வீசினால் ஆக்குப் புரையிலிருந்து வரும் குருமா வாசனையும் சமயங்களில் மலிந்த நாட்களில் மல்லிகைப் பூ வாசனையும்.

சமீபத்தில் தனது உறவினர் திருமணத்துக்கு குடும்பத்துடன் வந்திருந்தபோது அங்கிருந்துதான் ஜெயமோகன் என் வீட்டுக்கு செல்ஃபோனில் வழி கேட்டார். இதையெல்லாம் நீலிக்கோனான் பாளையத்து மக்கள் எங்கே அறியப் போகிறார்கள்?

ஒருமுறை ஊருக்குப் போயிருந்தபோது, வேதசகாய குமார்காரில் ஜெயமோகன், அ.கா. பெருமாளுடன் பெரிய காடு, சங்குத்துறை, சொத்தவிளை கடற்கரைகளில் சுற்றிவிட்டு, உண்மையில் சுனாமியில் புதைக்கப்பட்ட பிணங்களின் ஆவிகள் அலைவதாக சொல்லக்கேட்ட அச்சத்தில், இரவு எட்டுமணிக்கு மேல் ஆளரவமற்ற பனங் கூட்டத்தின் இடையில் ஒத்தை செத்தையாக இருக்க வேண்டாம் என்று கருதி, ஜெயமோகன் கூறிய தைரியத்தையும் தாண்டி, அரக்கப் பரக்கப் புறப்பட்டபோது, அ.கா. பெருமாள் பறக்கை விலக்கில் இருந்ததொரு தோசைக்கடைக்கு கூட்டிக்கொண்டு போனார். அவர் சொல்லித்தான் எனக்கும் தெரியும் அந்தக் கடையில் ரசவடை விசேசம் என்பதும் அங்கு ரசவடை தின்ற இலக்கியவாதிகளின் பட்டியல் சி.சு.செல்லப்பா, க.நா.சு, நகுலன், சுந்தர ராமசாமி, வெங்கட் சாமிநாதன், தருமு சிவராமு, ஜி.நாகராஜன், எஸ். என். நாகராஜன் என நீளும் என்பதும்.

ஜெயமோகன் கேட்டார், கடைக்காரருக்குத் தெரியுமாவென? கடைக்காரருக்குத் தெரியாது. பறக்கை மேலத்தெரு வண்டிமலைச்சி அம்மனுக்குத் தெரியுமோ என்னவோ?

சுட்ட சட்டி சட்டுவம் கறிச்சுவை அறியுமோ? தேர்க்காலுக்கு கட்டை போடாவிட்டால் ஒக்காது இப்போ!

என்ன சொல்லிக்கொண்டு வந்தேன்?

ஆம்! முதல் மாடி வராந்தாவில் நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டு அல்லது வாய்பார்த்துக் கொண்டு நிற்பேன்.

நேரங்கெட்ட நேரங்களில் பிண ஊர்வலங்கள் போகும். கிருஷ்ணாபுரம் மேட்டுச் சுடுகாடும் இடுகாடும் கால் நடக்கும் தூரம்தான். இரவு பதினோரு மணிமுதல் காலை மூன்று மணி வரை இங்கெல்லாம் காடு அடைப்பு. அடைப்பு என்பது கேட் சாத்துவதல்ல. எங்களூரில் சூரிய அஸ்தமனம் ஆகிவிட்டால் மறுநாள் சூரியோதயம்வரை பிணம் எடுப்பதில்லை.

பிணந்தூக்கிப் போம்போது உதிரிப் பூக்களும் பொரியும் சில்லறைக் காசுகளும் வீசிக்கொண்டு போவார்கள். சனிக்கிழமைகள் எனில் தலைகீழாகத் தொங்கிக்கொண்டு உயிருள்ள சிக்கன் அறுபத்தைந்து ஒன்று போகும் என்ன நடக்கிறதென்று தெரியாமல், பாடையில் கட்டப்பட்டு, தெய்வத்தாலும் ஆகாது, முயற்சியும் மெய்வருந்தக் கூலி தராது எனும் அறிவில்லாமல்.

அவ்விதம் பிணம் போனதொரு நாளில், ஆரம்பப் பள்ளியில் இருந்து திரும்பிய என் மகன் கை நிறையச் சில்லறைகளோடு வந்தான், 'ரோட்ல நெறய சில்லறை களைஞ்சு கெடச்சு’ என்று உற்சாகமாகக் கூவியபடி.

தெரு முனையில் இருக்கும் பிள்ளையார் கோவிலில் இருந்து கல்யாணமண்டபத்துக்கு அதிகாலைகளிலும் முன்மாலைகளிலும் மாப்பிள்ளை அழைத்துப் போகும்; மண்டபத்தில் பூப்புப் புனித நீராட்டு விழாக்கள் எனில் சீர் எடுத்துப் போவார்கள். சுவிசேஷ எழுப்புதல் கூட்டங்கள் நடக்கும். சில சமயம் தொடர்ந்து ஐந்தாறு நாட்கள். ஆங்கிலத்திலும் மொழிபெயர்த்த தமிழிலும் இறைவனைக் கர்ஜித்து எழுப்பிக் கொண்டிருப்பார்கள். அல்லது பெருங்குரலில் இந்து சமயச் சொற்பொழிவாற்றிக் கொண்டிருப்பார்கள். ‘அவனை எழுப்பீரோ? அவன்தான் ஊமையோ, அன்றிச் செவிடோ? அனந்தனோ? ஏமப் பெருந்துயில் மந்திரப் பட்டானோ?’

அரவான் பண்டிகைக் காலங்களில், அம்மனுக்கு நோன்பு சாட்டப்பட்டிருக்கும் போது, குழுவாய் நின்றும் சுவடு வைத்தும்பறை அடிக்கும்போது லயமுண்ட கால்கள் தன்னுணர்வின்றித் தாளமிட கை கட்டி நின்று பார்க்கலாம்.

நம் வாழ்வில் காணா சமத்துவம் உலாவும் இடங்கள் லைன் வீடுகள். லைனில் மலையாளி, தெலுங்கர், கன்னடர், இவர்களுக்குள் கிறித்துவர், இஸ்லாமியர் சர்வ ஜாதி இந்துக்கள் இருப்பார்கள். வீட்டு உரிமையாளர் கொங்கு வேளாளக் கவுண்டர், நாயக்கர், தேவர், தென்னாட்டு நாடார் ஆனாலும் மத இனப் பாகுபாடுகள் அறியப்படுவதில்லை. வாடகை கூட அவரவர் தோதுப்போல முதல் தேதி முதல் இருபத்தொன்பதாம் தேதி வரை தரலாம். இரண்டு மாதங்களுக்கு மேல் பாக்கி என்றால்தான் எரியும் அடுப்பில் தண்ணீர் ஊற்றுதல், உறங்கி விழிக்குமுன் ஆட்களை உள்ளே வைத்து வெளிக்கதவைப் பூட்டுதல், கேளவொணா சொற்பிரயோகம், பிற குடியினரைப் பேச்சு வார்த்தைகளை முறித்துக் கொள்ள நிர்ப்பந்திப்பது- என எத்தனை ஆயுதங்கள் இல்லை? வீட்டு உரிமையாளரும் லைன் வீடுகளில் ஒன்றில் குடியிருக்க நேர்வதுண்டு. சில சமயம் அது தவப்பயன். பலசமயங்களில் அது இடர்.

நிரந்தரமான வீடு தேடலில் இருப்பார்கள் போலும், நகரத்து மக்கள். முன் இரவுகளில், ஏகதேசமாய் ஒரு கைவண்டியில் அல்லது ஒற்றைக் காங்கயம் காளை பூட்டிய வண்டியில் வந்திறங்கும் சாமான்கள். ஏகதேசமாய் ஒரு கைவண்டியில் ஏற்றியும் போவார்கள், வீட்டுச் சாமான்களை. பிறிதொரு நாள் பக்கத்துத் தெருவில் பகல் பத்து மணிக்குப் பல் தேய்த்தவாறு பேஸ்ட் சாறு வழிய, "நல்லாருக்கீங்களா?" என்பார்கள். மாற்றி மாற்றி ஐந்தாறு தெருக்களுக்குள் இருபத்தைந்து ஆண்டுகளைச் செலுத்தியவர்களும் உண்டு.

எல்லாம் அக்கரைக்கு இக்கரை பச்சை அலகிலா விளையாட்டுடைய வாழ்க்கை.

மழலை பேசிக்கொண்டு ஐஸ் கட்டி கேட்கவரும் ரோஸி சமைந்த குமரியாகி விட்டாள். உறைக்குத் தயிர் கேட்டு வந்த சிறுமி சஃபீனாவின் மகனுக்கு இன்று ஒன்றரை வயதாகிறது. எதிர் லைனில் இருந்து கை காட்டுகிறது. நான் குடிவந்த பிறகு பக்கத்து லைனில் நான்கு வயசாளிகளின் மரணமும் ஒரு அகால மரணமும் நடந்து விட்டன. பிரைமரியில் வாசித்துக்கொண்டிருந்தவள் பெங்களூருக்கு வேலைக்குப் போய்விட்டாள். அடுத்தவன் பெண்டாட்டியைக் கூட்டிக்கொண்டு ஓடிப் போதல், பருவத்தின் உடன்போக்கு பற்றிய தகவல்கள் தவிர்க்கப்படுகின்றன.

சில சமயம், குடி வந்து பன்னாட்கள் சென்ற பிறகுதான் புதிதாகக் குடிவந்தவர் போலும் என்று சில முகங்கள் அறிவிக்கும். பால்காரார்,

தச்சுவேலை செய்பவர், எலக்ட்ரீசியன், ஃபோட்டோ ஃபிரேம் செய்பவர், பாய் விற்பவர், கைவண்டியில் செருப்பு வைத்து விற்பவர், வசந்தா மில் பிரிவில் பீஃப் பிரியாணிவண்டி நிறுத்துபவர், தேங்காய்ப் பால், பருத்திப்பால், சுக்குக்காப்பி, பழ வண்டி, வாழைப்பூ வாழைத் தண்டு, மரவள்ளி வியாபாரிகள், நகரத்துக் கனவான்களுக்கு காரோட்டுபவர், பாத்திரம் தேய்க்கும், துணி துவைக்கும், சமைக்கும், குழந்தைகளைப் பராமரிக்கும், நோயாளிகளுக்குப் பணிவிடை செய்யும் ஆயாக்கள்….

ஒருநாள் முன்னிரவு கடந்து, சாப்பாட்டுக் கடை ஒதுங்கி, அன்றைய சீரியல்களின் நாயக-நாயகிகள் தம் கடைசிச் சொட்டு கண்ணீர்த் துளிகளை எம் வீட்டு முன்னறையில் சிந்திச் சீரழித்துவிட்டு அரிதாரம் கலைத்தபோது - கம்பீரமாக எழுந்தது மிகச் சமீபத்தில் இருந்து அந்த நாதசுர ஓசை ஏதும் மாப்பிள்ளை அழைப்பு சமாச்சாரமாக இருக்கும் என்றெண்ணி பொருட்படுத்தத் தலைப்படவில்லை.

சற்று இடைவெளி விட்டு மறுபடியும் நாதசுர ஓசை தவில் தட்டும் ஓசை இல்லை. வேறு தோல்வாத்தியங்களோ, ஜால்ராவோஇல்லை. ஒற்றை நாதசுரம் மட்டும் எடுப்பான முழக்கமாக -

‘சக்கனி ராஜமார்கமு நுண்டக

ஸந்துல தூரநேவ ஒ மனஸா’

ஓ மனமே! ராமனின் பக்தி எனும் ராஜவீதியை விட்டு வெறுக்கத்தக்க சந்துகளில் நுழைவானேன்.

தியாகய்யரின் கரகரப்ரியா ராக கீர்த்தனை. துல்லியமான ஸ்வர சஞ்சாரங்களுடன். இரண்டு வரி மட்டும். சற்று இடைவெளி. மீண்டும் சக்கனி ராஜமார்கமு. சாதாரணமாக பெண் அல்லது மாப்பிள்ளை அழைப்புக்கு எமது தெருவில் வாசித்துப் போவோர் நாதசுரத்தை வைத்துக்கொண்டு நூதனமாகக் கேட்பவர் காதைச் சொறிந்து விட்டுப் போவார்கள். தவிலின் இரண்டு தட்டுகள் கேட்கும். சாயம் போய்க் கிழிந்து நைந்த துணிபோல் ஏதோவொரு கீர்த்தனையின் முதலடி தெருவில் அனாதையாகக் கிடக்கும். பிணத்துக்கு இறைக்கப் பட்ட உதிரிப் பூக்கள் போலக் கேட்பாரற்று.

இது அதுவல்ல. சங்கதி சுத்தமானதாக….

ஆனால் தொடர்ந்து மூச்சுப் பிடிக்க சிரமப்படுவதைப் போலத் தெரிந்தது. எழுந்து போய் தெருவை எட்டிப் பார்த்தேன். எதிர் வரிசையில் வாசற்படித் திண்டில் உட்கார்ந்துகொண்டு வயசாளி ஒருவர் காலையில் உதிக்க இருக்கும் சூரியனின் திசை நோக்கி நாதசுரக் குழாயை உயர்த்தி, முறையிடுவதைப் போல வாசித்துக் கொண்டிருந்தார். நல்ல நிலவொளியும் தேர்தல் எதிர்பார்ப்பால் மாநகராட்சி மஞ்சள் விளக்கொளியும்.

கரண்டைக்கு மேல் உயர்ந்திருந்த வேட்டி, அரைக்கை பனியன் போல வயிற்றுப் பக்கம் பை வைத்துத் தைக்கப்பட்ட காடாத்துணி சட்டை, கழுத்தில் சிறு உருத்திராக்கங்கள் கோர்த்த மாலை. ஸ்படிக மணிமாலை. பக்கத்தில் வெள்ளிபோல மினுங்கிய வெற்றிலைச் செல்லம்.

உறக்கம் பிடிக்காதவர், உறக்கம் கலைந்தவர், பக்கத்து கடைக்கார அண்ணாச்சிகள். அவர்கள் இரவு பதினொன்றரைக்கு கடை அடைத்து காலை நாலரைக்குக் கடைதிறப்பவர்கள். எல்லோரும் அவரவர் லைன் வாசல்களில் இருந்து எட்டிப்பார்த்தார்கள். பத்துப் பதினைந்து பேர்கள். மறுபடியும் மூச்சு வாங்கிக்கொண்டு 'சக்கனி ராஜமார்கமு’ முதல் இரண்டு வரிகள். சற்று இளைப்பாறல். மீண்டும் நாதசுரம்.

எதிர்த்த லைனில் சமீபத்தில் கணவனும் மனைவியுமாகக் குடிவந்த வயசாளிகள். பக்கத்துக் தெருவில் வேறேதும் லைனில் மகனோ மகளோ இருப்பார்கள் போலும். கூட வைத்துக்கொள்ள வசதிப்படாத காரணங்கள் இருக்கும். உறுப்பினர் எண்ணிக்கை நான்கைக் கடந்த காரணமாகவும் இருக்கலாம். முதுமையின் சுமை கூனலாகவும் வாதமாகவும் செவியின் சேதமாகவும் கனத்துக் கொண்டிருந்தது. பலசமயம் மகள் வந்து வீடு தூத்துவாரி, துவைத்துக் கொடுத்து, சமைத்தும் வைத்துவிட்டுப் போவாள். சில சமயம் தெரு முனையில் இருந்த கொங்கு மெஸ்ஸில் நான்கு இட்லிகள் தின்றுவிட்டு வீட்டுக்காரிக்கும் நான்கு இட்லிகள் பொட்டலம் வாங்கிப் போவார். சில சமயம் கையில் இரண்டு பொட்டலம் லெமன் ரைஸ் இருக்கும். எலுமிச்சைச் சோறு என்று சொன்னால் நாக்கு அழுகிப் போகும் நமக்கு.

நான் அலுவலகம் போய்க்கொண்டிருந்த நாட்களில், லைன் வீட்டு வெளி முகப்பில் இரு பக்கத் திண்டுகளிலும் அமர்ந்து வேடிக்கை பார்த்துக்கொண்டிருப்பார்கள். முன்னிரவில் திரும்பி வரும்போதும் நான் பார்த்துக்கொண்டு வேகமாகப் போய்விடுவேன்.

முதுமை எப்போதுமே அச்சுறுத்துவது.

ஆசைப்பட்டு அவனவன் கட்டிய மூட்டை.

அவனவன் தான் சுமந்து திரிய வேண்டும்.

நான் சிந்துபாத் எனில் முதுமை முதுகில் ஏறி உட்கார்ந்து அடம் பிடிக்கும் கிழவன். இறங்கவே மாட்டான். சுமந்துதான் நடக்க வேண்டும்.

வீட்டுக்குள் கால் சறுக்கி விழுந்த கிழவி மருத்துவமனை போய்த் திரும்பி இரண்டு நாட்களே உயிர் வாழ்ந்தாள். பாலும் முடிந்து நேற்று கருப்பும் முடிந்திருந்தது. பிரிவெனும் கொடுங்காற்று அலைக்கழித்துக் கொண்டிருந்தது பெரியவரை, தனிமை புகையேற்றப்பட்ட அரவப் புடைபோல மூச்சு முட்டச் செய்திருக்கலாம்.

ஆன காலத்தில் அவர் மங்கல வீடுகளிலும் பட்டீஸ்வரர், புற்றிடங்கொண்ட ஈசன், ஈச்சனாரி விநாயகன், மருதமலை முருகன், அனுபாவி சுப்ரமணியன், குருந்தமலைக் குமரன், உலகளந்த பெருமாள், காரமடை ரங்கநாதன், வெள்ளியங்கிரி அடிவாரத்துப் பூண்டிப் பிரான், திருமுருகன் பூண்டி, செஞ்சேரிமலை சந்நிதிகளிலும் ஊதியூதி ஒய்ந்து போயிருக்கலாம்.

அடுத்த தெருவிலிருந்து அவசரமாய் ஓடிவந்த மகள் நாதசுரத்தைப் பிடுங்கிக்கொண்டு போய் உள்ளே வைத்தாள். பார்த்துக்கொண்டு நின்றவர்களிடம் சிரிப்பாணி பெருவெள்ளமாய் பொங்கியது. பெரியவர் வீட்டுக்குள் லம்பி லம்பி நடந்துபோய் மீண்டும் நாதசுரத்தை எடுத்து வந்தார். மிகுந்த லயத்துடன், “சக்கனி ராஜ மார்கமு” இரண்டு வரிகள்.

“காலம்பற வாசிக்கலாம்லா…. எல்லாரும் ஒறங்காண்டாமா…” மகளுடன் ஒரு இழுபறி நாதசுரத்தைத் தராதபோது சீவாளியைப் பிடுங்கிவைத்துக் கொண்டாள்.

பெரியவர் கரகரத்த குரலில் ஏதோ இரைந்தார், அதட்டினார், சத்தம் போட்டார்.

“ஒருக்க வாசிச்சுக்கிட்டுத் தந்திரணும்” என்று சொல்லி, சீவாளியை எறியாத குறையாக வீசினாள். பெரியவர் சீவாளியைப் பொருத்தி, “பீ… பீ….” என்று ஒசையும் சுரமும் பார்த்து, மறுபடியும் இரண்டு வரிகள்-

“சக்கனி ராஜமார்கமு....”

ஒற்றை நாயனத்தின் குரல் லயம் பிசகாமல் ஓங்கி ஒலிப்பதும் மூச்சு வாங்குவதும், மீண்டும் வாசிப்பதும்....

அக்கம் பக்கத்தில் விழித்து வேடிக்கை பார்த்தவர் தமக்குள் சிரிப்பாகவும் இளக்காரமர்கவும் குதூகலமாகவும் உரையாடிக் கொண்டிருந்தனர்.

எனக்கு அவமானமாக இருந்தது.

அழுகையழுகையாக வந்தது.

'தெலிய லேரு ராம பக்தி மார்கமுனு' எனும் தேநுக ராக தியாகய்யர் கீர்த்தனை சம்மந்தமில்லாமல் ஞாபகம் வந்தது.

'காலையிலெழுந்து நீராடி, விபூதியணிந்து, ஜபம் செய்வது போல் விரல்களை எண்ணி நல்லவர்களைப் போல் நடித்து, பணம் சேர்ப்பதில் ஆசை கொண்டு, இங்குமங்கும் திரிந்து, கனவு காண்கிறார்களே தவிர இந்த ஜனங்கள், தியாகராஜனால் வணங்கப்பட்ட ஸ்ரீராமனே, உன்னிடத்தில் பக்தி என்ற சன்மார்க்கத்தை தெரிந்துகொள்ளவில்லையே!”

பிடுங்காத குறையாக நாதசுரம் பறிபோயிற்று. வாசற்படி திண்டில் லயத்தை, தாளத்தைத் தொலைத்தவர் போல், இசை ஞான ரூபத்தை களைந்தவர் போல், சுரத்தை பணயம் வைத்துத் திருப்ப முடியாதவர் போல், நெடு நேரம் தலைகுனிந்து உட்கார்ந்து கொண்டிருந்தார். இனிமேல் பழமோ, சிகரெட்டோ, பாக்குத்தூளோ விற்காது என சுவாரசியம் குன்றிப் போன அண்ணாச்சிகள் கடை அடைக்க முற்பட்டனர். லைன் வீட்டுக்காரர்கள் படுக்கப் போனார்கள். அவர்களுக்கு இருக்கிறது காலையில் பாடுகள்.

நிலவுக்குத் துணையாக சற்றுநேரம் மாடி வரந்தாவில் நின்று கொண்டிருந்தேன்.

பெரியவர் இன்னும் பகற்பொழுதுகளில் ஒரு காலைக் கிந்திக் கிந்தி நடந்துகொண்டிருக்கிறார். நாதசுரத்தைப் போல அவருக்கும் க்ஷீண தசைதான் போலிருக்கிறது.

பிறகென்ன? இன்று வரை மறுபடியும் அந்தக் கிழவரின் நாதசுரஓசை கேட்கவே இல்லை.

கடைக்கே வைத்து விட்டார்களோ?

காணாமற் போக்கி விட்டார்களோ?

விறகாகத்தான் போயிற்றோ?

ஆனந்த விகடன் - ஏப்ரல் 2006

***

3. வளைகள் எலிகளுக்கானவை

இந்தியக் குடியரசில் இன்று இருபத்தெட்டு மாநிலங்கள். மேற்கொண்டு தேசிய தலைநகர் பிரதேசம் ஒன்றும் யூனியன் பிரதேசங்கள் ஆறும். ஆந்திராவில் இருந்து தெலுங்கானாவைத் தனியாகவும் மகாராஷ்ட்ரத்தை விதர்பா, கொங்கன், மராத்வாடா என்று மூன்றாகவும் உடைத்தெடுக்க வேண்டும் எனும் கோரிக்கைள் இன்றும் தீவிரமாக இருக்கின்றன. தமிழ்நாட்டை இரண்டாகப் பிரித்தால் நல்லது என்று சில ஆண்டுகள் முன்பு சின்னச் சலசலப்பு ஏற்பட்டது. கோவணத்தில் தீப்பிடித்தவர் போலக் குதித்தவர் அநேகம்.

இருபது ஆண்டுகள் முன்பு எம்.பி. யாக இருந்த சுப்ரமண்யம் சுவாமி கடல் தாண்டிய சுதந்திரத் தீவு ஒன்றையும் நமது மாநிலமாகச் சேர்த்துக்கொள்ளப் பரிந்துரை சொன்னது உங்களுக்கு நினைவில் இருக்காது. ஆனால் மனோரமா ஆச்சி நடித்த தமிழ், தெலுங்கு, கன்னட, மலையாள சினிமாக்கள் எத்தனை, அதில் கருப்பு - வெள்ளைப் படங்கள் எத்தனை, வண்ணப் படங்கள் எத்தனை, வெளிவராமல் நின்று போனவை எத்தனை போன்ற என்சைக்ளோபிடியா அன்டார்டிகா தகவல்கள் துல்லியமாகத் தெரியும்.

உ.பி. யை இரண்டாகப் பகுத்து உத்ராஞ்சல், பீகாரைப் பகுத்து ஜார்கன்ட் செய்தது போல் மத்யப் பிரதேசத்தைப் பகுத்து சட்டிஸ்கர் செய்தார்கள். ராய்ப்பூர் தலைநகராயிற்று. தற்போது ஆந்திர பிரதேசத்துக்கும் ஒரிசாவுக்கும் மத்யப் பிரதேசத்தோடு எல்லை கிடையாது. மக்கள் குடியரசில் எல்லைகள் இருந்தால் தொல்லைகள் அதிகம்.

சட்டீஸ்கர் மாநிலத்தின் எல்லையோரம் மராத்திய மாநிலத்துக்கு கற்சிரோலி என்றொரு மாவட்டம் உண்டு, நாக்பூர், சந்த்ரப்பூர் போல கற்சிரோலி வெயிலும் குளிரும் கூடிய வறண்ட பூமி. அங்குள்ள சின்னஞ்சிறு கிராமங்களிலிருந்து ஐந்நூறு பேர் புறப்பட்டார்கள், தென்னாடு நோக்கி. படையெடுத்து அல்ல. கண்ணகிக்குச் சிலையெடுக்ககல் சுமந்த கனகவிசயரின் அவமானம் துடைக்க அல்ல. கன்னியாகுமரியில் இருந்து மணல் எடுத்து சேர சோழ பாண்டியர் தலையில் ஏற்றி சந்த் துக்காராமுக்கு கோயில் கட்டவும் அல்ல. அவ்வாறே ஆயினும் இன்றைய நவ சேர சோழ பாண்டியர்கள் என யாரை அடையாளம் காண்பார்கள்?

திருப்பதியில் பாலாஜியையும் கன்னியாகுமாரியில் நித்ய கன்யா பகவதியையும் மதுரையில் மீனாக்ஷியையும் ராமேஸ்வரத்தில் ராமலிங்கத்தையும் தொழுது புண்ணிய தீர்த்தங்கள் ஆடி… கிராமத்துக்கு ஐந்து பேர், பத்துப் பேர், பதினைந்து பேர் எனச் சேர்ந்தார்கள். எல்லாம் அறுபதும் எழுபதும் தாண்டிய சாச்சா சாச்சி, காக்கா காக்கி, மாமா-மௌஸி, வடீல்-ஆயி….

இரயில் கட்டணத்துக்கு மட்டும் தலைக்கு ஐந்நூறு ரூபாய். சாப்பாடு அவரவர் பாடு. தங்கல், ரயில் நிலைய ஆளற்ற பிளாட் பாரங்களில், தண்ணீர் இருந்தால் குளிப்பு, துவைப்பு. சன்டாஸ் போவது நீண்டதூரம் தண்டவாளங்களில் நடந்து. ஒருபக்கம் ஆண்கள் போனால் மறுபக்கம் பெண்கள் போவார்கள். வயோதிகம் என்பதாலும் பெரும்பாலும் உபவாச நாட்கள் என்பதாலும் எல்லோருக்கும் ஒரே நேரத்தில் சன்டாஸ் வருவதில்லை. பிரயாணங்களின் போது ரயில் பெட்டிகளில் தண்ணீர் வசதி இருந்தால் மலஜலம் கழிக்கலாம்: பெரும்பாலும் பாசஞ்சர் பயணிகளை ரயில்வே நிர்வாகம் மனிதர்களாகக் கருதுவதில்லை. குளிர்பதன ரயில் பெட்டி என்றால் கக்கூஸில் கூட மின் விசிறி இருக்கும். ஆனால் பாசஞ்சர் பயணிகள் லொத்தி, விட்டை, புழுக்கை, எச்சம் போடும் ஊர்வன, நடப்பன, பறப்பன பிரிவினர். அவர்களுக்கு எதற்குத் தண்ணீர் என்பது கருதுகோள்.

தலைக்கு ஐந்நூறு ரூபாய் என்பது பாசஞ்சர் வண்டிகளில் மாத்திரம் பயணம் செய்வதற்கான வட்டச் சுற்று சலுகைக் கட்டணம். பகலானாலும் இரவானாலும் இருக்கை வசதி மட்டுமே. படுக்கை வசதியோ முன்பதிவோ கிடையாது. காசிநாத் மானே லீடர். அவனை நேதா என்றும் சொன்னார்கள். நேதா என்றாலும் தலைவன் என்றுதான் பொருள். அவன் கீழ் ஏழெட்டுப் பேர் உதவி நேதாக்கள். எல்லோர் கையிலும் போலீஸ் விசில் போல ஒன்றிருந்தது. செம்மறி ஆடுகளுக்கும் தாராக் கோழிகளுக்கும் உள்ள கோல் மாதிரி அது. அந்த ஒழுங்கு பாலிக்கப்பட்டது. பக்கத்தில் இருக்கும் பெரிய ரயில் நிலையம் ராய்ப்பூர். அங்கிருந்து நாக்பூருக்குப் போகும் பாசஞ்சர் கற்சி ரோலியை ஊடுருவிப் போகும். அவரவர் காவ் பக்கத்தில் இருக்கும் ஸ்டேஷனில் ஏறிக்கொள்ளலாம். ஏறும் வண்டியும் நாளும் முன் தீர்மானிக்கப்பட்டவை. திரும்பிவர இருபதுக்கு மேல் முப்பதுக்குள் நாட்கள் ஆகும். எந்த வண்டிகள் என்பதும் நிச்சயமில்லை.

எல்லோர் கையிலும் வாழ்க்கையில் மிகவும் துன்பப்பட்ட ஏர்-பேக்.

அடையாளம் தெரிந்துகொள்ள ஒரு பக்கம் திரிசூலமும் மறு பக்கம் சிவலிங்கமும் அச்சடிக்கப்பட்ட பச்சை நிறத் துணிப்பை. ஒருசதுர அடி அளவில் தோளில் தொங்கத் தோதாக உள் பாக்கெட்டும் வெளிப்பாக்கெட்டும் வைத்துத் தைக்கப்பட்டதாக. வெற்றிலை, பாக்கு, தம்பாக்கூ, சுருட்டு, போர்வை, தண்ணீர் பாட்டில், தம்ளர், சில்லறைக் காசுகளும் அழுக்கு நோட்டுகளும் சுருட்டித் திணிக்கப்பட்ட பிஸ்வி , அலுமினியத் தட்டு. ஏர்-பேக்கில் மாற்றுடை ஒன்று, விரிக்கவும் போர்த்தவுமான கம்பளி, ஒரு மாதம் வரை கெட்டுப் போகாத தின்பண்டங்கள். அவல் சிவ்டா, ராகி லட்டு, கொப்பரைத்தேங்காய், பூண்டு, வரமிளகாய், காயம், சீரகம், உப்புப்பரல் சேர்த்து மர உரலில் இடித்த லஸுன் சட்னி, பயணத்துக்கு அத்தியாவசியத் தேவைகளான செல்ஃபோன், கிரடிட் கார்டு, டிஜிடல் காமிரா, பைனாகுலர், வாக்மேன், மருந்து மாத்திரைகள், பாடி லோஷன், ஷேவிங் கிரீம், ஷேவ் லோஷன், வாசனை சோப்பு, தைலங்கள் கிரீம்கள் எதுவுமே கிடையாது

பயணிகளின் சுற்றுப் பயண சலுகை ரயில் கட்டணச் சீட்டு மொத்தமாக ஒன்று நேதா கையில் பத்திரமாக லேங்காவின் உள் பாக்கட்டில் இருந்தது. சாப்பாடு, சிற்றுண்டி, தேநீர், கோயில் கட்டணங்கள், தட்சணைகள், பிரசாதம், உண்டியல் காசு, தட்டில் போடுவது, தர்மம் போடுவது, சில்லறைப் போருட்கள் வாங்குவது எல்லாம் அவரவர் சுமைதலை.

அகலமும் நீளமும் கொண்ட, சிமன்ட் தளமிட்ட , மணல் பாவிய, வரிக்கற்கள் பாவிய, கூரையுள்ள, கூரை இல்லாத ரயில் நிலைய நடைமேடைகள் நாட்டில் நிறைய இருந்தன. தண்ணீர் குழாய்கள் இருந்தன. பத்து ரூபாய் கொடுத்தால் தண்ணீர் திறந்தும் விட்டார்கள்.

மழை பெய்து, சோயா, அவரை, துவரை, மணிலா, வெங்காயம், சோளம் பயிர் செய்து அறுவடையும் ஆன விச்ராந்தியில் கிடந்தன சின்னச் சின்ன விவசாயக் கிராமங்கள். சரியான மின்சார வசதியற்ற, சாலைகள் இல்லாத, மாடுகளும் மனிதர்களும் பாடுபட்ட குக்கிராமங்கள். சின்னச் சின்ன குழுக்களாக இருந்தனர். ஒரு குழுவின் பொது உபயோகத்துக்கு அலுமினியப் பானை தண்ணீர் பிடிக்க, குளிக்க, வெந்நீர் வைக்க. அகன்ற அலுமினியத் தாம்பாளம் ரொட்டிக்கு மாவு பிசைய, பாக்ரி மாவு பிசைய. கொஞ்சமாய் அரிசி போட்டுப் பொங்க ஒரு பாத்திரம். உசல் அல்லது பருப்பு அல்லது பாஜி வைக்க மற்றுமோர் சிறிய பாத்திரம், இரும்புத் தவா….

சிறு உருண்டை மாவு எடுத்து கையால் ரொட்டி தட்டிக் கொள்வார்கள். அடுப்பு என்பது மூன்று செங்கல் துண்டுகள் அல்லது கருங்கல் துண்டுகள். அவசரக்காரர்கள் முதலிலும் ஆசுவாசம் கொண்டவர்கள் பின்னரும் அடுப்பை பயன்படுத்திக் கொள்வார்கள். அரைத்தல், இடித்தல், சலித்தல் , பொடித்தல் கிடையாது. எல்லாம் முன்கூறாய் புறப்படுமுன் டப்பிகளில் அடைத்தவை. நக்கலாய் காட்டி மசாலா என்பார்கள் கனவான்கள். காட் எனில் பீடபூமி என்பதும் காட்டி என்பது பீடபூமியைச் சார்ந்தவர் என்பதும் இங்கு விளக்கம். வாங்கக் கிடைக்குமானால் வாங்குவதும் அல்லது சேகரித்துக் கொள்வதும்தான் விறகு, இற்றுக் கிடக்கும் ரயில் தாங்கு கட்டைகளின் கீறிப்பிளந்த துண்டுகள் மதமத என்று எரியும்.

ரயிலில் மண்ணெண்ணெய் கொண்டு செல்லக்கூடாது என்பது சட்டம் எனினும் சிலர் மறைவாக பம்ப் ஸ்டவ்வும் இரண்டு லிட்டர் கேனும் வைத்திருந்தனர். குழுவுக்குப் பொதுவான கோணியில் எல்லாம் முடிந்து கிடந்தன.

ராய்ப்பூரில் இருந்து கன்னியாகுமரி கணக்காக 2008 கிலோ மீட்டர். ராய்ப்பூருக்கும் நாக்பூருக்கும் இடையில் இருந்த பல ரயில் நிலையங்களில் இருந்தும் கூட்டம் கூட்டமாக அவர்கள் ஏறினார்கள். வழியிலேயே இறந்து போகும் வயது. தப்பிப் போகும் அபாயமும் உண்டு. எனவே ஆளேறும் ரயில் நிலையங்களில் எல்லாம் வழியனுப்ப பெருங்கூட்டம். மஞ்சள் ஜிலேபி, பச்சை வாழைப்பழம், பஜ்ஜியா, வீட்டில் வறுத்த மக்காச் சோளமணிகள், மணிலாக் கொட்டை போன்ற தின்பண்டங்களுடன், என்றாலும் ஒரு பிளாட்பாரம் டிக்கட் கூட விற்பனையாகவில்லை. நாக்பூர் ரயில் நிலையத்தில் தலை எண்ணிக் கணக்கெடுப்பு, பச்சைப் பை, அடையாள அட்டை விநியோகம். நேதாவின் சிறியதோர் பிரசங்கம், பித்தளை ஜால்ரா, டோல்கி, மத்தளத்துடன் பஜனை…. ஜெய்ராம் ஜெய்ராம் ஜெய்ஜெய் ராம்….

நாக்பூரில் இருந்து சந்த்ரப்பூர் வழியாக வாரங்கல். வாரங்கலில் இருந்து கம்மம் வழியாக பெஜவாடா, பெஜவாடாவில் இருந்து தெனாலி, ஓங்கோல், நெல்லூர், கூடுர் வழியாக ரேணிகுண்டா. அங்கு இறங்கி திருப்பதி பாலாஜி மந்திர்… கோவிந்தா கோவிந்தா….

நான்கு நாட்களுக்குப் பிறகு திருமலையில் நன்றாகத் துவைத்துக் குளித்தனர். தர்மசாலாவில் நல்ல ஜெவுண். இவ்வளவு சோறு ஒருச்சேர மதராஸிலோக் எப்படித் தின்கிறார்கள் என்பதில் அவர்களுக்குப் பெரிய

ஆச்சரியம். அவர்களது சீலம் நாலைந்து முரட்டுச் சோள ரொட்டிகள், உசல் அல்லது லஸுன் சட்னி அல்லது காரமுள்ள பெரிய வெங்காயம். கடைசியில் சின்ன இட்லி அளவு சோற்றின் மீது உசல் அல்லது டால் ஊற்றிப் பிசைந்த சோறு, காது அடைக்காமல் இருக்க. வாழைக்காயில் எப்படி பாஜி செய்கிறார்கள் என்பது மற்றுமோர் ஆச்சரியம். இத்தனை கூட்டமாக வாழைத் தோட்டங்களையும் தென்னந் தோப்புக்களையும் அவர்கள் இதற்குமுன் கண்டதே இல்லை. மாடுகளை எங்கும் காணக்கிடைக்கவில்லை. மாடுகள் இன்றி இவர்கள் எப்படி விவசாயம் செய்கிறார்கள் என்று யோசித்தவாறு வந்தார் மகாதேவ் தெல்கே.

மறுபடியும் ரேணிகுண்டாவில் இருந்து பயணிகள் வண்டி பிடித்து காட்பாடி வழியாக ஜோலார்பேட்டை. அங்கிருந்து போகும் பாசஞ்சரை ஈரோட்டில் காலையில் பிடித்தார்கள்.

இறங்கும் நிலையம் வந்தால் மூட்டை முடிச்சுகளுடன் இறங்கியதும் கிடைத்த இடத்தில் சமுக்காளம் விரித்து நடைமேடையில் இடம் பிடித்தனர். பிறகு தண்ணீர் தேடிப் போதல், விறகு சேகரித்தல், அடுப்புக் கூட்டி ரொட்டி சுடுதல், இரவில் சுட்ட ரொட்டியை மீத்து காலைக்கும் ஆகும். காலையில் சுட்ட ரொட்டியை மீத்தது இரவுக்கும் ஆகும். காலையில் சுடுவதா இரவில் சுடுவதா என்பது குழுக்களின் வசதி, ரயில் புறப்படும் நேரங்களின் வசதி. அடுப்புக் கூட்டும், ரொட்டி சுடும் தோது வாய்க்காவிட்டால் போஹா சிவ்டா, லட்டு, வயிறு நிறையத் தண்ணீர், தம்பாக்கு அல்லது சுருட்டு, போர்த்துக் கொண்டு படுத்தால் காவலுக்கு உண்டு மகாதேவ் அல்லது பாண்டுரங்க்.

பயண நாட்களில் மச்சி, மாம்சம் பழக்கம் இல்லை. பெரும்பாலோர்க்கும் வாரத்தில் மங்கல்வார், குருவார், சனிவார் உபவாசம். இரவு ஒரு பொழுது உணவு. மறு பொழுதுகளில் வாழைப்பழம், சாபுதானா அல்லது போஹா. கிச்சடி செய்யத் தோது கிடையாது. பாலும் வாய்ப்பதில்லை.

மறுநாள் காலையில் கன்னியாகுமரிக்கு பாசஞ்சர். அதுவும் அகல ஸ்டேஷன். சங்கிலித் துறையில் நீராடல், குமரி பகவதி தர்ஷன், காந்தி மண்டபம், விவேகாநந்தர் பாறை, சூரிய அஸ்தமனம், சங்குகள், சோவிகள்….

மறுபடியும் நாகர்கோயிலில் இருந்து மதுரைக்கு கோவை பாசஞ்சர். நாகர்கோயில் கோயம்புத்தூர் பயணிகள் வண்டியில் எப்போதும் கூட்டம் இருக்கும். சனி, ஞாயிறு எனில் ஒரு பங்கு அதிகம். ஒன்பது மணி

நேரத்தில் இரவில் புறப்பட்டு காலையில் கொண்டு சேர்க்கும் சொகுசுப் பேருந்துகளை விட பதின்மூன்று மணி நேரத்தில் ஐந்நூறு கிலோமீட்டர் போகும் இந்த ரயிலை மக்கள் விரும்பக் காரணங்கள் உண்டு. சொகுசுக்கு கட்டணம் இருநூற்று எண்பது வெண்காசுகள். ரயிலுக்கு வெறும் அறுபத்தைந்து ரூபாய். மேலும் பேருந்து புஷ்பேக் ஆனாலும் ஏர்-பஸ் ஆனாலும் வோல்வோ ஆனாலும் வழியில் மூத்திரம் பெய்ய நீதம் கிடையாது. முதியோர், நோயாளிகள், குழந்தைகள், பெண்கள், நீரிழிவுக்காரர், ப்ரோஸ்டேட்காரர் பாடு பெரும்பாடு. வழியில் பேருந்தை நிறுத்த திருப்பாச்சேத்தி அரிவாள் அல்லது ராம்பூரி சூரி வேண்டும். ரயிலானால் அந்தச் சல்லியம் இல்லை. கால் நீட்டி, மடக்கி, சம்மணம் போட்டு உட்காரலாம், சாயலாம், கதவோரம் நிற்கலாம்," நடக்கலாம், இடமிருந்தால் படுக்கலாம், ஆற அமர இட்லி மிளகாய்ப் பொடி, புளித்தண்ணிச் சோறு தின்னலாம். திருநெல்வேலி, மணியாச்சி, கோவில்பட்டி, சாத்தூர், விருதுநகர் வரை அருமையான ஆமவடை சுடச்சுடக் கிடைக்கும். ஆமவடை என்றால் பருப்பு வடை, பட்டணத்து மசால்வடை அல்ல. ஆறிப்போனால் பட்டணத்து மசால்வடை எலி தின்னத்தான் லாயக்கு. இன்னும் ஆமவடை சுட்டு விற்று குடும்பங்கள் நடக்கின்றன, குமருகள் கரையேறுகின்றன. காலாணிப் புற்றோ, வாதக் காலோ, வயோதிகமோ, வறுமையோ மனிதனைத் தோற்கடித்து விடுவதில்லை.

பிளாட்பாரத்தில் வண்டி பிடிக்கப்பட்டதும் ஐந்நூறு பேரும் அதுவரை யாரும் வழி தப்பவும் நோய்ப்படவும் மரணமுறவும் நேரவில்லை என்பதால் - எண்ணம் குறையாமல் பாய்ந்து வண்டியினுள் ஏறி இடம் பிடித்து உட்கார்ந்தனர். மத்யப் பிரதேச ரயில் நிலையம் ஒன்றில் நிற்பதான மயக்கம் தரும் விதத்தில் - தெலி, தெல்கே ஷிண்டே, பால்கர், போர்லேகர், காம்ளி, காம்ளே, ஆம்பேகர் கார்பாரே, நட்கர்னி, குல்கர்னி, ஷிவ்தார்கர், மோரெ, போக்ளே, பாண்டேகர், பண்டார்கர், ராணே, ஆப்தே, மானே, அம்ராபூர்கர், பாலேகர், பாட்டில், பட்டேகர், பாட்கர் மற்றும் அவர்தம் பெண்டிர்....

சாவசகாசமாக, புறப்படும் ஸ்டேஷன்தானே எனும் அலட்சியத்துடன் ரயில் பிடிக்கவந்த கோட்டாறு, பஞ்சலிங்கபுரம், வாரியூர், ராஜாவூர், ராஜாக்கமங்கலம், பறக்கை, சுசீந்திரம், நல்லூர், தேரூர், கருங்கல், இரணியல், தக்கலை, அம்மாண்டிவிளை, பொழிக்கரை, பொட்டல், ஈத்தாமொழி, வெள்ளமடம், புத்தேரி, திட்டுவிளை, தாழக்குடி, போத்தியூர், கடுக்கரை, பெருவிளை, ஈசன் தங்கு, பார்வதிபுரத்து

நாடாக்கமார், பிள்ளைமார், சாம்பவர் இன்ன பிற வகுப்பினருக்கு ஈரற் குலையில் இடிவிழுந்ததைப் போல் பெரிய அதிர்ச்சி. குடும்பத்துடன் சேர்ந்து உட்கார இடமில்லை. கால் நீட்டத் தோதில்லை. சம்பா அரிசிச் சாக்கு, சக்கைப் பழம், கருப்பட்டிச் சிப்பம், தேங்காய் மூடை வைக்க இடமில்லை. எல்லாப் பெட்டிகளும் அடைசல்களாக இருந்தன.

முனகல்கள் மெல்லப் பல்கிப் பெருகி, சிறு துளிப் பெரு வெள்ளமாய், மராத்தி தெரியாத தமிழனுக்கும் தமிழ் தெரியாத மராட்டியனுக்கும் சச்சரவுகள் ஆரம்பித்தன.

“சவம் காட்டுமிராண்டிக் கூட்டம் எங்கேருந்து தான் வாறானுவளோ?

“போன வருசம் இதே போல மருத போற வண்டியிலே பத்து அஞ்ஞூறுவேரு...”

"குளிக்கவும் மாட்டான், குண்டியும் கழுவ மாட்டான்."

“டிரஸ்ஸுக்கு பஸ்காரத்தைப் பாத்தியா? தார்ப்பாய்ச்சிக்கெட்டும், தொப்பியும், சட்டையும்…'

"மிராட்டியப் பயக்கோண்ணு சொல்லுகது சும்மயில்லே….”

“என்னத்தை அந்து விழுகுண்ணு இப்பிடிக் கௌம்பி வாறானுவோ?”

“அண்ணாச்சி தூரமா பொறப்பட்டியோ?”

“மூத்தவளை வள்ளியூரிலே கெட்டிக் குடுத்திருக்கம்லா… சித்திரைப்படி அவுலும் தேங்காயும் கருப்பட்டியும் கொண்டுக்கிட்டுப் போறம் பாத்துக்கோ...'”

“நீரு தூரமா?”

"பணகுடியிலே ஒரு சடங்கு உண்டும். போகாண்டாம்னு தான் பாத்தேன்…. பின்னே பெறப்பிட்டாச்சு...”

அருமைநல்லூரில் இருந்து சமீபத்தில் கல்யாணமாகி மறுவீடு, விருந்துகள், இறைச்சிக்கறி, எண்ணெய் தேய்த்துக்குளி எல்லாம் முடிந்து பொண்ணு மாப்பிள்ளையைத் திருப்பூரில் குடியிருத்த புறப்பட்ட கூட்டம் ஒன்று பிளாட்பாரத்துக்கு வந்தபோது எந்தப் பெட்டியிலும் சிலாவத்தாக

இடமில்லை. அங்கொன்றும் இங்கொன்றுமாகக் காலி இருக்கைகள் கிடந்தன. மணமக்களின் பெற்றோர் நான்கு பேர், சித்தப்பா சித்திகள், அத்தை தாய்மாமன்கள் எட்டுப் பேர், பெண்ணின்அண்ணன் - மனைவி, பையனின் உடப்பிறந்தாள் - அத்தான் என குழந்தைகள் அடக்கம் இருபத்து மூன்று பேர். திருப்பூரில் கல்யாண மண்டபம் வாடகைக்கு எடுத்திருப்பார்களோ என்னவோ? மற்றும் கல்யாண மெத்தை தலையணை, குடம், செம்புப்பானை, அண்டா, குத்துவிளக்கு, சில்லறைப் பாத்திரங்கள் கொண்ட மூடை, அட்டைப் பெட்டிகள், அரிசி, பருப்பு, தேங்காய், போன அன்று பாயசம் வைக்க கோட்டயம் சர்க்கரை, குக்கர், மிக்ஸி, அரிவாள்மணை, திருவலைக் குத்தி, சோத்துக் கற்றாழைச் செடி, தென்னை ஈர்க்கு வாருகோல்.... எங்கே கொண்டுபோய் அடுக்குவார்கள்? பெரிய தூக்குப் போணிகளில் கொண்டுவந்த கட்டுச்சோற்றை ஆற அமர எப்படிச் சாப்பிடுவார்கள்?

மாப்பிள்ளையின் தகப்பனார் மாலையப்பன் கலைக்டர் ஆபீசில் நெடுநாட்களாக பியூனாக இருப்பவர். கலைக்டர் வீட்டுக்கு என்று சொல்லி இலவசமாக வடசேரிச் சந்தையில் காய்கறி வாங்கி சஸ்பெண்ட் ஆனதைத் தவிர வேறு நாணயக் குறைவுகள் கொண்டவரல்ல. அதிகாரம் என்பது என்னவென்றும் அவருக்குத் தெரியும்.

தோன்றிய பெட்டியினுள் ஏறி, சாமான்களை அடுக்க முடியாமல், சாவகாசமாக உட்காரவும் முடியாமல், பெரிய வெப்ராளத்தில் இருந்தார்.

எழுபது வயதான மகாதேவ் தெல்கே, காலையில் குளித்துநெற்றியில் பாண்டுரங்கனின் செங்காவியும் கருஞ்சாந்தும் கோவி வரைந்து, கையில் இருந்த 'தியானேஷ்வரி' வாசிப்பதில் இருந்தார். தில் என்றால் எள். எள் ஆட்டி எண்ணெய் எடுப்பவர் தெலி அல்லது தெல்கே. நம்மூர் எண்ணெய் வாணியன் போல. செக்கு இல்லாதவனும் செட்டி, கலப்பை இல்லாதவனும் வெள்ளாளன் என்பது இன்று நமது ஆசாரம். மகாதேவ் தெல்கே செக்கும் வைத்திருந்தார். விவசாயமும் இருந்தது.

“எப்பிடி சம்மணம் போட்டு உக்காந்திருக்கான் பாரு, கெழட்டுக் கூதிமவன். அவுனுக்கு அப்பன் வீட்டு வண்டிமாரி!”

“டிக்கட்டு கூட வாங்க மாட்டானுவோ!”

மாலையப்பன், மகாதேவ் தெல்கேயையும் அவரது கிராமத்துக் கிழவன் கிழவிகளையும் பார்த்து இரைந்தார்.

“வேற ஏதாம் பெட்டியிலே மாறி இரியும் வே...”

தெல்கேக்கு ஏதோ சொல்கிறார் என்று மட்டும் புரிந்தது.

தியானேஷ்வரியை மூடி வைத்துவிட்டுப் பரக்கப் பரக்கப் பார்த்தார்.

“சொல்லுகம்லா வே.... அடுத்த பெட்டிக்குப் போங்கோ..”

“காய்? காய் சாங்கித்லா துமி?”

“பக்கத்துப் பெட்டிக்குப் போறதுக்கு....”

“மதுரா.... ராமேஷ்வர் ஜாணுர் அமிலோக்...”

மாலையப்பனுக்கு கோபம் பொங்கி வந்தது. மேலும் அவர் பணிபுரிவது மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் பியூனாக அல்லவா?

“எந்திரியும் வேய் மொதல்லே! எந்திரிச்சு அடுத்த பெட்டிக்குப் போவும்.... எல்லா கெழட்டு வாணாலையும் கூட்டிக்கிட்டுப் போவும்....”

“காய் போல்த்துரஸ் துமி.... அமாலா காய் மைத்தி நை....”

மாலையப்பன் கையைப் பிடித்து இழுக்க ஆரம்பித்தபோது, அவரது மற்ற குடும்ப உறுப்பினரும் ஆளுக்கொரு கையைப் பற்றி இழுக்க முற்பட்ட போது, தேவாசுரப் போரின் கிளைப் போரொன்று துவங்கியது.

சத்தம், இரைச்சல், அழுகை, ஆதாளி மற்ற பெட்டிகளுக்கும் தீப்போல் பரவியது. மூட்டைமுடிச்சுகள் தள்ளல், மோதல், ரத்தக் கோறை.... நேதாக்களின் பீய்ங், பீய்ங் விசில் சத்தம் மாறி மாறிக் கேட்டன.

அலுவலில் இருந்த இரண்டு ரெயில்வே போலீஸ், ஒரு டிக்கட்பரிசோதகர், உதவி ஸ்டேஷன் மாஸ்டர், புக்கிங் ஆபீஸ் சிப்பந்திகளில் சிலரால் ஒன்றும் செய்ய இயலவில்லை. சின்னக் கலவரம் ஒன்று சீறிப்புறப்பட்டது - 'மாரிமலை முழைஞ்சில் மன்னிக் கிடந்துறங்கும் சீரிய சிங்கம் அறிவுற்றுத் தீ விழித்து வேரி மயிர் பொங்க எப்பாடும் பேர்ந்துதறி மூரி நிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டு போதருமாப் போலே.’

யாரோ கைப்பேசியில் அவசரப் போலீசுக்கு ஃபோன் செய்தனர். சற்று நேரத்தில் காக்கிப் பட்டாளம் வந்தது. எஸ்.பி. வந்தார். ஊது குழல் சத்தங்கள் கேட்டன. தொடர்ந்து மாவட்ட ஆட்சியர் வந்தார். அவர் பர்பனி மாவட்டத்து மராத்திக்காரர். போலீஸ் ஒலிபெருக்கியை வாங்கி மராத்தியிலும் தமிழிலும் மாறிமாறி வேண்டுகோள் விடுத்தார்.

நேதாக்கள் அவர் முன் வந்து நின்றனர் கண்ணீரைத் துடைத் மூக்கைச் சிந்தி நின்றனர் கிழவரும் கிழவியரும்.

“காய் சாப்….. அமி லோக் பிக்காரி ஹை கா? அம்சக்டே டிக்கிட் நை கா? அமி லோக் கூஸ் காத்தூஸ்கா?”

திரும்பத் திரும்பக் கேட்டுக்கொண்டிருந்தனர் - நாங்கள் பிச்சைக்காரர்களா? நாங்கள் டிக்கட் வாங்கவில்லையா? நாங்கள் மலம் தின்கிறோமா?

“ஏ காய் சாப் ? காய் கலத்தி கேலா அமி? துமி சாங்கானா..”

நேதா கையில் மொத்தப் பயணிகளுக்குமான வட்டச் சுற்றுச் சலுகை பயணச் சீட்டு இருந்தது.

'நாங்க ஏழைங்க சாப்…. கற்சிரோசி விவசாயிங்க. வித்தவுட் பிச்சைக்காரங்க இல்லே…. போன வருசம் காசி போனோம்…. அதுக்கு முந்தி காளிகட் போனோம்…. கன்யாகுமரி வந்து நாங்க ரத்தக் கோறையோட போறோம்…. ஏ பராபர் ஹை கா? துமி சாங்கா!”

அவன் மராத்தியில் பேசினாலும் அவன் குரலில் இருந்த கெரவல் மாவட்ட ஆட்சியரைச் சுற்றி நின்ற தமிழ் பேசும் அதிகாரிகளைக் கலக்குவதாக இருந்தது. நியாயம் கேட்க கையில் சிலம்பு வேண்டும் என்றில்லை. மதுரையை எரிக்கும் வெஞ்சினமும் வேண்டியதில்லை.

இரயில் ஒன்றரை மணி நேரம் தாமதமாகக் கிளம்ப யத்தனித்தது. கிடைத்த இருக்கைகளில் நெருக்கியடித்துக்கொண்டு அமரத் தலைப்பட்டனர். இரைச்சல் குறைந்து, முனகலாகி, அதுவும் அமர்ந்து, சின்ன உரையாடல்கள் துவங்கின.

பழைய வேட்டியை வைத்து மூடிப் பொதிந்து வைக்கப்பட்டிருந்த பெரிய செம்புப் பானையை நகர்த்தி, உடையாமல் அடுக்கி வைக்கப்பட்டிருந்த

முறுக்கை எடுத்து மாலையப்பன் முதலில் மகாதேவ் தெல்கேயிடம் நீட்டினார்.

ரயில் நகர்ந்த பின் வழியனுப்ப வந்த இருவர் பேசிக்கொண்டு போனார்கள்.

'காஞ்ச ரொட்டியைத் தின்னுக்கிட்டு ஊருலே கெடக்காம, பொறப்பிட்டு வந்திருக்கானுகோ.... ஊரை நாற அடிக்கதுக்கு...."

அவர்கள் மேற்கில் மேலாங்கோடும் கிழக்கில் முப்பந்தலும் தாண்டியதில்லை. தெற்கே கன்னியாகுமரிக் கடலையும் வடக்கே காளிகேசம் மலைகளையும் அவர்களால் தாண்டவும் முடியாது.

மராத்திச் சொற்களுக்கு தமிழ்ப்பொருள்:

சாச்சா-சாச்சி - பெரியப்பா – பெரியம்மை

காக்கா - காக்கி = தாத்தா – ஆத்தா

மாமா - மௌஸி = மாமா – அத்தை

வடீல் - ஆயி - அப்பா – அம்மா

சன்டாஸ் = கக்கூஸ்

நேதா = தலைவன்

காவ் – கிராமம்

தம்பாக்கூ=புகையிலை

பிஸ்வி =சுருக்குப்பை

சிவ்டா = மிக்சர்

லஸூன் = பூண்டு

பாக்ரி – சோளரொட்டி

பாஜி - காய்கறிக் கூட்டு

தவா = ரொட்டி சுடும் கல்.

காட்டி மசாலா = தயார் கறி மசாலா

பஜ்ஜியா = பஜ்ஜி

டோல்கி =தோல் வாத்தியம்

ஜெவுண் – சாப்பாடு

உசல் =பல்வகைப் பயிறு கூட்டு

டால் = பருப்பு

போஹா – அவல்

மச்சி = மீன்

மாம்சம் = மாமிசம்

சாபுதானா = ஜவ்வரிசி

லேங்கா = ஆண்களின் உள்ளாடை

தர்ஷன் = தரிசனம்

மங்கல்வார் = செவ்வாய்

குருவார் = வியாழன்

சனிவார் – சனி

தியானேஷ்வரி = நமது தேவாரம் போன்றது.

தில் = எள்

கிச்சடி = உப்புமா

காய் – என்ன

சாங்கித்லா = சொன்னாய், சொன்னீர்கள்

துமி = நீங்கள்

ஜாணுர் – போகிறோம்

அமி லோக் , அமி = நாங்கள்

போல்த்தூஸ் - பேசுகிறாய், பேசுகிறீர்கள்

அமாலா - எனக்கு, எமக்கு

மைத்தி = புரிதல், தெரிதல்

சாப் – ஐயா

பிக்காரி - பிச்சைக்காரன்

அம்சக்டே = எங்களிடம்

கல்த்தி = தவறு, குற்றம் , பிழை

கேலா = செய்தோம்

சாங்கானா, சாங்கா = சொல்லுங்கள்

பராபர் = சரி

நை = இல்லை

கூஸ் = மலம்

குறிப்பு :- தமிழ்ச்சொற்களுக்கும் தமிழ்ப்பொருள் எழுத ஆசைதான்.

நேரமும் இடமும் இல்லை.

ரசனை - ஜூன் 2006

***

4. யாம் உண்பேம்

பெய்ய வேண்டிய மழை மனதின்றி தூறிக்கொண்டு போயிற்று தொடர்ந்து மூன்று ஆண்டுகள், புஞ்சைக்காடுகள் எல்லாம் சுக்காம் பாறை போலக் கெட்டிப்பட்டு வறண்டு வெடித்து வாய் பிளந்து கிடந்தன. சீமைக் கருவை, எருக்கலை, பீநாறி தவிர வேறெதுவும் உயிர் வாழ்வதற்கான தோது இல்லை. கமலைக் கிணறுகளில் இருநூறு அடியில் கிடந்த தண்ணீர் உள்வாங்கி, உள்வாங்கி ஐந்நூறு, அறுநூறு, எழுநூறு என தங்கம் விலை போல் போய்க்கொண்டிருந்தது. இந்தக் கதியில் மேலும் துரந்துகொண்டு போனால் பூமியின் மறுபக்கம் அமெரிக்கக் கண்டத்தின் காடுகளிலிருந்து வெளியேறலாம் போல.

வழக்கமாய்க் காடுபிடித்துக் கிடக்கும் மூங்கிற் புறக்கள் காய்ந்து குற்றி குற்றியாய் நீட்டிக்கொண்டு நின்றன. ஒரு தீக்குச்சி போதும் பற்றிப் படர்ந்து எரிய, அனலாய்க் கொளுத்திய வெயில், மனித, மிருக உடம்புகளில் இருந்த மிச்ச ஈரத்தையும் உறிஞ்சிக்கொண்டிருந்தது. காய்ந்து வறண்ட, எண்ணெய்ப் பற்றற்ற மனிதத் தோல்கிளில் உப்புப் பூத்துப் பொரிந்து சொரசொரத்துக் கிடந்தது.

குடிக்கத் தண்ணீரும் கரம்பப் புறக்களும் அற்ற கால்நடைகள், உலர் திராட்சை போல் தோல் சுருங்க ஆரம்பித்த பின் தோலுக்காகவும் கறிக்காகவும் விறகு போல் காய்ந்த எலும்புகளுக்காகவும் கொம்புகளுக்காகவும் திறந்த டெம்போக்களில் நாக்பூருக்குப் போயின. விதைச் சோளமும் ரொட்டியாகச் சீரணமாகிவிட்டது. ரேஷன் கடையில் மக்கிய கோதுமை மாவும் மக்காச்சோள ரவையும் போட்டார்கள். கடித்துக் கொள்ள வெங்காயத்துக்கும் சண்டு மிளகாய் வற்றலுக்கும் போக்கில்லை. ரேஷன்கடைகளில் கடன்தரமாட்டார்கள். தாலியில் கோர்க்கப் பட்டிருந்த தங்கப்பொட்டுகள் முதலில் மார்வாடிக் கடைகளுக்குப் போயின. பின்பு தாலியே போயிற்று தொடர்ந்து. பொன் போலத்துலக்கி வைக்கப்பட்டிருந்த பித்தளைப் பானைகள், லோட்டாக்கள், போணிகள், தாம்பாளங்கள் சில்லறையாக விலையாகி ரேஷன் கோதுமை மாவாக மாறி வந்தன.

மார்வாடிக் கடைகளில் எல்லாம் விலைக்கு வாங்கினார்கள். பண்ட பாத்திரங்கள், சைக்கிள்கள், பொன் உருப்படிகள், சரிகையுள்ளதுணிமணிகள், கலப்பை, மண்வெட்டி, அரிவாள், குங்குமம் அப்பிய அம்பாபாயியின் பித்தளை முக அங்கி.... வயதான

தாசியொருத்தி இரண்டு ரூபாய்க்குக்கூட விலைபோகாத தனது வறண்ட மயிரடர்ந்த யோனி காட்டி மயங்கிக் கிடந்தாள். மயங்கிக் கிடந்தாளோ, மரித்துத் தான் கிடந்தாளோ?

கோதுமை மாவை உப்புத் தண்ணீர் தெளித்துப் பிசைந்தால் மல வாடை வந்தது. எந்த முரட்டு ரகக் கோதுமையும் மட்ட ரக அரிசியும் கெட்ட நாற்றத்துடன் விளைவதில்லை. மலிவான ரகங்களை ஆதரவு விலை கொடுத்து வாங்கி, புழுங்க வைத்து, மக்க வைத்து, நிறம் மங்கவைத்து, கசக்க வைத்து, நாற வைத்து, ஒன்றிரண்டு ஆண்டுகள் மழையில் ஊறவைத்து, வெயிலில் காயவைத்து, புழுக்க வைத்து, மக்கள் தின்பதற்கென்று வள்ளன்மையுடன், பெருங்கருணையுடன், தாயின் சாலப்பரிவுடன் ரேஷன் கடைகளுக்கு அனுப்பினார்கள் தேசத் தலைவர்களும் தேசத்தைக் கட்டி எழுப்பிக்கொண்டிருந்த அதிகாரிகளும். அமெரிக்க ஐரோப்பிய நாட்டுப் பன்றிகள் தின்னாது அவற்றை.

கனிவுடன் பள்ளிக் குழந்தைகளுக்கு மதியம் ஒருவேளை மக்காச்சோள ரவை எனும் பெயரில் களி போன்றதொன்றைக் கிண்டிப் போட்டார்கள். வயிற்றின் காந்தல் உப்பின் சுவையைக் கூட எதிர்பார்க்கவில்லை. கொடுந்தீயொன்று குமுறிக்குமுறி எரிந்து கொண்டிருந்தது பங்கு பங்காக யாவர் வயிற்றிலும். பிள்ளைகளுக்குப் போட்டியாக கிழடுகட்டைகளும் அலுமினியத் தட்டேந்தி நின்றார்கள். செவலை நாய்கள் மலங்கள் தேடி எப்போதும் அலைந்தவாறிருந்தன.

ஈதல்லாம் ஆப்பிரிக்கக் கண்டத்துச் சின்னஞ்சிறு நாடொன்றின் பஞ்ச காலச் செய்திகள் என்றெண்ணிக் கொள்ளாதீர்! பொற்காலத்தை நோக்கி, வெளிநாட்டு நவீன சொகுசு ஊர்திகளில் வேகமெடுத்துப் பறந்துகொண்டிருக்கும் இந்தியத் திருநாட்டின் மத்தியப் பகுதியின் சமகாலச் சேதிகள்.

கன்பத் சக்காராம் நாத்ரே, பைங்கன் வாடி சுடுகாட்டில் சாம்பராகிக் காற்றில் பறந்து மண்ணோடு மண்ணாக மக்கிப் போகலாம் என்றுதான் காத்திருந்தார். மேற்கில் கம்பாட் வளைகுடா அல்லது கிழக்கில் வங்காள விரிகுடா ஐந்நூறுக்கும் மேற்பட்ட மைல் தூரம். எனவே கடலில் கரைய மார்க்கமில்லை. எழுபத்து மூன்றாவது வயதில் இனி அவர் எந்த மாநிலத்துக்கு ஆளுநராக இயலும்?

அவரால் முடிந்ததைச் செய்துகொண்டிருந்தார். மிளகாய்க்கோ பருத்திக்கோ களை கொத்துவது, சோளத்தட்டைகளைக் கழித்துக்

கொண்டுவந்து மாடுகளுக்குப் போடுவது, குப்பமாய்க் கிடக்கும் வெங்காயத்தின் தாள்களை அரிவது, தரிசுக் காடுகளில் மேய்ந்து கொண்டிருக்கும் கன்றுகாலிகளைப் பத்தி வருவது, புஞ்சைகளில்வளர்ந்து நிற்கும் பார்த்தீனியம் உள்ளிட்ட குற்றுச் செடிகளைப் பிடுங்கிக் குவிப்பது, உழவுக் கட்டிகளைத் தடிகொண்டு அடித்து உடைத்துப் போடுவது, மணிலாவுக்கோ சோயாவுக்கோ களை பறிப்பது….

ஒற்றைக்கொரு மகனுக்கு பெண் பார்த்து முடித்த கையோடு கெங்காபாயி சீதபேதியில் போய்ச் சேர்ந்து பதினெட்டு ஆண்டுகள் ஆகிவிட்டன. நாத்ரேக்கு வேறு அல்லல்கள் இல்லை. சுருட்டுக்கும் தம்பாக்கு பொட்டலத்துக்கும் மகன் கொடுக்கும் சில்லறைகளே போதும். பேத்திகள் இரண்டுக்கும் இரண்டு மூன்று ஆண்டுகளில் கல்யாணம் செய்து வைக்கலாம். காலையிலும் முன்னிரவிலும் இரண்டு பாக்ரியும் உடைத்த வெங்காயமும் இருந்தால் அது விருந்து. சோமவார் விரதம், மங்கள்வார் விரதம், குருவார் சந்தோஷிமா விரதம். இரவில் மட்டும்தான் ஒரு பொழுது உணவு. மருமகள் அவல் ஊறவைத்து, உருளைக்கிழங்கு வேகவைத்துப் பிருத்து, பச்சை மிளகாயும் வெங்காயமும் வதக்கிப் போட்டுத் தாளித்து "போஹா" செய்து தருவாள். வேலையற்று கையொழிந்திருக்கும் பொழுதுகளில் 'அபங்' அல்லது தியானேஷ்வரி வாசிப்பது என்று குறையொன்றுமில்லை.

பஞ்சம் என்பது தாண்டமுடியாத பாழ்க்கிணறாக வழிமறித்துக் கிடந்தது, எல்லோருக்கும்தான். எனில் எதற்காகத் தன் மகன் பாகோஜி கன்பத் நாத்ரே தனது உயிரையும் மனைவியின் மகள்களின் உயிரையும் தூவென உமிழ்ந்தான்?

எவனோ ஒரு முட்டாள் அரசன், மாவீரன் எனத் தன்னை எண்ணிக் கொண்டு, போரிட்டு, மக்களை - தம்மவரையும், எதிரி என்று எண்ணியவரையும் கொன்று குவித்தவன் - இறுதியில் தோற்கும் தறுவாயில் கையில் வாளொன்று மாத்திரம் வைத்துக்கொண்டு போர்க்களத்து மண்ணில் கால் விரித்து நின்று, 'ஒரு குதிரை, ஒரு குதிரை" எனக் கதறினானாம். ஒருவேளை பாகோஜியின் சின்னப் பெண், 'ஒரு ரொட்டி, ஒரு ரொட்டி' என விசும்பியதை அவன் கண்டிருக்கலாம். அடகு வைக்க, விற்க ஏதுமின்றி தட்டழிந்திருக்கலாம் தகப்பன் சுருட்டு பற்றவைத்து நான்கு வாரங்கள் ஆகிவிட்டன என்று நினைத்திருக்கலாம்.

தனது நட்பாகவும் உறவாகவும் உயிராகவும் இருந்த மைத்துனன், ஏதோ வெஞ்சினத்ததால் தனது குறியறுத்து சிவலிங்கத்துக்கு குருதி சொரிந்து கோண்டியா பொது மருத்துவமனையில் போராடும் வேதனையில் இருக்கலாம்.

ஏதோவோர் ஊரில், மழை பெய்யவில்லை என்றால் காளிக்கு காரம் கூடிய காந்தாரி மிளகாயை அரைத்துப் பூசுவார்களாம். எரிவு தாங்க முடியாமற் போகும்போது காந்தாரி அம்மன் மழை சொரியச் செய்வாளாம். இன்று அடர் கந்தக அமிலம் சொரிந்தால்கூட அவள் அசைந்து கொடுக்க மாட்டாள் என்று தோன்றி இருக்கலாம்.

பூச்சி மருந்து வாங்க மட்டும் அவனுக்கு எங்கிருந்து காசு கிடைத்தது என்று தெரியவில்லை. பருத்திக்கு அடித்து மீந்த பகுதி ஏதும் பழசாகிப் பரணில் கிடந்திருக்க வேண்டும். ஊற்றிப் பிசைந்த சோள மாவும் ஈச்சங் கருப்பட்டியும் எங்கிருந்து வந்தன என்றும் தெரியவில்லை.

அது ‘போர்’ எனப்படும் காட்டு இலந்தை பழுக்கும் காலம். செங்காயானாலும் தின்னலாம். ஊரைத் தாண்டி இருந்த குறுங்காட்டினுள் நுழைந்து தேடினால், மழைக்கு ஏங்கிய மரமேதும் நரங்கிய காய்களைக் காட்டிக்கொண்டு நிற்கக்கூடும். கற்றாழை மூடு ஒன்று கிடைத்தால் கூட அதன் கிழங்கு தோண்டி வந்து ஏழு தண்ணீர் மாற்றி அவித்துத் தின்னலாம். குரங்குகள் தின்னும் காட்டுக் காய்கள் ஏதும் கிடைக்கலாம். கிழட்டு நாத்ரே காலையிலேயே நடந்து நடந்து காட்டில் திரிந்து கொண்டிருந்தார். காட்டினுள்ளும் தலைக்கு மேல் வெயில் அடித்தது. மாலை மயங்கத் திரும்பி வந்தபோது எல்லாம் ஆகிவிட்டிருந்தது.

முப்பது மைல்கள் தாண்டி இருந்த கோண்டியாவுக்கு உயிருக்குஊசலாடும் நான்கினைக் கொண்டுபோக எந்த வாகனம் கிடைக்கும் இலவசமாக?

வரிசையாகக் கிடத்தப்பட்டிருந்தன நான்கு சவங்கள். கொள்ளிக் குடம் சுமக்கையில் ஈரல் கீறிப் பிளந்து வேதனித்தது நாத்ரேக்கு.

திருட்டு ரயிலேறிப் போய் நாக்பூரிலோ ராய்ப்பூரிலோ ஜபல் பூரிலோ கட்டிடக் கூலியாக செங்கல்லோ ஜல்லியோ மணலோ சுமந்திருக்கலாம். கரகரத்த குரலில் ‘அபங்’ பாடி கையேந்தி நடந்திருக்கலாம். தினத்துக்கு ஐந்து ரொட்டி சம்பாதிக்க இயலாதா?

எதை அஞ்சினான் பாகோஜி?

வயிற்றை அஞ்சினானா? பருவமான பெண்களின் வாசம் கவர்ந்து வரும் கோரைப்பல் ஓநாய்களை அஞ்சினானா?

தன்னை மட்டும் ஏன் விட்டுப் போனான்?

உடைந்து உடைந்து பெருகியது கிழவனுக்கு. தன்னிலிருந்து தன்னை விலக்கி, தன்னைச் சேர்த்துத் தன்னை மாய்த்து….

தனியாகத் தன்னை மாய்த்துக் கொள்ளத் திராணியில்லை நாத்ரேக்கு!

பூட்ட என்ன இருக்கிறது வீட்டில்? யாருக்கு எதை விட்டுச் செல்ல? புலவர் பாடாது ஒழியும் நிலவறையா? எங்கு செத்து வீழ்ந்தாலென்ன? மாற்றுடை இல்லாத, பத்துக் காசு சில்லறை கூடக் கைவசம் இல்லாத, அடுத்த வேளை உணவு பற்றிய ஆதாரம் இல்லாத, மறுபடியும் இனி, காணவே முடியாத மண்ணைப் பற்றிய போதம் இல்லாத புறப்பாடு.

ஆவிகள் ஆவலாதியோடு அலைந்து திரியும் பூமி.

கும்பி என்பது தூராத கிணறு, அவியாத நெருப்பு, ஆறாதபுண்,தன்னையே தான் தின்னும் வெறியான மிருகம், உள் ஒளிந்து கிடக்கும் உருவம் இல்லா அணங்கு….

எங்கு கொண்டுபோய்த் தொலைப்பது நிழலை. பெற்று வளர்த்த மகனின், பேணிய மருமகளின், குங்குமம் அப்பி குளிர்சாந்தம் அட்டித்து மங்கல வீதி வலஞ்செய்து மணநீர் மஞ்சனம் ஆட்டக் கனாக் கண்ட பேத்திகளின் நினைவை எங்கு கொண்டுபோய்த் தொலைப்பது?

ஹிங்கன்காட்டில் கிடந்த குளமொன்றில், கோவணம் கட்டிக் கொண்டு, அரை வேட்டியையும் தலை வேட்டியையும் வெறும் தண்ணிரில் நனைத்துக் குமுக்கிக் குத்தி, உலர வைத்து மறுபடியும் அணிந்து கொண்டு….

எந்தத் திசையானால் என்ன? திசையற்றவனுக்கு போகும் திசை எல்லாம் சொந்தத் திசை

அதிலாபாத் ரயில் நிலையம் பிரதான போக்குவரத்து வழியில் அமைந்த பரபரப்பான நிலையமல்ல. ஆந்திரப் பிரதேசத்தின் வடக்குக் கோடியில்

மராத்திய மாநிலத்தைத் தொட்டுக்கொண்டு கிடந்த மாவட்டத்தின் தலைநகரம். எப்போதும் பீழை சேர்ந்த கண்களும் கோட்டுவாயும் உறக்கச் சடைவுமாகக் கிடக்கும் நிலப்பகுதி. இருபது கிலோ மீட்டரில் மராத்தியம். எண்பது கிலோமீட்டரில் கர்நாடகம். நூற்றிருபது கிலோமீட்டரில் சத்தீஸ்கர் மாநில எல்லைகள். வறட்சி, வறுமை, புறக்கணிப்பு, அண்டை மாநிலங்களில் குற்றம் செய்து ஓடிவந்து மறைந்து வாழும் மானுடரின் ஆட்சி. மக்கள் போர்க்குழு கம்யூனிஸ்ட்டு கள் காலுன்றி நின்ற இடம்.

அதுபற்றி எல்லாம் கவலைப்படமுடியாத விற்பனைப் பிரதிநிதி பாபுராவ். சரியான தங்குமிடம் அல்லது உணவு கிடைக்காது என்றோ, போக்குவரத்து வசதிகள் போதுமானதாக இல்லை என்றோ, வெயில் நூற்றுப் பன்னிரண்டு கொளுத்துகிறது என்றோ ஒதுங்கிக்கொள்ள முடியாத வேலை. அவன் ஏவப்பட்ட கணை. சொந்த விருப்பு, வெறுப்பு கிடையாது. ஒன்றில் இலக்கை அடைந்து வீழ்த்த வேண்டும் அல்லது வெறுமனே வீழ்ந்து கிடக்க வேண்டும். கான முயல் எய்த அம்பினில் யானை பிழைத்தவேல் ஏந்தல் இனிது.

காலையில் உசல் பாவ், சாய், மதியம் முரட்டு ரொட்டிகளும் பருப்பும், வாய்க்கவில்லை எனில் பட்டாட்டா வடா, சாய். இரவு எப்போதும் தோதான கடை தேடிப்பிடித்துக் கொள்வான். பயண விற்பனைப் பிரதிநிதிகளின் பிரதான பொழுதுபோக்கான நாடன் சாராயக்கடைகள் இன்றும் அறிமுகம் ஆகியிருக்கவில்லை. நேரம் வாய்த்தால் மராத்தி சினிமா அல்லது தமாஷா.

அந்த முறை பாபுராவின் பயணத்திட்டம் பட்னேரா, யவத்மல், புல்காவ், அதிலாபாத், நாந்தேட், பர்பனி, லாத்தூர் உற்பத்தியாளர் கூட்டுறவு நூற்பாலைகள் இலக்கு. பகலில் அலைச்சல், முன்னிரவில் பயணம், பின்னிரவில் உறக்கம், காலையில் பயணம், பகலில் அலைச்சல். கையில் இருக்கும் பிரீஃப் கேஸ் தனியாள் தங்கிப் புறப்பட சகல சாமான்களும் கொண்டது. பாபுராவுக்கு இந்த அலைச்சலிலும் சுகமொன்று கண்டு கிட்டியது.

யவத்மல் அறையை அதிகாலையில் காலி செய்தான். முன்னிரவில் புறப்பட்டிருக்கலாம். ஆனால் யவத்மல்- அதிலாபாத் கடைசி பஸ் மாலை நாலரைக்கே போய்விட்டது. எட்டு மணிக்கு அதிலாபாத் வந்து சேர்ந்தான். பேருந்து நிலையத்தில் இருந்து மில்லுக்கு நாலு கிலோ மீட்டர். பேருந்து நிலையத்தில் வாடகைக்கு சைக்கிள் கிடைத்தது.

அதிலாபாத்தில் இருந்து பர்பனிக்கு மதியம் இரண்டரை மணிக்கு ஒரு பாசஞ்சர் இருந்தது. மாலை பர்பனியில் அறை எடுத்துக் கொள்ளலாம். மில்லில் வேலை முடித்து வெளியே வர ஒரு மணியாகிவிட்டது. ஆற அமரச் சாப்பிட்டு ரயில்வே ஸ்டேஷன் போவதென்றால் பாசஞ்சர் போய்விடும்.

பசி நன்கு கொளுத்தியது. இரண்டு பட்டாட்டா வடை சாய் எத்தனை நேரம் தாங்கும்? ரயில் நிலையத்தில் என்ன கிடைக்கும் என்று சொல்ல முடியாது. வாடகை சைக்கிளை பேருந்து நிலையத்தில் கொடுத்துவிட்டு சைக்கிள் ரிக்ஷா பிடித்து ரயில் நிலையம் கிளம்பினான் பாபுராவ், ரிக்ஷாக்காரன் காட்டிய கடையில் நான்கு ரொட்டிகளும் உருளைக் கிழங்கு சப்ஜியும் இலவசமாய் தந்த நான்காய் பிளந்த வெங்காயமும் எலுமிச்சம்பழத் துண்டும் பார்சல் வாங்கிக்கொண்டான். பயணச் சீட்டு வாங்கி, அடைசல் இல்லாத பெட்டியில் ஏறி, சாய்வாக உட்கார வண்டி புறப்பட்டது. பல பத்தாண்டுகளாய் திரும்பத்திரும்ப ஒரே தடத்தில் ஓடிக்களைத்த அலுப்பு தொனித்தது, வண்டியின் ஊதலில். வண்டியில் கூட்டமில்லை. காட்டமான வெயில் பொசுக்க ஊறியவியர்வையில் தூசி அப்பியது. நான்கு மணி நேரமோ, ஐந்து மணி நேரமோ ஆகும் பர்பனி போய்ச்சேர மலிவாக அறை எடுத்துக் குளிக்க வேண்டும் முதலில், பசித்தது பாபுராவுக்கு. சாப்பிடலாம் என்றெண்ணி தண்ணீர் போத்தலை எடுத்து வைத்துக்கொண்டு, ரொட்டிப் பார்சலைப் பிரித்தான்.

காய்ந்த தையல் இலையில் பொதியப்பட்டிருந்த சோள ரொட்டிகள். தாராளமாக கொத்தமல்லித் தழையும் வதக்கிய வெங்காயமும் வேகவைத்து உதிர்த்த உருளைக்கிழங்கும் போட்டுப் பிரட்டிய சப்ஜி. எண்ணெயில் வதக்கிய நீண்ட காரமான பச்சை மிளகாய். சூடு ஒரு ருசி, சிவப்பு ஒரு அழகு என்பதெல்லாம் கொடுத்து வைத்தவர்களுக்கு. பாபுராவுக்கு பசிக்கு ருசி வேண்டாம், நித்திரைக்குப் பாய் வேண்டாம்.

வெளியில் வேடிக்கை பார்த்துக்கொண்டு பறக்கும் தூசி ரொட்டியில் விழாமல் காபந்து செய்துகொண்டு, கார மிளகாய் கடித்துக் கொண்டு, நிதானமாக ரொட்டியைப் பிய்த்துத் தின்றுகொண்டிருந்தான்.

கால் துண்டு ரொட்டியும் கொஞ்சம் சப்ஜியும் இலையில் மீதம் இருந்தன. ஒரு துண்டு ரொட்டியை சப்ஜியுடன் விரல்கள் கவ்விப் பிடித்திருந்தன. வாய்க்குக் கொண்டுபோகும் நேரம். பாபுராவின் உயர்த்திய கையை, முதிய, தோல் சுருங்கிய நாத்ரேயின் கை எட்டிப் பிடித்து வெட வெடத்தது. குலைந்து ஒலித்த குரலால் அதிர்வுற்று பாபுராவ் நிமிர்ந்து

பார்த்தான்.

‘அமி காணார்…. அமி காணார்…..'

'எனக்குத் தா’ என்றல்ல, ‘நான் தின்பேன்’ என்றல்ல, நாம் உண்போம் என. தூய சங்கத்தமிழில் பெயர்த்தால் ‘யாம் உண்பேம்’ என.

கண்கள் கசிந்திருந்தன. பிடித்த கரம் நடுங்கியது. மீண்டும் மீண்டும் பதற்றம் பரவ, 'அமி காணார்…. அமி காணார்….’

பல்கிப் பெருகிக் கிளைத்துத் தழைத்த பசியின் மொழி பாபுராவை திடுக்கிடச் செய்தது. மறுபடி மறுபடி சோர்ந்து தொய்ந்த குரல். யாசகத்தின் இரங்கிய குரல் அல்ல அது. பசியின் பாய்ச்சலை உணர்த்திய குரல். தின்ற மிச்சமல்லவா என்று தோன்றியது அவனுக்கு. கால் துண்டு ரொட்டி என்ன பசியாற்றும்? சற்று முன்னால் வந்திருக்கலாகாதா என இரங்கியது மனது.

பிடுங்காத குறையாகக் கையிலிருந்து வாங்கிய பொட்டலத்துடன் எதிர் இருக்கையில் உட்கார்ந்து, கால்துண்டு ரொட்டியில் கால்துண்டை வாயில் போட்டு மெல்லலானார் நாத்ரே. உமிழ் நீர் நரம்புகள் வெட்டி இழுத்துச் சுரந்ததன் வலியில் சற்றுக் கோணியது வாய். சுரந்த கண்கள் வடிந்தவாறு இருந்தன. யுகங்களாய்த் தொடர்ந்த மனித குலத்தின் பசியின் வடிவமாய் நாத்ரே காரமான பச்சை மிளகாயைக் ‘கரக்’ கெனக் கடித்தார்.

தன்னிடம் இருந்த தண்ணீர் போத்தலை அவரிடம் நீட்டினான். அடுத்த ஸ்டேஷன் எப்போது வரும் என்று தெரியவில்லை. வடா பாவ் கிடைக்கலாம். பச்சை வாழைப்பழங்கள் கிடைக்கலாம். அவருக்கு இரண்டு வாங்கித் தர வேண்டும் என சங்கல்பம் செய்துகொண்டான். காதில் தகப்பன் சாமியின் உபதேசம் போல ஒலித்துக்கொண்டிருந்தது நாத்ரேயின் குரல், மிச்ச வாழ்க்கைக்குமான மந்திரம் போல. யாம் உண்பேம்.

ஓம்சக்தி ஜூன் – 2006

***

5. கதை எழுதுவதன் கதை

வழக்கமில்லாமல் எட்டரை மணிக்கே விழிப்பு வந்து விட்டது. தேய்ப்பதற்குப் பல் இல்லை. எனவே பேஸ்ட், பிரஷ் செலவில்லை. ஆட்காட்டி விரலால் ஈறு தேய்த்து, வாய் கொப்பளித்து, முகம் கழுவி, வாசலுக்கு வந்து சற்றே சாய்வான சூரல் நாற்காலியில் அமர்ந்தார் கும்பமுனி, குத்தவைத்தாற்போல இரு கால்களையும் தூக்கி நாற்காலியில் வைத்துக்கொண்டார். வேலிக்கு அப்பால் நின்று, இளம் பச்சையாகத் துளிர்த்திருந்த முள்ளு முருங்கை இலையை எவ்வி எவ்விக் கடித்து மென்றவாறு வெள்ளாட்டுக் குட்டியொன்று கும்பமுனியை உற்றுப்பார்த்தது. எழுத்தாளர் அவர் என்று கண்டு கொண்டதன் அடையாளமாக 'ம்மே' என்றொரு சத்தம் எழுப்பியது.

கும்பமுனி சாதாரணமாக எழுந்திருக்க காலை பதினொன்று ஆகும். வறுத்த மோர்மிளகாயைக் கடித்துக்கொண்டு மாந்திய நாடன் சாராயமப்புக்கு, விழித்தவுடன் தவசிப்பிள்ளை நீட்டும் கட்டன் காப்பி தோதாக இருக்கும். பாட்டா எழும் நேரம் திட்டமாகத் தெரியுமாத லால் தவசிப்பிள்ளை தனது காலாணிப் புற்றுக் காலைத் தாங்கி வைத்து நடந்து தோதுபோல வந்து சேருவார்.

அதிகாலை எட்டரை மணிக்கே முழித்துவிட்ட கும்பமுனிக்கு கட்டன் காப்பிக்கு வழி இல்லாமல் எரிச்சல் ஏறி அடித்தது. தவசிப் பிள்ளையையும் இன்னுங் காணோம். எங்கிண போய் வா பாத்துக்கிட்டு நிக்கானோவ்! அவனைச் சொல்லியும் குத்தமில்லே. மொத்தச் சனமுமில்லா நாட்டுலே வாபாத்துக்கிட்டு நிக்கி… என் கடன் வாய் பார்த்து நிற்பதே! நல்லாத்தான் இருக்கு.'

குண்டியைச் சற்று அனக்கி உட்கார்ந்தார் கம்பமுனி.

மூலத்தொந்தரவு. 'சவம் என்ன பாடு படுத்துகு, நருக்கு நருக்குன்னு… குண்டிக்குள்ளே பூச்சி முள்ளு கொத்து நல்ல காஞ்சதாப் பாத்துப் புடுங்கிச் சொருவி வச்ச மாரி! உள் மூலம்ங்கான், வெளி மூலம்ங்கான்…. என்ன மூலமோ எழவு…. கந்தமூலம், ஆதிமூலம், நதிமூலம், ரிஷிமூலம், எல்லாம் நிர்மூலம்…..

முன்தினம் வந்த கடிதங்கள் முக்காலி மீது இருந்தன. காற்றுப் பறத்தாமல்

இருக்க பாக்கு வெட்டியைப் பாரமாக வைத்திருந்தார். முதல் கடிதத்தை எடுத்து, உறையினுள் கை விட்டார். தீபாவளி மலருக்கு கதை கேட்டுக் கடிதம். ஆயிரம் சொற்களுக்கு மிகாமல்இருக்க வேண்டுமாம். 'தாயோளி பள்ளிக்கொடத்திலே வாத்தியாராஇருந்திருப்பான் போல…. மார்க்கு போடுகதுக்கு கேள்வி கேக்கான்…. அவுனுக்க அம்மை எழுதுவா கதை ஆயிரம் வார்த்தை எண்ணிக்கணக்குப் பாத்து… சவம் சுட்ட செங்கலு பாரு, எண்ணி வரிவரியா அடுக்கதுக்கு?

அடுத்த கடித உறையையும் பிரித்தார். அதுவும் கதை கேட்கும் கடிதம் தான். கடிதத்துடன் வரைந்த படத்தின் நகலொன்றும் வந்து விழுந்தது. எட்டாவது வகுப்புப் பையன் வரைந்திருப்பான் போலும். மாமரம், பறித்த மாங்காய் விழுந்துகிடந்த வண்ணம், வேலி, காவல்காரன் முண்டாசு, சிறுவர்கள், கிளைமேல் ஒருவன், வானில் மேகத்துண்டுகள்…. வேலியோரம் தள்ளையாடும் வந்து சேர்ந்து கொண்டது. இரண்டு 'ம்மே'க்கள் கேட்டன. குட்டியாடு சொல்லி இருக்கும் போல, அதுவும் புரிந்துகொண்டு கழுத்தை நீட்டிப் பார்த்தது. ஆட்டுக்கு இருக்கும் அறிவுகூட பத்திரிகை ஆசிரியனுக்கு இல்லை. படம் பார்த்து கதை எழுதச் சொல்கிறான்.

'கடேசிக் கதையை எழுதி இருவத்தி மூணு மாசமாச்சு. எற்கனவே கிழிச்சுத் தள்ளுனது போக, இருந்த கதைகளை முழுத்தொகுப்பாக்கியாச்சு. எல்லாம் சேர்த்து எம்பது வந்துது. அதுலயும் கொறைய எண்ணத்தைத் கீறிக் களையலாம். மனசு கேக்கல்லே! காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சுல்லா. நாறப்பயக்கோ தன் குஞ்சு மாத்திரம்தான் பொன் குஞ்சுண்ணுல்லா நெனைக்கான். உலகத்திலே நெறயப் பயக்களுக்கு குஞ்சு இருந்தும் காரியமில்லே. உபயோகிக்கத் தெரியாதவனுக்க உருப்படி…. இன்னும் பத்து வருசம் போனா, மேற்கொண்டு பத்துப் பதினஞ்சு கதைகளைக் கீறிப் போடலாம். பொறவு என்னத்த மிஞ்சும்? மிஞ்சாமலும் போகும்…. சவம் வேகவதிக்கு எதிரேற விட்டதொரு சிற்றேடு, பாரு! தக்கார் தகவிலர் என்பதவர்தம் எச்சத்தாற்காணப்படும்ணான் தமிழ் முனி. பலருக்கு, நாட்டுலே, எச்சம்ங்கதேகாக்கை எச்சம், குருவி எச்சம், வௌவால் எச்சம், மாட்டுச் சாணி, பண்ணி விட்டை, யானை லொத்தி, குதிரை லொத்தி, நாய்ப்பீ, பூனைப்பீ, ஆட்டாம் புழுக்கை, எலிப் புழுக்கை….

'உரையாசிரியன் செலவன் சொல்லுகான் எச்சம்ணா பிள்ளைகுட்டியோண்ணு... அப்பம் பிள்ளையும் குட்டியும் இல்லாத

நம்மைப் போலவுள்ள கூட்டாளி என்ன செய்வான்? திருவள்ளுவருக்குப் பிள்ளை உண்டாவே! பெரியாருக்கு உண்டா? சவம், படிச்சவன் பாட்டைக் கெடுத்தான், எழுதினவன் ஏட்டைக் கெடுத்தான்.

கும்பமுனிக் இருப்புக் கொள்ளவில்லை. ஒரு தரத்துவெற்றிலையாவது போட வேண்டும் என்று தோன்றியது. தவசிப் பிள்ளை வாற வழியைக் காணோம். வேறெங்கோ மேய்ந்து கொண்டிருந்த வெள்ளாடுகள் சில வேலியோரம் சேர்ந்து கொண்டன. அதுகளுக்கென்ன, எல்லாம் ஆகாரம்தான்.... நஞ்சில நாலு வாய்.... பிஞ்சில நாலு வாய்.... முப்பது நாப்பது வருசத்துக்குப் பொறவு, காத்துலே விட்ட குசுப்போல ஒண்ணுமில்லாமப் போற கதையளுக்காக இவ்வளவு செறையா? அதைக் கர்ப்ப சோகம்ங்கான், பிரசவ வேதனைங்கான்.... வலிய வலிய வார்த்தைகள்ளே வளர்க்கிறானுக. எப்படி வருது பாத்தேளா, வானாவுக்கு வானா? சும்மையா சொன்னான் சட்டியிலே இருந்தா ஆப்பையிலே வரும்ணு. எவனும் பட்டினியாவே கெடக்கான், நீரு எழுதல்லேண்ணு.... இல்ல மாரடச்சு செத்துப் போனானா? தாயுமானவனா சொன்னான், எல்லாம் யோசிக்கும் வேளையில் வயிறார உண்பதுவும் உறங்குவதுவுமாக முடியும்னு? வயிறார எங்க உங்க? கும்பிக்குக் கூழுமில்லே, குண்டிக்குத் துணியுமில்லே! கட்டங் காப்பிக்கே வழியில்லே.... இண்ணைக்கு யாருவே கண்டா நகுலனை, மாதவனை, சார்வாகனை.... நான் என்ன அஞ்சாங் கிளாஸ் ஆஜர் பொஸ்தகமாவே படிக்கேன்? இதுலே இலக்குங்கான், ஒவர்டேக் பண்ணியாச்சுங்கான்...

'கடையூழிக் காலத்திலே எல்லாம் காலாவதியாகிப் போகும் பாத்துக்கிடும். சிவபெருமானே திருவாசகம் மாத்திரம் வச்சிருப்பானாம். கடேசி காலத்திலே ஒத்தையிலே இருக்கச்சிலே படிக்க.... கையடக்கமான கழக வெளியீடா வச்சிருப்பானோ, குறுந்தகடா வச்சிருப்பானோ? ஏன்சவம் மனப்பாடமா நிக்காதோவ்? திருவாசகம் படிச்சா நேரம் போகுமா வேய்? நேரம் நிக்கயில்லா செய்யும்!

கீரைக்காரி கூவிக்கொண்டு போனாள். "பாட்டா அரைக்கீரை வேண்டுதேரா.... மழை பெய்து தழஞ்ச கீரை...."

'வேண்டாம்மா போ...."

"காயம் போட்டுக் கடஞ்சா நல்ல மணமாட்டு இருக்கும்...."

'நீ கடஞ்சு வச்சுக்கிட்டுப் போவியா?"

“ஓம்ம கொழுப்புக்குத்தாலா இப்படி குண்டி காஞ்சு கெடக்கேரு…"

"ஆமாட்டீ…. குண்டி காஞ்சு கெடக்கேன், வந்து கழுவீட்டுப் போ…. காலம்பற மனுசனை இருக்க விடுகாளா பாரு...”

“ஒம் மட்ட யாரு பேச்சுக் குடுப்பா…. ஒடம்பெல்லாம் குசும்புல்லா...”

"பாத்துக்கிட்டேள்ளா! இதான் ஒலகம். சும்ம இருக்கவனையும் இருக்க விடாது. இனி என்னத்தை எழுதி என்னத்தைக் கிழிச்சு….

ஏம்லே சால் பெல்லோ எம்பத்தோரு வயசிலே பிள்ளை பெறல்லியா? அவம் பெத்தான். நமக்கு மொதல்லே எந்திரிச்சு நடக்க சீவம்வேணுமில்லா? வஸ்து - கபில வஸ்துண்ணு யாரு சொன்னா, திலீப் குமாரா, அதும் ஆட்டாம் புழுக்கை மாதிரி ஆயாச்சு…. போராதா முப்பது வருசம் ஏர் ஒட்னது? வலத்தை வச்சுப் பிடிச்சாச்சு, இடத்தை வச்சுப் பிடிச்சாச்சு, கள்ள ஒழவு உழுதாச்சு. நல்ல காலம், கொல்லைக்குப் போறமாரி படம் போட்டு கதை எழுதச் சொல்லல்லே…. புதுமைப்பித்தன் ஒரு கதையை அப்பிடித்தான் ஆரம்பிச்சான்….ஓர்மை இருக்கா? கயிற்றரவுண்ணு ஒரு கதை…. பின்னே ஒரு காரியம் பாத்துக்கிடுங்கோ! எழுத்தாளன் பென்ஷன் வாங்கமாட்டான். சாவது வரைக்கும் எழுதலாம். அதுனாலதான் சாகப் போற காலத்திலே தீவாளி மலர், பொங்கல் மலர்ணு கதை கேப்பான். பின்னே மயிருக்காத்தையா மலர்கள்லே வரப்பட்ட கதை உசிருள்ளதா இருக்கும்? ஒண்ணும் வாயிலே வைக்க நீதமில்லாத ஊசப் பணியாரம் போலஇருக்கு…. சின்னப்புள்ளையோ இப்பம் எம்புட்டு நல்லா எழுதுகு…. அவாள் கதைகளை எங்கயாம் மலருலே பாத்திருக்கேளா? லெக்காளி இப்பம் கேக்கமாட்டான். இன்னும் முப்பது வருசஞ் செண்ணு, பல்லு ஆட்டம் குடுத்து சுகர் பிரஷர் எல்லாம் வந்து, மாடு வைக்கலு சவைக்க முடியாம அசை துப்பும் பாரு அப்பம் கேப்பான் அய்யா அரசே, தங்கம்பான்….

‘இருவது வருசத்துக்கு மிந்தி என்னை ஒரு பய தேடி வந்தானா? தேடிப்போனவனை இருக்கச் சொல்லிக் கூடப் பேசல்லே. எவன் சீந்தினான்? இண்ணைக்கு மலருக்கு மலர் கதை கேட்டு காயிதம் வருகு…. நாலு நாள்ளே நொட்டுண்ணு…. இங்கேண்ணா, பாலத்து சோசியனும் கெரகம் படுத்தும் எண்ணு சொன்னான்ங்க கதையா இருககு…..

'எண்ணைக்காம் நம்ம கதைக்கு காசு வந்திருக்கா? இண்ணுஎச்சிப்பய

பத்திரிகைண்ணா கூட இருநூறாவது தாறான். மனசுள்ளவன் தாறான் ரெண்டாயிரம். ஆனா கெரகம் பாரும், ஒரு எளவும் ஓர்மைக்கு வரமாட்டங்கு.... மலையாளத்துலே சில சாகித்யகாரம்மாரு உண்டும். ஒணம் மலர்லே மாத்திரம் எழுதுவான். வருசத்துக்கு அஞ்சு கதை. சொளையா ரூவா பத்தாயிரம்.... பொறவு நல்ல ஊணு, நல்ல ஓளு, நல்ல ஒறக்கம்....'

கடைவாயில் வெற்றிலைச் சாறு ஒழுகி கும்பமுனியின் நரைத்த மார்பு மயிரில் சொட்டியது. அரிசி வைப்புக்காரன் போல, தோளில் போட்டிருந்த ஈரிழைத்துவர்த்தில் துடைத்துக்கொண்டார். மறுபடியும் போய் படுத்துக்கொண்டு வழக்கமான நேரத்தில் எழுந்து கொள்ளலாமா என்று எண்ணினார். 'இனிப் படுத்தால், சனியன் ஒறக்கம் வருமா? மலருல எழுதப்பட்ட மத்த ஆளுகளுக்கெல்லாம் இந்தஅவஸ்தை தானோ என்னம்போ! ஆனா எப்படியும் ஒப்பேத்தீருகான். போடப்பட்டவனும் முழுசாப் படிப்பாம்னு சொல்ல முடியாது. பேரு இருந்தாப் போராதா! அவனுக்கு நாலு பக்கத்திலே, பொம்மை போடும் இடம் விட்டு, கதைய அடச்சுத் திணிக்கது ஒண்ணுதான் பிரச்னை. முன்னால ஒருக்க குண்டிண்ணு எழுதினதை வெட்டி பின்பக்கம்னு மாத்தினான் ஒரு துணையாசிரியன். தெரியாமத்தான் கேக்கேன், குண்டியும் பின்பக்கமும் ஒண்ணாவே? கோயிலுக்குப் பின் பக்கம்ணா, கோயிலுக்குக் குண்டிண்ணாவே அர்த்தம்? ஒருவேளை பிருஷ்டம்னு எழுதி இருந்தா போட்டிருப்பானோ என்னவோ? ஆனா சும்பனம்னு எழுதி இருந்ததைக் கண்டுக்கிடல்லே! அர்த்தம் மனசிலாகி இருக்காது. இல்லாட்டா வடமொழியிலே கெட்ட வார்த்தை கிடையாதுண்ணு நெனைச்சிருப்பான். இஞ்ச கொறையப் பேரு, நம்மாளுவோ, வடமொழியே கெட்ட வார்த்தைண்ணு நெனைக்கான். எல்லாம் பார எழவு!’

வெற்றிலைச் சக்கையை முகப்புத் தூணருகே, முற்றத்தில் உமிழ்ந்து, பித்தளைப் போணியில் இருந்த ஆற்றுத் தண்ணிரில் வாய் கொப்பளித்துத் துப்பி, இரண்டு வாய் குடிக்கவும் செய்தார் கும்பமுனி.

‘இனிமேலால் முன்னைப் போல ஓடியோடிக் கதை எழுத முடியாது. வேணுமானால் கதையாடல் செய்யலாம். எப்படியும் சாகுமுன் பெருங்கதை ஒண்ணு எழுதணும். எவுனும் திருத்தக்க தேவர் எழுதுனதுண்ணு நம்ம கதையை ஆராய்ச்சி பண்ணிக்கிட்டுக் கெடப்பான். ஆனா மனசு வறண்டு கெடக்கு. வடநாட்டுக்காரன்

ரயிலிலே திங்கப்பட்ட ரொட்டியைப் போல. உண்மையானாலும் அதைக் கற்பனையா எழுதணும். அதெல்லாம் ஒரு டெக்னிக்கு…. வேற வேற பேரு இருக்கு அதுக்கு. வயசு காலத்திலே என்னத்தையாம் எழுதி ஆப்பைப் புடுங்கி வாலைச் சொருவீரப்பிடாது. குடி இருக்கது பழைய கொல்லம் நாழி ஒட்டுக்கூரை வீட்டிலே…. நாலு ஓடு உடைஞ்சா மாத்த வக்கில்லே. நாழியோடு செய்யறதையே நிறுத்தி நாப்பது வருசமாச்சு.

'தவசிப் பிள்ளையையும் காங்கல்லே…. அவன் வாயைக் கிண்டினா ஊத்தையுடன் சேர்ந்து ஊர்வம்பும் கெடைக்கும். வரதட்சணை, மாமியாக் கொடுமை, வேலையில்லாத் திண்டாட்டம் எல்லாத்துக்க காலமும் முடிஞ்சாச்சு. பசியும் காமமும் சர்வகால சர்வதேச சர்வ ஜனப் பிரச்னை. சாதிக் கொடுமை பற்றி இன்னும் எழுதலாம். ஆனா சொந்த ஜாதிக்கு உள்ளேயே நிண்ணுதான் சொல்லாடணும்.'

கும்பமுனிக்கு, தனது தரித்திரம் இப்படிப் பிடுங்கித் தின்பது அவமானமாக இருந்து. இருபது ஆண்டுகள் முன்போவெனில் காசுக்கு எழுதுவதில்லை என்பதே அவருக்கு விரதமாக இருந்தது.

'சரஸ்வதியை விக்கலாமா? ஆனா இண்ணைக்கு, சரஸ்வதிஉள்பட சகலமும் வில்பனைக்குத் தான். சவம், வெலை படியதுலேதான்வெவகாரமே! இதுவரைக்கும் எம்பது கதைக்கும் கெடச்ச மொத்த சன்மானத்தையும் இப்பம் ரெண்டு கதை எழுதினா வாங்கீரலாம். ஆனா, மூதி, வரமாட்டங்கு…. காலம்பற கக்கூசுக்குப் போனாலும் இதே எழவுதான். என்னத்தத்தான் பழத்தைத் திண்ணு, பச்சைக்கறி திண்ணு, கீரை திண்ணு, வருவேனா என்கிறது தினமும், கேவலம் பீ, அது சொன்ன பேச்சு கேக்கமாட்டங்குவே! பொறவுல்லா சாவாத இலக்கியம்!

'சினிமாக்கார கவிஞன் எல்லாம் பாட்டெழுத சம்பளத்துக்கு ஆள் வச்சுக்கிடுகானாம். நம்மால முடியுமா? பாதிக்குப்பாதி தாறம்ணு சொன்னாலும் ஆள் கெடைக்காண்டாமா? இப்பம் சினிமாப் பாட்டுக்கு மெட்டுப் போட பெரிய கஷ்டமாக்கும். முன்னால ஜி.ராமநாதன், சி.ஆர். சுப்பராமன் எல்லாம் பாட்டுக்கு மெட்டுப் போட்டா…. இப்பம் கட்டுரைக்கு மெட்டுப் போடணும்னா பாருங்கோ! கொஞ்சமா சாமர்த்தியம் இருந்தாப் போராது! அதை விட மு.வ. நாவலுக்கு மெட்டுப் போடலாம். இப்பம்லா தெரியி, இளையராஜா சோலி எம்புட்டு சிரமம்ணு?'

தவசிப் பிள்ளை காலாணிப் புற்றுக்காலைத் தாங்கித் தாங்கி நடந்து வந்தார்.

“என்னவே? இப்பத்தான் விடிஞ்சா உமக்கு?”

“இல்ல பாட்டா.... வெறசலா நடக்க முடியமாட்டங்கு...."

“சவம் ஒரு நடைவண்டி வேண்டி வச்சுக்கிடலாம்லா.“

“உமக்கு பரியாசமாட்டு இருக்கு.... கையோட என்னமாம் காகறியும் வேண்டிக்கிடலாம்ணு பாத்தேன். ஆராம்புளிக்காரி இன்னும் வரல்லே!”

“விடியா மூஞ்சி வெறகுக்குப் போனா, வெறகு கிடைச்சாலும் கொடிகெடைக்காது. நமக்கு இன்னும் ஒரு காப்பித்தண்ணிக்குப் போக்கில்லே....”

“இன்னா பாட்டா, செணம் கொண்டாறேன்...."

பித்தளை லோட்டாவில், கொதித்த கடுங்காப்பியைத் தோள்த் துண்டால் தாங்கிப் பிடித்தபடி ஒரு வாய் உறிஞ்சினார்.

“பாட்டா! என்னா ஒரு நாளுமில்லாத் திருநாளா காலம்பற கடலாசும் பென்னுமா இருக்கேரு!”

“தீவாளி மலருக்கு ரெண்டு வேரு கதை கேட்டிருக்காம்வே!”

“துட்டுத் தருவானா? தர்மக் கொள்ளியா?"

“ரெண்டாயிரம் ரூவா உண்டும்!”

“நீரு நம்மளை மாந்தயம்ணு நெனைச்சுப் போட்டேரா? எந்தக் காலத்திலே நீரு கதை எழுதி ரெண்டாயிரம் ரூவா வேண்டியிருக்கேரு? அதுக்குப் பத்துக் கதையில்லா எழுதணும்!”

“உள்ளது தாம்லே.... உங்கிட்டே பொய்யா சொல்லுகேன்? வெல வாசி எல்லாம் ஒருவாடு கூடிப் போச்சுல்லா!”

“என்னது? வெள்ளக் கடலாசுக்கும் மசிக்கும் கண்டமானமா வெலை ஏறீட்டாக்கும்!”

“கண்டார ஒளி, ஒனக்கு எளக்காரமாட்டு இருக்காலே? போயி கஞ்சி வய்க்கப்பட்ட வழியைப் பாரு...”

“பின்னே சட்டுண்ணு எழுதுமே! பெரிய தொல்காப்பியரு மாரி யோசிக்கேரு!”

“எல, வெறுவாக்கலங் கெட்ட மூதி ! ஒனக்கு கடுங்காப்பி தாலா தெரியும்? இப்பம் தொல்காப்பியருங்கே!”

“கூடமாட ஒம்ம கிட்ட நடமாடச்சிலே கேட்டிருக்கம்லா சரி, இப்பம் என்னா? சட்டுப்புட்டுண்ணு ஒண்ணு எழுதித் தள்ளும்....''

''ஒண்ணும் தோணமாட்டங்குடா! ஊருப்பாடு என்னாம் இருந்தாச் சொல்லு... எழுதி விட்டிருவோம்....’’

''ஒம்மாண அம்மாச்சா நிர்வாணம்ங்க கதையால்லா இருக்கு. எனக்கு எழுதத் தெரிஞ்சா உமக்கு கஞ்சி காச்சப்பட்ட வேலைக்கு வருவனா ? நானே எழுதி பெரிய பிரைசெல்லாம் வாங்கீருப்பம்லா?”

''ஆமாமா... பிரைசு நொட்டினே..... பெருமாளே கைமுட்டி அடிக்காராம், பூசாரி பொம்பிளை வரம் கேட்டாராம்.”

“நீரு கொழுத்துப் போயி அரிமாணையிலே ஏறுகேரு..... சும்மையா ஒரு பய அண்ட மாட்டம்ங்கான்.....”

''சரி, அந்தப் பேச்சை வுடு.... நீ கதைக்கு வா...''

''நம்ம சொடலை முத்துத் தேவருக்க மக மூத்தது எதுத்த வீட்டு நாசுவப் பயலோட ஓடிப் போச்சுல்லா, அதை எழுதும்....''

''சேச்சே.... அதை எப்படி எழுதுகது? பிள்ளை கெடுத்தாள் விளை எழுதிக்கிட்டு சுந்தர ராமசாமி பட்ட பாடு உனக்கு எங்க போட்டுத் தெரியப் போகு? நானும் அண்டி களைஞ்ச அண்ணானாட்டம் ஆகதுக்கா?”

''பின்னே, குத்தாலம் பிள்ளைக்கு அக்கா, தாலியறுத்த பொம்பளை, வயத்திலே உண்டாகி, அரளி வேரை அரைச்சுக் குடிச்சுக்கிட்டு செத்துப் போனாள்ளா, அதை எழுதும்....’

''அது சரியாகாது பாத்துக்கோ...'"

''இன்னைக்கு கஞ்சி வச்சாப்லே தான்.... இல்லாட்டா பிச்சைக்கோனாருக்க பசுமாடு எருமைக் கண்ணுக்குட்டி போட்டுல்லா, அதை எழுதும்....''

''அதெல்லாம் சயின்ஸ் பிக்ஷன்லா? அதெல்லாம் சுஜாதா தான் எழுத முடியும்! உமக்கு எலக்கியம்ணா என்ன தெரியும்?"

''கதைண்ணு சொன்னேரு.... இப்பம் லேகியம்ங்கேரு?"

''எலே, மயிராண்டி, கதைண்ணா அதுக்கு ஒரு எலக்கியத் தரம் வேணும்டா! சும்ம கண்டதை எல்லாம் எழுதீர முடியுமா?''

''நம்ம வடக்குத் தெரு கெணவதி அண்ணனுக்கு மகன் மூத்தவன் எழுதுகாம்லா, நாஞ்சி நாடான்னு, அது மாரியா?"

''ஓ. ஓகோ.... நீரு அப்பிடி வாறேராக்கும். அந்தப் பயலுக்கு என்ன எழவு தெரியும்? நான் பாக்க குண்டி கிழிஞ்ச நிக்கர் போட்டுக்கிட்டு மூக்கு வடிச்சுக்கிட்டுத் திரிஞ்சாம்லே.... மேலெல்லாம் வங்கு புடிச்சுக் கெடக்கும் பாத்துக்கோ..... என்னமாம் சம்சயம் வந்தா எங்கிட்டே வந்து தொண்ணாந்துகிட்டு நிப்பான். அவன் வாறாம்ணாலே இருக்கப்பட்ட பொஸ்தகத்தை எல்லாம் எடுத்து ஒளிச்சு வைக் கணும்.... கள்ளவாளிப் பய.....''

''இருந்தாலும் ஏழெட்டுப் பொஸ்தகம் எழுதீற்றானாமே!''

''மயித்தைப் புடுங்கினான்.... அது தெரியாதா ஒனக்கு? ஜெய மோகன்ணு ஒருத்தன் எழுதுகான் இப்பம்.... அவன் ஒருவாடு எழுதித் தள்ளி, எங்க கொண்டு போடுகதுண்ணு தெரியாம, இந்தப் பய கையிலே குடுப்பான். அதை இவன் தன் பேர்லே போட்டுக்கிடுதான்....."

''பொறவு எப்படியாக்கும் கணக்கு வச்சுக்கிடுவா? பங்கு வய்க்கச்சிலே சண்டை வராதா? என்னண்ணும் போறானுகோ.... நீரும் ஜெயமோகன்ட்டே அஞ்சாறு கேட்டுப் பாருமே! துட்டு கெடைக்கும்லா? பாதி ரூவா வேணும்னா அவுனுக்குக் குடுத்திரலாம்!''

''யே! வெவரம் தேரியாமப் பேசாதே ... அவன் நாங் கேட்டா

தருவானாடா?''

''ஏந் தர மாட்டான்? மண்ணு திங்கதை மவராசன் திண்ணுட்டுப்போறான்….''

''எலே, புத்தி இருக்கா? புத்தி இருக்காலே ஒனக்கு? சோத்தைத் திங்கியா, மண்ணைத் திங்கியா? நல்ல யோசிச்சுப் பாரு நாயே…. நான் பிற்போக்குல்லாடா!'"

'உமக்குக் கூடக்கூட வயத்துப் போக்கு தாலா வரும் ?"

'தாயோளி, ஒன்னைக் கொண்டு என்ன எழவுக்குக் கொள்ளும்? காணத் தொவையலு அரைக்கக் கூடியவனை, கதை சொல்லச் சொன்னம் பாரு...''

''பின்னே என்னுண்ணும் போவும்! வேற ஒரு ஐடியா சொல்லட்டா…. போன பூவுலே, நெல்லுக்கு வெலையே இல்லேண்ணு, சாமிக்கண்ணு, புலைமாடன் கோயில் உண்டியல்லே பேண்டு வச்சாம்லா, அதை எழுதும்….."

''நீ சொல்லுகது எல்லாம் சரிதான் மக்கா. ஆனா அதெல்லாம் விக்காது. ஆனா அதையே கொஞ்சம் குறுமாலு செய்து பின்னவீனத்துலே வச்சுத் தீட்டீரலாம் பாத்துக்கோ…. பாவிமட்ட, உனக்கு பின்னவீனத்துவம்ணா தெரியுமா, மாய யதார்த்தம்னா தெரியுமா?"

"அப்பம் மாயா பஜார் கதையைத் திரும்ப எழுதுமே! சவம், காலம்பற மனுசனைப் போட்டு என்ன பாடு படுத்து கேரு?"

''எலே இப்பம் சொன்னியே, அது பாயின்டு... ஒனக்கும் சமயத்திலே மூளை வேலை செய்யுதே!''

''நீரு என்ன நெனைச்சேரு? கதை எழுதக் கூடியவன்தான் மூளை உள்ளவன், காணத் தொவையலு அரைக்கதுக்கு மூளை வேண்டாம்னா?"

''சரிடே... போ…. போயி இன்னொரு தம்ளர் காப்பித் தண்ணி கொண்டா.."

கும்பமுனி, தனது எண்பத்தோராவது கதையை, 'உலகெலாம் ? என

அடியெடுத்து எழுத ஆரம்பித்தார்.....

உயிர்மை – ஆகஸ்ட் 2006

***

6. கடவுளின் கால்

சூரத்திலிருந்து திரும்ப, ரயில் நிலையத்தில் காத்திருந்தேன். சூரத் தொன்மையான நகரம். மதுரை, காஞ்சி, காசி, கயா, வாதாபி போல. காஞ்சிப் பட்டுக்கு சூரத்தின் ஜரிகை, மாட்டு வண்டிக் காலத்தில் இருந்தே.

சாரம், துண்டுக்கு இன்று ஈரோடு. ஜமுக்காளத்துக்கு பவானி, கரூர். சன்ன ரக இரட்டை வேட்டிக்கும் துவர்த்துக்கும் பள்ளியாடி. பட்டுக்கு காஞ்சிபுரம், ஆரணி, தர்மாவரம், திருப்புவனம், போச்சம் பள்ளி. காற்சட்டை மேற் சட்டைத் துணிகளுக்கு பிவான்டி, பின்னலாடைக்கும் துன்னலாடைக்கும் திருப்பூர், பெண்டிர் ஆடைத் துணிகளுக்கு மாலே காவ், பருத்திப் புடவைகளுக்கு கல்கத்தா போல சிந்தடிக் துணிகளுக்கு சூரத்.

இந்தியாவின் அனைத்து துணிக் கடைக்காரர்களும் பரபரப்பாக எந்த நேரமும் அலைந்து திரியும் நகரம். கொள்முதல் செய்து பார்சல் சர்வீசில் கொடுத்துவிட்டு கைவீசி ரயிலேறி சொந்த ஊருக்கு வந்து விடலாம். பலர் பாதுகாப்பாகப் பணத்தை வைத்துக்கொண்டு படுத்துறங்க வசதி கொண்ட நீள அறைகளை உடைய நூற்றாண்டுப் பழக்கமுள்ள சத்திரங்கள், சாவடிகள், விடுதிகள்.

எந்நேரமும் தூங்காத நகரம் சூரத். இட்லி, தோசை, வத்தக் குழம்பை சற்று மறந்துவிட்டு, ரொட்டி, டோக்ளா, பாப்டி, ஷீரா, லஸ்ஸி என்று பழகிக்கொண்டால் உணவு ஒரு கொண்டாட்டம். நல்லுணவும் நாப்பழக்கம். மேலும் குஜராத் மாநிலத்தில் பால், தயிர், இனிப்புகள் உண்டு பழகியவருக்கு வேறு எந்த ஊரிலும் சுகப்படாது. ஒரே வசதிக் குறைவு குஜராத் இன்றும் மது வறட்சி மாநிலம்.

தொன்மை என்றாலேயே குழி விழுந்த கன்னங்கள், பலமிழந்து ஆடும் பற்கள், நரை திரை, எலும்பை விட்டு ஒதுங்கும் தசைகள், தள்ளாமை, நோய் எனத் தவிர்க்க இயலாது எந்த நகரானாலும். குப்பை, குப்பம், தும்பு, நெரிசல், தூசு, புகை, இடிபாடு, எருமை, பன்றி, சாக்குப் படுதாவும் பாலிதீன் விரிப்புக் கூரையும் கொண்ட குடிசை, விலங்குகள் இழுக்கும் வண்டி, பாரம் ஏற்றி இறக்கும் லாரி, வரைவின் மகளிர், தரகர், சில்லறைத் திருட்டு, சந்துகளை அடைத்துக்கொண்டு கயிற்றுக்கட்டில், தெருக்களிலேயே சமையல் குளியல், கூடல், ஊடல்….

குளிர்காலம் எலும்பு துளைத்தால் கோடைகாலம் நரம்பு பொசுக்கும். மேலும் குஜராத் மாநிலம் முழுக்க பெருங்குரல்கள் மூச்சு முட்டச் செய்வன.

எனக்கு உண்மையில் வேலை, நவ்சாரி எனும் சிறு நகரத்தில் தான். மக்கள் தொகை இலட்சத்துச் சொச்சம் இருக்கும். எனினும் முக்கியமான சில தொழிற்சாலைகள், நூற்பாலைகள், வார்ப்புக் கூடங்கள் இருந்தன. மும்பையில் இருந்து நவ்சாரி இருநூற்று முப்பது கிலோ மீட்டர் என்றால் நவ்சாரியில் இருந்து சூரத் முப்பது கிலோமீட்டர். எல்லா ரயில்களும் நவ்சாரியில் நிற்பதில்லை. ஆனால் சூரத்தில் நிற்காத வண்டி இல்லை. மும்பையில் இருந்து போனால், விரைவு வண்டியானால், வசய், வாப்பி, வல்சாட், பில்லிமோரா என்று நவ்சாரி தாண்டிப் போய் சூரத்தில் இறங்கித் திரும்பி வர வேண்டும். சூரத் மிகப்பெரியதும் அழுக்கானதும் ஆனதோர் ரயில் நிலையம்.

எப்போதுமே விற்பனைப் பிரதிநிதி வாழ்க்கையில் பகலில் கடும் அலைச்சலும் இரவில் உல்லாசமும், அவரவர் மனோலயம் போல. குஜராத் மதுவிலக்கு மாநிலம் என்றாலும் தட்டினால் திறக்கும், தேடினால் கிடைக்கும், கேட்டால் கொடுக்கப்படும். அல்லது எந்தக் கட்சி ஆண்டாலும் ஆளுபவர்களின் உறவினர்கள் நடத்தும் சற்று செலவு கூடிய விடுதிகள் உண்டு. மக்களாட்சியின் நோக்கமே நமக்கு சேவை செய்வதுதானே!

மேலும் வாப்பியின் அருகில் இருந்தது டமன். உனா அருகில் இருந்தது டியூ, கோவா அரபிக் கடலில் என்றால் டியூ, டமன் கம்பாட் வளைகுடாவில். கடல் வழியில் டமன், டியூ இடையிலான தூரம் இருநூறு கிலோ மீட்டர். தரைவழியாக அறுநூறு கிலோமீட்டர்கள். நமது புதுச்சேரியும் தலைச்சேரி அருகிலுள்ள மய்யழியும் போல. ஒன்று வங்காள விரிகுடா எனில் மற்றது அரபிக் கடலில். தரை வழியில் அறுநூறு கிலோமீட்டர்தூரம் எனில் கடல் வழியாக ஆயிரத்து அறுநூறு கிலோ மீட்டர், மன்னார் வளைகுடாவைச் சுற்றிக்கொண்டு. அதாவது வங்காள விரிகுடாவில் புறப்பட்டு இந்து மகா சமுத்திரம் வழியாக அரபிக்கடல் போக வேண்டும். மதுவிலக்கு இருந்தாலும் அரபிக்கடலில் இருக்கும் கோவாவில் இருந்து அறுநூறு கிலோ மீட்டர் தாண்டி தரைவழியாக டமனுக்குச் செல்லும் பாவனையில் இரண்டு அல்லது மூன்று மதுக்குப்பிகள் கொண்டு செல்லலாம். ஏனெனில் அவை போர்ச்சுக்கீசியர் ஆண்ட நிலப்பகுதிகள். அதுபோல் மய்யழியிலிருந்து

புதுச்சேரிக்கும். அவை பிரஞ்சுக்காரர் ஆண்ட நிலப் பகுதிகள்.

சாணாங்கி நிறப் படிவங்கள் கொண்ட புத்தகத்தில் இருந்து பெர்மிட் ஒன்று கிழித்துத் தருவார்கள். கையெழுத்துப் போட்டு, கத்தரிப்பூ நிற மையில் அரசு முத்திரை இட்டு மதுக்கடைகளிலேயே வைத்திருப்பார்கள். ஐந்து ரூபாய் கொடுத்தால் போதும். ஊரும் பேரும் நாளும் கோளும் நாமே நிரப்பிக் கொள்ளலாம். மனதிருந்தால் மார்க்கம் உண்டு. சட்டத்துக்கு ஒற்றைக் கண் எனில் ஓட்டைகளுக்கு ஓராயிரம் கண்கள். சட்டத்தின் பாதுகாப்பில் ஓட்டைகளில் உயிர் வாழும் தேசம் நமது.

எனது பூகோள அறிவைப் புகட்டுவதற்காக இதையெல்லாம் எழுதவில்லை. எப்போதும் பால் எடுத்த தேங்காப் பூ கோருகளைத் தானே பாடப் புத்தகங்கள் உண்ணத் தருகின்றன!

உப்பு சத்யாக்கிரகம் பற்றிப் படித்திருப்பீர்கள். எனது நண்பர் ஒருவர் அதை உப்பளப்போர் என்று தமிழ்ப் படுத்தினார். அது உப்பு அளக்கிறவர் என்று பொருள் தராதா எனக் கேட்ட போது சென்மப் பகையாகிவிட்டது. பின்பு உப்பு அறப்போர் என்று திருத்தினார். காந்தி உப்புக் காய்ச்ச நடந்தது தண்டியை நோக்கி. நமக்கு வேதாரண்யம் எங்கிருக்கிறது என்பதைத் தேடிக் கண்டடைய வேண்டும்.

தண்டி நவ்சாரியில் இருந்து இருபது கிலோமீட்டர். சுற்றுலாத் தலங்கள், சிற்ப ஓவியக் கலைக்கூடங்கள், வரலாற்றுத்த்லங்கள் பற்றி வழிகாட்டிக் கையேடுகளில் குறிப்பிடுவார்கள். உதாரணமாக மாமல்லபுரம் பற்றிக் குறிப்பு எழுதுவதாக இருந்தால் அது சென்னையிலிருந்து தரை வழியாக இத்தனை கிலோ மீட்டர் என்று. அது போல் தண்டியைத் தேடினால் ஆமதபாத்திலிருந்து முன்னூற்று ஐம்பது கிலோ மீட்டர் என்பார்கள். ஆனால் சென்னையிலிருந்து போகிறவன் எதற்கு ஆமதாபாத் போய், தண்டிக்கு கீழே மறுபடியும் இறங்க வேண்டும்? இரயிலில் அல்லது விமானத்தில் சூரத் போய் அங்கிருந்து ஐம்பது கிலோ மீட்டர் போனால் போதும். மூன்றாம் நிலைக்குப் போகிறவன் எதற்கு ஏழாம் நிலை ஏற வேண்டும்?

தண்டி சிறியதோர் கடற்கரை. வாழ்க்கையில் எனக்கு இப்படித்தான் கோயில்கள், கோட்டைகள், கடற்கரைகள், நதிகள், மலைகள் வாய்த்தன.

மாலை நான்கு மணிக்கு சூரத்திலிருந்து பன்வேல் வழியாகப் போகும்

ரயிலொன்று இருந்தது. பன்வேலில் எனக்கொரு தம்பி இருக்கிறான். இரவு பத்து மணிக்கு இறங்கி தம்பி வீட்டுக்குப் போகும் உத்தேசம். ஒருநாள் அங்கு தங்கிவிட்டு அங்கிருந்து ஊருக்கு கிளம்பலாம்.

எப்போதுமே ஆமதாபாத் - மும்பை ரயில் போக்குவரத்து மிகவும் நெரிசல் கொண்டது. எந்த ரயிலானாலும் எந்த நேரமானாலும் எந்த நாளானாலும். சூரத் - பன்வேல் முன்பதிவு கிடைக்கவில்லை.

திரும்புகாலில் முன்பதிவு கொண்டு எனது பயணங்கள் அமைந்ததும் இல்லை. கையில் நடப்புப் பயணச்சீட்டு மட்டும் இருந்தது. எதிர்வரும் விதத்தில் வாழ்க்கையை நேர்கொண்டு பழகிவிட்டது.

மழை மாதங்கள். பொழிந்துகொண்டிருந்தது. ஈரமும் தண்ணீர் சொட்டலும் நசநசப்பும் நெரிசலும் நிறைந்த நடைமேடை பயணிகள் மீது ஈக்கள் கூட்டமாய் மொய்த்தவாறிருந்தன.

சூரத்தில் பிளேக் வந்து மாறி சில காலமே ஆகி இருந்தது.

இரயில் வந்தது குறித்த நேரத்தில், படு வேகமாக, மழைத் துளிகளையும் ஈக்கள் கூட்டத்தையும் சிதறியபடி. எதிர் நின்ற படுக்கை வசதி கொண்ட பதிவுப் பெட்டியில் ஏறினேன். வழக்கம் போல் ஒரு தோள்பையும் சின்னப் பெட்டியும்தான் இருக்கைகள் அன்று அல்லது அப்போது காலியாக இருந்தன. அமர்ந்து, சாமான்களை இருக்கையின் கீழே தள்ளிவிட்டு, ஆற அமரக் கால் நீட்டி, ஊறிக் கொவர்ந்திருந்த காலணி, காலுறைகளைக் கழற்றி ஆசுவாசப்பட்ட போது சூடாய் மசாலா சாய் வந்தது. தொடர்ந்து வயதான பரிசோதகர் வந்தார். பணிவாக விவரம் சொன்னதும், 'அவுர் கியா.... பைட் ஜாவ்' என்றார்.

ஆறு மணி நேரம்தான். வாசிக்க எதுவும் எடுத்து வரவில்லை. மழையை, அதன் அசௌகரியங்களோடு அனுபவித்துப் பார்த்தேன். நல்ல விசையான வண்டி அடுத்த நிறுத்தங்கள் பல்சாட், வசை, பிவான்டி, பன்வேல்.

உத்தேசமாக முகேஷ் பாடலொன்றைப் பாடிக்கொண்டு வந்தான் யாசகன் ஒருவன். நாற்பத்தைந்து வயதிருக்கும். தலைமயிர் சமீபத்தில் திருத்தப்பட்டிருந்தது. தாடி இல்லை. விளைந்து முற்றிய செங்கரும்பு போல உடல். வலது கால், பெருந்தொடைக்குக் கீழே இல்லை. இடது கை, மணிக்கட்டில் இருந்து இல்லை. ஊன்று கட்டை இருந்தது

அக்குளில், பாட்டின் இடையே குஜராத்தியில் யாசகம் கேட்டான். குஜராத்தி யாசகத்துக்குத் தோதான மொழி இல்லை.

ஒரு கால் இல்லாவிட்டாலும் மறு கால் திராணியாக இருந்தது. வலது கை வலுவாக இருந்தது. நலத்துடன் இருந்தது உடல் வயதும் இருந்தது. ஏதும் சிறுதொழில், குறு வியாபாரம் செய்யாமல் யாசகத்தை ஏன் தேர்ந்தான் என்று தெரியவில்லை. கட்ச் பகுதியின் பாட்டாளி முகத்தின் சாயலில் கௌரவம் இருந்தது.

எனினும் யாகசம் ஏன்? அவரவர் நியாயங்கள் தனித்தனி. எனது நியாயம் உனக்கும், உனது நியாயம் அவனுக்கும் கட்டுபடி ஆகாது. முகம் மட்டும் அல்ல, சிந்தனையும் நூறு கோடிதான். நாலணா யாசகம் தருவதற்குள் எத்தனை ஒழுங்குப் பிரச்னை, உரிமை மீறல் பிரச்சனை, கவன ஈர்ப்புப் பிரச்னை?

வண்டி போய்க்கொண்டே இருந்தது. இப்படியே போனால்கோவா வழியாக, கள்ளிக்கோட்டை வழியாக, கன்னியாகுமரி போய் விடலாம். ஆசை கிடந்து அடித்துக் கொள்கிறது.

எல்லாப் பெட்டிக்கும் போய்வரும் விதத்திலான தொடர்வண்டி. நாலைந்து முறை ஊன்றுகட்டை ஒலி எழுப்ப மாறிமாறித் தென்பட்டான். இல்லை என்று சொன்னாலும் இன்முகம்தான். 'சாவு கிராக்கி' இல்லை, 'கஸ்மாலம்' இல்லை, 'பொறம் போக்கு' இல்லை. மழை காரணமாய் இரவு எட்டே காலுக்கு வசை வர வேண்டிய வண்டி ஒன்பதரைக்கு வந்தது. இந்த கதியில் பன்வேல் போக பதினொன்று ஆகிவிடும். பரபரப்பாய் கேட்டரிங் சர்வீஸ் இயங்கிக் கொண்டிருந்தது.

வலுக்கிட்ட பூரிகளில் எண்ணெய் வடிந்தது. கொஞ்சம் போலச் சோறு. உருளைக்கிழங்கும் பட்டாணியும் சப்ஜி, டால், ஊறுகாய், தயிர். முப்பது ரூபாய்.

உண்டு, ஒதுங்கி, படுக்கை போட ஆரம்பித்தனர். மூன்று அடுக்கு படுக்கை வசதி. அவனது இருக்கைக்கு பன்வேலில் வருவார்கள் போலும். எல்லோரும் படுக்கைகளைப் போட்டுவிட்டால் கூனிக் குறுகி உட்கார வேண்டும். ஒன்றரை மணிக் கூறில் இறங்க இப்போது படுத்தால் ஆகாது. மழைக்காற்று ஈரக்கர்ப்பம் கொண்டிருந்தது. பெட்டி அடங்கிக்கொண்டிருந்தது. அந்தப் பெட்டியின் தொடர் பெட்டி பேன்ட்ரிகார். கதவோரம் சென்று சற்று நேரம் நிற்கலாம் என்று

போனேன். ஒற்றைக் கால் யாசகன் ரயில் பெட்டியின் உட்சுவரில் சாய்ந்து உட்கார்ந்திருந்தான்.

''உறங்கவில்லையா?" என்றான்.

"பன்வேலில் இறங்கணும்.''

''பதினொண்ணு ஆயிரும்.... நானும் பன்வேலில் இறங்கணும்.'

பிச்சைக்காரனுக்கு ஏது ஏற்றமும் இறக்கமும் என்று தோன்றியது. சிரமப்பட்டு எழுந்து நின்றான். கேட்டரிங் பெட்டி வாசலை எட்டிப் பார்த்தான். அவனைத் தெரிந்துகொண்ட மலையாளத்து வேலையாள் தட்டு நிறையச் சோறும் அதன் மேல் பருப்பும் ஊற்றி சப்ஜி வைத்துக் கொடுத்தான்.

சாய்ந்து நின்றுகொண்டு, இடது முழங்கையில் தட்டை இடுக்கிக் கொண்டு சோற்றை அள்ளித் தின்ன ஆரம்பித்தான்.

''இந்த வண்டியில் வந்தா ராத்கா கானா இங்க கிடைக்கும்'' என்றான்.

உண்டு முடித்து, தட்டைக் கழுவிக் கொடுத்துவிட்டு வந்தான்.

''பன்வேலில் எதற்கு இறங்கணும்?'' என்றேன்.

''நம்ம டூட்டி சூரத்லேருந்து பன்வேல் வரைக்கும்'' என்றுசொல்லிச் சிரித்தான்.

''காலம்பற ராஜ்கோட் வருவான். அதுலே ஏறி மத்தியானம்சூரத். மறுநாள் சாயங்காலம் இதே வண்டி.... வாரத்துக்கு ஐந்நூறு ரூவா வீட்ல குடுப்பேன். இரண்டு பிள்ளைங்க.... க்யா கரேங்கா?"

''கால் கை ஏன் இப்டி ஆச்சு?"

''பான் கா துக்கான் வச்சிருந்தேன். கடையையும் வீட்டையும் கொளுத்தீட்டானுக.... ஒரு கையும் போச்சு காலும் போச்சு..... எல்லாம் ஊப்பர் வாலேக்கா மெகர்பானி....''

''கேப்பார் கேள்வி இல்லாம ஆயிப் போச்சு...."

''யாரு கேக்க முடியும்? இந்து வானா என்னா இஸ்லாம் ஆனா என்னா? ஏழையா இருக்கப்பிடாது....''

"பன்வேல்ல இறங்கி ஸ்டேஷன்ல படுப்பியா?"

''படுக்கலாம்.... ஆனா பிச்சைக்காரன் பணத்தையும் காவாலிப் பயக்கோ புடுங்கிக்கிடுவான். மேற்கொண்டு அடி, வசவு.... மாவாலி லோக்."

''பின்னே எங்க போவ?"

''பன்வேல் எஸ். டி. ஸ்டான்ட் போயிருவேன். அங்க நம்ம காவ்வாலா ஒருத்தன் சாயாக்கடை இருக்கு.... ராப்பகலா திறந்துதான் இருக்கும். பிஸ்வியை அவன் கிட்டே குடுத்துட்டு ஓரமா படுத்து எந்திருச்சு காலம்பற ரயிலுக்கு வந்திருவேன்!''

''போக வர நடக்கணுமே!''

''அவுர் கியா கரேங்கா? ஊப்பர் வாலே கா மெகர்பானி....''

அன்றைய சேகரங்களை எண்ண ஆரம்பித்தான். சின்ன நோட்டுக்கள், சில்லறைகள். தோளில் தொங்கும் துணிப்பையில் போர்வை ஒன்று, துண்டு ஒன்று, தண்ணீர் போத்தல், பித்தளைத் தம்ளர்....

பத்து ரூபாய் கொடுத்தேன். வாய் விட்ட சிரிப்பில் பளிரென ஆரோக்கியமான பற்கள்.

பன்வேல் ஸ்டேஷன் நெருங்கிக்கொண்டிருந்தது. அவனும் எழுந்து கொள்ள ஆயத்தமானான். எழும்போது மறுபடியும் அவன் காலைப் பார்த்தேன்.

''என் காலு போனாப் போகுது சாப்.... கடவுளுக்கு காலை வெட்டாம இருக்கணும்....''

ஏழையின் சிரிப்பே இறைவனின் சிரிப்பெனில் ஏழையின் கால்களும் இறைவனின் கால்கள்தாம்.

தினமணி - தீபாவளி மலர் - 2006

***

7. படுவப் பத்து

களம் உரைத்தது

வயற்காட்டை பத்து என்று சொல்வார்கள். சோற்றுப் பருக்கையையும் சொல்வது பத்து என்றுதான். 'பத்துப் பாத்திரம் தேய்ப்பது, பத்தும் தண்ணியுமா குடிச்சேன்' என்பன, எடுத்துக்காட்டுகள். 'பசி வந்திடப் பத்தும் பறந்துபோம்' என்றால் பசி வந்தால் சிறந்த பத்துக் குணங்களும் பஞ்சாகப் பறந்து போய்விடும் என்றும் அந்தப் பத்துக் குணங்கள் எவை என்றும் பட்டிமன்றப் புலவர்கள் விரித்துரைப்பார்கள். கறி, குழம்பு, கூட்டு, பொரியல் எதுவுமின்றியே பசி வந்தால் வெறும்பத்தும் பறந்து உள்ளே போகும் என்பது எளிய பொருள்.

வயல் வெளிகளைப் பற்றிப் பேசும்போது வடக்குப் பத்து,தெற்குப் பத்து, மேலப்பத்து, கீழப்பத்து எனத் திசைகள் சார்ந்தும் புறப்பத்து, கண்டமூட்டுப்பத்து, சாத்தாங்கோயில் பத்து, மடத்துப் பத்து என்று இடங்களையும், தேரூர் பத்து, கடுக்கரைப் பத்து, புத்தேரிப் பத்து, மைலாடிப் பத்து, பறக்கைப் பத்து என்பது ஊர்களையும் வைத்துப் பேசுவது. மற்று பதிற்றுப் பத்து என்பதற்கும் படுவப் பத்து என்பதற்கும் யாதொரு பிணையும் இல்லை. மருதாணியை-பகலில் நிறம் பிடிப்பதை பகல் பத்து என்றும் இரவில் நிறம் பிடிப்பதைப் இராப் பத்து என்றும் கூறுவதுண்டு. திருவரங்கத்தில் ஒரு திருவிழா நாளில் பகல் பத்து பாடியும் ஆடியும் கேட்டதும் நினைவில் இருக்கிறது.

ஈண்டு படுவப் பத்து என்பது தன்மையை வைத்துப் பேசுவது. படுவம் என்றால் பள்ளம் என்று பொருள். ‘கிடங்கு விழுந்துவிட்டது’ என்பதற்கு 'படுவம் விழுந்து கெடக்கு’ என்பார்கள். ஆறாத புண்ணைப் பார்த்து 'பெரும் படுவமால்லா இருக்கு’ என்றும் அரிவைகளை மோப்பம் பிடித்துத் திரியும் விடலைப் பையன்களை வயசாளிகள், 'ஏய்! பெரும் படுவமாக்கும்! பாத்துப் பரிமாறு என்னா!" என்று எச்சரிப்பதும் வழக்கு. பெருமழைக் காலங்களில் ஒடைக் கரைகள் உடைத்த வயலில் பாய்ந்து, பாய்ந்த இடம் பெருங் குண்டாகக் கிடக்கும். அதை 'மழைத் தண்ணி சாடி படுவம் பாஞ்சுற்று' என்பதும் உண்டு. பள்ளமான வயற்காட்டில் கிளைத்த கதை இது ஆதலின், இதன் தலைப்பு ‘படுவப் பத்து’ என்பதறிக.

குணம் உரைத்தது

பள்ளத்தில் கிடக்கும் வயல்கள் யாவும் படுவப் பத்து ஆகி விடுவதும் இல்லை. களிமண் பாங்கான நிலம், சம தரையை விடத் தாழ்ந்த நிலப்பரப்பு, பக்கத்தில் ஆறு, குளம், ஏரி போன்று எப்போதும் தண்ணீர் கிடக்கும் நிலைகள் இருந்து, ஈர நயப்பு மாறாது தண்ணீர் ஒலித்துக்கொண்டும் ஊறிக்கொண்டும் இருக்கும் நன்செய் நிலப்பகுதிதான் படுவம்.

நிலம் காய்ந்து என்றும் பொடிப்பருவம் எடுக்க இயலாது. இரண்டு போகமும் நடவு அல்லது தொழி விதைப்பு. எல்லா வயல்களும் தையில் அறுவடையாகி, மாசி-பங்குனியில் மாற்றுப் பயிராகியோ அல்லது காய்வு ஏற்றோ கிடக்கும்போதும் படுவப் பத்தில் ஆம்பலோ அல்லியோ ஆகாயத் தாமரையோ முளைத்துப் பூக்கும். விளைந்த பயிரை அறுக்கும் போதே கரண்டை வரை சேறாகும். அறுத்த அரியை கொண்டையும் தாளும் காயப் பரத்திப் போடுவது சிரமம். அறுத்து விழுந்த கையோடு கட்டிவிட வேண்டும். மற்ற வயல்களில் சாண் உயரத்துக்கு நெல் தாளை மூட்டில் விட்டு அறுத்தால் படுவப் பத்தில் கை முழத்துக்கு ஒரு முழம் விட வேண்டும். வைக்கோல் நட்டமல்லவா என்று என்னைக் கேட்டால் என்ன செய்ய?

எப்போதும் சேறும் சகதியுமாகத் தொழி அழுகிக் கிடப்பதால் இரண்டு பூவிலும் ஆவாரை, மஞ்சணத்தி, புங்கு, வாகை, பூவரசு, பன்றிவாகை, நொச்சி, உசிலை, எருக்கலை, பீநாறி, கொழுஞ்சி, வேம்பு என்று எந்தக் குழையானாலும் தறித்துப் போட்டு, சமுண்டி, வயல் மொழுக்கி நாற்று நட்டு விடலாம். எந்த உரம் போட்டாலும் குப்பை பதவலை கூட்டி வாரித் தட்டினாலும் செமித்துப் போகும்.

காலம் உரைத்தது

அழகியநல்லூர் படுவப் பத்துக்கு மேற்புறம் பணிக்கன் குளம், வாணியன் குளம், வடமேற்கில் வேளாண் குளம், தென்மேற்கில் கம்மாளன் குளம், வடக்கில் சாம்பான் குளம், தெற்கில் சாணான் குளம். கிழக்கில் வரிசையாய் அமைந்திருக்கும் சாதிவாரியான சுடுகாட்டுக் கரையை மேலக்கரையாகக் கொண்ட, எக்காலமும் தண்ணீரோடு பல காலமாய் ஒடிக்கொண்டிருக்கும் பழையாறு. பழையாற்றின் கரையிலொரு சாம்பவர் சேரி. ஊருக்குள் வடிவம்மன் கோயில், முத்தாரம்மன் கோயில், தங்கத் தாம்பாளக் கட்டளை விநாயகர் கோயில், தெருவுக்கு நான்கு

சுடலைமாடன், இசக்கியம்மன் கோயில்கள்.

கோட்டை நெல் நான்கு ரூபாயும் பவுன் பன்னிரண்டு ரூபாயும் ஒரு சக்கரத்துக்கு முழுச்சாப்பாடும் விற்ற காலம், நாலு சக்கரம் ஒரு பணம், ஏழு பணம் ஒரு திருவிதாங்கூர் ரூபாய் என்பது வாய்ப்பாடு. ஏழுபணமும் எட்டுக் காசும் அதாவது இருபத்தெட்டரை சக்கரம் ஒரு பிரிட்டிஷ் ரூபாய்.

ஊரில் பிராம்மணர்களும் வெள்ளாளர்களும் தேரோடும் வீதிகளில் தெருக்களில் நாடார், சாணார், சாம்பவர் முதலியோர் செருப்புப் போட்டு நடக்கக்கூடாது. தலை முண்டு இடுப்பில் இருக்க வேண்டும். வேட்டியை மடித்துக் கட்டக்கூடாது, தெருவில் வெற்றிலை போட்டுத்துப்பக்கூடாது. கோயிலில் கொடி ஏறினால் ஊருக்குள் பிற சாதியினர்நுழையலாகாது.

எனினும் எல்லா பிராமணர் வீடுகளிலும் வெள்ளாளர் வீடுகளிலும் புற வேலைகளுக்கு சாம்பவர் மட்டும்தான். மலமெடுக்க மட்டும் சக்கிலியர். தேரோடும் வீதிகளுக்கு நான்கு பக்கமும் வரம்பு கட்டியது போல் பெரிய சந்து ஒன்று ஓடியது. எல்லா வீடுகளின் புறவாசல்களும் சந்தில் முடிந்தன. எடுப்புகக்கூஸ் கிணறுகளுக்கான தொண்டும் திறப்பும் இருந்தன. செவலை நாய்களும் கோழிகளும் பன்றிகளும் பெருச்சாளிகளும் எலிகளும் மேய்ந்தவாறிருந்தன.

அழகியநல்லூரின் கிழக்கே, சுடுகாட்டுக்கரைக்கு மேற்கே சிறைப்பட்டது படுவப் பத்து. அங்கு உழுவதற்கு இலகுவில் ஏர் கொண்டு வரமாட்டார்கள். காளை மாடுகள் காலூன்றி கால்வாங்கி நடப்பது கடினம். சேறு நுரைத்துக் கிடக்கும் வயல்களில் எருமைமாடுகள் அல்லது எருமைக் கடாக்கள் அடிவயிறு நிலம் தொட அழுந்தி அழுந்திக் கால் வைத்தன. கலப்பை பிடித்து உழுபவனைக் கொஞ்சம் கணக்கில் எடுத்துப்பாருங்கள். கலப்பையின் தாங்கலில் அவன் நடப்பானா அல்லதுஅவனது ஆசில் கலப்பை மிதக்குமா?

மற்றப் பத்துக்களில் விதைப்போ, நடவோ ஓய்ந்த பிறகு எருமைக் கடாக்கள் ஏர்மாடு வைத்திருப்பவனும் காசுக்கு அலந்தவனும்தான் படுவப் பத்துக்கு ஏர்கொண்டு போவார்கள். படுவப் பத்தில் உழுதமாடு அந்தப் பூவில் வேறு பத்தில் இறங்கும் விதத்தில் இருக்காது. அதுவும் கும்பப் பூவில் இரண்டு மாதங்கள் தொழியில் உழுது, புட்டியில் தார்க்கம்பு வாங்கி கையகலத்தில் புண்ணாகி, நுகம் பட்டு கழுத்து வீங்கி, அழன்று, காகம் கொத்திப்புண்ணாகி, குளம்புகளுக்கிடையில் புண்பட்டு

வேப்பெண்ணெய், புன்னைக்காய் எண்ணெய், கொல்லாங் கொட்டை எண்ணெய் என வரிசைக்கிரமத்தில் தொட்டு வைத்துப் பண்டுவம் பார்க்க வேண்டும். இந்தத் தோதில் படுவப் பத்துக்கு உழப்போக வேண்டுமென்றால் பொல்லாத வறுமையும் நிறைந்த துணிச்சலும் முன் அனுவமும் இருக்க வேண்டும்.

மற்ற பத்துக்களில் தொழி உழவில் முதலில் முந்திய கன்னிப் பூவின்அறுத்த சம்பாத்தாள் அடங்க தரிசடிப்பு. பின்பு ஏழெட்டு நாட்கள்பொறுத்து மறுப்பு. மண் சூடாறிக் குளிர்ந்து தொழி நன்கு அழுகிய பின்முச்சால் வைப்பு. உரம் சிதறிய பின் உழுது, மரமடித்து, பொழித்தட்டி, நடவு. இதற்கிடையில் மண்வெட்டியால் வரப்பு வெட்டுதலும் வரப்பு பிராவுதலும்.

இந்தப் பக்குவம் எல்லாம் படுவப் பத்துக்கு பார்க்க இயலாது. தரிசடிப்பு, மறுப்பு, முச்சால் வைப்பு எல்லாவற்றுக்கும் பொதுவாக ஒரே உழவு. பின்பு மரமடித்து மொழுக்கு, மரமடிக்கத் தோதில்லா விட்டால் பொழித் தட்டுப் பலகை போட்டு மொழுக்கு. நாற்றுக் கட்டுக்களை எண்ணி வீசி, சாம்பாத்திகள் தொடை வரை கால் சேற்றில் பூர, சவைத்துத் துப்பிய வெற்றிலைச் சாறு ரத்தம் போல் சேற்றில் படர, வரிந்து கட்டிய கண்டாங்கியும் அள்ளிச் செருகிய பங்கொண்டையும் தலையசையும் போது ஆடும் பாம்படங்களுமாகக் கால் பறித்து, கால் நட்டு, நாற்று நடுவார்கள்.

வினை உரைத்தது

மற்ற பத்துக்களைப் போலன்றி, நாற்றுக்களை தள்ளித்தள்ளி வைத்து நட்டால் போதும். கரு நடவு கப்பும் கவுருமாக, கரும்பு மூடுகள் போலக் கரும்பச்சை வீசிக் கிளம்பி வரும். கருகருவென வண்டல் பாய்ந்த நிலங்கள். சம்பாப் பயிரானாலும் வாசறுமிண்டான் ஆனாலும் கரு நடவு ஏறியதும் அரை வைக்கும். குருத்தடித்துக் குருத்தடித்து கதிராகும் பூக்கும் கதிர் முற்றிச் சாயும். பிற பத்துக்களில் நெற்பொலி மேனி கண்டால் படுவப் பத்தில் இரண்டு மேனிக்குக் குறையாது. எலி வெட்டு குலமறுக்காமல் இருந்தால் போதும்.

படுவப் பத்து, சின்னப் பத்துதான். பெரும்பாலும் அழகியநல்லூர் ஐயர்களுக்குச் சொந்தமான நிலங்கள். பிள்ளைமாருக்கு கோட்டாற்றுக் கம்போளத்தில் பாத்திரக் கடையோ, பல வெஞ்சணக் கடையோ, அரிசிக்கடையோ இருந்தன. பெரும்பாலோர் இந்தக் கடைகளில்

கணக்கு எழுதினார்கள், சாமான் நிறுத்தனர், பொட்டலம் மடித்தனர், சாக்கு தைத்தனர், பாரம் இறக்கவோ ஏற்றவோ செய்தார்கள். சாமி என்று அழைக்கப்பட்ட நில உடைமையாளரான ஐயர்கள் குடைபிடித்து வரப்பில் நின்று மேற்பார்வை செய்தனர். இறச்சகுளம், தாழக்குடி, பூதப்பாண்டி புரவுகளில் சில ஐயர்கள் ஏர்மாடுகளின் பின்னால் தொந்தி அசைய நடப்பதையும் பார்க்க முடியும். காய்த்துப் போன உழவாளிகளுக்கே கூட படுவப் பத்து பெரிய சவால்.

வடக்குத் தெரு சங்கர சுப்பையருக்கு படுவப்பத்தில் முக்கால் கோட்டை விதைப்பாடு அத்தை வழிச் சொம்மு. தேரோடும் வீதியில் பத்தடி அகலமும் நூற்றிருபதடி நீளமும் கொண்ட இரண்டரை சென்ட் மனையில் முன்னும் பின்னும் மாத்திரம் சன்னல்கள் கொண்ட நீளமான வீடு அகத்துக்காரி சீதனம். வீட்டின் நடுவில் திறந்த முற்றம் வெளிச்சத்துக்கும் காற்றுக்கும் கிணற்றுக்கும். பின்கொல்லையில் இரண்டுதென்னை மரங்களும் நான்கு வாழை மூடுகளும்.

பதிந்த உழவு பரமன் சாம்பான். சாமியைப் போல சாம்பானுக்கும் வயது பின்மாலையில் இருந்தது. அவனது எருமைக் கடாவுக்கும் பற்கள் அற்றுப் போய்க்கொண்டிருந்தன. புரட்டாசி மாதம் ஊரெல்லாம் நடவாகி ஒதுங்கிய பிறகுதான் படுவப் பத்து நடவாகும். எப்போதுமே தொழியுழவு என்றால் ஒரு நேரத்து உழவுதான். காலை சூரியோதயத்தில் ஏர் கட்டினால் உச்சிப் பொழுதில் அவிழ்த்து விடலாம். பழையாற்றில் மாடுகளை இறக்கிக் குளிப்பாட்டிக் கரையேற்றினால் அன்றைய உழவு சோலி ஆகிவிட்டது. பின்பு தோதுப்போல, மதியக்கஞ்சி வாங்கிக் குடித்தபின், உரஞ்சுமை, வரப்பு வெட்டு, வரப்பு பிராவுதல், குழை அரக்கு, குழை தறிப்பு - ஏதோ ஒன்று.

படுவப் பத்தில் ஒரு பொழுது உழுது கரையேறினால் மாடுகளுக்கும் மனிதனுக்கும் காலோய்ந்து போகும். முக்கால் கோட்டை விதைப்பாடு ஒரு உழவு உழுவதற்கு நான்கு ஏர்கள் வேண்டும். மற்ற வயல்களைப் போல நெருக்கமாகச் சாலடித்து கிட்ட வைத்து ஏரடித்து உழுவது சாத்தியமில்லை. மாடுகளும் மனிதனும் பரக்கச் சமுண்டினால் கூடப் போதும். பின்பு உத்தேசமாகப் பொழித்தட்டி மொழுக்கி விடலாம். கூட உழுவதற்கு வேறு துணை ஏரோ, மாற்று ஏரோ, பண ஏரோ கிட்டாமல் ஒரே வயலைப் பரமன் நான்காவது நாளாக உழுது வந்தான். அன்று உழுது தீர்ந்துவிடும். மறுநாள் மொழக்கி நட்டும் விடலாம்.

பத்து மணிவரை வரப்பில் நின்ற சாமி, ஆற்றில் போய் குளித்து விட்டு

சாப்பிடப் போய்விட்டார். உழுது முடிந்ததும், நடவு கொத்துப் போட பரமன் பிற்பகல் போய்க் கேட்க வேண்டும்.

கடைசிச்சால் அடித்துக்கொண்டிருந்தான் பரமன். எப்போதுமே தொய்ந்து நடக்கும் கடாக்கள், கலப்பை இழுக்க மிகுந்த சிரமம் கொண்டன. தார் கொண்டு வெறுமனே குத்திப் பயனில்லை. கலப்பைக் கொழுவில் சிலசமயம் இளநீர்க் குடுவையோ, குழைதறித்துச்சமுண்டிப் போன பூவின் குழைக்கம்போ, மனித மண்டையோடோ சிக்கி அடைத்துக் கொண்டால், மாடுகள் இழுக்க சிரமப்படும். அசைத்து அசைத்து கலப்பையை மேலே தூக்கி, ஊறிக் கொவர்ந்திருந்த பாதத்தில் கொழு பாய்ந்து விடாமல், கலப்பையைக் காலால் மிதித்து அடைந்த பதவலைத் தள்ளி விட வேண்டும்.

கலப்பையைத் தூக்குவது கூடச் சிரமமாக இருந்தது. தூக்கிப் பார்த்தால் சூரிய ஒளியில் தகடுபோல் ஏதோ ஒளி வாங்கி உமிழ்ந்தது. நெல்லளக்கும் மரக்கால் ஓட்டை விழுந்து எவரும் தூக்கி வீசி இருக்கலாம் எனக் கையில் எடுத்துப் பார்த்தான். பெரியதோர் வெள்ளோட்டுக் கும்பாவாக இருக்கலாம் எனத் தோன்றியது. வேலைப்பாடுகளைப் பார்த்தால் வெள்ளிக் கிரீடம் போன்றும் இருந்தது.

சேற்றுத் தண்ணீரில் அல்சினான் பரமன், கிரீடம் தான், வெள்ளியே தான்.

போன மாசம் செட்டித் தெரு முத்தாரம்மன் கோயில் கிரீடத்தைக் கள்ளன் கொண்டுபோனான் எனப் பெரும் பேச்சாகக் கிடந்தது. பரமனுகசு பயமாக இருந்தது. எவன் திருடிவந்து மறைவாக ஒளித்துப் பூத்து வைத்தானோ? அல்லது பிடி கூடப் பயந்து எறிந்துவிட்டு ஓடினானோ?

படபடப்பாக இருந்தது பரமனுக்கு தானே களவாடியவன் என்று பட்டாளக்காரன் பிடித்துக்கொண்டு போனால் கேட்க நாதி இல்லை. காலடியில் தொழி இளகி உள்ளே அமிழ்ந்துகொண்டிருப்பதாகத் தோன்றியது. அதிக நேரம் ஏர் சுணங்கி நின்றால் இரண்டு வயல் தாண்டி ஏரடிக்கும் இருளாண்டி கூவிக் கேட்பான். என்ன செய்வதென்று ஒரு பிடியும் கிடைக்கவில்லை பரமனுக்கு

எதற்கும் ஆலோசித்துத்தான் தீர்மானிக்க வேண்டும். ஈசான மூலையில் அடையாளம் வைத்து, உலோகம் வெளியே தெரியாவண்ணம் கையால் தொழிக்குள் பூத்து வைத்துவிட்டு உழவு சோலியை முடித்தான். வழக்கம்

போல் கருமத்த மாட்டுக் கிடாக்களைக் குளிப்பாட்டி, கரையேற்றி, தொழுவில் கட்டி, வைக்கோல் பிடுங்கி வைத்து, இனிமேல் அந்தப் பூவில் உழவு இல்லை என்பதால் கலப்பை, நுகம், உழவுகம்பு எல்லாம் கழுவி தொழுவத்தில் சாய்த்துவிட்டு, படிப்புரையில் உட்கார்ந்து பசு மார்க் சுருட்டு ஒன்றின் பாதியைக் காதோரத்தில் இருந்து எடுத்துப் பற்ற வைத்தான்.

காலையில் பத்துந்தண்ணிமாகக் குடித்துவிட்டுப் போனது. சுருட்டின் கனிந்த கங்கு போன்று வயிற்றினுள் பொதிந்து கிடந்து கனன்றன செந்நிறக் கங்குகள். இனி பாத்திரம் எடுத்துக்கொண்டு போனால் சாமி வீட்டில் பழையதும் பழையகறியும் தருவார்கள். மதியத்துக்கு பரமனுக்கும் முப்புடாதிக்கும் அதுதான் ஆகாரம். இரவு ஒரு வேளை, விளக்கு வைத்த பின்பே உலை ஏற்றுவது.

"கஞ்சி வேண்ட நாம் போட்டா?" என்றாள் முப்புடாதி.

''இல்லட்டி நானே போறன். ஒரு விசயம் சொல்லணும் சாமி கிட்ட..."

"நடவு கொத்து போடத்தாலா... எல்லா பூவுக்கும் உள்ளது தாலா!''

"வேற ஒரு காரியம்ட்டி...."

பரமன் குரலைத் தாழ்த்திக்கொண்டு சொல்லச் சொல்ல முப்புடாதி முகத்தில் திகில் ரேகையொன்று பரவி ஓடியது.

விதி உரைத்தது

அவரவர் கற்பனைபோல், வெளியீட்டு வசதிகள் சார்ந்து, முற்போக்குக் கொள்கைகள் விதிப்படி, வாசிப்பு சுதந்திரம் தந்து கீழ்க் கண்டவற்றுள் எந்த முடிவைப் பொருத்திக் கொண்டாலும் இந்தக் கதாசிரியனுக்கு அதில் முரணோ பகையோ இல்லை. இந்த முடிவுகளுக்குப் புறம்பான முடிவுகளும் சாத்தியமே. ஏனெனில் எந்தக் கதையும் நமது வசதிக்கு, பேசி வைத்தது போல் நடந்து முடிவதில்லை. மனித மனம் என்பது எந்த சூத்திரத்துக்கும் கட்டுப்பட்டதும் அல்ல.

முதல் பாதம்

சற்று ஆழ்ந்த யோசிப்புக்குப் பிறகு, முப்புடாதி மெதுவாகக் கேட்டாள்.

''மனுசா, இப்பம் என்ன செய்யப்போறேரு? அம்மன் இப்படிச் சோதிக்காளே நம்மை…. குலமறுத்துப் போடுவாளே! பேசாம ராத்திரி நடுச் சாமத்திலே அவ நடையிலே கொண்டு வச்சிரும்…. நமக்கு என்னத்துக்கு அவளுக்க மொதலு?''

''கொண்டுக்கிட்டுப் போயி வய்க்கச்சிலே எவனும் பாத்துட் டாம்ணா? நமக்கு அதுலேருந்து ஊரி வருகது முடியப்பட்ட காரியமாட்டி? சாம்பான் சண்டு பெடைப்பான், சாணி அள்ளுவான், தொழித் தண்ணி குடிப்பான், மாடு மேய்ப்பான், கள்ளப்பேரு ஏப்பானாட்டி?"

"……………."

''அப்டியே கொண்டு வச்சுக்கிட்டு வந்தம்ணே வச்சுக்கோ, வேற எவனும் பொறவாட்டு பாத்து அனக்கம் காட்டாம தூக்கீட்டு வீட்டுக்கு கொண்டுக்கிட்டுப் போனாம்னு வச்சுக்கோ, அப்பம் என்ன செய்வே?"

''அப்பம் சாமிகிட்ட கொண்டு குடுத்திரலாம். அவிய வயலுக்குள்ளதான கெடந்து…. அவிய என்னம்போ செய்திட்டுப் போட்டும்….''

விளக்கு வைத்தபின் வயலில் இருந்து கிரீடத்தை எடுத்துக் கழுவி தொழிவாசனை வீசுகிறதா என முகர்ந்து பார்த்து, தலைமுண்டால் பொதிந்து மூடி, சாமியின் வீட்டுப் பின்கதவைத் தட்டினான் பரமன்.

இரண்டாம் பாதம்

பரமனைச் சற்று நெருங்கி வந்து குத்த வைத்து ரகசியம் போலச் சொன்னாள் முப்புடாதி.

'உம்ம நாறக்கொணத்தை அடக்கி வச்சுக்கிட்டு நான் சொல்லப்பட்டதைக் கொஞ்சம் கெவனமாக் கேளும்…. இந்தக் கருமத்த மாடுகளைக் கெட்டிக்கிட்டு அடுத்த பூ ஏரடிக்க முடியாது பாத்துக்கிடும்…. ரெண்டும் நம்மை விட கெளடாட்டு இருக்கு…. கோணக்கொம்பு ஏற்கனவே அசை துப்புகு…. மாட்ட மாத்தணும்னா என்ன செய்வேரு? சாமிகிட்ட கேட்டாத் தருவாரா? நம்ம நம்பி எவங் கடந் தருவான்….?"

பரமன் முப்புடாதியின் முகத்தை ஏலாமையுடன் பார்த்தான்.

"அதுக்கும் இதுக்கும் என்னட்டி பெந்தம்?"

"'நாளைக்கு கம்பளத்திலே போயி கொஞ்சம் நவச்சாரம்வேண்டிக்கிட்டு வாரும்….. கிரீடத்தை ரெண்டு மூணாத் தல்லி ஒடச்சு, நல்ல செரட்டைத் தீ போட்டு, அதுலே வச்சு உருக்கீருவோம்…. பொறவு சளரியம் போல வித்துக்கிடலாம்….. '

"சாமிக் குத்தம்லாட்டி….''

''என்னத்தை சாமி குத்தம்? அந்தச்சாமியை நீரு கிட்டப் போயி பாத்திருக்கேரா? அவ மொகம் எப்படி இருக்கும்ணு தெரியுமா? அவுளுக்குநீரும் நானும் பண்ணியும் கருமத்தமாடும் ஒண்ணுதான்….''

''நீ என்னட்டி சொல்லுகே? எங்க அம்மைக்கு மேல எசக்கி வருவாட்டி…. நானே பாத்திருக்கேன்….'

"அப்பம் அவதான்நமக்கு இந்த உபகாரத்தைச் செய்திருக்காண்ணு வச்சிக்கிடும்….. தொழித்தண்ணி குடிக்கவனுக்கு ஒரு நல்ல வழி காட்டிப் போட்டா…. அம்மன் தனக்கு கிரீடம் இல்லேண்ணா அழுகா இப்பம்? இதுக்குள்ள அவுளுக்கு வேற நல்லாக்கி வச்சிருப்பானுவோ…."

''இருந்தாலும்……''

'நீரு ஒண்ணுக்கும் பயப்பிடாதயும். பாவப்பட்டதுகளுக்கு அவ இப்பிடித்தான் வழி சொல்லுவா…..''

பரமன் நீண்டதொரு பெருமூச்சு எறிந்து, சுருட்டை அணைத்து மறுபடியும் காதில் செருகிக்கொண்டான்.

மூன்றாம் பாதம்

நீல நிறமாகச் சுருண்ட சுருட்டுப் புகையில் சில நேரம் சிந்தனையை நாட்டிவிட்டுப் பரமன் சொன்னான்.

"அப்பம் வெளக்கு வச்ச பொறவு அதை எடுத்துக் கழுவி, சாமி கிட்டே கொண்டு சேத்திரலாம்….''

''அவுரே அமுக்கிக்கிட்டா என்ன செய்வேரு?"

''சே! அப்பிடிச் செய்வாரா? அய்யம்மாரு கடவுளுக்குப் பயந்த வள்ளாட்டி....''

''சரி... பின்னே போயிட்டு வாரும்... ஒரு குருவி அறிஞ்சிராம, கேட்டேரா!"

சாமி எல்லாம் பொறுமையாகக் கேட்டார்.

''ஏலே, பெரமா! சிவஞ்சொத்து குல நாசம்லே! நமக்கு என்னத்துக்கு? இதைக் கொண்டா நம்ம காலம் ஒப்பேறப் போகு? ஒரு நீக்கம்பு வந்தா காணுமாலே? சாயரட்சை பூஜை ஆனப்புறம், நீ அதை ஓடையிலே நல்ல கழுவி, தலை முண்டிலே பொதிஞ்சு கொண்டா, என்னா? எவங்கிட்டயும் கெம்பீராத.... முப்புடாதிக்குத் தெரியுமா? போட்டும்.... அவ சொல்ல மாட்டா.... சொணை உள்ள சாம்பாத்தி.... எவுனும் வழியிலே பாத்துக் கேட்டா கஞ்சிப் பாத்திரம்னு சொல்லு.... என்ன?"

விளக்கு வைத்த பிறகு, வயலில் இறங்கி, கையினால் பரசித் தப்பி எடுத்து, ஓடைத் தண்ணீரில் அலசிக் கழுவி முகர்ந்து பார்த்தான் பரமன். கிரீடத்தில் இருந்தோ, தன்மீதே தானோ, தொழிவாசம் இன்னும் இருந்தது. நிலவொளியை கிரீடம் வாங்கி இலேசாக வெளியே உமிழ்ந்தது. திருநீறு போட்டு விளக்கினால் இன்னும் பிரகாசமாக இருக்கும். அதை சாமி பார்த்துக் கொள்வார்.

தேரோடும் வீதிகளில் மட்டும் முக்குக்கு முக்கு கற்றுண்களில் ஏற்றி வைத்த விளக்குகள் கண்ணாடிக் கூண்டினுள் மங்கலாய் பிரகாசித்தன. வீடுகளுக்குள் புன்னைக்கெண்ணெய் விளக்குகள் மினுங்கின. புறவாசல் சந்து இருளோடிக் கிடந்தது. அவயான்கள் இரவிலும் அலைந்து திரும்பின. திறந்து கிடந்த கக்கூஸ்களில் இருந்து நாற்றம் கிளம்பிப் பெருகியது. நின்று முறைத்த பூனையின் கண்கள் மரகத மணிகளாய் வெருட்டின.

புறவாசல் கதவை இலேசாகத் தட்டினான் பரமன். சாமிதான் வந்து திறந்தார்.

''யாராம் பாத்தாளா லே?"

''இல்ல சாமி.''

''நல்ல காலம்.... அன்னா, அந்த நடையிலே வையி.... இன்னா, அரைச்சக்கரம் இருக்கு, சுருட்டு வேண்டிக்கோ....வெளீல அனக்கம் காட்டாத என்னா? பொறவு நீதான் களவாண்டம்பான்.... முப்பிடாதி கிட்டயும் சொல்லி வை.... இனியுள்ளது எங் கவலை....."

புறவாசல் நடையைச் சாத்தி, கொண்டி வைத்துத் திரும்பியபோது, செம்புத் தண்ணீருடன் பாரியாள் நின்றிருந்தாள். செம்பை வாங்கி, தண்ணீர் தெளித்து, தூக்கினார்.

''ரெண்டு மூணு றாத்தல் இருக்கும் டீ. நல்ல உறுதியாத்தான் செஞ்சிருக்கான், உருக்கி எடுத்தா ஒரு சந்தனக்கும்பா, குங்குமச் செப்பு, சாப்பாட்டுத் தாலம், ரெண்டு தம்ளர் தாராளமாக் கிடைக்கும்.....’"

"அதுக்கு இப்டியே கொண்டு போனா சம்சயப் படமாட்டாளா?”

''போடி அசடு. நாளைக்கு காலம்பற கம்போளம் போயி நவச்சாரம் வாங்கியாந்து மொதல்லே உருக்கிப் பிடுவம்.... பொறவு ஆற அமர எல்லாம் செஞ்சுப்புடலாம்.''

கிரீடத்தை ஐயர் பாரியாள் வாஞ்சையுடன் வாங்கிக்கொண்டாள்.

நான்காம் பாதம்

பரமனிடம் கை நீட்டி வாங்கிய கிரீடம் கைகளில் தீப் போல் தகித்தது. அம்மனையே வீட்டில் வைத்துப் பாதுகாப்பது போல் பரபரப்பாக இருந்தது. சூத்திரன் தெய்வமானாலும் தெய்வம் தெய்வந்தானே! ஏதோ முற்பிறவியில் செய்த புண்ணியம், தனது கையால் இது நடப்பதாகப் தோன்றியது. உறங்க முற்பட்ட போதெல்லாம் கனிவுடன் இரு கண்கள் தன்னை உற்றுப் பார்ப்பது போல. தம்முடைய தாரித்திரியம் இத்துடன் நீங்குவதாகவும் குடும்பம் தழைத்து ஓங்குவதாகவும் மனது பொங்கி வழிந்தது.

சேற்றில் கிடந்ததை அம்மனுக்கு அப்படியே சாத்த முடியுமா என முதலடிகள் கேட்டார்கள். புரட்டாசி மாதம் கடைசிச் செவ்வாய் அம்மனுக்குகந்த நாள். அம்மனுக்கும் கிரீடத்துக்கும் தனிப் பூசைகள், மங்கல நீராட்டு, நல்லெண்ணெய்,களபம், சந்தனம், தேன், பால், தயிர், இளநீர், பன்னீர், நன்னீர். அர்த்த சாமப் பூசையில் அம்மன் மறுபடியும் மகுடம் புனைந்து நின்றாள். கோயிலுக்குள்ளும் வெளியும் இருசனக்

கூட்டம். வெள்ளாளத் தெரு, செட்டியத் தெரு, ஆசாரிமார் தெரு.

"அவ மொதல யாரும் களவாங்க முடியுமா? எப்படிப் போச்சோ, அப்படியே வந்திற்று பாத்தேளா?"

துடியான தெய்வம்லா…. தீம்பு நெனைச்சாலே குலக் கேடுல்லா?"

''அய்யம்மாருக்கு நம்ம அம்மன்னா கொஞ்சம் எளக்காரம் பாத்துக் கிடுங்கோ…. எப்படி அவ்வோ கையினாலே கொண்டாந்து சேத்தா பாத்தேளா.."

புட்டமுது, வடை, சுண்டல் பிரசாதங்கள் வாங்கி மக்கள் கலைந்து கொண்டிருந்தனர்.

3 கழுத்தில் போட்டமாலையைக் கழுற்றி இடதுகையில் மடித்துப் போட்டு, வலது கையில் பிடித்த மடக்கிய வாழைத்தும்பிலையில் பூசும் பிரசாதங்கள் மட்டும் வாங்கிக்கொண்டு சங்கர சுப்பையர் பெருமிதத்துடன் வீட்டுக்கு நடந்தார். நல்லவேளை, பரமன் வெளியில் சொல்லவில்லை என்று நினைத்துக்கொண்டார்.

ஐந்தாம் பாதம்

கோயில் முதலடிகளிடம் வீட்டு நடையில் தன்னையும் நிற்க வைத்து, சாமி கிரீடத்தை கொடுத்தது பரமனுக்கு பெருமையாக இருந்தது. சாம்பவர் குடியிலும் பிராமணக் குடியிலும் வெள்ளாளக் குடியிலும் அவன் மதிப்பு ஏறி உயர்ந்திருந்தது.

அம்மனுக்கு கிரீடம் சாத்தும் அன்று முப்பிடாதியுடன் போயிருந்தான்.

பூசை முடிந்து பிரசாதம் வாங்கித் திரும்பும் கூட்டம். நெற்றிகளில் களபம், குங்குமம், திருநீறு. கையில் வாழை இலைத்துண்டில், வேட்டி மடிப்பில், தலைமுண்டில், கண்டாங்கி மடியில் வாங்கிய வடை, சுண்டல், புட்டமுது….

கோயில் முகப்புக்கு வெளியே, பலித்தூணைத் தாண்டி, அகன்ற தூரத்தில் சிறியதோர் சாம்பவர் சனக் கூட்டம். கோயில் சிறப்புக்கு நெய்த்துளசிக் கட்டு, கமுகம் பூ, செந்தாழம் பூ கொணர்ந்த முறைக்கார சாம்பாக்கமார் கூட்டத்தில் பரமனும் முப்பிடாதியும் நின்றிருந்தனர்.

பூசாரி கடைசியில் வெளியே வந்துதான் கை தொடாமல் அவர்களுக்கு பிரசாதம் தர வேண்டும்.

பரமன் கண்களை இடுக்கிக்கொண்டு பார்த்தான். 'கண்ணுக்கு சரியா சூச்சம் இல்லே! சூச்சம் இருந்த காலத்திலும் தெரியவா செய்து?' தூரத்தில் நின்றிருந்தாள் முத்தாரம்மன். மாலைகள் கிடப்பது தெரிந்தது. முகம் தெரியக் காணோம். முகந் தெரிந்தால் அல்லவா சூடிய கிரீடம் தெரிவதற்கு? அம்மன் சந்நிதியில் தொங்கிய விளக்கொன்றின் சுடர் தெரிந்தது, நெடுந்தொலைவில் தெரிவது போல.

ஓம் சக்தி - தீபாவளி மலர் - 2006

***

8. பரிசில் வாழ்க்கை

ஊருக்கு மேல் கையில் நீர் வளம் ததும்பிய தலங்களில் இருந்தன சாத்தாங்கோயில்கள். ஆற்றங்கரை குளத்தங்கரை போக சில சமயம் தோப்புக்கள், திரடுகள், விளைகள் நடுவிலும், அபூர்வமாக வயற்காடுகளின் திட்டுக்களிலும் சாத்தா நிலை கொண்டிருப்பார். சாத்தாங் கோயில் என்பதுதான் வழக்கு. மற்றபடி கிறிஸ்துவின், என்று நீ அன்று நான் உன் எதிரி அல்லவோ எனும் நிரந்தரமான எதிரியான சாத்தானின் கோயில் எனப் பொருள் கொளல் ஆகா! சாஸ்தா என்பதன் தமிழாக்கம் சாத்தா, அல்லது மறுதலை நேராம். சாஸ்தா என்ன மொழி என்றெனக்குத் தெரியாது. வேட்டி வேஷ்டியானது போன்றும் துட்டி துஷ்டியானது போன்றும் கோட்டி கோஷ்டியானது போன்றும் இங்கிருந்து சென்று அங்கிருந்து திரும்பியதாகவும் இருக்கலாம்! அப்பம் தின்னவோ அலால் குழி எண்ணவோ!

தமிழகத்தின் தென்மாவட்டமான கன்னியாகுமரியிலும் மற்றும் கேரளத்தின் திருவிதாங்கூர் பகுதிகளிலும் தர்ம சாஸ்தா ஐயப்பன் கோயில்களும் சாத்தாங்கோயில்களும் வழியிலுள்ள எரிமேலி, பத்தணம்திட்டை பக்கத்தில் பேராறு ஒன்றின் மேட்டிலுள்ள பந்தளம், குளத்துப் புழை, செங்கோட்டை தாண்டி சிற்றாறுகளின் கரையிலுள்ள ஆரியங்காவு, அச்சன் கோயில் ஆகியவை ஐயப்ப சாஸ்தா கோயில்களில் பிரபலமானவை.

ஈண்டு சொல்ல வருவது நூறு வீடுகளுக்குள் இருக்கும் சிற்றூர்களில் அடங்கி ஒதுங்கி வாழும் சின்ன சாத்தாங்கோயில்கள் பற்றி. அவருள்ளும் சற்றுப் பெரிய ஊர்களில் பதி கொண்ட எங்கோடி கண்டன், எருக்கலை உடையார், மணிகண்டன், சேர வாதில், நீர்நிறை காவு கொண்டன், தென் கரை மகராசன், பரக்கோடியன் கண்டன் என்பன பெயர் கொண்ட சாத்தாக்கள்.

ஊரை விட்டு ஒதுங்கி, எக்கேடும் கெட்டுப் போங்கள் எனக்கென்ன எனும் பாவத்தில், காட்டின் விளிம்பில் கால் கொண்டிருக்கும், யோக முத்திரையுடன் ஆன சின்ன கற்சிலைகள். அல்லது வடிவ ஒழுங்கற்ற சிவலிங்கம் போன்ற அமைப்பில் சமைந்த உருளைக் கற்கள். ஆயிரக்கணக்கில் சமணர்களைக் கழுவேற்றித் தழைத்த சைவத்துக்கு அஞ்ச்சி ஒடுங்கி, அடைக்கலம் தேடி, சிற்றூர்களில் ஒதிங்கிய சமணரின்,

வழிபாட்டுத் தலங்கள் அவை என்பாரும், சமண முனிகளின் சமாதிகள் மேல் எழுப்பிய நடுகற்களின் வடிவம் என்பாரும் உளர். உளர் எனில் உளர், இலர் எனில் இலர். எவ்வாறாயினும் சமணத்தைக் கழிவிலேற்றியதன் பிராயச்சித்தமாக இன்று சைவத்தைச் சைவமே கழுவிலேற்றிக் கொண்டிருக்கிறது. சிவம் எனில் ஆக்கல், சிவம் எனில் அளித்தல், சிவம் எனில் காத்தல், சிவம் எனில் அழித்தல். தன்னை ஆக்கல், தன்னை அளித்தல், தன்னைக் காத்தல்,தன்னையே அழித்தல்.

வலுவும் வழிபாட்டுத் தீவிரமும் இழந்து போன சாத்தாக்களுக்கு பூணூல் அணீந்த வேளார் அல்லது குலாலர் அல்லது குயவர் அல்லது கொசவர் என்பவர் பூசை செய்தனர். சில இடங்களில் நம்பியார் என்றதும் சினிமா வில்லன் நடிகர் என்றுதான் நமது புந்தி போகும். அது எம் பிழை அன்று. நம்பியார் எனப்படும் பட்டவர் எனப்படுபவர் ஆதி சைவர்களின் மருவு என்பாரும் பார்ப்பனர்களின் உட்பிரிவு என்பாரும் உளர். நம்பியார்களை பார்ப்பனர் தங்கள் வகுப்புக்களோடு சேர்த்துக் கொள்வதாகவும் தெரியவில்லை. வடமர், வாத்திமார், பிரகச்சரணம், சோழியர்களில் சேர்த்தி இல்லை. கொள்வினை – கொடுப்பினை இருக்கட்டும், தொட்டுச் சாப்பிடுவார்களா என்று கூடத் தெரியாது. ஆனால் அவர்கள் இறை வழிபாட்டுச் சேவையில் இருந்த்தனர்.

அங்கு அக்ரகாரத்தை கிராமம என்பார்கள். பிராமணச் சேரி என்றும் சொல்வதுண்டு, அந்தக் கிராமத்தில் இரண்டு நம்பியார் வீடுகள் இருந்தன. சிவன் கோயில், பிள்ளையார் கோவில், சாத்தாங்கோவில், பூவத்தான் கோவில் பூசைகளில் பொழுது புலர்ந்தும் சாய்ந்தும் கடந்து போயிற்று. பூவத்தான் என்பவரும் பூததான் எனும் சாத்தாதான் என்பார்கள். பூவத்தான் உருவங்கள் கவிழ்ந்து வைத்த மைசூர் சருவம் போன்ற கற்சிலைகள். பலி பீடங்களின் பெரிய வடிவம்.

வெள்ளாங்க்குடிக்கும் வைராவிக்குடிக்கும் சாம்பவர்குடிக்கும் இன்னபிற ஒற்றை புறம் கூட்டாளிகளுக்கும் பொதுவாக ஒரு பள்ளிக்கூடம் இருந்தது எங்களூரில். அன்றும் இன்றும் ஐந்தாம் வகுப்பு வரைதான் குடும்பக்கட்டுப்பாடும், வசதியுள்ளோர் வேன்களில் நகரத்துப் பள்ளிகளுக்கு பிள்ளைகளை அனுப்புவதுமாக மாணவர் எண்ணிக்கை குறைந்து குறைந்து தற்போது ஓராசிரியர் பள்ளியாக ஓய்ந்துகொண்டிருக்கிறது. ஐம்பதாண்டுகளுக்கு முன்பு அரிச்சுவடியும் எண் சுவடியும் கற்றுத்தந்த பாடசாலைக் கூடமும் ஓடிப்பிடித்து விளையாடி கல்வரித் தூணில் முன்மண்டை மோதிய வராந்தாவும்

பின்பு ஊருக்கு மேற்கே இரண்டு மைல் நடந்து சென்ற நடு நிலைப் பள்ளி. ஆறு முதல் எட்டு வரை படித்தது.

எமது வகுப்பில் பக்கத்து ஊர் பிராம்மண கிராமத்தில் இருந்து மூன்று பெண்பிள்ளைகளும் வெள்ளாங்குடி, நாடாக்குடி, சாம்பவர் குடிகளில் இருந்து வரும் சிறுவர் சிறுமிகளாக நாற்பத்தெட்டுப் பேர். ஒருத்தி மட்டும் முக்கால் மைல் தூரத்தில் இருக்கும் தட்டட்டி போட்ட வீட்டில் இருந்து தினமும் வில்வண்டியில் வந்தாள். உள்ளூர் பிள்ளைகள் மதியச் சாப்பாட்டுக்கு வீட்டுக்குப் போய் வருவார்கள், சுடுசோறு தின்ன. எமக்கு எப்போதும் சின்னப் பித்தளைத் தூக்குப் போணியில் பழையதும் உப்புப்பரலும் நாரத்தங்காய்த் துண்டும். ஓடியோடி வீட்டுக்குப் போனாலும் அதேதான் இருக்கும். அன்றெல்லாம் மதிய உணவு இடைவேளை ஒருமணி நேரம். மணிக் கூர் கணக்கெல்லாம் ஒரு உத்தேசம்தான். தலைமையாசிரியரிடம் மட்டும்தான் பழைய ஃபேவர்லூபா கைக்கடிகாரம் இருந்தது.

வில்வண்டிக்காரியை சாப்பிடக் கூப்பிடவும் திரும்பக் கொண்டு விடவும் வண்டிவரும். பூப்பட்டால் நோகும் பொன்னுத் திருமேனி. வகுப்பிலுள்ள கிராமத்துப் பெண்பிள்ளைகளில் சிவகாமியும் சீதையும் இரட்டை வண்டிக் காளைகள் போல. ஒன்று வலத்தை என்றால் மற்றொன்று இடத்தை, மற்றவள் பாலாம்பாள் தனியாக வந்து போவாள். ஏதும் சண்டை - பச்சம் சமாச்சாரமாக இருக்கும் என்று நினைத்திருந்தோம். ஆனால் பயின்ற ஆறு, ஏழு, எட்டாவது வகுப்புக்களில் ஒரு முறை கூட சகஜமாக அவர்கள் பேசியோ, சிரித்து விளையாடியோ பார்த்ததில்லை. பேசினாலும் அது பத்தியப் பேச்சாக இருக்கும். நட்பாக இல்லை என்பது வெளிப்படை பகையாகவும் இல்லை. வெள்ளாடிச்சிகளிடமும் சாம்பாத்திகளிடமும் நாடாத்திகளிடமும் மறத்திகளிடமும் கம்மாளத்திகளிடமும் எப்போதாவது தமது ஒதுங்கல் ஒழித்து கறாலான இயல்பின் எல்லை தொட்டும் தொடாமலும் உரையாடியவர்கள் ஏன் பாலாம்பாளிடம் பாராமுகம் என்று தோன்றும். தக்க தருணம் இன்னும் வரவில்லையோ நன்னு ஃப்ரோவ?

பாலாம்பாள் என்னிடம் பிரியம் கொண்டிருந்தாள். சிவகாமியையும் சீதையையும் முந்திக்கொண்டு வகுப்பில் வந்ததனால் இருக்கலாம். யாருக்கும் அந்த இடத்தை விட்டுத் தந்ததே இல்லை. ஒருவகையில் பாலாம்பாள் தனது கர்வத்தை என் மூலம் நிலைநாட்டிக் கொண்டிருந்தாள் போலும். எனக்குப் பிறகு மூன்று பேரும் மற்ற

இடங்களில் மாறி மாறி வந்துகொண்டிருப்பார்கள். பெரும்பாலும் பாலாம்பாள்தான் முதல் வட்டத்தில் கடைசி. என்னிடம் அவள் மட்டும் ஐய்ங்கள் கேட்பாள். புத்தகங்கள் இரவல் வாங்குவாள். பத்து சொட்டு மை கடன் கேட்பாள். நானோ எப்போதும் எதற்கும் எல்லோரிடமும் இரந்து திரிபவன் என்பது கிளைக்கதை. மற்றபடி எனது முன்தள்ளிய சோவிப்பற்களும் சூம்பி ஒடுங்கிய நெஞ்சுக் கூடும், இளநரையும், கோரை முடியும் வாமன உருவும் வாலைப் பெண்கள் காமுறும் கிரியா ஊக்கிகள் அல்ல.

எட்டாம் வகுப்பு படிக்கும் போது, புத்தேரிப் பெரியம்மை வீட்டுக்குப் போய்த் திரும்பிய ஒரு பள்ளி விடுமுறையில், காலை கடந்து முற்பகல் கூடி வரும் வேளையில், குளத்தங்கரை குறுக்குப் பாதை சாலையில் வந்து கூடும் இடத்தில் இருந்த பூதத்தான் கோயிலில் மணி கிலுங்கிக்கொண்டிருந்தது. சிலசமயம் நெல்லுப் பொரி கிடைக்கும் எனும் யோசனையில் எட்டிப் பார்த்தேன். பாலாம்பாள் தொழுத கையுடன் நிற்க நம்பியார் கிலுக்கிக் கொண்டிருந்தர்ர்.

கருவறை, உட்பிரகாரம், கொடிமரம், பலிபீடம் வெளிப் பிரகாரம் என்று தனித்தனியாகக் கிடையாது. மூன்று பக்கமும் கல்வரி நாட்டிய அளி போன்ற சுவர். முன்பக்கம் கம்பிக் கதவு. கல் உருவைக் கள்ளனா கொண்டு போவான்? காற்றும் மழையும் வெயிலும் கரைக்கவா முடியும்? மேற்கூரையும் கிடையாது. காற்றுக்கு ஒதுக்கமாய், விளக்கு ஏற்ற என மாடக்குழி உண்டு. சிவராம நம்பியார் பூசை சாமான்களை ஒதுக்கிக்கொண்டிருக்க, நான் பாலாம்பாளிடம் பேச்சுக் கொடுத்தேன். அரையாண்டு பரீட்சை நெருங்கிக் கொண்டிருந்தது.

''எல்லாம் படிச்சாச்சா?''

''சமூகப் பாடம் மாத்திரம் பாக்கி''

''சிவகாமியும் சீதையும் படிச்சு முடிச்சிருப்பாள்ளா?”

''அவாளைப் பத்திக் கேக்காத.... அவா என்னோட பேச மாட்டா...'

''அப்படி என்ன சண்டை?”

''சண்டையெல்லாம் ஒண்ணுமில்லே.... அவா வேற ஜாதி யோல்லியோ!”

எனக்கு பள்ளிப் பருவத்தில் ஏற்பட்ட ஏகப்பட்ட வர்ம அடிகளில்அதுவும் ஒன்று.

''ஆனா நீங்கோ கிராமத்திலே தானே இரிக்கியோ?”

''ஆனா எங்காத்துக்கு அவா வரமாட்டா.... நாங்களும் போமாட்டோம்.....'

''உங்கப்பா பூணுரல் போட்ருக்காரே!''

''அதெல்லாம் போட்டுப்பா.... அவா எங்களைத் தொட்டுச் சாப்பிடமாட்டா?''

''அப்பம் நீங்க வெள்ளாங்குடித் தெருவுக்குப் போயிரலாம்ல?”

''அதெப்டிடா? நாங்க பிராமணாள் இல்லியோ?”

‘வெளங்கினாப்பிலதான்' என்று மனதுக்குள் நினைத்துக் கொண்டேன்.

சாஸ்தா சைவம், அன்னதானப் பிரியன். அவருக்குப் பிடித்தமானது சர்க்கரை, பச்சரிசி, பொடித்த ஏலம் சுக்கு, திருவிய கருக்குத் தேங்காய் போட்டு வைத்த அரிசிப் பாயசம். கோளடித்தால் அரவணை. எனவே பாலாம்பாளுக்கு மூன்று வேளையும் பாயசம்தான் என்பது எனது கணக்காக இருந்தது.

பூசைக்கு ஆள் கிடைப்பதும் பெரும்பாடுதான் என்று பேசிக் கொண்டார்கள். ஒன்று கடவுள் கைங்கர்யம் தீராத் தரித்திரம் என்பது. இரண்டு கொத்தவேலைக்குக் கையாளாகப் போனால் ரூபாயில் கூலியும் மத்தியானம் கஞ்சியும் உண்டென்பது. எந்தப் பூசாரியும் மாடி வீட்டில் வசித்து வில்வண்டியில் பயணம் போய், அறுத்தடித்து வைத்துக்கொண்டு சாப்பிடுவதாக எடுத்துக்காட்டுக்கள் இல்லை. பூசாரிகளின் பெண்டுகளைப் பார்த்தால் சொல்லிவிடலாம் எத்தனை காய்ந்து போன வயிற்றுப்பாடு என்பது.

பூசை செய்யும் நம்பியார்கள் ஒற்றைத் திமில் ஒட்டகம் போல. குயவர்களிலும் எல்லோரும் கோயில் பூசைக்கு வருவதில்லை. நம்பியார்கள் கிடைக்காதபோது சைவப்பிள்ளைமார் பூசை செய்தார்கள். தொண்டைக் குழியில், திருமாங்கல்யம் போல அதை விட இறுக்கமாகத்

தொங்கும் ஒற்றை உருத்திராக்கம் ஓர் அடையாளம். பூசை செய்யும் பிள்ளைமாருக்கு குருக்கள் என்று பெயர். குருக்கள் மடம் என்றே ஓர் ஊர் இருக்கிறது. வேளாளரின் உபகிளைகள் தாம் பூக்கட்டிப் பண்டாரம், சங்கூதிப் பண்டாரம், குருக்கள், தீட்சிதர், சைவமுதலி, ஓதுவார், ஆதி சைவர் என்றொரு ஆய்வு சொல்கிறது. அது கிடக்க!

ஊருக்கு வடமேற்கே, வயற் காட்டின் நடுவே திரடொன்று இருந்தது. தோப்பு என்று சொல்லி விட முடியாது. திட்டு, கரடு எனக் குறிக்கலாம். ஆங்கோர் சாத்தாங்கோவில். ஆவணங்களில் அவருக்கொரு பெயர் இருக்கும். அல்லது இருக்கலாம். மேற்படி சாத்தா வடித்தெடுத்த வரி சிலை அல்ல. வடிவம் சிவலிங்கம் போல. ஆனால் ஆவுடை இல்லாமல் அகன்ற தூர் பாகத்துடன் இரண்டடி உயரத்தில் இருந்தார். கூரையும் இல்லை, சுற்றுக் கட்டு மதிலும் கிடையாது. நான்கடிக்கு ஆறடி வரிக்கல் பாவிய தளத்தில் பூமி மட்டத்தில் இருந்து மூன்றடி உயரத்தில் இருந்தார். திரடு ஒரு நந்தவனம் போன்றும் இருந்தது. ஒரு கோட்டை விதைப்பாடு பரப்பளவு இருக்கும். நந்தவனம் என்றால் பெரும்பாலும் அரளி. அரளியில் செவ்வரளி, வெள்ளரளி, கழுநீர் அரளி, அவ்வந்த நிறங்களில் அடுக்கரளிகள், தங்கரளி. சில மூடுகள் நந்தியாவட்டை, வாடாமல்லி, பிச்சி. நாலைந்து வாழை மூடுகள், கூழைப்பலா, ஆள் ஏற முடியாத உயரத்தில் எட்டுப் பத்து தென்னை மரங்கள். மாமரம் ஒன்று. பச்சையாகத் தின்ன பச்சரிசி போல் இருக்கும் காய்கள். முகப்பில் ஓடைபோல் குழி கொண்டவை. எனவே ஓடைக் காய்ச்சி என்றும் பெயருண்டு. பழுத்தால் குழம்புக்கு ஆகும். திரட்டின் தென்கிழக்கு ஓரத்தில் சின்ன வாவி, அதை நீராவி என்றும் சொல்வார்கள்.

நந்தவனமும் நீராவியும் சாத்தாவும் வேங்கைக்காடு மூத்த பிள்ளையின் குடும்ப வகை. மூன்று தலைமுறைச் சொத்து. சாத்தாவின் தினப்படி பூசைக்கு என இரண்டு கோட்டை விதைப்பாடு அகப்பத்தில் விட்டிருந்தனர் மூதாதையர். பாலாம்பாளின் அப்பா சிவராம நம்பியாருக்கு தினம் ஒருவேளை பூசைக்கென மூன்று கோயில்களில் முறை. அதில் சாயரட்சை பதிவு சாத்தாங்கோவில்.

மாதம் ஏழு மரக்கால் நெல் சம்பளம், விளக்கெரிக்க நல்லெண்ணெய், நைவேத்தியம் பொங்க பச்சரிசி, விசேட நாட்களில் பூசைக்காக- தேங்காய், பூ, பாளையங்கோட்டன் பழம், வெற்றிலை, பாக்கு, சூடம், சாம்பிராணி, சந்தனம், விபூதி, விறகு ஆகியவற்றுக்காக கணக்குப் பார்த்து இன்னொரு ஏழு மரக்கால் நெல். மற்றதெல்லாம் எப்பாடு

பட்டாலும் அப்பாடு சாத்தா பாடு, நம்பியார் பாடு.

தோராயமான கணக்குப்படி, மூன்று கோயில்களுக்குமாக, செலவு அடக்கம் மாதம் இரண்டு கோட்டை நெல் கிடைக்கும் நம்பி யாருக்கு. அன்று - உழ, வரப்பு வெட்ட, வெள்ளம் தண்ணீர் பார்க்க என பதிவு வேலைக்காரர்களுக்கு மாதம் ஒரு கோட்டை நெல்லும் மத்தியானக் கஞ்சியும் என்பது வழமை. அதில் பதிவு வேலை பண்ணைக்காரனுக்கு திருப்பிச் செய்யும் செலவுகள் இல்லை, நம்பியார் போல பூசைக்கான கூலி நெல்லை, பொலியளவு மரக்காலுக்கு அளப்பார்களா கொத்து அளவு மரக்காலுக்கு அளப்பார்களா என்றும் தெரியாது. கடவுளுக்கு வஞ்சனை செய்வார்களா எனும் நம்பிக்கை உண்டு நம்பியாருக்கு. பொலியில் அளந்த நெல்லானால், காயப்போட்டு குத்தினால் கோட்டைக்கு பத்தரை மரக்கால் பச்சரிசி இருக்கும், குருணையும் சேர்த்து. சண்டு புடைத்த நெல்லானால், எட்டு மரக்கால் அரிசி. இதில் மூன்று கோயில் பூசைச் செலவுகள், சாப்பாடு, துணிமணி, பிள்ளைகளின் படிப்பு, வைத்தியம், நல்லது கெட்டது, நாள் கிழமை - நாளும் கிழமையும் நலிந்தவர்க்கு ஏது என்றாலும் - கைத் தாங்கலாக நடந்து கொண்டிருந்தது குடித்தனம்.

பெருவெள்ளமாகப் பக்தர் வந்து கூடுவதற்கு நமது சாத்தாங்கோயில் என்னதிருப்பதியா, குருவாயூரா, கொல்லூரா, மேல்மருவத்தூரா, சபரிமலையா, திருவரங்கமா? தட்டு என்பதோ அதில் காலணாஅரையணா தட்சணை என்பதோ சாத்தியம் இல்லை. என்றாலும் எப்போதாவது வந்து நின்று கை நீட்டும் பக்தனுக்கு நெற்றியிலும் மார்பிலும் தோள்பட்டைகளிலும் பூச தாராளமாகத் திருநீறு தர வேண்டும். எவராவது பங்குனி மாதம் பரணி நட்சத்திரத்தில் திருநீற்று முட்டம் நீற்றினால் கோயிலுக்கு என்றும் ஏழெட்டு தருவார்கள். சந்தனம் என்பது பச்சரிசி மாவும் மஞ்சளும் பன்னீரும் சேர்த்துக் குழைத்ததோர் சாந்தம். காய வைத்து வில்லைகளாக உருட்டி பல சரக்குக் கடைகளில் விற்பார்கள்.

வயற்காட்டில் வேலை இருந்தால், பண்ணையார் வந்து கும்பிட்டு விபூதி எடுத்துப் பூசிவிட்டுப் போவார். மற்றபடி சாத்தாவுக்கு கொடை, சிறப்பு, ஊட்டு, நம்பிரான் விளையாட்டு, வேட்டை ஏதும் கிடையாது.

சாத்திரப்படி மூன்று கோயில்களுக்குமான பூசைக்கு முன்னால் நம்பியார் குளிக்க வேண்டும். அருகில் இருக்கும் ஆற்றிலோ, தெப்பக்குளத்திலோ, நீராவியிலோ, ஊருணியிலோ குளித்து ஈர சோமனுடன் சாமியைக்

குளிப்பாட்டி, எவராவது நேர்ச்சைக்கு எண்ணெய்-கொடுத்தால் பாதியை அபிசேகத்துக்கும் கொஞ்சம் கல்விளக்குக்கும் மீதியை வீட்டில் தாளிதத்துக்கும் எடுத்துக்கொண்டு, அடுப்பு மூட்டி, சின்ன வெண்கல உருளியில் உழக்குப் பச்சரிசி பொங்கி, நைவேத்தியம் காட்டி, சூடம் கொளுத்தினால் தீர்ந்தது. மூன்று வேளை குளித்து தடுமன் பிடித்துத் தும்மிய பின்தான் நம்பியார் பட்டர் பொடி போடப் பழகினார் போலும்.

கோயிலின் இடமோ வலமோ நிற்கும் செடிகளில் எது பூத்திருந்தாலும் அதுதான் சாமிக்கும். எருக்கலையும் ஆகும் சாத்தாவுக்கு. சிவபெருமானே வெள்ளெருக்கம் சடை முடியான் தானே!

‘யாவர்க்குமாம் இறைவர்க்கோர் பச்சிலை

யாவர்க்குமாம் பசுவுக்கோர் வாயுறை

யாவர்க்குமாம் உண்ணும் போதோர் கைப்பிடி

யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரை தானே!’

என்பது தானே திருமந்திரம்.

பூசை நேரங்களுக்கு இடைஞ்சல் இல்லாமல், அவர் பூசை செய்யும் மூன்று கிராமங்களிலும் குழந்தை பிறந்தால், பெண்பிள்ளை சமைந்தால், எவரும் உயிர் நீத்தால் நடக்கும் சடங்குகளில் புண்ணிய நீர் தெளிக்கக் கூப்பிடுவார்கள். தர்ப்பை, ஓமக் குச்சிகளுடன் போக வேண்டும். நாலணா தட்சணையும் பக்கா பச்சரிசி, தேங்காய், உருண்டை சர்க்கரை, கால்பக்கா பருப்பு, சீப்பு வாழைப்பழம், ஆழாக்கு நெய், உழக்கு நல்லெண்ணெய், வாழைத்தண்டு சேம்பந்தண்டு, நாலு கத்தரிக்காய், இரண்டு வாழைக்காய், சின்னப் பூசணி, இளவன், வெள்ளரி, புடலை, சேனை என அரைக் குட்டிச்சாக்கு தேறும். காரியங்கள் முடிந்து குட்டிச்சாக்கை தலையில் சுமந்து, சடங்கு நடந்த வீட்டைத் திரும்பிப் பார்க்காமல், எவரும் எதிர்ப்பு வராமல், படி இறங்கிப் போக வேண்டும்.

பின்னாலிருந்து வீட்டு மூதாட்டியின் குரல் கேட்கும். 'திரும்பிப்பாக்காமப் போவும் ஒய்" என்று இளக்காரத்துடன்.

பாதையில் கண்ணில் படுபவர் கேட்பார்கள் சற்றும் குறையாத கேலியுடன். ''ஓய் நம்பியாரே! நல்ல கோளுதான் இண்ணைக்கு! அம்புடையும் அவிச்சுச் திம்பேரா, விலைக்குக் குடுப்பேரா ஒய்?"

என்பார்கள்.

பூசாரி வாழ்க்கைக்கு ஆடையிலும் கோடையிலும் சினங் கொள்ளக் கூடாது. ரௌத்திரமும் பழக இயலாது. சினம் என்பது சேர்ந்தாரைக் கொல்லி. எதற்கும் திளைத்துச் சிரிக்க வேண்டும். தொழில் தர்மம். ஊசியால் குத்தினாலும், கோடரியால் வெட்டினாலும், வெட்டாங் கல்லால் எறிந்தாலும், 'கல்லால் ஒருவன் அடிக்க காண்டீபம் எனும் வில்லால் ஒருவன் அடிக்க' என்று என். சி. வசந்த கோகிலம் பாடிய நிந்தாஸ் துதியைப் போல. மறு கன்னத்தையும் குதூகலத்துடன் காட்ட வேண்டும்.

வாழை நல்லப்பம் குலைத்தால், தெங்கு முதல் குலை நெற்று விழுந்தால், பசு முதலில் கறந்தால், காய்கறியின் முதல் பறி, உளுந்து, பயிறு முதல் நெற்றெடுப்பு என்று சாமிக்கு ஒரு சின்னப் பங்கு வரும், பிறந்த நாட்களுக்கு எவரேனும் அரிசிப் பாயசமோ அரவணையோ வைக்கச் சொல்வார்கள். பெண்ணழைத்து, மாப்பிள்ளை அழைத்துப் போனால், தேங்காய் பழம் சாமிக்கு, வெடல் தேங்காய் சிறுவர்க்கு.

தோப்பில் தேங்காய், வாழைக்குலை வெட்டிக் கொண்டிருந்தால், வெண்டை, கத்திரி, கீரைத்தண்டு, முருங்கைக்காய் பறித்துக் கொண்டிருந்தால் சற்று நின்று நிதானித்துப் பேச்சுக் கொடுப்பார் நம்பியார். தொண்ணாந்து நிற்பதுதான் பாவனை, ஆனால் தொண்ணாந்து நிற்பதாகத் தோன்றாமல், தோட்டுடன் ஒரு தேங்காயோ, கை நிறைய காய்கறிகளோ, நாலு முருங்கைக் காயோ, பிடி கீரைத் தண்டோ கிடைக்கும்.

வயலறுத்து சூடடித்து, பொலியளக்கும் களங்களுக்கு நம்பியார் போவதில்லை. அது யாசகம். இறைப்பணி செய்பவன் யாசகம் செய்யலாகாது. பூசை தவிர, மழை வருமா - வராதா என குறி சொல்வது, அக்னி நட்சத்திரம் எப்போது, மாசி மகம், வைகாசி விசாகம், பங்குனி உத்திரம், ஆடிப் பூரம், ஆடி அமாவாசை, ஆவணி அவிட்டம், திருக்கார்த்திகை, தை அமாவாசை, தைப் பூசம் என்றெல்லாம் பஞ்சாங்கம் பார்த்து நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். மேலும் அமாவாசை, பௌர்ணமி, அஷ்டமி, நவமி, கரி நாள், முகூர்த்தநாள், கிருத்திகை, சஷ்டி, ராகுகாலம், எமகண்டம், மேற்கில் கிழக்கில் வடக்கில் தெற்கில் சூலம் எல்லாம் மனப்பாடமாக இருக்க வேண்டும்.

இடது கையில் உயர்த்திப் பிடித்த சின்ன வெண்கல உருளி,

அதில்நீட்டிக்கொண்டிருக்கும் அகப்பைத் தண்டு, மூடிய வாழை இலைத் துண்டுமாக, வலது கையில் வேட்டி நுனியைத் தூக்கிப் பிடித்தபடி நம்பியார் மூன்று காலங்களிலும் அஞ்சலோட்டத்தில் இருப்பார். பார்த்தால் வாழ்க்கையை சதா ஓடித் தொலைத்துக் கொண்டிருப்பதாகவும் ஏதோ நேர்ச்சை போலவும் தோன்றும்.

நைவேத்திய சாதம், உழக்கரிசி பொங்கியது, ஒரு வயிற்றுக்குப் போதாது. சிலசமயம் காலை வேளையில் மிகவும் பசியாக இருக்கும் போலும். தேங்காய்ச் சில்லும் சர்க்கரைத் துண்டும் காலணாவுக்கு கடையில் வாங்கி, கடித்துக்கொண்டு, சுடு சோற்றை வழித்து வாயில் போட்டுக் கொள்வார். வீட்டில் போய் அதற்கும் உத்தரம் சொல்ல வேண்டியது இருக்கும்.

சில சமயம் வெறும் கையை வீசிக்கொண்டு வந்து இரண்டு பேயன் பழமோ பாளையங்கோட்டன் பழமோ கடையில் வாங்கி சாமிக்கு நைவேத்தியம் செய்வார்.

வயற்காட்டு நந்தவனத்து சாத்தாவுக்கு சாயரட்சை பூசை வறுமை வாய் விட்டுச் சிரிக்கும் ஆனி ஆடிச் சாரல் மாதங்கள். வீட்டில் அரிசிப் பானையில் சாத்திரத்துக்குக் கிடந்த கைப்பிடி அரிசியையும் கஞ்சி வைத்துக் குடித்தாயிற்று. யாரிடமும் முன்னறுப்பு கடன் கேட்கலாம் என்றால் அறுவங்கொறுவா அறுக்க இன்னும் பத்து நாட்கள் ஆகும்.

சகல சீவராசிகளுக்கும் கல்லினுள் இருக்கும் தேரைக்கும் படியளப்பவனுக்கு நம்பியார் படியளக்க வேண்டும். பூசைக்கு நெல் தரும் வீடுகளில் போய் கடன் கேட்டால் ஏச்சு மட்டும் கிடைக்கும். ''தந்ததை வித்துத் திண்ணுட்டீரா?'' என்பார்கள்.

தீராத் தரித்திரமும் தாங்கொணா இறையருளும்!

நாளைப் பாடு இருக்கட்டும், இன்று சாத்தாவுக்கு என்ன பதில்?

பூசையை முடித்து, மணியடித்து சூடம் காட்டும்போது, பண்ணையார் படியேறி வந்தார். பவ்யமாக தீபம் காட்டி, விபூதி கொடுத்தார் நம்பியார். திருநீற்றை கொஞ்சம் நாக்கில் போட்டு, கொஞ்சம் நெற்றியிலும் தொண்டைக் குழியிலும் வைத்து சிரசிலும் போட்டுக் கொண்டார்.

''நம்பியாரே.... பிரசாதமா நைவேத்தியச் சாதம் கொஞ்சம் தாரும் ஓய்!''

என்றார் பண்ணையார்.

நம்பியாருக்கு அன்னமய கோசமும் பிராணமய கோசமும் பதறிச் சிதறியது போலிருந்தது. இடுப்புச் சோமனை யாரோ உருவிவிட்டது போல.... கௌமீனம் கூட இல்லாமல் நின்று கொண்டிருப்பதைப் போல....

''பிள்ளைவாள்.... வெறும் பச்சரிசிச் சாதம்.... வெல்லம், தேங்காமுறி கூட இல்ல....''

''ஒரு நுள்ளுப் போல தாரும் வே.... சாத்தா பிரசாதம்லா....''

''வேண்டாம் பிள்ளைவாள்....''

''நீரு தாறேரா, நான் எடுத்துக்கிடவா?"

வாழை இலைத்துண்டு கொண்டு மூடியிருந்த வெண்கலச் சிற்று ருளியை கையில் தூக்கி, இலையை நீக்கிக் காட்டினார்.

பால் வடிந்தபடி சின்ன மாம்பிஞ்சு ஒன்று கிடந்தது உருளியின் நடுவில், பாதரச மணிபோல் உருண்டபடி, நந்தவனத்து மாவில் பறித்தது.

நம்பியார் வியர்த்து மறுபடியும் குளித்தார்.

''என்னவே? வெளையாட்டுக் காட்டுகேரா? கடவுளை ஏமாத்தலாமா ஓய்? நல்லாருக்கா ஓய்? நீங்களே இப்படிச் செய்தா கடவுளுக்குப் பொறுக்குமா ஓய்?

தடாலென நெஞ்சாண் கிடையாக விழுந்தார் நம்பியார். குரல் கம்மி விம்மி உடைந்து கசிந்து ஒழுகியது.

''தப்புத்தாம்யா..... தாரித்திரியம்யா..... இனி இப்படி நடக்காதுய்யா....."

நம்பியாருக்கு எழுந்திருக்க மனதில்லை. அந்த நந்தவனத்தில் தான் அவர் தலைப்பிள்ளை, பன்னிரண்டு வயதில் சாமிக்கு பிச்சிப்பூப் பறிக்கையில், வல்லரவம் தீண்டி இறந்து போனான் எட்டு ஆண்டுகள் முன்பு. இன்றிருந்தால் அவன் பங்குக்கு மூன்று கோயில்கள் பூசை வைப்பான். வயிற்றின் சுமைக்கு மாற்றுத் தோள் ஒன்று வாய்த்திருக்கும்.

விழுந்து கிடந்த மண்ணிலிருந்து அவன் திரேகத்தின் மணம் வீசுவதாகவும் தோன்றியது அவருக்கு. எழுந்து கொள்ள மனமின்றிக் கிடந்தார் நெடுநேரம்.

ஆனந்த விகடன் - தீபாவளி மலர் - 2006

***

9. கும்பமுனி முறித்த குடைக்காம்பு

பாகம் பிரித்தால் இருநூற்றுத் தொண்ணூற்று ஏழு கோடியே தொண்ணூற்றாறு லட்சத்து நாற்பத்தொன்பதாயிரத்து நானூற்று : அறுபத்தெட்டு ரூபாயும் முப்பத்து மூன்று காசும் வரும் கும்பமுனி சாகும் காலத்தில் வன்கோள் அடித்துவிட்டது. இவ்வளவு பெரிய தொகை கிடைக்க வேண்டுமானால் இந்தியாவில் ஓரிரு மார்க்கங்கலளேஉண்டு. சூப்பர் மெகா அல்டிமேட் ஸ்டாராக இருந்தாலும் இருபது ஆண்டுகள் முன்னணி கிரிக்கெட் வீரராக இருந்தாலும் சாத்தியமில்லை. ஒன்றில், சொந்த மண்ணில் கிணறு தோண்டும் கோலாரில் கிடைப்பது போலத் தாதுவாக இல்லாமல், பாளம் பாளமாகச் சுக்காம் பாறை பெயர்வதைப் போல தங்கம் இளகி வரவேண்டும். அல்லது குறைந்தது பத்து ஆண்டுகள் இந்திய அரசில் மத்திய மந்திரியாகவோ மாநில அரசுகளில் ஒன்றில் முதலமைச்சராகவோ அல்லது இந்தியாவின் வல்லரசுகளான பெருந் தொழிலதிபர்களின் வாரிசு அல்லது வாரிசற்ற உரிமையாளராகவோ இருக்க வேண்டும். அல்லது மத்திய நிதியமைச்சர்களையே நியமிக்கும் வல்லமை பெற்ற பங்குச் சந்தை திமிலங்களாக இருக்க வேண்டும் இந்த மார்க்கங்களெல்லாம் இல்லாமல் நெய்யாற்றிங்கரை அரச வம்சமான காட்டாக்கடை குஞ்ச்ந் தம்பிரான் பால ராம இளைய வர்மாவைப் பற்றியும் நீங்கள் அறிந்துகொள்ள வேண்டுமானால் கீழ்க்கண்ட நூல்களை ஆராய வேண்டும்.

1.Travancore State Manual Volume I-VI T.K. Velu Pillai

2. Progress of Travancore under H. H. Sree Mollam Tirunal. Ulloor Parameswaran Iyer.

3. A History of Kerala (1498 – 1801). K.M. Panicker.

4. The Travancore State Manual Volume I - II. V.Nagamaiah

5. Studies in Kerala History. Elamkulam Kunjam Pillai

6. Rise of Travancore - The Life and Times of Marthanda Varma. Ibrahim Kunju

7. History of Travancore from Earliest Time. Sangunny Menon.

முதலில், இந்தப் புத்தகங்கள் எங்கு கிடைக்கும் என்று உங்களுக்குத் தெரியாது. தெரிந்தாலும் உங்கள் கைக்குக் கிடைக்காது. கிடைத்தாலும் படித்துப் பார்க்க கூரு கிடையாது. எனவே இங்கு சொல்வதை நீங்கள் நம்புவதே எளிதானது. நம்பத் தயாரில்லை என்றால், உங்களது நம்பிக்கைக்குப் பாத்திரமான எழுத்தாளரின் நூலெடுத்து விரித்து மார்பில் போட்டுக்கொண்டு, கொட்டாவி விட்டுத் தூங்கப் போங்கள். கும்பமுனிக்கு ஒன்றும் நட்டமில்லை.

எல்லா வரலாற்று நூல்களிலும் இருட்டும் வவ்வால் புழுக்கை நாற்றமும் புராதனக் கோயில்களின் கற்றுண்களின் மறைவில் விளக்கேந்திப் பார்த்தால் தெரியக் கிடக்கும் தாசிப் பெண்ணின் யோனியின் இரண்டங்குல நீளக் கந்துபோல சில தகவல்களும் கிடைக்கும்.

எதையும் நிரூபிக்க இவ்வாசிரியனோ கும்பமுனியோ கடமைப்பட்டவர்கள் இல்லை. எனினும் கதையை மேற்கொண்டு செலுத்துவதற்காக இதைச் சொல்கிறேன். அனுஷா தேவி, காட்டாக் கடை ஆற்றில் குளிக்கும்போது மன்னர் கண்டு மோகம் கொண்டதனால் இளையராணி ஆனவர். அதன் பிறகுதான் ஓலனும் காளனும் எரிசேரியும் புளிசேரியும் வைத்து ஊண் கழிக்க ஆரம்பித்ததும்.

குஞ்சந் தம்பிரான் பால ராம இளைய வர்மா பக்கவாதம் வந்து கிடப்பில் ஆனபோது, இளைய ராணியின் மவுசும் குறைந்து போனது. இளைய ராணியின் கொட்டாரத்துக்கு வரத்துப் போக்கு இல்லாமல் வண்டித் தடம் ஒற்றையடித்தடம் ஆகி, அதிலும் பூச்சிமுட்கள், நீலப் பூக்கள் பூத்துப் பரந்தன.

பரமார்த்தலிங்கம் இளைய ராணியின் எடுபிடியாகப் போய்ச் சேர்ந்தபோது அவனுக்கு பதினோரே வயது. ராணிக்கோ அகவை அறுபத்து மூன்று. பாரிய உடம்பு, இடது காலில் வாதப்பனி எனும் மந்துக்கால் வியாதி. அசல் ராஜ வம்சம் எனப் பேணிய உடலும் கேசமும் சொன்ன பேச்சுக் கேட்கவில்லை. எத்தனை நாள் உடல் ஏலாமல் ராஜ முழி மட்டும் முழிப்பது?

கால் நூற்றாண்டு சேவை பரமார்த்தலிங்கத்துக்கு. இளைய ராணியின் எண்பத்தெட்டு வயது வரை அவனே அந்தரங்கக் காரிய தரிசி, ஆபத்துதவி, விதூஷகன், நளபாக பூஷணன், மருந்து அரைப்பவன், தைலம் காய்ச்சுபவன், தேய்த்து விடுபவன், தூதுவன், காரியஸ்தன்....

இளைய ராணி எல்லாம் பேச்சுக்குத் தானே தவிர, உண்மையான அந்தஸ்து வைப்பாட்டி என்பதுதான். என்றாலும் படுக்கைப் போதையில் குஞ்சநந்தம்பிரான் ஏகப்பட்ட வஸ்துக்களை பத்திரம் பதிந்து வைத்தார். குழந்தைப் பேறு இல்லாமல் பரமார்த்தலிங்கம் தான் ஸ்வீகார புத்திரனாக வளர்ந்தான். இந்நிலையில், இளையராணி சிவலோக பிராப்தி அடைய ராணியின் பேரில் இருந்த தாவர சங்கம சொத்துக்கள் அனைத்தும் பரமார்த்தலிங்கத்துக்கு எனவாயிற்று.

என்றாலும் விடுவார்களா சொந்த பந்தங்கள்? வழக்கு நடந்தது வாழ்க்கையின் எல்லை வரை.

காட்டாக்கடை பார்வத்தியக்காரர், நெடுமங்காடு தகசீல்தார், நெய்யாற்றின்கரை சப்கோர்ட், திருவனந்தபுரம் ஜில்லா கோர்ட், எர்ணாகுளம் ஹை கோர்ட்…. விதி அனுகூலம், விதி பிரதிகூலம், அப்பீல், மேல் கோர்ட்…

பரமார்த்தலிங்கம் பாரிச வாயுவும் படுத்த படுக்கையுமானார். கட்டிலைச் சுற்றி மூன்று பெண் மக்கள், ஐந்து ஆண் மக்கள். அதில் மூன்று பேருக்கு சந்தான பாக்கியம் இல்லாதபடியால் மொத்தம் இருபத்திரண்டு பேரக் குழந்தைகள். எல்லாம் காலம் கடந்த செய்திகள். விதிக்கு மேல் விதியாகி, சொத்தின் மீது உரிமை கொள்ள மேலும் வழக்கு, வாய்தா, விதி, அப்பீல், வாய்தா, விதி என்று காலம் என்பது கறங்கு போல் சுழன்றது. கும்பமுனி, பரமார்த்தலிங்கத்தின் கடைசி மகளின் ஒரே மகன். காலன் அவர் காலையும் முகர்ந்து சுற்றத் தொடங்குகையில் விதி அனுகூலமாயிற்று.

முன்பொரு நாள் கக்கூசும் போகாமல் கதை எழுதவும் தோன்றாமல், நாலு அவுன்ஸ் நாடன் சரக்குக்கும் வழியில்லாமல் கும்பமுனி அலை பாய்ந்து கொண்டிருந்தபோது பழைய பிரமாண பகர்ப்புக்களில் ஒன்றைப் பிரித்து, தமக்குத் தெரிந்தவாறு, வாசிக்க ஆரம்பித்தார்…..

‘செங்கோட்டை அம்மை நாணி குஞ்லுலட்சிமிபாய் கொட்டாரமும் கொட்டாரத்தை ஒட்டியும் வளைத்தும் உள்ளடக்கியும் கண்ட வஸ்து தென்பாதி எண்ணூற்றுத் தொளாயிரத்து மூணு ஏக்கரில் மத்தியில் தென்வடல் நீளத்திலும் கிழமேல் தச்சுக்கோல் எட்டு வீதியிலுமாக வடபக்கம் போக்குவரத்துக்கு விட்டிருக்கிற பாதை உட்பட, தென்பக்கம் ஆறு ஏக்கரும் நாற்பது சென்றும் வடபக்கம் மூன்று ஏக்கரும் முப்பத்தெட்டு சென்றும் மேற்குப் பக்கம் இரண்டு ஏக்கரும் எழுபத்தேழு சென்றும் அதை ஒட்டிய நாலே கால் ஏக்கர் விஸ்தீரணமுள்ள தாமரைக்

குளமும் அதோடு சேர்ந்த புரையிடமும் அதனுட்பட்ட 10/318 ம் 319ம் நம்பர் கட்டிடங்களும் 320ம் நம்பர் கட்டிடத்தில் மேற்கணைய கட்டிடம் இதுவும் அதைத் தொட்டு தெற்குப் பக்கம் மேற்படி சர்வே 1487/242 நம்பரில் ஆறு ஏக்கர் மனையில் தெற்கற்றம் தெற்கும் வடக்கும் கிழமேல் 180 ம் கிழக்கும்

76 is missing

சம்பாதிப்பதும் உடுதுணிக்கு மறுதுணி இல்லாதவன் பத்து ஆண்டுகளில் பதினாயிரம் கோடி சேமிப்பதும் சாத்தியம்தானே, இந்திய சனநாயக சோசலிச முற்போக்கு சமூக நீதிக் குடியரசில்?

இது கும்பமுனிக்கு சொத்து வந்த கறட்டுப் பாதை. இத்தனை பெருங்கொண்ட சொத்துக்களை யார் வாங்கிக்கொண்டு துட்டாக மாற்றித் தருவார்கள் என்று கேட்டால் - நீங்கள் நக்கீரன், குமுதம் ரிப்போர்ட்டர், ஜூனியர் விகடன் எதுவும் படிப்பதில்லை என்று தெரிகிறது.

இந்திய நாட்டின் இனமான தானைப் புரட்சி அடலேறுகளின் பினாமிகளுக்கு தலைக்கு இரண்டு மாநிலங்கள் வாங்கும் அளவுக்கு காசு இருக்கிறது. முப்பது மாநிலங்கள் தீர்ந்து போனால் சின்னஞ்சிறு தேசங்களை விலைக்குக் கேட்பார்கள். பணம் எந்த வடிவத்தில் சேமிதமாகிறது என்பது உங்களுக்கும் எனக்கும் தெரிய வாய்ப்பில்லை.

வழக்கம் போல் எழுந்து ஈறு தேய்த்து, வாய் கொப்பளித்து, முகப்பில் சற்றே சாய்வான சூரல் நாற்காலியில் காலைத் தூக்கி வைத்து அமர்ந்து, ஒரு கையில் ஆங்கிலப் பத்திரிகையும் மறுகையில் கட்டன் காப்பியுமாக உட்கார்ந்தபோது, பரமார்த்தலிங்கத்தின் வாரிசுச் சங்கிலிக் கண்ணிகளில் ஒன்று ஸ்கூட்டரை ஸ்டான்ட் போட்டு வைத்து விட்டு பூமுகத்தில் ஏறி வந்தது.

பூமுகத்துப் படிப்புரையில் அமர்ந்தவன் கேட்டான், “என்ன பாட்டா, காலம்பறையே எந்திரிச்சாச்சா?”

“ஏன்டே, இருக்கானா செத்துட்டானாண்ணு பாத்துக்கிட்டு வரச் சொன்னாளா உங்க அம்மை, கணியாகுளத்துக்காரி?”

“தொடங்கீட்டேரா? ஒரு தாக்கல் சொல் லீட்டுப் போலாம்ணு வந்தேன்."

தவசிப்பிள்ளை வந்து கதவருகில் நின்றான்.

“தாயோளி மூக்கு மணத்திரும். ஒரு குருவி படியேறி வந்திரப்பிடாது. வாய்பாக்க வந்திருவான்."

"ஆமா இப்பம் லங்கையைப் பிடிக்கது பத்தியில்லா பேசப் போறையோ! எங் காதிலே விழுந்தா ரகசியம் வெளில பறந்திரும்!"

"சரிடே, நீயும் நிண்ணு கேளு... சவம், தாய்க்கு ஒளிச்ச சூலா? நீ சொல்லுப்போ, கணியாகுளத்துக்காரிக்கு தங்கக் கொடம்!”

“நம்ம கேசு செயிச்சாச்சு தெரியுமா?”

“இதுவரைக்கும் ஒம்பத்தெட்டு முறை செயிச்சாச்சு... இப்பம் எங்கிண செயிச்சம்னு சொல்லுகே, கயானாவிலேயா?"

“சுப்ரீம் கோர்ட்லேயும் விதி ஆயாச்சு... இனி வஸ்து விக்கதுக்கு எந்த தடஸ்தமும் இல்ல பாத்துக்கிடும்."

"நீயே வாங்கிக்கியேம்லே... ஒருவாடு துட்டு சேத்து வச்சிருக்கேயில்லா... தாயோளி பீயிலே அரிசி பொறக்கப்பட்ட குடும்பம்லா?”

“நீரு வாக்கொழுப்பை வடிக்காம சொல்லுகதைத்தான் கேளுமே “ தவசிப்பிள்ளை குறுக்கே தமது மேலான கருத்தைக் கூறினார்.

“நாம 169 பேரும் போயி ஆதாரத்திலே ஒப்புப் போட்டாப் போரும்.... வாங்கதுக்கும் ஏழெட்டு பார்ட்டி ரெடியாட்டுத்தான் இருக்கு... யாருண்ணு மாத்திரம் வெளில கெம்பீரக் கூடாதுண்ணு வக்கீல் அம்மாச்சன் சொல்லுகாரு...."

“வேற யாரு வாங்க முடியும்? மந்திரிக்கு மாமியாரோ கொழுந்தியோதாலா வாங்குவா?” - தவசிப்பிள்ளை.

“'பாட்டா ஒரு நாளு பதிவுக் கச்சேரிக்கு வந்து ஆதாரத்துலே ஒப்பு வச்சுக்கிட்டு போனும். வேட்டி முண்டு எல்லாம் தொவச்சுத் தேச்சு வச்சுக்கிடும்....”

“ஏண்டே, கோமணம் கெட்டுனவன் ஒப்புப் போட்டா சொல்லாதா

டேய்? தேசத்துக்கே கோமணம் கெட்டி விட்டாச்சு...." தவசிப்பிள்ளை.

“தாயோளி, அப்பிடிப் போடு... நான் எதுக்குப் போயி அலையனும் டே? தவசிப்பிள்ளையைக் கூட்டீட்டுப்போ... இல்ல எனக்கு ஒப்ப நீயே போட்டிரு. யாருக்குத் தெரியப் போகு?

“எப்படி முடியும் பாட்டா அது? ஆளைப் போட்டு பைத்தியாரனாட்டு ஆக்குதேரா?” தவசிப்பிள்ளை.

“கை கால் வெளங்காத முக்கிய மந்திரி ஒப்ப மட்டும் போடுகாம்லா? அடப் பைத்தியாரா, செத்துப் போனவன் ஒப்பைக் கூட போடுகானுகடே!”

“அவுனுக்கு ஒப்புக்கு மேல சர்க்கார் முத்திரை குத்தினா சரியாப் போகும். ஒமக்கு என்ன முத்திரை போட?” - தவசிப்பிள்ளை.

“செறுக்கிவிள்ளே, நீயே போரும் போலிருக்கே! அது கெடக்கட்டும்.... துட்டு எப்பம் கைக்கு கிடைக்கும்டே? அச்சாரம் ஏதாம் வாங்குனேளா? எனக்கு மொதல்ல கொஞ்சம் பத்து ரூவாத் தாளா குடு என்னா? இந்த கீரைக்காரி, பால்காரி, வெத்திலைக்காரி, தூப்புக்காரி கூட பெரிய சீண்டறமாட்டு இருக்கு.?

“பேப்பர்காரன் நாலு மட்டம் கேட்டாச்சு... மூணு மாசம் பாக்கி... அதை நிறுத்தீரலாம்னு சொன்னா கேக்குதேரா? எல்லாம் பொடிப் பொடி எழுத்தாட்டு இருக்கு... படிச்சுப் படிச்சு கண்ணும்அவிஞ்சாச்சு... இனியும் என்னத்துக்குப் போட்டு படிக்கேரு... பெரிய பரீச்சை எழுதி கலக்டர் ஆகப்போறேரா?”

கும்பமுனிக்கு கடுமையான கோபம் வந்தது. பக்கத்தில் கதவருகில் சாத்தி வைத்திருந்த குடைக்கம்பை எடுத்து மடார் என அடித்தார். தவசிப் பிள்ளை Back Foot எடுத்து ஒதுங்கிக்கொண்டார். போன பிறவியில் கொழும்புக்குடையாக இருந்து, துணி கிழிந்து கம்பிகளும் உடைந்து, ரிப்பேர் செய்ய எந்த சாத்தியமும் அற்றுப் போய், குறையக் காலமாகக் கும்பமுனிக்கு ஊன்றுகோலாகப் பயன்பட்டு வந்தது. பிறகென்ன, தமிழ் எழுத்தாளன் தங்கப் பூண் போட்ட சந்தன மரக் கைத்தடியா ஊன்றி நடக்க முடியும்? பிழைப்புக்காக அவனே ஓர் கைத்தடி ஆகும் காலக் கட்டாயம்!

கும்பமுனியை விட வயதானது குடைக்கம்பு. வசமாகக் கதவு நிலையில் அடிவாங்கி இரண்டாக முறிந்து விழுந்தது.

“சவம் போட்டும். நல்ல கருங்காலி மரத்திலே, கீழே வெள்ளியிலே பூண்போட்டு, கைப்பிடிப் பக்கம் யானைத் தந்தத்திலே சிங்கமுகம் மாதிரி பொருத்தி, புதுசாட்டு ஒண்ணு வாங்குவோம்….”

கும்பமுனி கோவத்தில் இரைத்த மூச்சை சற்று இளைப் பாற்றினார்.

“எல்லா பாக்கியும் குடுத்திருவம்டே… வேணும்ணா ஆறு மாசத்துக்கு அட்வான்ஸூம் குடுப்போம்… பின்னே வேற யாரும் உண்டும்ணாலும் கூட்டிக்கிட்டு வா… வண்ணான், நாசுவன், தபால்காரன் எல்லா பாக்கியும் தீத்திரு….”

“தபால்காரனுக்கு எதுக்குத் தாத்தா பாக்கி…."

“அதா, பொறவு தாறம்னு சொல்லி ஸ்டாம்பு வாங்கி ஒட்டி போடச் சொல்லுவேன்… கதை, கட்டுரை எல்லாம் அனுப்பணும்லா? அம்பது அறுவது ரூவா பாக்கி இருக்குமாடே, கண்ணுவிள்ளை?”

"எங்கிட்டே என்னத்துக்கு கேக்கேரு… குடைக் காம்பு கூட இல்ல அடிக்கதுக்கு… அப்படி என்னத்துக்கு கடனுக்கு ஸ்டாம்பு ஒட்டி கதை அனுப்பணும்னு சொன்னா கேக்கேரா?"

“கேட்டுக்கிட்டயாடே? இதைத்தான் உடம் பிறந்தே கொல்லும் வியாதிங்கது… முப்பத்தஞ்சு வருசமாட்டு எங்கூட கெடக்கான். சவத்துக்கு அறிவு இருக்கா பாரேன்….”

“விடுங்க தாத்தா…. காலம்பற போட்டு சண்டை போட்டுக்கிட்டு…..”

“இந்தப் பழைய பித்தளை வெத்திலைச் செல்லத்தை மாத்தீட்டு எவர்சில்வர்லே வாங்கணும்…. இது ரெம்ப நெளிஞ்சு களிம்பேறிக் கெடக்கு…." -தவசிப்பிள்ளை.

“தங்கத்திலே செய்வோம் ஒய்…. வக்காளி தியாகராஜ பாகவதர்போல தங்கத் தாம்பாளத்திலே சாப்பிடலாம்லே…. தமிழ் எழுத்தாளன் எவனும் தங்கத் தட்டத்திலே சாப்பிட்டிருக்கானாலே இதுவரைக்கும்? நாம சாப்பிடலாம்…. நீரும் சாப்பிடும்….”

“சாகித்ய அகாடெமி பிரைஸ் குடுக்கச்சிலே ஒரு தங்கத் தட்டம் குடுப்பாளாமே!”

“தங்கத்தட்டம் மயிரு குடுப்பான்…. குடுத்தாலும் அதுல சாப்பிட எவனுக்காம் மனசு வருமாலே… அவனவன் பொண்டாட்டி தாலியை அடமானம் வச்சு செலவாக்கி பிரைஸ் வாங்கீருக்கான். மொதல்ல அதைத் திருப்பாண்டாமாலே…. பின்னே எழுதப்பட்ட கைக்கு ரெண்டு காப்பு நல்லாக்கிப் போடாண்டாமா?"

“செட்டிநாட்லே, ஒரு அரண்மனையிலே வாழை இலை மாரி வெள்ளியிலே ஐந்நூறு தட்டு வச்சிருக்கானாம் பாட்டா…."

“ஒரு தட்டு ரெண்டு ராத்தல் கனம் இருக்குமாடா? நமக்கும் கொஞ்சம் செய்துக்கிடுவம் என்னா? சவம் தினமும் எலைக்கு எட்டணா செலவாகு! இலைக்காரிக்கு பதினேழு ரூவா பாக்கி…."

"கஞ்சி குடிக்கதுக்கு எலை என்ன? தேங்காச் சிரட்டை இருந்தா போராதா?”

“செரட்டையிலே ஒனக்கு அம்மைக்கு ஆமக்கனுக்குக் குடு…. தள்ளையைத் திண்ண பய, பேசுகாம் பாரு…. இவனை குடைக்காம்பு வச்சு அடிக்காம என்ன செய்ய? எலே, கிட்டத்தட்ட, ஏறத்தாழ, உத்தேசமாக, சுமார் இருநூத்தித் தொண்ணத்தெட்டு கோடிலே!"

“அதுலே குடுக்க வேண்டிய கடம் ஒரு எழுநூத்துச் சொச்சம் கழிச்சுக்கிடும்."

"வேய், நீரு வ.உ.சி. க்க உயிலு படிச்சிருக்கேரா? படிச்சா கண்ணீரு வந்திரும்வே….. இப்பம் கொஞ்ச நாளாட்டு அவரையும் வெள்ளாளனா ஆக்கிப் போட்டானுவோ…. இப்பம் அப்பிடீல்லா….. காமராசரு நாடாரு, மகாத்மா காந்தி வாணியச் செட்டி, வல்லு பிராசாத் கோனாக்கமாரு, ஜெயில் சிங்கு ஆசாரி…..”

“பின்னே வேறயும் ஒரு காரியம் பாட்டா…. சொன்னா கோவப்பட மாட்டேருண்ணா சொல்லுகேன். இப்பம் வயசு காலத்திலே உமக்கு கோவம் கொஞ்சம் கூடித்தான் போச்சு….”

“சொல்லுடே…. நான் கோவப் படுவம்னுட்டு நீ எதைச் சொல்லாம

விட்டிருக்கே.... சொல்லும் சொல்லும்....”

“இந்தக் காலுக்கு ஆணிப்புத்து உள்ளவாளுக்கு ஒரு செருப்பு வருகாம்லா? பத்து முன்னூறு ரூவா வெலை உண்டுமாம்.... சீதப்பாலு சின்னையா சொன்னாரு.... அது எனக்கு ஒண்ணு வாங்கித் தரணும்பாத்துக்கிடும்.”

"எலே, ஒம் புத்தி ஏன் இப்பிடிப் போகு? காவேரி ஆறு கஞ்சியாப் போனாலும் நாய்க்கி நக்கித்தான் குடிக்கணும்னாப்பிலே. ஓய், எத்தனை கோடி வருகு தெரியுமா? கிட்டத்தட்ட இருநூற்றித் தொண்ணெத்தெட்டு கோடி.... அதுக்கு எத்தனை பூஜ்யம் உண்டும்னுட்டு இந்தியாவிலே நிதிமந்திரிக்கு மட்டும்தான் தெரியும் பாத்துக்கோ.... துட்டு கையிலே கெடச்சா நீரு என்னத்துக்கு வேய் நடக்கணும்? பொடி வேண்டப் போனாலும் கார்லே போவும், பொகையிலை வேண்டப் போனாலும் கார்லே போவும். பொறத்த உள்ள சீட்டு உமக்குத்தான், தெரிஞ்சுக்கிடும்...."

“அப்பம் முன்ன உள்ள சீட்டு?”

"அது எனக்கு வேண்டாமாடா? ஆக்கங் கெட்ட மூதிக்கு அறிவே கெடையாது...."

“ஆனை மூத்திரத்தை நம்பி கெட்டுச் சோறு அவுத்த கதையாட்டு ஆகீரப்பிடாது.....”

“ஏலே, வெறுவாக்கலங்கெட்ட மூதி, வாயை வச்சிக்கிட்டு சும்ம கெட.... வரப்பட்ட சீதேவி வழியிலே நிண்ணுரப் போறா....”

“ஆமா, அன்னா நொண்டிப் பாலத்துக்குக் கிட்டே நிக்கா, நீருபோயி கூட்டிட்டு வாரும்.... நான் போறேன். எனக்கு கஞ்சி வய்க்கப் பட்ட சோலி கெடக்கு....”

“போடே, போ.... இனி ஒனக்கு மூணு நேரமும் பாலுக் கஞ்சி தாம்வே...”

"ஆமாமா.... தொட்டுக்கிட குங்குமப்பூ தொவையலு அரைக்கலாம்.....”

“நீ சொல்லுடே பேரப் பிள்ளே.... கண்ணுவிள்ளைக்கு நாத்தம் புடிச்ச வாயை அடைக்க முடியாது.... துட்டு எப்பம் கைக்குக் கெடைக்கும்?”

“ஆக்கப் பொறுத்தவரு ஆறப் போறுக்கமாட்டேரா? எப்பிடியும் ரெண்டு மூணு மாசத்திலே கைக்குக் கெடைக்கும்."

“ரெண்டு மூணு மாசம் ஆகுமா? சரி, ஒரு காரியம் செய்யி. நம்ம பங்குலே வரப்பட்ட கடேசி நானூத்தி அறுவத்தெட்டு ரூவா முப்பத்தி மூணு பைசாவிலே, முப்பத்திமூணு பைசாவைத் தள்ளு, மிச்சம் உள்ளதை இப்பம் கையிலே இருந்தாதந்துக்கிட்டுப் போ….. கணக்கிலே பொறவு கழிச்சுக்கோ…. ஒரு ரவுண்டாட்டு இருக்கும்லா?”

“அப்பம் இதுவரை நான் தந்தது? இதானே உம்மைப் பாக்க வராத்தது எட்டிப் பாத்தா எட்டுப் பணம் தெண்டம்லா!”

“போட்டுண்டே…. உனக்கு பாட்டா வாட்டு, இன்டர்நேஷனல் லெவல்லே ஒரு எழுத்தாளன் இருக்கான் என்கப்பட்ட பெருமை சும்ம வருமாடே?”

“இன்டர்நேஷனல்ங்கப்பட்டது தோவாளைத் தாலுக்காவா பாட்டா?' - தவசிப்பிள்ளை.

“நீரு சும்மாரும்வே…. நெறை பொலியிலே வாய் வைக்காதே! நீ சொன்னாலும் சொல்லாட்டாலும் நான் இன்டர்நேஷனல் எழுத்தாளன் தாம்வே! அது இருக்கட்டும், பேரப்பிள்ளை நீ காசைக் குடுடே…. உனக்கு அம்மை, கணியாகுளத்துக்காரி பச்சைப் பிள்ளையாட்டு இருக்கச்சிலே எனக்கு உடுப்பிலே மோண்டு வச்சதுக்கு சோப்பு வேண்டக்காணாதுலே நீதாற துட்டு! சின்னப் பய நீ, என்னத்தக் கண்டே?”

பேரப்பிள்ளை ஐந்நூறு ரூபாய் எண்ணிக் கொடுத்தான்.

“சரி நான் வாறேன். எல்லாருக்கிட்டேயும் கொட்டு அடிச்சுக்கிட்டுத் திரியாதேயும்…. எல்லாம் காசு கைவசம் வரட்டும்.”

“அதுக்கு தவசிப்பிள்ளை ஒருத்தன் போராதா?”

கும்பமுனி காசை மறுபடியும் எண்ணி தவசிப்பிள்ளை கையில் நீட்டினார்.

உயிர்மை - ஜூன் 2007

***

10. தன்ராம் சிங்

சிங் எனும் துணைப்பெயர் கொண்டவரெல்லாம் பஞ்சாபி என எண்ணிக்கொள்ள வேண்டாம். தன்ராம் சிங் பஞ்சாபி அல்ல. கேட்டால் அவன் தன்னை நேப்பாளி என்பான். அவர்களுக்கும் சிங் என்று துணைப்பெயர் உண்டு. ஆனால் உண்மையில் தன்ராம் சிங் திபேத்துக்காரன். நேப்பாளி என்று சொன்னால் வடநாட்டில் சமூக அங்கீகாரம் சற்று அதிகம் என்பதை உங்களுக்குத் தெரியச் சொல்கிறேன். நேப்பாளிகளுக்கு சற்று மேலான தோற்றப் பொலிவு உண்டு. தன்மையில் கூரான மறம் உண்டு. திபேத்துக்காரர்களும் வெள்ளை நிறம்தான், கண்கள் இடுக்கமானவைதான், முகத்திலும் உடலிலும் நிரப்பாக மயிர் வளர்வதில்லைதான். எனினும் நேப்பாளிகள் வேறு, திபேத்தியர்க்ள் வேறு.

கூர்க்கா வேலை செய்யும் யாரைக் கேட்டாலும் நேப்பாளி என் பார்கள். நேப்பாளிகளுக்கு அதில் சற்று மன வருத்தம்தான். 'காஞ்சா' என்று மாருதி கார் விளம்பரத்தில் வரும் சொல்லைக்கூட அவர்கள் ஏற்றுக்கொள்வதில்லை. தன்ராம் சிங்கை துளைத்துக் கேட்டால், ‘திபேக்’ என்பான். அவனுக்கு ‘திபேத்’ என்று சொல்ல வராது. ஒரு வேளை அவனது பிராந்திய மொழிக் கொச்சையில் ‘திபேக்’ என்றால் ‘திபேத்’ தோ என்னவோ!

எனக்கு பம்பாயில்தான் கூர்க்காக்கள் முதலில் அறிமுகம். நாற்பது பேர் வேலை செய்த தொழிற்சாலையில் முதலில் மகேந்திர சிங் என்றொரு கூர்க்கா இருந்தான். அவன் அசல் நேப்பாளி. தொழிலாளர்கள் யாரும் அவனைச் சீண்ட முடியாது. தலையில் ஜெனரல் மானேக்ஷா பாணித் தொப்பியும் காலில் சாக்சும் பூட்சும் காக்கி கால்சட்டையும் முழுக்கைச் சட்டையும் இடையில் பெல்ட்டும் செருகிய சற்றே வளைந்து கூரான 'குக்ரி’யும் தோரணையுமாக இருப்பான். வேறு பெரிய கம்பனியொன்றில் அதிக சம்பளத்தில் வேலை கிடைத்துச் சென்றபின் மகேந்திர சிங் இடத்துக்கு வந்தவன் தான் தன்ராம் சிங். சீருடையும் தொப்பியும் இல்லாவிட்டால் அவனை பிறர் மதிக்க ஒரு காரணமும் இல்லை. அது என்னவோ தெரியவில்லை, மீசை வைத்கூர்க்காவை இன்னும் நான் சந்திக்கவில்லை.

பொதுவாகக் கூர்க்காக்களுக்கு சுத்தமான இந்தி வராது. இந்திக்கும் பிரதேசச் சாயலுண்டு. தென்னிந்தியர் பேசும் இந்தி, வங்காளிகள் இந்தி,

மராத்தி, குஜராத்திகள், பஞ்சாபிகள் இந்தி வேறு, பீகாரிகள், உத்தரப் பிரதேச மத்தியப் பிரதேசக்காரர்கள் இந்திகள் வெவ்வேறு. எனவே நேப்பாளிகள், திபேத்தியர்கள் இந்தியும் வெவ்வேறாகத்தானே இருக்கவியலும்?

என்றாலும் கூர்க்காக்களிடம் இந்தியின் சாயல் மிகக் குறைவாகவே இருக்கும். அதற்கு அஞ்சியோ என்னவோ குறைவான சொற்களிலேயே அளவளாவுவார்கள். எல்லோரும் ஐயா என்பதற்கு மாற்றான 'ஸாகேப்' என்பதை 'ஸாப்' என்பார்கள் எனில் கூர்க்காக்கள் 'ஷாப்' என்பார்கள். இந்தக் கதை அனுமதிக்கும் விஸ்தீரணத்தில் இன்னொரு உதாரணத்துக்கு இடமில்லை. மேலும் தகவலறிய விரும்புவோர் மலையாளத்தில் மோகன்லால் கூர்க்காவாக நடித்த சினிமாவைப் பார்க்கலாம்.

தன்ராம் சிங்கிடம் அவ்வளவு மிடுக்கு போதாது. அச்சுறுத்தும் உடல் மொழியோ, பார்வையோ கிடையாது. எனவே சில தொழிலாளர்கள் 'ஸாலா' முறை கொண்டாடினார்கள். எந்த நிர்வாகமும்நடைமுறைக் காரணங்களுக்காக அதை விரும்புவதில்லை. ஆனால் எத்தனை சொன்னாலும் தன்ராம் சிங்குக்கு வராது. கடுமையாகத் திட்டினாலும் இளித்துக்கொண்டு நிற்பான்.

அவனுக்கு ஊரில் ஒரு குடும்பம் இருந்தது. இருக்கத்தானே செய்யும்? பெண்ணும் இரண்டு பையன்களும். இரண்டாண்டுக்கு ஒரு முறை மட்டுமே ஊருக்குப் போய் வரும் அபாக்யவான் அவன்.

பதினைந்து இருபது பேர் சேர்ந்துதான் பயணமாவார்கள். பம்பாயில் இருந்து வாரணாசி வரை ஒரு ரயில் வண்டி இறங்கி வண்டி மாறி பாட்னா, பரூணி, மன்சி. மறுபடியும் வண்டி மாறி மீட்டர் கேஜில் சிலிகுரி. அங்கிருந்து மலைப்பாதையில் மங்கன் வழி சிக்கிம் எல்லை வரை கிழட்டு டப்பா பஸ். ஐம்பது கிலோமீட்டர் போக நான்கு மணி நேரமாகும். பிறகு மலைப்பாதையில் தலைச் சுமடாகவும் மட்டக் குதிரையிலும் பாரம் ஏற்றிக்கொண்டு எட்டு முதல் பத்து நாட்கள் வரை நடை. காலை எட்டு மணிக்கு மேல் பிற்பகல் நாலுமணிவரை மலைப் பயணம். மலைக் கிராமம் ஒன்றில் கிடை, ஆண்டாண்டு நடந்து பழகிய மலைத்தடம், பனிப்பொழிவு, பாறைகள், கொடுங்குளிர்..... நமக்கு பொள்ளாச்சியில் இருந்து உடுமலைப்பேட்டை போக அலுப்பாக இருக்கிறது.

இரயிலிலும் முன்பதிவெல்லாம் பழக்கமில்லை. ஜெனரல் கோச்சில் சேர்த்தாற்போல தடுப்புக்களில் இடம் பிடித்துக் கொள்வார்கள். பயணத்துக்கு சுட்டு எடுத்துப் போகும் ரொட்டி. அடுத்த

ரயிலுக்குக் காத்திருக்கும்போது தேவைக்கு மறுபடியும் ரொட்டி தட்டிக் கொள்வது. மலை ஏறும்போது இரவில் சுடும் ரொட்டிகள் பகலுக்கு.

வர்ண டிரங்குப் பெட்டிகளில் இரண்டு ஆண்டுகளாகச் சேகரித்த துணிமணிகள், வெள்ளி ஆபரணங்கள்.... இந்திய நாணயம் அவர்கள் ஊரில் செல்லுபடி ஆகாது. என்றாலும் சின்னஞ்சிறு நகரங்களில் அதிகாரபூர்வமற்ற நாணயமாற்று செய்து கொள்வார்கள். பணம் அனுப்புவது, தபால்கள் அனுப்புவது எல்லாம் ஊருக்குப் போகும் குழுக்கள் மூலமாகத்தான்.

கூர்க்காக்கள் என்போர் வாட்ச்மேன் அல்லர். நாள் பூரா, வாரம் ஏழு நாள் டூட்டி. தங்குவதற்கு தொழிற்சாலை வளாகத்தின் பின்புற மூலையில் சிறியதோர் கூண்டு உண்டு. அவர்கள் அவ்வளவாகச் சிறு விடுப்புகள் எடுப்பதில்லை. நோய்ப்பட்டிருந்தாலும் எழுந்து உட்கார்ந்திருந்தால் போதுமானது. நிர்வாகம் காருண்ய அடிப்படையில் கூர்க்காவுக்கு மாத்திரம் இரண்டு ஆண்டுக்கு ஒரு முறை எல்லா விடுப்புகளையும் சேர்த்து மொத்தமாக வழங்கும். ஊருக்குப் போகும்போது தற்காலிக மாற்று ஏற்பாடு செய்துவிட்டுப் போவான். போகவர பாதி லீவு போய்விடும். ஈராண்டுக்கு ஒருமுறை ஒருமாதம் தாம்பத்யம். தன்ராம் சிங் விடுப்பில் போனதையே நாம் மறந்திருக்கும்போது ஒருநாள் காலையில் சிரித்தபடி சல்யூட் அடிப்பான்.

சேஞ்ச் ஆஃப் கார்ட் எப்போது நடந்தது என்றே நமக்குத் தெரியாது.

அலுவலக நேரம் முடிந்து, அதிகாரிகளும் சிப்பந்திகளும் போன பிறகு அவனது இன்னொரு உலகு மெல்லக் கண் அவிழ்த்துப் பார்க்கும்.

தொழிற்சாலை மேலாளர் காலையில் அரை நாள் மட்டும் வந்து விட்டுப் போவார். ஒரேயொரு ஷிப்ட்தான். மூன்று சூப்பர்வைசர்கள் இருந்தனர். மற்றபடி அலுவலகம், ஸ்டோர்ஸ் என்பன எனது கட்டுப்பாட்டில் இருந்தன. முதலாளிக்கு தமிழனைப் போல் மாய்ந்து மாய்ந்து வேலை செய்பவன் கிடைக்கமாட்டான் என்பதால் சற்று சுதந்திரமும் இருந்தது. ஒன்பதே கால் முதல் ஐந்தே முக்கால் வரை வேலை செய்து, இரண்டு மணி நேரம் லோகல் ரயிலிலும் நடந்தும் வீடு சேர்ந்து, கிடைத்ததைத்

தின்று படுத்து, எழுந்து மறுநாள் காலையில் ஏழே காலுக்கு வண்டி பிடிக்கும் துருப்பிடிக்காத இயந்திரம்.

தொழிலாளர்கள் ஐந்தரைக்கே கை கழுவி, உடைமாற்றி, பெல்அடிக்கக் காத்திருப்பார்கள். ஸ்டோர் சாவி, அலுவலகச் சாவி, மெயின் டோர் சாவி எல்லாம் என் கைவசம். எனவே சாவதானமாகக் கடைசி ஆளாகக் கிளம்புவேன். சிலசமயம் எதற்கடா வீட்டுக்குப் போகிறோம்என்றிருக்கும். ரயிலில் சற்று தள்ளல் குறைட்டும் என்று சில நாட்களில் தாமதமாகக் கிளம்புவேன். சில சமயம் தொழிற்சாலையிலேயே தங்கி விடுவதும் உண்டு.

அலுவலக மேசை இழுப்பறை ஒன்றில் துவர்த்தும் சாரமும் போர்வையும் ஒளிவாக இருக்கும். காலையில் பல் தேய்த்துக் குளித்தால் போதும்.

வளைவினுள் நாலைந்து தொழிற்கூடங்கள். எல்லோருக்கும் பொதுவாக கண்ணூர் பக்கம் கக்காடு ஊரைச் சேர்ந்த தாவூத் மூசாவின் கேன்டீன். சாய் தவிர அவனது தயாரிப்புகள் டால்-பாவ், உசல் -பாவ் , டால்-சாவல், உசல்-சாவல், ஆம் லேட், பட்டாட்டா வடா - பாவ், ரொட்டி-சப்ஜி, பாவ் என்றால் பன் போன்ற நாட்டு பிரட், சாவல் எனில் சோறு, டால் எனில் பருப்பு, சப்ஜி எனில் காய்கறிக் கூட்டு. மாதக் கணக்கு உண்டு எனக்கு. இரவுக்கு சொல்லிவைத்தால் சப்ஜி செய்து ரொட்டி சுட்டுத் தருவான்.

“ஷாப், கர் நை ஜாத்தா?’ என்பான் தன்ராம் சிங்.

மாலை அவனது வேலை ஆரம்பமாகி இருக்கும். துவைத்துக் குளித்துவிட்டு ரொட்டி போட ஆரம்பிப்பான். ஆறரை மணிக்கு மேல் அக்கம்பக்கம் வேலை பார்க்கும் அவனது கூட்டாளிகள் சிலர் எட்டிப் பார்ப்பார்கள். கசாமுசா என்று உரையாடல் கேட்கும். இரண்டு பேர் அவனுடனேயே தங்குபவர்கள்.

அலுமினிய டப்பாவில் எப்போதும் ரொட்டி மாவு இருக்கும். பச்சரிசி இருக்கும். மஜ்ஜித் பந்தரில் வாங்கிய பருப்பு, கொண்டைக் கடலை, உப்பு-புளி சமாச்சாரங்கள், கடுகு எண்ணெய் மண்ணெண்ணெய் பம்பு ஸ்டவ்.

இரவுக்கும் காலைக்குமாக வேளைக்குதலைக்கு நான்கு ரொட்டி, கடைசியில் காதடைக்காமல் இருக்க கொஞ்சம் போலச் சோறு. வட்டமானதோர் அலுமினியப் பாத்திரத்தில் பருப்பு வேகப் போட்டு

உருளைக்கிழங்கு, தக்காளி, பச்சை மிளகாய், அரிந்த வெங்காயம் போட்டு தாளித்தால் அது டால், அதைக் கூட்டு எனலாம், குழம்பு எனலாம். அருகிலேயே கர்னாக் பந்தர் பைகுலாவில் காய்கறிச் சந்தையும் இருந்தது. சாயங்காலம் போனால் சந்தை முகப்பில் கூறு வைத்திருப்பார்கள். வடிவற்ற பச்சைத் தோல் பாய்ந்த உருளைக் கிழங்கு, நைந்த தக்காளி, பெரிய வெங்காயம், கத்தரிக்காய், என மலிவாக. அவர்களுக்கு காலை, இரவு என இருவேளை உணவுதான். மதியம் எதுவும் உண்பதில்லை.

இருக்கை குஷனை தலைக்கு வைத்துக்கொண்டு, பென்னம் பெரிய மேலாளர் மேசை மீது நெட்ட நெடுக்க நீட்டிப் படுக்கலாம். விளக்கு இருந்தது, புத்தகம் இருந்தது, பேன் இருந்தது, வேண்டுமானால் ஏ.சி.யும் இருந்தது. வாழ்க்கை உண்மையில் சுவாரசியமாகத் தான் இருந்தது.

“தோ ரொட்டி காவ் ஷாப் " என்பான் தன் ராம்சிங் சில சமயம். சுடச்சுட இரண்டு தின்றிருக்கிறேன். பூண்டு சதைத்துப் போட்டுக் கடுகெண்ணெயில் தாளித்த டால் மணமாக இருக்கும். சிலசமயம் மூசாக்கடை சப்ஜியும் சப்பாத்தியும். இல்லையேல் டால்-சாவல்.

காடாத் துணியில் தைக்கப்பட்ட முழங்காலுக்கு வரும் லேங்கா, அரைக்கால் கை வைத்த பனியனும் அல்லாத சட்டையும் அல்லாத தோர் உடுப்புடன் தன்ராம் சிங் வித்தியாசமாகத் தெரிவான். சாப்பிட்டபின் சற்று நேரம் கதை பேசிக்கொண்டிருப்பார்கள்.

ஞாயிறுகளில் ஆட்டுக்கறி சமைப்பார்கள். ஆட்டுக்கறி என்பது தலைக்கறி. அன்று இரண்டு ரூபாய்க்கு செம்மறி ஆட்டுத் தலையொன்று கிடைத்தது. தலை வாங்கக் காசில்லை என்றால் ஆட்டுக் காதுகள் வாங்கிக்கொண்டு வருவான் மலிவாக, தீயில் ரோமத்தைச் சுட்டுப் பொசுக்கி, கழுவி, துண்டுதுண்டாக நறுக்கிச் சமைப்பார்கள். காசிருந்தால் குடல். அது விருந்து.

எப்போதாவது தன்ராம் சிங்குக்கு கடிதம் வரும். முகவரி எனது கையெழுத்தில் ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருக்கும். புதிய கடித உறைகள் வாங்கி மொத்தமாக பம்பாய் முகவரி எழுதி வாங்கி, இரண்டு ஆண்டுகளுக்கு வரும் விதத்தில், ஊருக்குப் போகும்போது கொடுத்துவிட்டு வருவான். யாரிடம் கொடுத்து எந்த ஊரில், இந்திய எல்லைக்குள் கொண்டுபோய் போஸ்ட் செய்வார்கள் என்று தெரியாது. உள்ளே எழுதப்பட்டிருக்கும் கிறுக்கலான வரி வடிவங்கள் நேப்பாளியா,

திபேத்திய மொழியா, சீன மொழியா வேறேதும் மலைப் பிராந்திய மொழியா என்பதும் தெரியாது.

பதினைந்து இருபது நாட்களுக்கு ஒன்று என வரும் கடிதங்களில் சில மிக வருத்தத்தை ஏற்படுத்துவதாக இருக்கும். தந்தியும் தொலை பேசியும் உதவாத மலைப்பிரதேசங்கள். தாய் தகப்பன் இறந்து போனாலும் பெண்டுபிள்ளைகள் இறந்து போனாலும் உடன் பிறப்புகள் இறந்து போனாலும் தபால் உறைதான். பத்துப் பதினைந்து நாட்கள் சென்று கிடைக்கும் தபால் பார்த்து நேரில் செல்ல வேண்டுமானால் மேலும் பத்துப் பன்னிரண்டு நாட்கள். என்றாலும் உயிரின் பிரிவல்லவா?

மாலையில் கூடும் கூட்டாளிகள் மூலம் செய்தி போகும் ஒவ்வொரு உறவுக்கார கூர்க்காவுக்கும். ஞாயிற்றுக் கிழமை காலை ஒன்பது மணிக்கு சௌபாத்தி கடற்கரையில் கூடுவார்கள். மர நிழல் பார்த்து, வட்டமாய் உட்கார்ந்து, கண்கள் கலங்க நினைவுகளைக் கூறுவைத்து, சடங்குகள் செய்து, தீ வளர்த்து, அதில் தகவல் வந்தகடிதத்தை உறையுடன் சேர்த்து எரித்து, பின்பு நெருப்பை ஆற்றி, சாம்பலைக் கொண்டுபோய் அரபிக் கடலில் கரைத்து, மொட்டை அடித்து, சமுத்திரத்தில் குளித்து, அவரவர் நினைவு சுமந்து பிரிந்து போவார்கள்.

கடிதம் வந்த மறு ஞாயிறுக்குள் தன்ராம் சிங் மொட்டை போட்டிருந்தால் தெரிந்து கொள்ளலாம். எப்படியும் அவனுக்கு ஆண்டுக்கு மூன்று, நான்கு மொட்டைக்கு பிழை வராது.

சக தொழிலாளர்கள் எப்போதும் தன்ராம் சிங்கை கலாட்டா செய்வார்கள், மொட்டை போட்டிருந்தால், சாவு பரிகாசத்திற்குரியதா? எளியதோர் சிரிப்பில் அவன் துக்கம் கலந்திருக்கும், உறைந்தும் இருக்கும்.

ஒரு பீடி அல்லது சாசரில் ஊற்றிக்கொடுத்த பாதி சாய் பெரிய சந்தோசம் அவனுக்கு.

அதிகம் வேலை இருந்தாலோ, வேறு சொந்த வேலைகள் இல்லா விட்டாலோ, சில ஞாயிறுகளில் தொழிற்சாலைக்குப் போவேன். மசகான் டாக் சந்து ஒன்றில், விரலில் தொட்டுக் காட்டினால் தீப்பற்றிக் கொள்ளும் மொசம்பி அல்லது சந்த்ரி எனும் வாற்றுச் சாராயம்-Indian Made Indian Liquor - I M I L கிடைக்கும். துணைக்கு தன்ராம் சிங். தலைக்கொரு நவ்டங். தொட்டுக் கொள்ள அச்சார்.

சேர் எனும் அளவில் கால்பங்கு பாவ் சேர். அதனினும் பாதி நவ்டங். சின்னப் போதைக்கு அது போதும். அருகிலேயே கோமந்தக் உணவுச் சாலை ஒன்றிருந்தது. புழுங்கலரிசிச் சோறும் பச்சைத் தேங்காய்ப் பால் ஊற்றிய ஜிங்கா என்ற குஞ்சு இறால் மீன் குழம்பும். தன்ராம் சிங் அதிகமாக இரண்டு பாவ் வாங்கிக் கொள்வான். அரிந்த வெங்காயமும் பச்சை மிளகாயும் எலுமிச்சைத் துண்டமும் இல்லாத உணவு மேசை இல்லை.

தன்ராம் சிங் மாத்திரமல்ல, எந்த கூர்க்காவையும் கடுகடுத்த முகத்துடன் நான் கண்டதில்லை. முகம் ஏறிட்டுப் பார்த்த உடன் மலரும் சிரிப்பு. ‘உன் ஆதரவில் என் வாழ்க்கை’ என்பதுபோல்.

தொழிற்சாலையில் இருந்து நடந்துபோகும் தூரத்தில் சினிமாத் தியேட்டர் ஒன்றிருந்தது. பெயர் மறந்துவிட்டது. இரண்டே ரூபாய் டிக்கட் வகுப்பு பேதமில்லாமல் கிடைத்த இடத்தில் உட்காரலாம். காற்றாடி சுழலாது, மூட்டைப்பூச்சி இரத்தம் உறிஞ்சும், வெற்றிலைப் பாக்கு குழம்பு எங்கு வேண்டுமானாலும் உமிழப்பட்டிருக்கும், புழுங்கிய வாடை அடிக்கும். வழக்கமாகத் தொழிற்சாலையில் சனிக் கிழமைகளில் அரை நாள் வேலை. அங்குதான் நான் ‘ப்யாஸா’ பார்த்தேன். தன்ராம் சிங்குக்கு சத்ருக்கன் சின்ஹா படங்கள் பிடிக்கும். சினிமா பார்க்க சிலசமயம் வாரக் கடைசியில் இரண்டு ரூபாய் கடன்கேட்பான். நானே இரு நூற்றுப் பத்து ரூபாய் சம்பளக்காரன். வசதியான சூப்பர்வைசர் சிவராம் பட்டேக்கரிடம் பத்து ரூபாய் கடன் வாங்குபவன்.

ஏழாம் தேதி சம்பளம் வாங்கிய கையோடு, சில்லறை மாற்றி வைத்துக்கொண்டு நிறையப் பேருக்கு தன்ராம் சிங் இரண்டிரண்டு ரூபாயாகக் கடன் தீர்த்துக்கொண்டிருப்பான். ஒருமுறை விடு முறையில் ஊர் சென்று திரும்பியபோது, வளைந்து கூரான, கைப்பிடியில் கைத்திறன் கொண்ட 'குக்ரி’ ஒன்று கொணர்ந்து தந்தான். சிலிகுரி சந்தையில் வாங்கியதாகச் சொன்னான். பிறகது திருட்டுப் போய்விட்டது.

அவனது ஊருக்குப் பக்கத்தில் பாயும் ஆறொன்று உண்டென்றும் அதன் பெயர் இன்னதென்றும் பலமுறை சொல்லி இருக்கிறான். எத்தனை யோசித்தும் எனக்கதன் பெயர் நினைவுக்கு வரவில்லை. ஆறும் குளங்களும் நெல் - கோதுமை வயல்களும் அவன் கனவுகளில் வந்து போகுமாக இருக்கும். பெடையின் நினைவில் இந்திரியம் சேறாகச் சிந்துமாக இருக்கும்.

பதினெட்டு ஆண்டுகள் முன்பு, எனது பம்பாய் வாழ்க்கையின் கடைசி ஆண்டில், கோடை விடுமுறைக்கு ஊருக்குச் சென்று திரும்பிய தன்ராம்சிங் கூடவே கூர்க்கா உடையணிந்த பன்னிரண்டு வயதுச் சிறுவன் ஒருவனைக் கூட்டி வந்தான்.

பால் குடி மறந்தானோ, பள்ளிக்குப் போனானோ தெரியவில்லை. மகனாக இருக்கும் என்றெண்ணினேன். காக்கிச் சீருடையும் தொப்பியும் பூட்சும் பெல்ட்டும் கத்தியுமாக இருந்தான். திபேத்திய சிற்றரசொன்றுக்கு இளவரசனாக இருக்கும் எல்லா அங்க லட்சணங்களும் இருந்தன. முகம் வசீகரமாக இருந்தது.

“அமாரா ஜவாய் ஷாப்” என்றான் தன்ராம் சிங்

மகளுக்கு எப்போது திருமணம் செய்தாய் என்றேன்.

அந்த விடுமுறையில் போயிருந்தபோது என்றான்.

அதே ஆண்டில் நான் கோவைக்குக் குடி பெயர்ந்தேன். அதன் பிறகு அலுவல் நிமித்தம் பம்பாய் சென்றாலும் எனக்கு அந்த தொழிற்சாலைக்குப் போக வாய்க்கவில்லை. தொழிற்சாலையும் மூடப்பட்டு அந்த இடம் கம்பனி குடோன் ஆயிற்று. என்றாலும் தன்ராம் சிங் தான் கூர்க்காவாக இருப்பான்.

இருப்பானோ இல்லை என்னைப் போல ஒய்வு பெற்று விட்டானோ? ஒய்வு பெற்றாலும் ஊருக்குத் திரும்ப இயலாது. என்னால் திரும்ப முடிந்ததா?

எங்கேனும் செம்பூர், கோவன்டி, மான்கூர்டு, சயான், மாதுங்கா, கோலிவாடா, வடாலா, சிவ்ரி தெருக்களில் இரவில் மூங்கில் கழிதட்டிக்கொண்டு நீண்ட விசில் ஊதிக்கொண்டு கண்விழித்து நடப்பானாக இருக்கும் கூலியாக மாதம் ஐந்தோ பத்தோ வீட்டுக்கு என்றுயாசித்துப் பெறுவானாக இருக்கும்.

எனக்கு இன்று தன்ராம்சிங்கைப் பார்க்க வேண்டும் என்று தோன்றுகிறது, பார்ப்பது சாத்தியமில்லை எனத் தெரிந்தும்.

உலகம் தாராளமயமாகி விட்டது. தேசங்களின் எல்லைகள் இற்று வருகின்றன. பாரதத்தின் வளர்ச்சி வீதம் எட்டு சதமானம் என்கிறார்கள்.

ஒருவேளை , புலம் பெயர்ந்து, தன்ராம் சிங் தென்னாட்டுத் தெருக்களில் இரவுகளில் கோல் தட்டி, விசில் ஊதித் திரிந்து கொண்டிருக்கக்கூடும். மாதத்தின் முதல் வாரத்தில் உங்கள் வீட்டின் முன் வந்து சிரித்தபடி நின்றால் அருள்கூர்ந்து அவனுக்கு ஐந்து ரூபாய் தாருங்கள் கனவான்களே!

அன்ந்தவிகடன்-ஆகஸ்ட் 2007

###

சூடிய பூ சூடற்க!

அது அரசு அலுவலகங்களின் பண்டிகை. எனவே எல்லோருக்கும் விடுமுறை. பொதுமக்களுக்கும் அரசு பண்டிகைகளுக்கும் ஒரு தொடர்புமில்லை. என்றாலும் விடுமுறை என்பதை விட முடியுமா? தினமும் விடுமுறையாக இருந்தால் கூட மகிழ்ச்சிதான். ஒரேயொரு சிக்கல், சில பண்டிகைகளுக்கு முன்னும் பின்னும் மூன்று நாட்கள் மதுக்கடைகளை மூடி விடுகிறார்கள். இது நினைவிலும் இருப்பதில்லை. நினைக்கிறபோது குடி கிடைக்கவில்லை எனில் அது எவ்வளவு ஏமாற்றமானது? ஆண்டு பூரா விடுமுறை எனில் குடிப் பழக்கம் தன்னைப்போல் ஒழிந்து போகும். ஆனால் அரசாங்கத்துக்கு ஆயிரக்கணக்கான கோடிகள் வருமான இழப்பல்லவா? இப்போதெல்லாம் நண்பர்கள் அரசு விடுமுறை வரும் நாட்களில் முன்கூறாக SMS அனுப்புகிறார்கள்.

பூமிநாதன் அரசு அலுவலகம் ஒன்றில் கடைநிலை ஊழியன். எந்த அலுவலகம் என்பது அவ்வளவு முக்கியமில்லை. அரசு விடுமுறை நாட்களில் பூமிநாதனுக்கு வேலையும் உண்டு, வருமானமும் உண்டு. முதலில் அட்டைப் பெட்டிக்குள் தலைமறைவாக இருக்கும் காந்தி படத்தை வெளியே எடுத்து துடைத்து வைக்க வேண்டும். பின்பு மடித்து வைத்திருக்கும் தேசியக் கொடியை உதறி பாச்்ா பல்லி இருந்தால் ஒட்டவேண்டும். பிறகு கொடி கட்டும் வெள்ளை முறுக்குக் கயிறு, மலர்கள் வைக்கும் நீள் சதுரத் தட்டம், மிட்டாய் வைக்கும் தட்டம் எல்லாவற்றையும் சுத்தப்படுத்தி வைக்க வேண்டும். இதெல்லாம் முந்திய நாள் வேலைகள்.

கடையில் வாங்க வேண்டியவை, காந்தி படத்துக்கு சின்னதோர் மாலை, தேசியக் கொடியில் வைத்துக் கட்ட உதிரிப் பூக்கள், சிறப்பு

விருந்தினருக்கு பெரியதோர் ரோஜாமாலை, பூச்செண்டு, சுதந்திரம் கிடைத்த நாள் முதலாய் சிறுவர்க்கு வழங்க என ஆரஞ்சு மிட்டாய்….

அரசு அலுவலகங்களுக்கு எந்தச் சிறுவன் போவான் என்று கேட்காதீர்கள்.

வழக்கம் போல செலவுக்கு முன்பணம் வாங்கிக்கொள்ளச் சொன்னார் அதிகாரி. நாளைதான் கொண்டாட்டம் என்றாலும்முன்தினம் மாலையே முடிந்த வேலைகளைச் செய்து வைத்துக் கொள்வார் பூமிநாதன். அதிகாலையில்தான் மலர் மாலைகளும் பூச்செண்டும் உதிரிகளும் வாங்க இயலும், பூக்கடைக்காரர்களுக்கும் தெரியும். அவர்கள் முன்அனுபவம் இல்லாமலா மலர் வளையம் கூட தயாராகச் செய்து வைத்துக் கொள்கிறார்கள்!

கொண்டாட்ட தினத்தன்று வெள்ளச் சட்டையும் வெள்ளைக் கால்சராயுமாக துடிப்பான சீருடையில் இருக்கவேண்டும் பூமிநாதன். மற்ற நாட்களில் முன்பின்னாக இருந்தாலும் பாதகம் இல்லை. விருந்தினர்களுக்காக விலை உயர்ந்த இனிப்பு, முந்திரிப் பருப்பு வறுத்தது, பாகம் வந்த செவ்வாழைப் பழங்கள், அமெரிக்க குளிர்பானங்கள் ஏற்பாடு செய்ய வேண்டும். இதற்குமுன் இருந்த அதிகாரி மிச்சம் மீதியை பூமிநாதனைக் கொண்டுபோகச் சொல்வார். இப்போதிருக்கும் அதிகாரி, தன் வீட்டில் கொடுக்கச் சொல்கிறார்.

உத்தேசமாக மலர்கள், மாலைகள், செண்டு, மிட்டாய், இனிப்பு, முந்திரிப் பருப்பு, பழங்கள், பானங்கள் என ஆயிரத்து ஐந்நூறு ரூபாய் ஆகும். தனக்கென நூறு இருநூறு ஒதுக்கிக்கொள்வார் பூமிநாதன். இப்போதைய அதிகாரிகணக்கு எழுதும்போது ஐந்நூறு ரூபாய் சேர்த்து எழுதச் சொல்கிறார். வாங்கப்படாத ஆப்பிள், ஆரஞ்சு, திராட்சை என்றெல்லாம். அரண்மனைக்கு ஆயிரம் கடா சென்றாலும் குடியான்தான் தெண்டமிறுக்க வேண்டும்.

அலுவலகத்தில் யாவர்க்கும் தெரியும்தான். என்றாலும் ஒருவரை மற்றவர் காட்டிக் கொடுப்பதில்லை என இரகசியக் காப்பு வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள். அமைச்சர்கள் இரகசியக் காப்பு வாக்குறுதி எடுக்கும் அர்த்தம் இதுதானோ என்னவோ! எல்லோரும் உபதொழிலாக மீன் பிடித்தார்கள். எனவே தூண்டிலும் கையுமாக அலைய வேண்டியதிருந்தது. அவரவர் தூண்டில் மீன் அவரவர்க்கு. பெரிய மீன்கள் சிக்கும்போது பெருந்துண்டு அதிகாரிக்கும் சின்னக் கண்டம்

பிடித்தவருக்கும் என்பதோர் உடன்பாடு. நடு முள், தலை எனக் கிடைக்கும் பூமிநாதனுக்கு. பெருந்துண்டு முள் நீக்கி வறுத்து டப்பாக்களில் அடைக்கப்பட்டு மேலேறிச் செல்லும் என்றார்கள். அதிகாரி, மேலதிகாரி, உயரதிகாரி, மேலுயர் அதிகாரி, அமைச்சர், உயரமைச்சர் எல்லோரும் மீன்தின்னும் சாகபட்சிணிகள்தான் என்றார்கள்.

இன்றெல்லாம் மீனும் நாறுவதில்லை, கருவாடும் நாறுவதில்லை

ஆரஞ்சு மிட்டாய்க்கும் விலை கூடிவிட்டது. பூமிநாதன் வேலைக்கு சேர்ந்த புதிதில் கிலோ மூன்று ரூபாய் விற்றது. இன்று நாற்பத்தெட்டு ரூபாய் ஆகிவிட்டது. முப்பது ஆண்டுகளில் பதினாறு மடங்கு. அந்தக் கணக்கில் சம்பளம் பெருகவில்லைதான். என்றாலும்மீன்பிடித்தல் எனும் உபதொழில் கப்பும் கவருமாக வளர்ந்திருக்கிறது. வீடு திரும்பும்போது, அன்றைய மீன் பாடுபோல, அவரவர் பையில் பொட்டலங்கள் இருக்கும். பெரும்பாலோர் குடிச்சாலைக்குப் போய் சிரமபரிகாரம் செய்த பின்பே கூடு அடைகிறார்கள். பகல் பூராவும் குறுக்கு வளைந்து காகிதங்களைப் பொறுக்கிப் பொறுக்கியே இடுப்பு கழன்று விடுகிறது. கால் குப்பி IMFL ஒரு பெப்ஸி அல்லது லிம்கா, வேகவைத்த இரண்டு கோழி முட்டைகள் போனால்தான் சென்ற உயிர் மீள்கிறது. தினமும் இங்கிருந்து அங்கும் அங்கிருந்து இங்குமாக எத்தனை காகிதங்களைத்தான் நகர்த்துவது?

எனவேதான் உயிர் பேணும் குடியை அங்கீகரித்து, குடிக்கு நன்றி தெரிவித்து எல்லா மக்களும் குடிமக்கள் என்று கருதி அரசு ஆண்டுக்கு ஒருநாள் குடியரசு தினமும் கொண்டாட விடுமுறை அளித்திருக்கிறது என்றார்கள்.

பத்து மணிக்கு, தனது வெளிநாட்டுக் காரில், தாமதிக்காமல், சிறப்பு விருந்தினர், ஆட்சி மன்ற உறுப்பினர் வருவார். அதைக் கார் என்பதா, வேன் என்பதா? குளிர் பாய்ச்சும் வசதி, சின்னதாய் டிவி, தொலைபேசி, சொகுசு இருக்கைகளின் மீது போர்த்தப்பட்ட புல் அழுக்குப்படாத பிச்சி வெள்ளை நிற, பூப் போன்ற உறைகள்…. எல்லோருக்கும் எல்லாமும் வாய்த்து விடுகிறதா என்ன?

கூடவே வண்டியில் நான்கு பேர் வருவார்கள். நேராக தமிழ் சினிமாவின் சண்டைக் காட்சியில் இருந்து இறங்கி வந்தவர் போல. அவ்வளவு பெரிய தொப்பைகள் இந்தியருக்கு மட்டுமே வாய்க்கிறது.

தொடர்ந்து மேலும் சில கார்கள் வரும். அலுவலகக் கட்டிடம் பூரிப்பில் சற்று அளவாகக் குலுங்கிக் கொள்ளும். அதிகமாகக் குலுங்கினால் விரிசல் விட்டு நிற்கும் கட்டிடம் விழுந்துவிட நேரும். பத்து ஆண்டுகள் முன்பு ஒரு குடியரசு தினத்தில்தான் பொதுப் பணித்துறை அமைச்சர் திறந்து வைத்தார். அதில் அவர் பல கூடைகள் மீன் பிடித்திருப்பார் போலும். அன்றைய கொண்டாட்டச் செலவில் தான் பூமிநாதன் தனது பங்கில் பழைய சைக்கிளை ஐம்பத்தைந்து ரூபாய்க்கு விற்றுவிட்டு புது சைக்கிள் வாங்கினார்.

பத்தரை மணிக்குள் எல்லாம் ஒதுங்கிவிடும். அலுவலர்களும் அதிகாரியும் விருந்தினரும் போனபின்பு அலுவலகத்தைப் பூட்டி விடலாம். மாலையில் சூரிய அஸ்தமனத்துக்கு முன்பு வந்து காலையில் ஏற்றிய கொடியை இறக்க வேண்டும். ஆட்சி மன்ற உறுப்பினர் ஏற்றிய கொடியை கடைநிலை ஊழியர் இறக்கி விடலாம். கொடி ஏற்றத்துக்குத்தான் விழா; கொடி இறக்கத்துக்கு இல்லை. குடியரசுத் தலைவர் ஏற்றும் கொடியை யார் இறக்குவார்களோ தெரியவில்லை! அங்கும் கொடியேற்றும்போது ஆரஞ்சு மிட்டாய் தானோ என்னவோ!

அலுவலக நாட்கள் எனில் மற்றவர்கள் பத்து மணி முதல் பதினொன்றே கால்வரை வந்து சேர்வார்கள். மாலை மூன்றரைக்கு மேல் எப்போது வேண்டுமானாலும் போகலாம். இடையே வெளியேபோய் வருவது - வங்கிக்கு, மருத்துவரைப் பார்க்க, மால்களில் காய் கனி வாங்க, தேநீர் அருந்த, சிற்றுண்டி தின்ன, சீட்டுப் பணம் கட்ட, ஆயுள் காப்பீட்டுக் கழகத் தவணை கட்ட, தைக்கக் கொடுத்த துணிகள் வாங்க, பக்கத்து அலுவலக நண்பரிடம் உரையாட, சொந்த வீட்டுக் கொல்லையில் புதர் வெட்டும் செலவுக்கு கடன் கேட்டு விண்ணப்பம் கொடுத்தது அனுமதிக்கப்பட்டதா என்று மேல் விவரம் கேட்க, தான் சொந்தக் காரணங்களுக்காகப் பின்தொடரும் அரசியல் கட்சிக்கு வாக்கு சேகரிக்க…. எனினும் அலுவலக இயந்திரத்தின் பற்சக்கரங்கள் பேரிரைச்சலோடு சுழன்று கொண்டிருந்தன. பற்சக்கரங்களுக்கு எண்ணெயும் கிரீசும் வாங்குகிற பணம் பற்றாது என நாடாளு மன்றத்தில் தொடர்ந்து சட்டத்திருத்த மசோதாக்கள் வந்தவாறிருந்தன.

பூமிநாதனுக்கு ஒன்பதரை மணிக்கே அலுவலகம் திறக்க வேண்டும். தினசரி வேலைகளின் பட்டியல் இருக்கட்டும்; அதிகாரி புறப்பட்டுப் போன பின்னும் காகிதங்களைக் கட்டிக்கொண்டு இரவு ஏழரை மணி வரை போராடும் ஊழியர் ஒருத்தர் இரண்டு பேர் எல்லா

அலுவலகங்களிலும் இருந்தார்கள். உண்மையில் அரசு இயந்திரமே அவர்களால்தான் இயங்குகிறதோ என்று தோன்றும். அவர் வேலை முடிந்து கிளம்பமாட்டார்; கிளப்ப வேண்டும். அதன் பிறகே அலுவலகம் பூட்ட இயலும்.

அரசு விழாக் கொண்டாட்டத்தன்று கொடியேற்றல் காலை பத்து மணிக்குத்தான் என்றாலும் சில ஒழுங்குகள் செய்வதற்கு ஏழு மணிக்கே பூமிநாதன் புறப்பட்டு விட்டார். ஆ-3 இளநிலை எழுத்தர் எட்டு மணிக்குள் வருவதாகச் சொல்லி இருந்தார். அதிகாரி ஒன்பதே முக்காலுக்கு வருவதாக இருந்தார்.

சிங்கநல்லூர் கரும்புக்கடை பூக்கடையில் மாலைகளுக்கும் பூச்செண்டுக்கும் உதிரிகளுக்கும் சொல்லி இருந்தார். மெதுவாக சைக்கிளை மிதித்துக்கொண்டு, காமராஜர் சாலையில் இருந்து திருச்சி சாலைக்குத் திரும்ப யத்தணிக்கையில் கரகரத்த குரலில், ஆனால் சுருதி பிசகாமல், பாட்டுச் சத்தம் உரக்கக் கேட்டது.

தியாகி என்.ஜி.ராமசாமி சிலை பீடத்தின் ஓரம் எழுபது வயதுக்கும் மேற்பட்ட பெரியவர் ஒருவர் நின்றிருந்தார். கதர் வேட்டி, கதர் சட்டை, காந்திக் குல்லாய், தோளில் மூவர்ணத் துண்டு. அவர் காலடியில், சிலையின் பீடத்தில் சாய்த்து பிளாஸ்டிக் ஒயர் கூடை ஒன்றிருந்தது. சாப்பாட்டுத் தூக்குப் போசி, தண்ணீர் போத்தல், அட்டை போட்ட கனமான புத்தகம் தெரிந்தன. ஏதாவது கடையில் வாயிலோன் வேலை செய்பவராகத் தெரிந்தார்.

தியாகி சிலை, காமரசர் சாலையும் திருச்சி சாலையும் சந்திக்கும் முனையில், காவல் நிலையத்துக்கு எதிரில் நின்றது. ஒரு காலத்தில் காமராஜர் சாலை, காட்டன் மில் ரோடு என்று அழைக்கப்பட்டது. திருச்சி சாலையையும் அவிநாசி சாலையையும் இணைக்கும் அந்த சாலையில் பத்துப் பன்னிரண்டு பெரிய நூற்பாலைகள் இருந்தன. லோட்டஸ் மில், காட்டன் ஜூப்ளி மில் எனத் தொடங்கி. தொழிற்சங்கம் தொடங்கியதற்காக கொலை செய்யப்பட்டவர் தியாகி என்.ஜி.ஆர். மருத்துவமனையில் உயிருக்கு தத்தளித்துக் கொண்டிருந்த போது, பிரிட்டிஷ் போலீசார், குத்தியவர் யார் எனத் திரும்பத் திரும்பக் கேட்டும், குத்தியவர் யார் எனத் தெரிந்தும் போலீசுக்குச் சொல்லாத காந்தியவாதி.

பூமிநாதன் உப்பிலிப் பாளையத்திலிருந்த தனது வீட்டிலிருந்து அந்த வழியாகத்தான் பதினைந்து ஆண்டுகளாக அலுவலகம் செல்வது.

சிக்னலுக்குக் காத்திருக்கும்போது பலமுறை கண்ணில் பட்டிருக்கிறது அந்தச் சிலை.

பூமிநாதன் அப்பா மில் தொழிலாளிதான். புளோ ரூமில் வேலை செய்து, நெஞ்சில் பஞ்சுத் தூசி அடைத்து, காசம் வந்து, இருமிக் கொண்டு கிடந்தவர். என். ஜி. ஆர். பற்றிய வீரதீரங்களைக் கதைகதையாகச் சொல்லி இருக்கிறார். செல்வாக்கான மில் முதலாளிகள் குலத்தில் பிறந்து தேசிய பஞ்சாலைத் தொழிலாளர் சங்கம் வைக்கப் போராடியவர்.

அவருடைய கோஷம், தங்கம் செய்யாததை சங்கம் செய்யும் என்பது. இன்று சங்கங்கள்யாவும் தங்கம் செய்துகொண்டிருக்கின்றன. அன்று மில் முதலாளிகள், சங்கத்தை உடைக்க என்.ஜி.ஆருக்கு சொந்தமாக மில் கட்டித் தருவதாகச் சொன்னார்கள். மில்லுடன் பெண்ணும் கட்டித் தருவதாகச் சொன்னார்கள். சாதிச் செல்வாக்கு எனும் பூமாலை சூட்டப் பார்த்தார்கள். எதற்கும் இணங்காதபோது எலும்பை உடைப்பதும் உயிரைப் பறிப்பதுமன்றி முதலாளிகளுக்கு மார்க்கமென்ன? பிறகொரு வசதியான நாளில் மருத்துவமனையோ, பாடசாலைகளோ, விளையாட்டு அரங்கங்களோ கட்டிக்கொடுத்தால் போயிற்று! ஜனாதிபதிகள் இருக்கவே இருக்கிறார்கள் ஒரு வேலையும் இல்லாமல் திறப்பு விழாக்கள் செய்வதற்கும் கேடயங்கள் வழங்குவதற்கும்!

என். ஜி. ஆர். தனது முப்பதாவது வயதில்-ஆம் முப்பதாவது வயதில்தான்-1942-ல் இறந்தபோது, சிங்கநல்லூர் - வெள்ளலூர் சாலையில் குறுக்கிடும் நொய்யலாற்றங்கரையில் அடக்கம் செய்யப் போன ஊர்வலத்தில் நகரம் குலுங்கியது. யாரோ பாடியது போல், இன்று பலரும் ‘ஒன்றுமே செய்யாமல் ஊரெல்லாம் சிலையாகி’ நிற்கிறார்கள்.

எதையும் பொருட்படுத்தாமல் தியாகி தெற்குப் பார்த்து நின்று கொண்டிருந்தார். சில சமயம் பூமிநாதனுக்குத் தோன்றும், எதிரே இருக்கும் காவல் நிலையத்தை இராப்பகலாகக் கண்காணிக்கிறாரோ என.

இரு கைகளையும் யாசிப்பது போலும், யாதோ யோக முத்திரை போலும் மலர்த்தி விரித்து, கண்களை மூடி, சூரியனைப் பார்த்து, காலை வெயில் முகத்தில் மஞ்சளாய் சொரிய பெரியவர் பாடிக் கொண்டிருந்தார்.

“ஓடுகின்றனன் கதிரவன் அவன் பின்

&&&ஓடுகின்றன. ஒவ்வொரு நாளாய்

வீடு கின்றன என்செய்வோம் இனிஅவ்

&&&வெய்ய கூற்றுவன் வெகுண்டிடில் என்றே

வாடு கின்றனை அஞ்சலை நெஞ்சே

&&&மார்க்கண் டேயர்தம் மாண்பறிந் திலையோ

நாடு கின்றவர் நாதன்தன் நாமம்

&&&நமச்சி வாயம் காண் நாம் பெறும் துணையே”

தியாகிக்காகப் பாடுகின்றாரோ, நாட்டுக்காகப் பாடுகின்றாரோ, உலக நலத்துக்காகப் பாடுகின்றாரோ, தனக்காகப் பாடுகின்றாரோ? ஒன்றும் நிச்சயமாகத் தெரியவில்லை. கண்கள் கசிந்து வடிந்ததை சூரியக் கதிர்கள் ஒற்றியொற்றி எடுத்துக்கொண்டிருந்தன. வாகனங்கள் போய்க்கொண்டிருந்தன வழக்கம் போல. உழவர் சந்தையில் இருந்து மக்கள் காய்கறிப் பை சுமந்து சாலையைக் கடந்துகொண்டிருந்தனர். கடைகள் திறக்கத் தொடங்கிவிட்டன. கல்லால மூட்டினடியில் நிற்பதைப் போலிருந்தது பூமிநாதனுக்கு. சூரிய வடிவில் கருணை சுரந்து பொழிந்து கொண்டிருப்பதாகத் தோன்றியது.

போக மனமில்லை, போகாமல் தீராது. சைக்கிளை உருட்டிக் கொண்டு பூக்கடைக்கு நடந்தார். பூக்காரன் கட்டி வைத்திருந்த உதிரிப்பூப் பொட்டலம்; ஆட்சி மன்ற உறுப்பினருக்குப் போட, குஞ்சம் வைத்துக் கட்டிய ரோஜா ஆரம், அவர் கைப் பூச் செண்டு, காந்தி யாருக்கு சின்ன மாலை எல்லாம் பெரிய பையில் போட்டுக் கொடுத்தான் கடைக்காரன்.

"இன்னொரு மாலை வேணும்?

“ரெண்டு தானுங்க சொன்னீங்க?"

"ஒண்ணு கூடக் கேட்டா தர மாட்டேரா?"

"கோவப்படுநீங்களே! விக்கறதுக்குத் தானுங்களே இருக்கோம்?”

சைக்கிளை பூக்கடை முன்பு நிறுத்தி விட்டு, ஒற்றை மாலையை மட்டும் கையில் வாங்கிக் கொண்டு, தியாகி சிலையை நோக்கி நடந்தார் பூமிநாதன்.

மாலையை தியாகி சிலைக்குப் போடுவாரா, கண் மூடிப் பாடிக்கொண்டிருக்கும் பெரியவர் கழுத்தில் சூட்டுவாரா என்பதறிய காலைச் சூரியன் ஆர்வமாக இருந்தான்.

யுக மாயினி -நவம்பர் 2007

***

11. செம்பொருள் அங்கதம்

சங்குப் பறம்பில் நீலகண்டன் போற்றியின் சொந்த ஊர் உதயன் குளங்கரை அடுத்ததோர் கிராமம். கான்பூர் கிளையில் இருந்து மாற்றலாகி அவர் மும்பை வந்தபோது ஓய்வுபெற ஆறு ஆண்டுகள் இருந்தன. விளிக்க, முழுப்பெயர் சிரமமானது என்பதால் எஸ். என். போற்றி எனக் குறுக்கிக்கொண்டார். மலையாள வழக்கப்படி சங்குப் பறம்பில் என்பது இல்லப் பெயரும் நீலகண்டன் எப்பது சொந்தப் பெயரும் போற்றி என்பது குலப்பெயரும் ஆகும். ஆனால் வடநாட்டில் இதை சங்குப்பறம்பில் என்பதை சொந்தப் பெயராகவும் நீலகண்டன் என்பதைத் தகப்பனார் பெயராகவும் போற்றி என்பதைக் குலப் பெயராகவும் பொருள் கொள்வார்கள்.

போற்றியின் கையொப்பம் அழகானதோர் ஓவியம் போலவும் எவரும் கையொப்பத்திலிருந்து பெயரை வாசித்து அறிந்துவிடும் விதத்திலும் எளிதில் கள்ள ஒப்புப் போட முடியாதபடிக்கும் இருக்கும். அவரது ஆங்கிலம் அற்புதமானது. சுதந்திரத்துக்கு முன்பு, ஆங்கிலத் துரைகளான சர். ஜோசப், கே, ஆர்ம்ஸ்ட்ராங் ஸ்மித் போன்றோரிடம் வேலை பார்த்த கல்பாத்தி விஸ்வாம்பர ஐயரின் ஊக்கம் தனித்துவம் கொண்ட ஆங்கிலத்தைப் போற்றிக்கு அருளியது.

சிக்கல் என்னவெனில், அவர்கள் இருவரைத் தவிர இந்தியாவில் வேறெவருக்கும் சரியான ஆங்கிலம் தெரியாதென சொல்லிக்கொள்வார் போற்றி. நாட்டில் யார் யாரெல்லாமோ தன்னைத் தானே என்னவெல்லாமோ சொல்லிக் கொள்கிறார்கள். நமக்கு என்ன நட்டம்?

இருபத்தேழு வயதில் வேதி கழித்த போற்றி பார்யாளை ஊரில் விட்டு வைத்திருந்தார். அவளுக்கு பெரியதோர் வீடும் வாத்திச்சி வேலையும் உண்டு. ஆண்டுக்கு முப்பது நாட்கள் அவதி எடுத்துக் கொண்டு, ஓணத்தை ஒட்டி போற்றி நாட்டுக்குப் போனால், ஏப்ரல்-மே மாத பள்ளி விடுமுறையில் பார்யாளும் மக்களும் கான்பூர் வந்து தங்கிப் போவார்கள்.

மற்ற நாட்களில் போற்றிக்கு சுயம் பாகம், நேரான பொருளில், காலையில் சமையல் - பருப்பு, பொடுத்துவள், தயிர், உப்பிலிடு. உச்சைக்கு போற்றி உண்பதில்லை. உணவு இடைவேளையில் பொடி நடையாக நடந்துபோய் கேலா என்றழைக்கப்படும் மோரிஸ்

வாழைப்பழங்கள் இரண்டு வாங்கித் தின்பார். சாயங்காலம் வீட்டுக்குப் போனதும் அதே மெனு. சாப்பிடுமுன் இரண்டு லார்ஜ் மிலிட்டரி ரம்.

எதனாலோ தெரியவில்லை, தீராத மூலக் கடுப்புக்காரனைப் போல முகத்தை வைத்துக்கொண்டிருப்பார். யாருடனும் சுமுகமாக உரையாடுவது கூட இல்லை.

காலை சமைக்க இயலாத நாட்களில் சாய் மாத்திரம் வைத்துக் குடித்துவிட்டு அலுவலகம் வருவார் போலும். மதியத்துக்கு ஒரு தோசா மற்றும் கேலா வாங்கிவரச் சொல்வார். கைகழுவி வந்தால் தனது ஏ.சி. கேபின் கதவைக் கூடத் தொடாமல் தோளால் தள்ளித் திறந்துதான் உள்ளே நுழைவார். மிக அத்தியாவசியமாக, கை கழுவிய பின் யாருடனாவது கை குலுக்க நேர்ந்தால், மறுபடியும் கை கழுவப் போவார்.

யாருடனும் சற்றுத் தளரப் பேசினால் கைமாத்து கேட்டு விடுவார்கள் என நினைப்பார் போலும்.

மும்பையின் வழக்கப்படி, சிதம்பர குற்றாலம் பிள்ளை மீனாட்சி நாதன் எனும் பெயர் சி.எம்.நாதன் என்று குறுக்கப்பட்டது. எனினும் பலர் நாதன் என்பதை நாத்தன் என்று விளித்தனர். ஒருவகையில் அதுவும் கூடச் சரியான காரணப் பெயர்தானோ என்று தோன்றும். ஏனெனில் ஆழ்ச்சைக்கு ஒரு முறைதான்நாதன் பணியன், ஜட்டி, சாக்ஸ், கைக்குட்டை துவைத்து அணிவது. பெருங்கோடைக்கும் அடை மழைக்கும் அதுதான் சீலம். ஞாயிற்றுக் கிழமை துவைத்து உலர்த்தி அணிந்து கொள்வான். ஒரேயொரு செட் உள்ளாடைகளுடன் வாழும் மனிதன் உலகில் வேறெங்காவது இருக்கக்கூடும். திருமணம் என்பதும் நாதனுக்கு காணாக் கனவாகவே இருந்தது. அந்த நிறுவனத்தில் பத்து ஆண்டுகளில் தட்டச்சர், குறுக்கெழுத்தாளர், உதவியாளர், மூத்த உதவியாளர் என உயர்ந்திருந்தான். சகல அலுவலக வேலைகளும் கரதலப் பாடம்.

அகில இந்திய அளவில் அந்த நிறுவனத்தின் விற்பனைத் துறை பொது மேலாளராக இருந்த ருஸ்தம்ஜி நௌரோஜி பகத் எனும் பார்ஸிக் கனவான் ஓய்வு பெற்றபோது எஸ். என். போற்றி கான்பூரில் இருந்து மாற்றமும் பதவி உயர்வும் பெற்று மும்பை வந்தார்.

பொதுவாக மும்பை வாழ் தென்னிந்தியர்களை 'மதராஸி' என்றழைப்பர்

வடவர். கனகவிசயர் சிரம் மீது கல்லேற்றி வந்து கண்ணகிக்குச் சிலை எடுத்த வரலாறு அவர்களிடம் எடுபடுவதில்லை. நமது பாரம்பரியத்தில் வரலாற்றுக்கும் புராணத்துக்கும் வேறுபாடில்லை. காவியங்களையும் இதிகாசங்களையும் வரலாறு என நம்பி ஆராதிப்பாரும் உளர். பொய்யை வரலாறாக எழுதுவோரும் உளர்.

பாலக்காடு கணவாய் தாண்டிவிட்டால் எல்லா மலையாளியும் நாயர் ஆகிவிடுவதைப் போல, சோலாப்பூர் கடந்துவிட்டால் எந்தத் தென்னிந்தியனும் மதராஸிதான். இங்கு பக்கத்து மாநிலத்துக்கு தண்ணீர் தரமாட்டான் என்பது துணைப்பாடம். 'மதராஸி' எனும் சொல். வட மாநிலத்தவருக்கு கெட்டவார்த்தையாகவும் இளக்காரமாகவும் வசையாகவும் பயன்படும். 'ஓ ஸாலா மதராஸி' என்றாலும் 'ஜா ரே மதராஸி' என்றாலும் 'மதராஸிகா பச்சா' என்றாலும் சொல்இலக்கணப் பிழை உள்ளதன்று. ஆனால் தொனியில், பொருளில்வசையும் காழ்ப்பும் உண்டு. அது மறைமுகமாகத் தென்னிந்தியர் தமக்குள் ஒரு சகோதரத்துவத்தை ஏற்படுத்தி இருந்தது, நம்மூர் பார்ப்பன எதிர்ப்பின் பின்விளைவு போன்று. மற்றபடி ‘மதராஸி’க்கும் ‘அடைந்தால் திராவிட நாடு இல்லையேல் சுடுகாடு’ என்பதற்கும் கொள்கை அளவில் கூட எந்த சொந்தமும் இல்லை. ஆனால் அலுவலகங்களில் தமிழ், கேரள, கன்னட, தெலுங்கு ஊழியருக்குள் பேசப்படாத அந்நியோன்னியம் உண்டு. தமிழனுக்கு தமிழ்நாட்டில் வாழும் வட இந்தியனைக் கண்டால் அவனது நிறம் காரணமாக மரியாதையொன்று உயிர் பெற்று வளரும். ஆனால் மும்பையில் இரண்டு தென்னிந்தியர் தமக்குள் தாய்மொழியில் உரையாடினால் “கியா ரே, அண்டு குண்டு தண்டா பானி” என்று கேலி பேசுவார்கள்.

நாம் தற்போது பெருவழியை விட்டுக் கிளை வழியில் பயணமாவதைத் தவிர்க்கலாம்.

மும்பையில் அலுவலகங்களில் வேடிக்கையாகச் சொல்வார்கள் - அலுவலக உதவியாளனுக்கோர் கழுத்துப் பட்டை அணிவித்தால் அவன் விற்பனைப் பிரதிநிதி. அவனுக்கொரு கோட் கொடுத்தால் விற்பனை மேலாளர். கார் கொடுத்தால் பொது மேலாளர் என்று. போன தலைமுறையில் அது உண்மையும்தான். உதவியாளராகச் சேர்ந்து சர்வதேச நிறுவனம் ஒன்றின் துணைத் தலைவராக ஓய்வு பெற்ற சாம்பவர் வடகரை கிராமத்து மகன் ஒருத்தருண்டு.

அதே வழியில் தான் சி.எம். நாதன் சேல்ஸ்மேன் ஆனான். அது பகத்

ஏற்பாடு. போற்றி தன்னைஒரு மதராஸியாக வெளிப்படுத்திக் கொண்ட சந்தர்ப்பமே கிடையாது. நாதனுக்கு அலுவலக வேலைகள்யாவும் மீன் குஞ்சு நீந்துவதுபோல. எனினும் களப்பயிற்சி ஏதும் கிடையாது. போற்றி அவனை விடாது துரத்தலானார். நகருக்குள் அவர் எங்கு போனாலும் அவனையும் கூட்டிக்கொண்டு போனார்.

போற்றி கோலிவாடா மத்திய அரசுக் குடியிருப்பின் ‘ஒன் ரூம் கிச்சன்’ அடுக்கு ஒன்றில் குடியிருந்தார். அவருக்கு பிறிதொருமலையாள அறைவாசிப் பங்காளி உண்டு. அவன் கோஸ்ட் கார்டில் பணியாற்றி வந்தான். பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை கரைக்கு வருவான். நாதன் தாணா தாண்டி மும்ப்ரா எனும் இஸ்லாமிய - மீனவ கிராமத்தில் குடியிருந்தான். நகரில் வாழ்வது போலன்றி ஊரில் வாழ்வது போலிருக்கும். வாடகையும் மிதமானது.

தனது தேவைக்கு போற்றி சமைத்துக் கொள்வார். மிலிட்டரி ரம் ஒல்ட் மங்க், ஓல்டு கேஸ்க், பிளாக் மிஸ்ச்சீஃப், ஹெர்குலிஸ் என அறைவாசி மூலமாகக் கிட்டும். சில முறை நாதன் அவருடனேயே அவரது குடியிருப்புவரை போக நேர்ந்ததுண்டு. கிங்சர்கிள் ரயில் நிலையத்தில் இறங்கிச் சாலையைக் குறுக்கு வெட்டி, ரயில் பாலத்துக்குக் கீழே இருந்த குறுக்குப் பாதை வழியாகக் கூட்டிப் போவார். வழியெங்கும் மீன்காரக் கோலிகள், கூறுவைத்த காய்கறிவிற்கும் தமிழச்சிகள், தேங்காய், நேந்திரம் பழம், நேந்திரங்காய் சிப்ஸ், மரவள்ளி, பப்படம் விற்கும் சேட்டன், பிரட் - முட்டைவிற்கும் காக்கா, வடா பாவ், உசல், பாவ் விற்கும் மராத்திகாட்டி.....

போகின்ற வழியில் தட்டைப் பயிற்றங்காய், முட்டைக் கோசு, காரட் அல்லது பீட்ரூட் போன்று சமைக்க எளிதான காய்-கிழங்கு அர்தா - பாவ் எடை வாங்கிக்கொள்வார். பாவ் கிலோ என்றால் கால் கிலோ, அர்தா - பாவ் அதனினும் பாதி. தட்டைப் பயிற்றங் காயை மேலோட்டமாகச் சீர் பார்த்து, காம்புப் பகுதி ஒருபுறம் வருமாறு அடுக்கி, சமமாகத் தட்டி, பலகை மேல் வைத்து வாள்க் கட்டையால் ஒரே நறுக்கு. குப்பையைத் தள்ளிவிட்டு, ஒன்றரை அங்குல நீளத்தில் வெட்டிக் கொள்வார். சீனிச்சட்டியில் ஒரு கரண்டி வெளிச்செண்ணெய் விட்டு, எண்ணெய் காய்ந்ததும் அரிந்த பயிற்றங்காயைப் போட்டு வதக்கி உப்புப் போட்டு, மிளகாய் வற்றலைப் பொடிப் பொடியாகக் கிள்ளிப் போட்டுப் புரட்டி இறக்குவார். மெழுக்கு வரட்டி தயார். பிறகோர் தக்காளி ரசம். குக்கர் வைத்ததும் ரம் கிளாசைக் கையில் எடுத்துக் கொள்வார். எதையும்

தொட்டுக்கொண்டு குடிப்பது நற்குடியனுக்குப் பெருமை இல்லை என்பதவர் கொள்கை. என்றாலும் அலுவலகத் தாரதம்யம் காரணமாக என்றும் நாதனுக்கு ஒரு கிளாஸ் அவர் நீட்டியதில்லை.

கிளாசை சமையல் மேடை மீது வைத்துவிட்டு போற்றி பாத்ரூம் போனால், நாதன் தனக்கென இரண்டு லார்ஜ் ஊற்றி ஒரே மடக்காகக் கவிழ்த்துவிட்டு நல்ல பிள்ளையாக வாயைத் துடைத்துக்கொள்வான். குடியின் தர்மம் எச்சில் பார்ப்பதல்ல. பகத் இதற்கு எதிர்மறை. அலுவலக நேரம் தவிர மற்ற நேரங்களில் அவர் சகபாடி எப்போதாவது, எதன் நிமித்தமாகவாவது சார்னி ரோட்டில் இருந்த அவர் வீட்டுக்குப் போனால், உட்காரச் சொன்னதும் அவர் கொண்டு வருவது இரண்டு கண்ணாடித் தம்ளர்களும் ஜானிவாக்கர் குப்பியும். என் செய? பகத் வேறு, போற்றி வேறு! போற்றி கழிப்பறையில் கதவைத் தாளிட்டுக் கொண்டிருக்கும் போதும் அலுவலகப் பொது மேலாளர் எனும் தன் பதவியை மறப்பதில்லை.

அலுவலகம் போக, வர லோகல் ரயிலுக்கு முதல் வகுப்பு பருவகாலப் பயணச் சீட்டு. கையில் ஒரு எக்கோலாக் பிரீஃப் கேஸ். அதனுள் வீட்டுச் சாவியும் டைம்ஸ் ஆஃப் இந்தியா நாளிதழும். இதற்கெதற்கு பிரீஃப் கேஸ் என்று கேட்கலாம். அன்றெல்லாம் அதிகாரி என்றால் கையிலிது இருக்க வேண்டும். அஃதோர் மரியாதைச் சின்னம். சிலர் மதிய உணவுக்கான கன செவ்வக வடிவிலோர் டிபன் பாக்ஸ் உள்ளே வைத்திருப்பார்கள். சப்பாத்தியும் சுக்கா பாஜியும் ஒழுகாது, கசியாது, உலரவும் செய்யாது. திரும்புகாலில் சிலர் அடுத்த நாள் தேவைக்கான காய்கறி வாங்கி உள்ளே வைத்துக்கொள்வதுண்டு.

இராணுவ வீரனுக்குரிய மிடுக்குடன் கையில் குறும் பெட்டியுடன் போற்றி ரயிலை விட்டிறங்கி நடந்து அலுவலகம் வருவார். ஒன்பதே முக்காலுக்கு நுழைந்தால் ஐந்தே காலுக்கு இறங்கிவிடுவார். தென்னிந்தியா போல மாங்கு மாங்கென்று இரவு எட்டு மணி வரை வேலை செய்யும் கொத்தடிமைப் பழக்கம் மும்பையில் கிடையாது.

போற்றியிடம் நாதன் நிறையக் கற்றுக்கொண்டான். முதல் பாடம் சுத்தமாக இருத்தல், இரண்டாவது சிக்கனமாக வாழ்தல், மூன்றாவது நோய் தேடிக் கொள்ளாமல் பாலுறவு கொள்தல், நான்காவது தவறின்றி ஆங்கிலம் பேசுவது, எழுதுவது.

எப்படி கவனமாக ஒரு கடிதத்தை வரைவு செய்து ஒப்புதலுக்கு

அனுப்பினாலும் அதில் செம் மையால் இரண்டு திருத்தங்கள். செய்வார். எடுத்துக் காட்டுக்கு, ‘குறிப்பிட்ட தினத்தில் வர இயலும்’ என்று எழுதினால் 'குறித்த நாளில் வரக்கூடும்’ என்று திருத்துவார். இரண்டுக்கும் ஒரு வேறுபாடும் இருப்பதில்லை. என்றாலும் அவர், தான் பொது மேலாளர் என்பதை மறந்து விடுவதில்லை. நாதனோ எனில் இடமாகப் போனால் என்ன, வலமாகப் போனால் என்ன எனும் மனப்பாங்கு கொண்டவன்.

மேலும் போற்றி இடதுசாரிகளுக்கு எதிரான மனோபாவம் கொண்டவர். அதற்கான ஏராளமான உதாரணங்கள் வைத்திருந்தார். அவர்களை நாடன் சாராயம், பீடி, சாயா, பருப்புவடை என்று ஏகப்பட்ட பட்டப் பெயர்கள் வைத்துக் குறிப்பிடுவார். போற்றியின் வழிபடு தெய்வம் சர். சி. பி. ராமசாமி ஐயர். நாதனுக்கு வழிபடு தெய்வம் ஈ.எம்.எஸ். என்றாலும் போற்றியைப் பகைத்துக்கொள்ள இயலாது. நிர்வாகத்தின் முதல் நிபந்தனையே, அதிகாரத்துக்குப் பணிதல் தானே!

நாதனுக்கு தமிழில் போதுமான புலமை இருக்குமானால்போற்றியே போற்றி என அடியெடுத்து அகவலோ, அந்தாதியோ, உலாவோ, கலம்பகமோ, பிள்ளைத் தமிழோ, தூதோ, அலங்காரமோ, பரணியோ பாடி இருப்பான். என் செய வியலும்? மொத்தத் தமிழும் வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலகத்தில் இரண்டு அடர் சாயங்களுக்கிடையில் சிறைப்பட்டுக் கிடந்தது சக்தி வாய்ந்த, தவ வலிமை பெற்ற, மந்திரவாதி எவனோ நூறு ஆண்டுகளுக்கு மொழியின் வாயைக் கட்டிவிட்டான் போலும். மொழி முக்கிக் கொண்டும் முனகிக்கொண்டும் பெருமூச்சு விட்டுக் கொண்டும் ஆட்சியாளர்களை நச்சிக்கொண்டும் இனிப்பான இடங்களை நக்கிக்கொண்டும் கிடந்தது.

வெளியூர் பயணங்களை முடித்து வந்து நாதன் போற்றிக்கு அறிக்கை தரவேண்டும். செலவுப் பட்டியல் தர வேண்டும். நாலணா எட்டணா என்று தணிக்கை செய்வார் போற்றி. பயணம் செய்ததாகச் சொல்லப்படும் ரயில் வண்டியின் நேரங்களைச் சரி பார்ப்பார். பயண தூரங்களைக் கணக்கிடுவார். ஒருவேளை உணவுக்கு அந்த ஊரில் எவ்வளவு ஆகும் என அனுமானிப்பார். இறுதியில் செலவுக் கணக்கில் இருபது முப்பது ரூபாய் வெட்டப்பட்டிருக்கும். வைக்கோற் படப்பில் நாய் கிடந்தாற் போல. தன்னால் தின்ன இயலாது, மாட்டையும் தின்ன விடாது!

யார் செய்த நல்வினையோ, விற்பனை நன்றாக இருந்தது. பருவ மழை

காரணமாக இருக்கலாம், பவர் கட் இல்லாததனால் இருக்கலாம், ஏற்றுமதி சிறப்பாக இருந்ததனால் இருக்கலாம். சந்தை வலுவாக இருந்தது. அலுவலகத்தில் பட்ஜெட், டார்கெட், புக்கிங் எனக் கேள்விகள் பெருங்குரலில் இல்லை.

கொல்கொத்தாவில் பழைய நூற்பாலை ஒன்று புதுப்பித்தலிலும் விரிவாக்கத்திலும் இருந்தது. ஏராளமான நூற்பு இயந்திரங்கள் வாங்கப்பட இருந்தன. விற்பனைக்கான பூர்வாங்க வேலைகள் அனைத்தையும் நாதன் செய்திருந்தான். பெரிய அளவில் ஆலைக்கு கடனுதவி ஏற்பாடாகி இருந்தது. ஆளுங்கட்சி எம்.பி. யின் மைத்துனரின் பினாமி எனில் சாத்தியமா, சாத்தியமில்லையா? விலை தீர்மானிக்கும் பேச்சுவார்த்தைக்கு அழைப்பு வந்தது.

“தானும் வாடோ!” என்றார் போற்றி.

நிர்வாகத்தின் அனுமதி வாங்கி பயணச் சீட்டுகளுக்கு ஏற்பாடு செய்தார்.

நாதன் தான்மட்டும் பயணம் போவதென்றால் சிறியதொரு தந்திரம் செய்வான். அவன் தரத்துக்கு ஏ.சி. மூன்றடுக்கு ரயில் கட்டணம் அனுமதிக்கப்படும். பயணத்துக்கான ஆதாரம் செலவுப் பட்டியலுடன் இணைக்க வேண்டும். முதலில் ஏ. சி. மூன்றடுக்குபயணச் சீட்டு, போக வரப் பதிவு செய்வான். உடனே ஜெராக்ஸ் எடுத்துக் கொள்வான். பின்பு பயணச் சீட்டுக்களை ரத்து செய்துவிட்டு சாதாரண மூன்றடுக்கு படுக்கை வசதியில் பதிவு செய்து கொள்வான். கணிசமானதோர் தொகை மிச்சமாகும். தூரமும் தொகையும் நேர் விகிதத்தில் அமையும்.

போற்றி அப்படியல்ல. அவர் சகல கௌரவங்களோடும் அனுமதிக்கப்பட்ட வகுப்பில்தான் பயணம் செய்வார். அனுமதிக்கப்பட்ட தரத்திலுள்ள விடுதிகளில்தான் தங்குவார், உண்பார், வாடகைக் கார் இன்றி பயணம் செய்வதில்லை. அலுவலக ஒழுங்குகளில் அவரை யாரும் விரல் மடக்க இயலாது.

நாதன் பயணம் போனால் எதெதில் சேமிக்கலாம் என கணக்குப் பார்ப்பான். பகல் பூரா வெளியே சுற்றிவிட்டு இரவில் கிடந்துறங்க ஓர் இடம் வேண்டும், அது மூத்திர நாற்றம் அடித்தால்தான் என்ன? எப்படியும் போய்ச் சேர வேண்டும், எந்த வகுப்பில் போனால் என்ன? பசியாற வேண்டும், எங்கு என்ன தின்றால் என்ன?

போற்றியோடு பயணம் போனால் பணம் ஏதும் மிச்சமாகாது என்று நாதனுக்குத் தெரியும். என்றாலும் போற்றி நல்லதோர் சேல்ஸ் மேன். தண்ணீரில் தடம் பார்ப்பவர். பாம்பறியும் பாம்பின் கால். கையூட்டு எதிர்பார்ப்பவனை அவர் ஏமாற்றியதில்லை. கையூட்டு வாங்காதவனை அவர் கெடுத்ததுமில்லை. மேலும் ஒத்துக்கொண்ட விலைக்குள் இயந்திரம் தயாரித்து இலாபம் பார்க்கவும் அவர் அறிவார்.

ஏ.சி. இரண்டடுக்கில் போற்றியும் மூன்றடுக்கில் நாதனும் பயணம் செய்தனர். நாதனுக்கு வயிறு காந்தியது, எந்த முட்டாளாவது இப்படிப் பணத்தைப் பாழ் செய்வானா என்று. மும்பையில் இருந்து கொல்கொத்தா ஹௌராவுக்கு கீதாஞ்சலி எக்ஸ்பிரஸ். இருபத்து நான்கே மணிக்கூர் பயணம். ஆயிரத்துத் தொள்ளாயிரத்து ஐம்பத்தொன்று கிலோ மீட்டர்களும் அக்கோலா, வார்தா, நாக்பூர், ராய்ப்பூர், பிலாஸ்பூர், ராய்கர், ஜார்ஸ் குடா, டாட்டா நகர், ஹௌரா என்று விரைந்தன.

இரயில் நிலையத்துக்கு நூற்பாலையின் கார் வந்திருந்தது. புரோட்டோகால் படி முன் இருக்கையில் நாதனும் பின் இருக்கையில் போற்றியும். ஹௌராவின் இரண்டாய்ப் பிளந்து உயரும் பாலம் வழியாக ஒரு மணி நேரம் சாலைப் பயணம். ட்ராம் ஓடும் நகரம், கொல்கொத்தா. அங்கிருந்து 24 ஃபர்கானா மாவட்ட எல்லையில் இருந்தது நூற்பாலை, ஆலையின் பின்புறம் விருந்தினர் மாளிகையில் தங்க வைத்தனர். உண்மையில் அது மாளிகைதான். நவம்பர் மாதத்துக் குளிர் கிடந்து ஆட்டியது. ஆங்கிலேயர் காலத்தில் கட்டிய ஆலையைபிர்லாக்கள் வாங்கி பின்னர் ஆளுபவர்களின் பினாமிகளுக்கு விற்றிருந்தனர்.

மரங்கள் அடர்ந்த காட்டின் நடுவே இருந்தது விருந்தினர் விடுதி. கணப்பு, வாசிப்பறை, உணவுக்கூடம், படுக்கை அறைகள்.... முன் புறம் நீண்டு கிடந்த வராந்தா தனி அழகு.

ஐரோப்பியத் துரைகள் தங்கி இருந்த விடுதி. இந்தியத் துரைகள் குறைந்தவர்களா என்ன? பழங்காலக் கட்டிடம். எனினும் சுத்தமாகப் பராமரிக்கப்பட்டிருந்தது. போற்றிக்கும் நாதனுக்கும் வங்காளி தெரியாது எனினும் இந்தி தெரியும். சமையற்காரன் சொன்னான், டார்ச் இல்லாமல் தரையில் இறங்க வேண்டாம், பாம்புகள் ஊரும் என்று. அதற்கான தோதும் இருந்தது. இருட்டில் மரங்களின் வகைகள் தெரிய வில்லை. எல்லாம் குத்துமதிப்பாக ஒரே இருளாகக் கிடந்தது. ஸ்வெட்டர்

இருந்தாலும் குளிர் உறைத்தது.

வேந்நீரில் குளியல். போற்றி பயணத்தின் போதும் ரம் குப்பி கொணர்ந்திருந்தார். அந்தக் குளிருக்கு இரண்டு லார்ஜ் உறிஞ்சினால் நன்றாகத்தான் இருக்கும். ஆனால் போற்றி தரமாட்டார், கேட்பதும் தகாது. குளித்து, குடித்து, உணவு தயாரானதும் இன்சுலின் போட்டுக் கொண்டார். முதிர்ந்த சர்க்கரை நோயாளி அவர்.

வங்காளிகள் நம்மைப் போலவே சோற்றுப் பிரியர்கள். சுடச்சுடச் சோறு. முழு உளுந்தை வறுத்து, நன்கு குழைய வேகவைத்து டால் செய்திருந்தான். டாலில் பொரித்த அயிலை ஒன்று முழுதாக மிதந்தது. வங்காளத்தில் மீன் சைவம். பீர்க்கங்காயில் கூட்டு, வாழைக்காயில் கறி. நெய்மீன் துண்டங்கள் சிறிதாய் வறுத்துப் போட்டு, உப்பு, மிளகாய்ப் பொடி, கடுகெண்ணெய், வினிகர் என ஊறிய ஊறுகாய். இனிப்புக்கு ரஸ்கொல்லா. போற்றி இனிப்பு தின்னலாகாது. அவர் பங்கு ரஸ்கொல்லா விழித்துப் பார்த்தது. வீண் செய்வானேன் என்று எடுக்கக் கை நீட்டியபோது தடுத்தார் போற்றி. “அது டேபிள் மேனர்ஸ் இல்லடோ” என்றார். விளங்காத ஆளு என்று மனதில் எண்ணிக் கொண்டான் நாதன்.

போற்றி பிறப்பால் அந்தணன், தொழிலால் வைசியன், நடப்பன, பறப்பன, நீந்துவன என உண்பதால் சூத்திரன், நாகரீகத்தால் மிலேச்சன் போலும்!

“இதுக்கு முந்தி இதொண்ணும் கூட்டி இருக்க மாட்டே… எதையும் முகஞ்சுளிக்காத உண்ணணும்… எங்க போனாலும் சாம்பார், புளிசேரி தேடீட்டு இருக்கப் பிடாது…. ' என்று சின்னதோர் அன்ன தோத்திரம் சொன்னார்.

எப்படிச் செய்திருந்தாலும் உளுந்தப் பருப்பு டால் வழுவழுப்புத் தானே! ‘வழவழகொழகொழ’ ஆட்களை ஊரில் சொல்வார்கள் - வெண்டைக்காய், விளக்கெண்ணெய், சேம்பங்கிழங்கு, உளுந்து அரைத்த அம்மி என.

கம்பளி போர்த்தி நல்ல உறக்கம், இரயில் அலுப்பு, வென்னீர்க் குளியல், சுடச் சுட்ட உணவு, உறைக்கும் குளிர்…. நாதனின் கனவில் பாம்புறங்கும் பாற்கடலில் இருந்து நாக கன்னி வந்தாள், நெளிந்து நெளிந்து முகபடம் உயர்த்திச் சிலிர்த்தவாறு. நாகபஞ்சமியன்று

தலோஜா தியேட்டரில் பார்த்த மராத்திப் படத்தில் நாகலோக ராஜ குமாரி பெருந்தனங்களையும் இதர படை பண்டார சேனைகளையும் குலுக்கிக் குலுக்கி ஆடிக்கொண்டிருந்தாள். கனவில் வந்த நாககன்னி கையின் படவரவல்குல் உத்தேசமாக எங்கிருக்கும் என ஊகிக்க இயலவில்லை.

காலையில் மங்கலாகப் பொழுது புலர்ந்து வருகையில் 'கீசு கீசென்று ஆனைச் சாத்தன் கலந்து பேசும் பேச்சரவம்’ கேட்டு, விழித்து, பல்துலக்கி, சாய் பருகி, விடுதியை விட்டு வெளியே வரும் போது சுற்றிக் கிடந்த அடர்காடு அச்சமும் ஆர்வமும் ஊட்டுவதாக இருந்தது. வேற்று மனித அரவம் இல்லை. போற்றி குளிருக்காக நெஞ்சின் குறுக்கே கைகளைக் கட்டி நடந்தார். ஏற்கனவே தெரிந்திருந்த மரங்கள் தவிர, புதிதாய்க் கண்ட மரங்களின், செடி கொடிகளின், புதர்களின் பெயர் தெரியவில்லை. காடுகளின் மரங்களுக்கு என்றோர் கவர்ச்சி உண்டு. தெய்வங்கள் உறையும் பெருமரத் தண்டுகள்…

விடுதியின் பின்புறம் தடம் ஒன்று வளைந்து நீண்டு, ஒடி, இறங்கியது. திடீரென, இறையெனப் புலப்பட்டது தாமோதர் நதி, அகன்று விரிந்து ஆழ்ந்து, நெடிய ஓட்டத்தில் தளர்ந்து வங்கக் கடலில் கலக்க விரைந்து கொண்டிருந்தது. தடம் சென்று நின்ற இடத்தில் ஆற்றில் இறங்க வரிக்கல் பாவிய படித்துறையும் சிறு கயிற்றால் கட்டுண்டிருந்த சிறு படகும்.

"குளிக்கியாடா?" என்றார் போற்றி கால் நனைத்தால் சிவீரெனக் குளிர்ந்தது. உள்ளூரில் பேய்க்கும் வெளியூரில் தண்ணிருக்கும் அஞ்ச வேண்டும் என்றொரு வரியோடியது உள்மனதில், சரக்குக் கப்பல் கடல் முகத்தில் இருந்து வெகு தூரம் உள்ளே வரும் தாமோதர் நதி.

பனியில் செடிகொடிகள் நனைந்து சிலிர்த்திருந்தன. ‘தூய நீரில் துலங்கும் ஏகன்' என பெரியசாமித் தூரனின் வரியொன்று தாமோதர் நீர்ப்பரப்பில் நெடும் பாம்பு போல நீந்தி நெளிந்து ஓடியது.

எப்படி அனுபவித்திருப்பார்கள் ஐரோப்பியத் துரைமார்களும்துரைசானிகளும்? இந்தியத் துரைமார்கள் கண்களில் பணம் தவிர்த்து வேறேதும் படுமோ? தூரத்தில் நூற்பாலையின் ஒசை அந்தர காந்தாரமாக ஒலித்தது.

“போலாண்டா” என்றார் போற்றி.

நகர மனமில்லை நாதனுக்கு. படித்துறையில் உட்கார்ந்து நீர்ப் பரப்பை வெறித்தவாறு இருக்கலாம் காலம் காலமாக. பிடரியில் வனத்து மரங்களின் குறு மூச்சுக்கள் உராய்ந்தவாறிருந்தன. விருட்சங்களின், மூங்கில் குப்பங்களின், உரையாடல் கேட்டன.

ஆனால் போற்றியின் வாலில் நெருப்பு வைத்தாயிற்று.

காலைப் பலகாரம் நீண்ட சுருள்களாக இருந்த, இனிப்பும் சிற்றுப் புளிப்பும் சூடும் மொரமொரப்புமான மஞ்சள் நிற பாகு ஒளிரும் ஜிலேபிகள். கடலைமாவைச் சப்பாத்தி போலத் தேய்த்து அங்குல அகலத்தில் நீளமாய் வெட்டி, கடலை எண்ணையில் பொரித்தெடுத்த பாப்டி. கடித்துக் கொள்ள நீளமான மெல்லிய பிஞ்சுப் பச்சை மிளகாயை எண்ணெயில் வறுத்து உப்பில் புரட்டியது. போற்றி இன்சுலின் குத்திக் கொண்டபின் பாப்டியை மட்டும் கொறித்த வாறிருந்தார். சமையற்காரன் அவர் பங்கு ஜிலேபியை நாதன் பக்கம் நகர்த்திவிட்டு சாய் கொணரப் போனான். இந்த டேபிள் மேனர்ஸை என்ன செய்வதென்று திகைத்தான் நாதன்.

இயந்திரங்களின் விலை இருதரப்புக்கும் சேதமின்றிப் படிந்தது. மினிட் கையெழுத்தாகியது. கைகுலுக்கிப் பிரிந்து மதிய உணவுக்கு விடுதிக்கு வந்தனர். சுடு சோறு, கடலைப் பருப்பு டாலில் பொரித்துப் போட்டிருந்த குளத்துமீன், சுரைக்காய் கூட்டு, கத்தரிக்காய் உருளைக் கிழங்கு கறி, தயிர், மாங்காய் ஊறுகாய், இனிப்புக்கு சோம் சோம்.

இரவு எட்டரை மணிக்கு, மும்பை போகும் ஹௌரா மெயில். ஆறரை மணிக்கு கார் வரும் என்றனர். மதிய உணவுக்குப் பின் நன்கு தூங்கினார் போற்றி. நாதன் மறுபடியும் விடுதியைச் சுற்றி வந்தான். காட்டை அளந்தான். தாமோதர் நதியில் கண்ணர்றிக் கிடந்தான். மைனாக்கள், செம்போத்துகள், காகங்கள் பறந்து திரிந்தன. பச்சைக் கிளிகள் உயர்ந்து தாழ்ந்தன. கண்ணுக்குப் புலப்படாமல் குயில்கள் கூவியவாறிருந்தன.

விடுதிக்கு வந்தபோது, போற்றி பெட்டியை மூடிப் புறப்படத் தயாராகிக் கொண்டிருந்தார். இறுதிச் சுற்றுக்கான ரம் மேசை மீது தயாராக இருந்தது. மாலைச் சிறு தீனி காரப் பொரி; வேகவைத்து, நீளவாக்கில் நறுக்கி, வெங்காயம் பச்சைமிளகாய் போட்டுத் தாளித்து எலுமிச்சை பிழிந்த உருளைக்கிழங்கு, சாய். நேரத்தோடு இன்சுலின் குத்திக்கொண்டு நாஸ்டா செய்தார் போற்றி. இரவு உணவைத் துறந்துவிடும் எண்ணம் இருக்கும்போல.

பொரி தின்று படுத்தால் இரவு நாதனுக்கு கண் அடையாது. அவன் எஞ்ஞான்றும் உணவில் ஔவையார் சொல்லைத் தட்டுவதில்லை. உண்பது நாழி. நாழி எனில் நாழியரிசிச் சோறு. நாழி அரிசி என்பது ஏறத்தாழ முக்கால் கிலோ. இரயில் ஏறியபின் பார்த்துக் கொள்ளலாம். எப்படியும் வேறு வேறு பெட்டிகள்தானே! இன்றாவது கனவில் நாக கன்னிகையின் படவரவல்குல் தென்படுகிறதா என்று பார்க்க வேண்டும்!

நேரத்தோடு ஹௌரா ரயில் நிலையம் சேர்ந்து, ரயில் மேடை தேடி, வண்டி பார்த்து, பெட்டி கண்டு, போற்றியை உட்காரவைத்து விட்டு தனது இடத்துக்கு வந்தான் நாதன். 'புள்ளும் சிலம்பின காண்புள்ளரையன் கோயிலிலே' எனும்படி கீங், ஷோம், ஹைங் எனும் சொற்கள் திரும்பத்திரும்ப பெட்டி நிறைய ஒலித்துக்கொண்டிருந்தன. சமீபத்தில் யாரோ சொன்னது நினைவுக்கு வந்தது. வேற்றுக் கிரக மனிதன் எவனும் இறங்கி வந்தால் பூமி பூராவும் ஒரே மொழி பேசுவதாக நினைத்துக் கொள்வான் என்று.

தற்போதைய பயணங்களில், இரவில் தூங்க முயற்சிக்கும்போது செல்போன் ஒரு தொந்தரவு. பெட்டிக்குள் வைத்துப் பூட்டினால் அவசர அழைப்புக்களைக் கவனிக்க முடியாது. சட்டைப் பையில் வைத்தால் உறங்கும்போது உருவி விழுந்துவிடும். கால்சட்டைப் பையில் போட்டுக்கொண்டாலோ, உருண்டு புரண்டு படுத்தால் செல் நசுங்கிப் போகலாம். பச்சைப் பிள்ளையைப் போல் பக்கத்தில் கிடத்திக் கொண்டும் உறங்க இயலாது. உறக்கம் சண்டாளன். செல் போனுடன் கண்ணாடியும் வைத்திருப்பவர்களுக்கு இன்னும் பாடு அதிகம்.

ஒருவன் வாசிக்கும் புத்தகத்தை வைத்தும் நண்பனை வைத்தும் அவனை அளந்து விடலாம் என்பார்கள். செல்போன் வைத்திருப்பவர்களின் ரிங்டோன் கேட்டும் கூட அதைச் செய்யலாம். மும்பையில் பலரும் முகம்மது ரஃபியின் காதல் ஏக்கக் கீதங்களை வைத்திருந்தனர். சிலர் அனுரப் ஜலோட்டா, சிலர் குலாம் அலி, கணபதி ஆர்த்தி. தமிழரில் சிலர் சுப்ரபாதம், சிலர் திருப்புகழ் சிலர் செந்தமிழ் நாடெனும் போதினிலே....நாதனுக்கு அறிமுகமான ஒருவர் 'பெயரைக் கேட்டாலே சும்மா அதிருதில்லே' என்று வைத்திருந்தார். அவருடன் எப்படி உறவு வைத்துக் கொள்வது?

எல்லாம் ஒருவகை அனுமானங்கள்தான். தேவாரம் வாசிக்கிற ஒருவர் சரோஜாதேவி புத்தகமும் வாசிப்பதை எப்படிப் பகுத்து ஆய்வு செய்வது?

கம்பளிக்குள் பொதிந்து நல்ல உறக்கத்தில் இருந்தான் நாதன். செல்ஃபோன் மணி அடித்தபோது என்ன நேரம் என்று தெரியவில்லை. விழித்து, நிதானத்துக்கு வந்து, படுக்கையின் தடுப்புச் சுவரோரம் இருந்த செல்போனை எடுத்துப் பார்த்தான். போற்றியின் எண்தான். இதுவென்ன டேபிள் மேனர்ஸ் இந்த நேரத்தில்? போற்றியின் குரல் கலங்கலாக, மங்கலாக ஒலித்தது.

“நாதன், ஒரு சாக்லேட்டோ, ஸ்வீட்டோ, உடன் தன்னேவேணும். சுகர் இறங்கி இருக்கும்போல.... படபடப்பா இருக்கு.... நீ உடனே என் பெட்டிக்கு வா......” 'நல்லவேளையாகத் தொடர்வண்டியின் கதவுகள் ஒரு பெட்டியிலிருந்து மற்றதற்குப் போகும் விதத்தில் திறந்திருந்தன. மணி ஒன்றே காலாகி இருந்தது. அனைவரும் குளிருக்கு கம்பளியினுள் புதைந்து ஆழ் நித்திரையிலும் அவசரமற்ற குறட்டையிலும் இருந்தனர். ஸ்வீட் அல்லது சாக்லேட்டுக்கு எங்கு போவதென்று தெரியவில்லை. யாரை எழுப்புவது, எப்படிக் கேட்பது?

புரண்டு படுத்த ஒருவரிடம் கேட்டபோது, அவன் கேட்டதே அவருக்கு விளங்கவில்லை. மற்றொருவர் எரிச்சலில், “சுப் ரோ" என்றார். பெண்களிடம் கேட்கலாம் எனில் எப்படித் தொட்டு எழுப்புவது? மேலும் போர்வைப் பொதியலில் பெண் யார் ஆண் யார் என அறிவதெங்ஙனம்? நன்றாக விழித்திருந்த ஒருவரிட்ம் கேட்ட போது கை விரித்துவிட்டார்.

மறுபடியும் போற்றியிடம் இருந்து ஃபோன்.

"நாதன், குச் கரோ, ஜல்தி.”

குரல் மூழ்கிக்கொண்டிருந்தது. ஏ.சி. பெட்டியில் அனாமத்துப் பயணிகள் யாரும் கண்விழித்து பயணத்தில் இல்லை. ஒன்றும் ஓடவில்லை நாதனுக்கு. படபடப்பாக இருந்தது. பெட்டியை மூன்று முறை பயந்த எலிபோல் ஓடிக் கடந்தாயிற்று.

போற்றி மயங்கி, கோமாவில் சென்றுவிட்டால் எல்லாம் சிக்கலாகிவிடும். வண்டி போகும் வேகம் சமீபத்தில் நிறுத்தம் வரும் தோதில் இல்லை. கொக்கியில் தொங்கிக் கொண்டிருந்த திறந்த பைகள் சிலவற்றில் கை விட்டுப் பார்த்தான், பழங்கள், தின்பண்டங்கள் ஏதும் கிடைக்கலாம் என்று. ஒன்றும் பயனில்லை.

பெட்டியின் கடைசியில் குப்பை போட என சின்னக் கன்டெய்னர்

ஒன்றிருந்தது. ஓடிப் போய், மூடியைத் திறந்து வைத்தபடி துழாவினான். வழித்துத் தின்று எறிந்த சின்ன பிளாஸ்டிக் டப்பாக்கள், வாழைப் பழத்தோல், காலி தண்ணீர் பாட்டில், துடைத்துச் சுருட்டிய செய்தித்தாள் என புரண்டு வந்தன. கீழ் மேலாகப் புரட்டியதில் பிரட்கவர் ஒன்றும் பிஸ்கட் கவர் ஒன்றும் தட்டுப்பட்டது. எடுத்துப் பார்த்ததில் மேலும் கீழும் இருக்கும் கனத்த ரொட்டி ஸ்லைசுகளும் உடைந்த குளுகோஸ் பிஸ்கட் துண்டுகளும் தெரிந்தன. கையைத் துடைத்துவிட்டு, எடுத்துக்கொண்டு ஓடினான் போற்றி இருந்த பெட்டிக்கு.

போற்றி அரை மயக்கத்தில் வியர்வையில் சொட்ட நனைந்திருந்தார். வாங்க நீண்ட கை உதறியது. பிஸ்கட் துண்டை அவரது வாயருகே நீட்டினான். பறவைக் குஞ்சுபோல் வாயை அகலத் திறந்து வாங்கிக் கொண்டார். தொடர்ந்து அவசர அவசரமாக கனத்த ரொட்டித்துண்டுகளை மென்று இறக்கினார். மற்றொரு பயணியின் தலைமாட்டில் இருந்த தண்ணீர் பாட்டிலை எடுத்து நீட்டினான். இரண்டு மடக்கு குடித்தார். சற்று ஆசுவாசம் தெரிந்தது. படபடப்பும் வியர்வையும் அடங்க மேலும் சற்று நேரம் ஆகும்போல.

ஏழெட்டு நிமிடங்களில் ரயில் நிலையம் ஒன்று வந்தது. சிற்றுண்டி நிலைய விளக்கொளி சற்றுத் தொலைவில் தெரிந்தது. ஓடிப் போய், மீதிச் சில்லறை வாங்கக் கூட நிற்காமல் குளிர் பானக் குப்பி ஒன்றை எடுத்து வந்தான். ரயில் நகர ஆரம்பித்திருந்தது. அவசரமாக அரை போத்தல் குடித்தார் போற்றி, மிச்சத்தை தலைமாட்டில் வைத்துக் கொண்டார். படபடப்புத் தணிந்து வியர்வை ஆற முற்பட்டிருந்தது. முகத்தில் தெளிச்சல் வந்தது. நெஞ்சில் கைவைத்து நெடுமூச்சொன்று எறிந்தார்.

நாதனைப் பார்த்து சிரிக்க முயன்றார்.

“ரெச்சைப்பெட்டு, கேட்டோ! வளர உபகாரம்.... இனிப் பேடிக்கானில்லா..... போய்க் கெடந்நோ...." என்றார்.

வேறொன்றும் அறியாமல் ரயில் நெடிது ஓடியவாறிருந்தது.

ஓம் சக்தி- தீபாவளி மலர் – 2007

***

12. தேர்தல் ஆணையத்துக்கு திறந்தவெளிக் கடிதம்

அன்று தவசிப்பிள்ளைக்கு சீக்கிரமே முழிப்பு வந்துவிட்டது. வெளியே படுத்தால் கொசுக்கடி, உள்ளே படுத்தால் மூட்டைக் கடி. பல் தேய்த்து, முகம் கழுவி, பட்டையாக விபூதி அணிந்து, ஒரு தரத்துக்கு வெற்றிலை போட்டுக்கொண்டு, கும்பமுனியை நேரத்தோடு சென்று தட்டி எழுப்பலாம் என்று, ஆணிப்புற்றுக் காலை பொத்திப் பொத்தி வைத்து நடந்து போனார். அவருக்கு ஆச்சரியத்தில் கண்மலர்கள் விரிந்தன. வீட்டு முகப்பில் சற்றே சாய்வான சூரல் நாற்காலியில் இரண்டு கால்களையும் தூக்கி குத்துக்கால் வைத்து உட்கார்ந்திருந்தார் கும்பமுனி. முன்னால் கிடந்த சூரல் முக்காலியில் எழுதும் அட்டையில் கிளிப் செய்யப்பட்ட காகிதங்களும் ஊற்றுப் பேனாவும் கிடந்தன. தவசிப்பிள்ளை வந்ததைக் கண்டு கொள்ளாமல் சாய்ச்சிறக்கியின் பனங்கைகளையும் அதில் கூடு கட்டி இருந்த குளவிகளையும் சிந்தித்தவாறிருந்தார்.

தவசிப்பிள்ளைக்கு கோளாறு புரிந்துவிட்டது. பிரசவகாலம். சாதாரணமாக அம்மாசி, பௌர்ணமி நாட்களில்தான் பிரி கழரும். இன்றென்ன மறி மாயமோ தெரியவில்லை! முற்றத்தைக் கடந்து படிப்புரையின் படியேறிப் போனவர், சம்பிரதாயமாக 'கட்டங் காப்பி வைக்கட்டா?” என்றார்.

அரைக்கால் பங்கு கவனத்தைத் திருப்பி, “ஏழரை ஒம்பது ராகு காலம் கழியட்டுமே!” என்றார்.

கடுப்பாகி வந்தது தவசிப்பிள்ளைக்கு – ‘செத்த பிரேதத்துக்கு நேரம் விடியதுக்க மின்னே கொழுப்பைப் பாரேன்’ என்று நினைத்தார். முப்பதாண்டுகளுக்கும் மேல் தவசிப் பிள்ளையுடன் வாழ்பவர் கும்பமுனி, பாம்பறியும் பாம்பின் கால். “செத்தா எல்லாருமே பிரேதம் தான்வே” என்றார்.

“விடியதுக்கு மின்னே உம்ம எழவுலே நிக்க முடியுமா?” என்று தவசிப்பிள்ளை, படிப்புரை தாண்டி, மங்களா தாண்டி, அடுக்களைக்குப் போனார்.

சற்று தலையை உதறிவிட்டு, காகிதக் கத்தையை எடுத்து, பக்க எண் போட்டு, தலைப்பு எழுதினார். கொதிக்கக் கொதிக்க தவசிப்பிள்ளை கட்டங் காப்பியைக் கொண்டு நீட்டினார். தலை முண்டில் ஏந்திக்கொண்டு சிறியதோர் உறிஞ்சல் செய்து தவசிப்பிள்ளையை நோக்கிச் சிரித்தார். சீனி நிறையப்போட்டு, கட்டங்காப்பி ஆற்றிக் கொடுத்தால் பாட்டாவுக்குப் பிடிக்கும். குருவாயூரில் நாராயண பட்டத்திரி, நாராயணீயம் எழுதி ஒவ்வொரு விருத்தமாக வாசிக்கும் போது, உண்ணி கிருஷ்ணன் தலையசைத்து ஆமோதித்துச் சிரிப்பான் என்று சொல்வார்கள். கும்பமுனியின் சிரிப்புக்கும் அதுதான் பொருள் என்று தவசிப்பிள்ளைக்குத் தெரியும்.

கும்பமுனி காப்பியை உறியும்போது, காற்றுப் பறத்திய காகிதத்தை எடுத்து தவசிப்பிள்ளை எழுத்துக் கூட்டிப் படித்தார். தேர்தல் ஆணையத்துக்கு திறந்தவெளிக் கடிதம் என்று தலைப்பிடப்பட்டிருந்தது.

“என்ன பாட்டா, திறந்தவெளிச் சிறைச்சாலை, திறந்தவெளிப் பல்கலைக்கழகம் கேட்டிருக்கேன். நம்ம ஊருலே திறந்த வெளிக்கக்கூஸ் உண்டும். இது என்னது திறந்தவெளிக் கடிதம்? திறந்த கடிதம்எண்ணுல்லா இருக்கணும்?"

“நீ அதை அங்கிண வச்சிக்கிட்டு அந்தால போ என்னா? ஒனக்கசீமைத்தனத்தை எங்கிட்ட காணிக்காதே! ஒரு இலக்கியவாதிக்கு புத்திசொல்ல வரப்பிடாது பாத்துக்கோ….. காலம்பற சொர்ணாவிக்கிட்டு நிக்காமப் போயி அரிசி உப்புமா கிண்டு இண்ணைக்கு…..”

“அது சரி கிண்டீரலாம்…. அதுக்கென்னா? தொள்ளாயிரம் பணமா? நீரு கேட்டதுக்குப் பதிலு சொல்லும்….”

“உனக்கு வியாக்யானம் செய்துக்கிட்டுருக்க எனக்கு நேரமில்ல பாத்துக்கோ…. இங்கிண இருந்து போ மொதல்லே…..”

‘சவம் காலம்பற நாயையில்லா அவுத்து விடுகு’ என்று மனதில் நினைத்துக்கொண்டு, தவசிப்பிள்ளை தம்ளரை வாங்கிக்கொண்டு போனார். அரிசி உப்புமா மிகவும் பிடித்த காலைப் பலகாரம், கும்பமுனிக்கு.

புழுங்கலரிசியை சிவக்க வறுத்து, அம்மியில் வைத்துப் பரக்க நுணுக்கி,

சீனிச்சட்டியில் தேங்காய் எண்ணெய் விட்டு, கடுகு, உளுந்தம் பருப்பு, கறிவேப்பிலை, வத்தல் மிளகாய் போட்டுத் தாளித்து, நறுக்கி வைத்திருந்த சின்ன உள்ளி, பச்சை மிளகாய் போட்டு வதக்கி, இரண்டு தம்ளர் தண்ணீர் விட்டு, கொதித்ததும் உப்புப் போட்டு, ஒரு தம்ளர் பொடித்த மாவு போட்டுக் கிண்டி, மாவு வெந்து தண்ணீர் வற்றியதும் இளம் தேங்காய் நிறையைத் திருவிப் போட்டு இறக்கினால் போதும். அரிசி உப்புமாவுக்கு அரைக்கீரைக் கூட்டு சாலவும் நன்று. அதனினும் நன்று சீனி தொட்டுக்கொள்வதும். அதனினும் நன்று கனிந்த பேயம்பழம் பிசைந்து கொள்வது.

சூடுபொறுக்கப் பொறுக்கத் தின்பார் கும்பமு னி, பல்லுக்கும் வேலையில்லை, வயிற்றுக்கும் கேடில்லை.

புழுங்கலரிசி வறுபடும் வாசனையில் கும்பமுனியின் படைப்புக் குதிரை கனைத்து, கால் பறித்து, கடிவாளக் கயிற்றை இழுத்துத் திமிறியது. கயிற்றைச் சுண்டினால் நளமகாராசனின் புரவி போல நாலு கால் பாய்ச்சலில் ஒடும் போல, கணத்துக்கு நானூறு காதம்.

வழக்கமாக கும்பமுனிக்கு இரண்டு நாளிதழ்கள் வரும். ஆங்கிலத்தில் ஒன்று- ஆற, அமர, ஆழமாக வாசிக்க. தமிழில் ஒன்று - பொருபொருவென்று காரப்பொரி தின்பதைப் போல.

ஆறு மாதம் முன்பு கழுதைச்சந்தை தொகுதி சட்டமன்றஉறுப்பினர் காலையில் நடக்கப் போகும்போது கொடி அறுகம் புல்தடுக்கி விழுந்து, மூக்கா மண்டையில் அடிபட்டு, விழுந்த இடத்திலேயே தமிழ் மரணம் அடைந்தார். நல்ல காலமாக அவர் ஆளுங்கட்சி உறுப்பினர். இல்லையெனில், எதிர்கட்சியினர் CB1, FBI, விசாரணை வேண்டும் என்று கோரிக்கைப் போராட்டம் நடத்தி இருப்பார்கள். வயது எண்பத்தேழு ஆகியிருந்தது இறந்தவருக்கு. எனினும் தமிழ்நாடே மீளாத் துயரில் ஆழ்ந்து விட்டதாகவும் ஈடு செய்ய முடியாத இழப்பு என்றும் கண்ணகி நாட்டின் அரசியல் வானில் ஒளிபொருந்திய இறால் மீன் ஒன்று உதிர்ந்து மறைந்து போனதாகவும் இட்டு நிரப்ப மடியாத வெற்றிடம் என்றும் மேருமலை சாய்ந்து விட்டது என்றும் இரங்கல் செய்திகள் வந்தன.

அந்தத் தொகுதிக்குத்தான் போன மாதம் இடைத்தேர்தல் வந்தது. அதே சாதியினர், அதே கட்சியினர், அதே வாக்காளர், அதே வாக்குச் சாவடிகள், வாரந்தோறும் சந்தைக்கு வரும் அதே கழுதை வியாபாரிகள்,

அதே மனோபாவம்… என்றாலும் அந்த இடைத் தேர்தல் வெற்றியில்தான் இந்தியாவின் எதிர்காலமே நூலிழையில் நான்று கிடக்கிறது என்று ஆளும், எதிர், உதிரிக் கட்சிகள் யாவும் பல்லும் நகமும் கொண்டு போரிட்டுக்கொண்டிருந்தனர். பணம், பதவி, அதிகாரம், சாதி, என்பன அரசியலில் அணு ஆயுதங்கள். முன்பானால் வெளியே தெரியாமல் வீசலாம். இன்று தெரிந்தே வீசலாம், முகத்துக்கு நேரே.

செய்தித்தாள் வாசிக்க வாசிக்க கும்பமுனிக்கு குருதி கொதியாய்க் கொதித்தது. கொதிப்பு, குளிக்க ஒரு பானை வெந்நீர் கூடச் சூடாக்க இயலாதது என்று அவருக்குத் தெரியும். என்றாலும் கழுதை வியாபாரம் என்று ஒரு தொழிலும் மானாவாரிப் பயிர்கள் விவசாயமும் விறகு பொறுக்குவது, மாட்டுச் சாணம், பன்றி விட்டை, கழுதை லொத்தி சேகரிப்பது போன்ற உப தொழில்களும் கொண்டு தொகுதி வாக்காளரின் சராசரி தின வருமானம் நாற்பத்தாறு ரூபாயைத் தாண்டாதநிலையில், ஒரு சின்ன வறுமைப்பட்ட தொகுதியின் இடைத் தேர்தலுக்கு இத்தனை பணம், பட்டாளம், பாவங்கள் என்பது கும்பமுனியின் சுத்த சுயம்பு மக்களாட்சிக் கோட்பாடுகளுக்கு எதிராக இருந்தது. எனவே

‘சுட்டது குரங்கு எரி சூறை ஆடிடக்

கெட்டது கொடிநகர் கிளையும் நண்பரும்

பட்டனர் பரிபவம் பரந்தது எங்கணும்

இட்டஇவ் அரியணை இருந்தது என்னுடல்’

எனும் மனநிலையில் இருந்தார். ஆகவே ஏடெடுத்தார் கடிதம் ஒன்று வரைந்திட ஒரு படைப்பிலக்கியவாதியின் பொறுப்பு கதை எழுதுவதுடன் காலாவதி ஆகி விடுவதில்லை என்பதை அவர் உணர்ந்திருந்தார்.

“வணக்கத்திற்குரிய, மாண்புமிகு, மேதகு, நாவலந் தீவுக் குடியரசின் தலைமைத் தேர்தல் ஆணையர் சமூகத்துக்கு,

மேற்படி சனநாயக, சமத்துவ மதச் சார்பற்ற, இனச் சார்பற்ற, மொழிச் சார்பற்ற, செல்வநிலை சார்பற்ற குடியரசின் கண்ணகி மாநிலத்தின் சட்டத்துக்குப் பணியும் சாதாரணக் குடிமகனும்,ஐம்பதாண்டுகளாகத்

தவறாமல் நாடாளுமன்ற, சட்டமன்ற, ஊராட்சித்தேர்தல்களில் வாக்களிப்பவனும், வருமானமே இல்லாத எழுத்தாளனுமாகிய கும்பமுனி எனும், வேறு அடையாளங்கள் அற்ற நான், தங்கள் சமூகத்தின் மேலான கவனத்துக்கும் பரிசீலனைக்கும் பரிந்துரைக்கும் தகுந்த நடவடிக்கைகளுக்கும் கீழ்க்கண்ட ஆலோசனைகளைத் தெண்டனிட்டு சமர்ப்பிக்க விழைகிறேன்.

மேலும் கீழ்க்கண்டவை யாவும் எனது சொந்தக் கருத்துக்களே அன்றி எந்த அரசியல் கட்சியின், சாதியின், தொழில் நிறுவனத்தின், அயல் நாட்டின் வற்புறுத்தலுக்கு ஆட்பட்டு எழுதுவது அல்ல என்றும் எனது பூரண புத்தி சுவாதீனத்துடன் எழுதப்படுவது என்றும் இதனால் விளையும் சகல நன்மை தீமைகளுக்கும் நானே பொறுப்பு என்றும் உறுதி மொழிகிறேன். இதனை எனது சமையற்காரரும் ஒரே நண்பருமான தவசிப்பிள்ளை கண்ணுபிள்ளை வழிமொழிகிறார். கவனிக்க - இங்கு தவசிப்பிள்ளை என்பது தொழிற்பெயரே அன்றி தகப்பனார் பெயரல்ல.

1. வேட்பு மனுவின் படிவங்கள் எளிதான தகவல்களைக் கேட்டுப் பெற்றால் போதுமானது. வேட்பாளர் பெயர், தகப்பனார் பெயர் வயது, பால், நிரந்தர முகவரி, இந்த நாட்டில் பெரும் பான்மையினருக்கு நிரந்தர முகவரி கிடையாது என்பதால் தற்காலிக முகவரி, தொலைபேசி, அலைபேசி போன்ற விவரங்களே சத்தானவை. வேட்பாளரது சொத்து விவரங்கள், குற்ற வரலாறு, வாக்காளர் பட்டியலில் பெயர் உள்ளதா இல்லையா, முன்மொழிதல், வழிமொழிதல், வருமானச் சான்று, மத - இன - சாதிச்சான்றுகள் என எந்தச் சிக்கலும் தேவையற்றது. மேற்கண்ட எல்லா விவரங்களும் உண்மைக்குப் புறம்பானதாகவும் கட்டிச் சமைக்கப்பட்டதாகவும், காசு கொடுத்து சான்றிதழ்கள் பெறப்பட்டதாயும் இருக்கும் என்பது உமக்கும் எமக்கும் படைத்த பரம்பொருளுக்கும் தெரியும். பிறகெதற்கு இவ்வீண் சம்பிரதாயம்?

2. வேட்பு மனுக் கட்டணத்தை இப்போது உள்ளதைவிட நூறு மடங்கு உயர்த்தி, அது திருப்பித்தரப்பட மாட்டாதது எனத் தீர்மானிக்கலாம். ஒரு வேட்பாளரே எத்தனை நூறு தொகுதிகளிலும் வேட்பு மனு தாக்கல் செய்யலாம். எப்படியானாலும் அரசுக்குத்தானே வருமானம்! நிதியமைச்சரின் நிதிநிலை அறிக்கை மேலும் கவர்ச்சிகரமாக இருக்குமல்லவா?

3. சட்டமன்ற உறுப்பினர் பதவியை டெண்டர் விட்டு, கூடுதல் கேள்வி

உள்ளவருக்கு தொகுதியைத் தங்கத் தாம்பாளத்தில் வைத்து வழங்கலாம். டென்டர் ஒன்றுக்கு திருப்பித் தரப்படமாட்டாத அதிகபட்ச தொகை ஒன்றை முன்பணமாகத் தீர்மானிக்கலாம். எடுத்துக்காட்டாக சமீபத்தில் நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்ற ஆளுங்கட்சி சார்புடைய வேட்பாளர் சுமார் ஐம்பது கோடி செலவு செய்தார் என புலனாய்வு வாராந்தர செய்தி இதழ்கள் தகவல் தரும்போது, அடுத்த இடைத் தேர்தலின் டென்டர் தொகையை பத்து சதமானம் உயர்த்தி, ஐம்பத்தைந்து கோடி என்று குறைந்தபட்சத் தொகையாக நிர்ணயித்து, எந்த வேட்பாளர் அதை விடக் கூடுதல் தொகைக்கு டென்டர் கேட்கிறாரோ அவருக்கு அந்தத் தொகுதியை ஐந்து ஆண்டுகளுக்கு குத்தகைக்கு விட்டுவிடலாம். இதில் தங்கள் தீர்ப்பே இறுதியானது என்றும் அதில் உச்சநீதி மன்றமோ, ஐ.நா. சபையோ கூட தலையிட் முடியாது என்றும் சட்டம் இயற்றலாம். ஒரே தொகையை ஒன்றுக்கு மேற்பட்ட வேட்பாளர் டென்டரில் குறிப்பிட்டிருந்தால், தொகுதியை வயதால் முதியவருக்கோ, சினிமாத் தொடர்பு உள்ளவருக்கோ, தாய் மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவருக்கோ, தாய்மொழியில் பிள்ளைகளுக்குப் பெயர்சூட்டிய வருக்கோ முன்னுரிமை வழங்கித் தீர்மானிக்கலாம்.

4. கடந்த கழுதைச்சந்தை தொகுதி இடைத் தேர்தலில், வாக்காளருக்கு தலைக்கு ஈராயிரம் என்று ஆளும் கட்சியும் ஆயிரம் என்று எதிர்க் கட்சியும் ஐந்நூறு, முன்னூறு, நூறு, ஐம்பது, பத்து என உதிரிக் கட்சிகளும் வழங்கியதாகப் புலனாய்வு வாராந்தரிகள் அறிவித்தன. சில கட்சிகள் வாக்காளரிடம் இருந்தே பணம் பறிமுதல் செய்த தாயும் அறிகிறோம். எனவே ஆணையம் தலையிட்டு வாக்குச் சீட்டின் அதிகபட்ச அல்லது குறைந்தபட்ச விலையை முன்கூட்டியே தீர்மானம் செய்துவிடலாம்.

வாக்காளருக்கு விநியோகமாக வேண்டிய பணத்தை ஆணையமே முன்கூறாகப் பெற்று அரசு நியாயவிலைக் கடைகள் மூலம் மொத்தமாக விநியோகிக்கலாம். அவ்விதம் செய்தால், சில வாக்காளருக்குப் பணம் போய்ச் சேரவில்லை என்றும் ஏஜென்டுகளே அமுக்கிக் கொண்டார்கள் என்றும் சில வாக்காளர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட தவணைகள் பெற்றுக்கொண்டார்கள் என்றும் எழும் புகார்களுக்கு இடமிருக்காது.

5.மக்கள் தொகையை மாநிலவாரியாக, சாதிவாரியாக, துல்லியமாகக் கணக்கிட்டு, ஒரு சாதியில் முப்பத்தொன்பதுக்கும் குறையாத

உட்பிரிவுகள் இருக்கும் என்பதால் அதைப் பொருட்டாக்காமல் பொதுச் சாதியை மட்டும் கணக்கில் கொண்டு, சாதிக்கு இத்தனை உறுப்பினர் என்று ஒதுக்கி, அதனை அந்தந்த கட்சிகளும் போட்டியிட்டு வெல்லலாம். இதனால் தேவையற்ற இனக் கலவரங்கள், பஸ் எரிப்பு, உயிர்க்கொலை, வெட்டு குத்து, ஆசிட் வீச்சு, கையெறிகுண்டு எனும் வீர விளையாட்டுக்களையும் நகரக் கலைகளையும் தவிர்க்கலாம்.

அல்லது ஆணையமே சாதிக்கு இத்தனை என்று தீர்மானித்து திருப்பித்தர மாட்டாத பிணையத் தொகை நிர்ணயித்து, குடவோலை முறைப்படி தீர்மானிக்கலாம். பிணையத் தொகை நிர்ணயிக்கும்போது முற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு நூறு என்றால் பிற்படுத்தப்பட்டவருக்கு எண்பது, மிகவும் பிற்படுத்தப்பட்டவருக்கு அறுபது, தாழ்த்தப்பட்டவருக்கு நாற்பது, மலைவாழ் மக்களுக்கு இருபது, சினிமாக்காரர்களுக்கு இலவசம் என்று உறுதி செய்யலாம்.

6. தேர்தல் நடத்தியே தீர வேண்டிய நிலை எனில், கண்ணகி மாநிலம் முழுக்க 294 தொகுதிகளுக்கும் மூன்று நாட்களில் தேர்தல் நடத்தும்போது காவல் துறையினர், வாக்குப்பதிவு அதிகாரிகள், கள்ளவோட்டுப் போடுபவர் முதலியோர் குப்பம் குப்பமாக இடம் பெயர்வது சிரமமானது, நடைமுறைத் தொந்தரவுகள் கொண்டது. எனவே ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை தேர்தல் எனும் நடைமுறையை மாற்றி, வாரத்துக்குப் பத்து தொகுதிகள் என ஏற்பாடு செய்யலாம். தினசரி ரயில் ஓடுவது போல மின்சாரம் பாய்வது போல் அன்றாட வாழ்க்கையாக ஆகிப் போகும்.

தவசிப்பிள்ளையின் குரல் கேட்டு நிமிர்ந்து பார்த்தார் கும்பமுனி. தீவிரமாக எழுதிவரும்போது, இவனொரு சல்லியம், சொர்க்கத்தில் கட்டெறும்பு போல.

“பாட்டா உப்புமா திங்கேரா?" என்றார் தவசிப்பிள்ளை. பசியும் எட்டிப் பார்த்ததால், “சரி கொண்டாரும்” என்றார். சாப்பிடும்போதும் தேர்தல் ஆணையத்தின் நினைவுதான். நாவலந்தீவில் மொத்தம் முப்பது மாநிலங்கள். எனவே கிட்டத்தட்ட, ஏறத்தாழ, உத்தேசமாக, சுமார் ஏழாயிரத்துச் சொச்சம் சட்டமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட வேண்டியவர்கள். ஆண்டில் முன்னூற்று அறுபத்தைந்து நாட்களிலும் தினம் இருபது தொகுதிகளுக்குத் தேர்தல் நடத்தலாம். ஆணையத்துக்கு என்று தனியான காவல்துறை, தேர்தல் அதிகாரிகள், நீதி மன்றங்கள் வைத்துக் கொள்ளலாம் என்று தோன்றியது. உப்புமா தின்று, தண்ணீர்

குடித்து, கை வாய் கழுவி, ஒரு தரத்துக்கு வெற்றிலை போட்டுத் துப்பிவிட்டு பேனாவைக் கையில் எடுத்தார்.

எடுத்தது கண்டார், இற்றது கேட்டார் எனும் வேகத்தில் கடிதம் ஓடியது.

7. காவல் துறையினரைக் குற்றம் சொல்லிப் பயனில்லை. அவர்கள் ஆணைக்கு பணிபவர்கள். கேள்வி கேட்க இயலாது. பட்ச பாதத்துடன் நடப்பதைத் தவிர்க்க இயலாது. எனவே வேற்று மாநிலக் காவலர்களைத் தேர்தலுக்கென நியமிக்கலாம். எடுத்துக் காட்டாக கண்ணகி மாநிலத்துக்கு காளி மாநிலத்தில் இருந்தும் பகவதி மாநிலத்துக்கு அம்பாபாயி மாநிலத்தில் இருந்தும் பணியில் அமர்த்தலாம். அப்போதும் பரீட்சார்த்தத்தில் ஒத்துவராவிட்டால் ஐ.நா. சபையில் இருந்து Peace Keeping Force இறக்குமதி செய்து சட்ட மன்றத் தொகுதிகளில் அணிவகுப்பு நடத்தலாம். பார்த்த பார்வையில் அவர்களுக்கு கட்சி, சாதி, ஏழை - பணக்கார வேறுபாடுகள் தெரியாது. மேலும் சட்டமன்ற உறுப்பினர், நாடாளுமன்ற உறுப்பினர், அமைச்சர், அமைச்சர்களின் அக்கா, தங்கச்சிகள், மைத்துனிகள், மாமியார்கள், மருமகள்கள், மகள்கள் என எவர் சொன்னாலும் P.K.F. கேட்க மாட்டார்கள். ஒரேயொரு இடர் உண்டு, அது தமிழ் ஈழத்தை நினைவுபடுத்துவது.

8. தேர்தல் நடக்கும் தொகுதிக்கு வாக்காளர் தவிர்த்த பிறர், பணி நிமித்தமோ, வணிக நிமித்தமோ, வழிபாடுகளுக்கோ, காது குத்து, சடங்கு, சீமந்தம் என்றோ போய்த்தான் தீர வேண்டும் என்போருக்கு கடவுச் சீட்டுகள் வழங்கலாம். கடவுச் சீட்டுக்கு, ஒரு தேர்தலுக்கு மட்டும் செல்லத்தக்க விதத்தில் கணிசமான கட்டணம் வசூலிக்கலாம்.

9.கள்ள வாக்காளர்களை Justice of Peace என்பது போன்ற கௌரவப் பதவியாக அங்கீகரித்து அரசே ஒரு பட்டியல் வெளியிட வேண்டும். அவர்களுக்கு அரசு முத்திரையுடன் அடையாள அட்டை வழங்க வேண்டும். அவர்கள் நிரந்தர அங்கீகாரம் பெற்றவர்கள் ஆன படியால், எந்தத் தொகுதியிலும் எந்தத் தேர்தலிலும் வாக்களிக்கலாம். அரசியல் கட்சிகள் தங்கள் பலவகைப்பட்ட பலங்களை உபயோகித்து - பண பலம், பெண்பலம், சாதிபலம், சினிமாவில் நடிக்கும் வாய்ப்பு என - தத்தம் தேவைக்கு வசீகரித்துக் கொள்ளலாம். ஒரு தொகுதியின் தேர்தல் முடிவைத் தீர்மானிப்பவர் என்பதால், அவர்களுக்கு இலவசப்பயணச்சீட்டு, தங்கும் வசதி, தினப்படி, சீருடை, வாகனம் ஆகியவற்றை அரசே வழங்கலாம். ஆனால் கள்ள ஓட்டுப் போடும் கௌரவ உறுப்பினர் அட்டை மாற்றத் தக்கதோ, பதிலி செய்யத்

தக்கதோ அல்ல என்பதில் விட்டு வீழ்ச்சி இல்லை.

10. மாநிலத்தின் கள்ள வாக்காளர்களின் மொத்த எண்ணிக்கை, மாநிலத்தின் மொத்த வாக்காளர் தொகையை தொகுதிகளின் எண்ணிக்கையால் வகுத்து வரும் ஈவை விட அதிகமாக இருக்கலாகாது. அதாவது கண்ணகி மாநிலத்தின் வாக்காளர் தொகை மூன்று கோடியே இருபத்தைந்து லட்சம் என்றால் அதை இருநூற்றுத் தொண்ணூற்று நாலால் வகுத்து வரும் ஈவு லட்சத்து பத்தாயிரத்து ஐந்நூற்று நாற்பத்து நான்கு. கள்ள வாக்காளர்களின் மாநிலப் பட்டியலின் எண்ணிக்கை இது. இதில் பத்து சதமானத்துக்கு மேல் ஒரு தொகுதியில் கள்ள வாக்காளர் வாக்களிக்க அனுமதி இல்லை. அதாவது ஒரு தொகுதியில் பதினொன்றாயிரத்து ஐம்பதுக்கு மேல் கள்ள வாக்காளர் இருக்கலாகாது. இந்தக் கள்ள வாக்காளர்களைச் சுழற்சி முறையில் தீர்மானிக்க வேண்டும்.

கும்பமுனி தொடர்ந்து எழுதினால் தவசிப்பிள்ளைக்கு எப்போதும் கன்றுக் குட்டியைப் பிரிந்த பசுப்போல ஒரு பரிதவிப்பு இருக்கும். எத்தனை தரத்துக்கு வெற்றிலை சவைத்துத் துப்பினாலும் வாய் ‘மொணமொண’ வென்று வரும். நிற்கப் பொறுதி இல்லாமல் படிப்புரைக்கு வந்து எட்டிப் பார்த்தார். மணி பதினொன்றுதான் ஆ இருந்தது. கஞ்சி வைக்க இன்னும் நேரம் இருந்தது.

“பாட்டா எழுதி முடிஞ்சா?”

“ஒனக்கு என்னடா இப்பம் வேவலாதி? வண்ணான் ஆட்டுத் தலைக்குப் பறந்த மாதிரி கெடந்து பறக்கியே! இன்னும் கொஞ்சம் எழுதக் கெடக்கு…. சரி, அது இருக்கட்டும். நம்ம கழுதைச்சந்தை தொகுதியிலே வருசத்துக்கு எத்தனை பேருக்குச் சாக்காலம் வரும்டே?”

“மனுசாளு மாத்திரமா, இல்ல ஆடு, மாடு, கோழி, நாயி, களுத, காக்கா எல்லாம் சேத்தா?”

“தாயளி மருந்துக்கு மோளச் சொன்னா நீ மண்ணுல இல்லா மோளுவே? மனுசாளு மாத்திரம் சொல்லு….”

“ஒம்ம சர்க்கார்லே எனக்கு ஜனன மரண கணக்கெடுப்பு ஆப்பீசர் உத்தியோகம்லா, நான் கணக்கு வய்க்கதுக்கு?”

“ஒரு உத்தேசமாச் சொல்லும் வே...”

“இல்லாட்டாலும் எழுத்தாளன் கணக்கே உத்தேசக் கணக்கு தாலா.... தோராயமா ஒரு ஆயிரம் போட்டுக்கிடுமே!”

“அது சரியாட்டு இருக்குமா வே? லெச்சம் பேருக்கு வருசத்துக்கு ஆயிரம் பேரு சாவானா?”

“சாவாட்டா இருந்துட்டுப் போட்டும். இது என்ன எழவாட்டு வந்து சேந்து? அரிசி அத்தா சாவான். ஒமக்கு என்ன பாழாப் போகு?"

“அதுக்கில்ல ஒய்! ஒரு கணக்கு வேணும்லா?”

"அப்பம் நம்ம பக்கத்தூரு பார்வத்தியக்காரரை நாளைக்கு கேட்டுச் சொல்லுகேன்.... அவுருக்குத் தெரிஞ்சிருக்கும்....”

“அவுரு சும்ம கேட்டா சொல்லுவாரா?”

“சும்ம கேட்டா சொல்லுகதுக்கு அவுரு எனக்க அம்மாச்சனா? நாலு மட்டம் நடக்க வைப்பாரு... ஒரு அர்ஜி எழுதித் தரச் சொல்லு வாரு... அதுலே அஞ்சு ரூவாய்க்கு கோர்ட் பீஸ் ஸ்டாம்பு ஒட்டச் சொல்லுவாரு. மேக்கொண்டு காப்பிச் செலவுக்கு அம்பது நூறு கேப்பாரு... பின்ன எனக்க போக்குவரத்துக்கு கார்ச் செலவு... வெள்ளக்குடி செலவு.... முறுக்கான் செலவு.... எல்லாமாட்டு ஒரு இருநூறு ரூவா கழத்தும்....”

“சவம், முழுசாட்டு ஒரு ஐநூறு ரூவா நோட்டாக் கேளேன். அப்பிடிச் செலவாக்கதுக்கு நமக்கு பல்கலைக்கழக மானியமாடே வருகு... ஒசுக்கு ஊவன்னா போட வேண்டியதிருக்கு.... சவத்தை விட்டுத் தள்ளு.... அதை சர்க்கார் கண்டுபிடிச்சுக்கிடும்.....”

“சர்க்கார் நொட்டுகது எம்புட்டுண்ணு தெரியாதா உமக்கு.... களக்காடு காட்லே நூத்தி அறுவத்தெட்டு புலி இருக்குண்ணு சர்க்கார் சர்வே பொஸ்தகத்திலே இருக்காம். ஆனா உண்மையிலே ஆறுதான் இப்பம் கெடக்காம். அதும் எந்திரிச்சு நடக்க முடியாத பருவத்திலே, கெழடாயிப் போயி.... நாங்கலு, தூங்கலு, நட தாந்தது, கூன் குருடு, குண்டு பாஞ்சது...”

“ஒமக்கு யாரு வே சொன்னா?"

“ஏன்? எழுத்தாளர்களுக்குத்தான் சர்வமும் தெரியுமோ? நாங்க பேப்பர் படிக்கதில்லையோ?"

“சரி சரி…. ஒரு கட்டடங்காப்பி போதும்…. இன்னுங் கெடக்கு ஒருவாடு எழுதுகதுக்கு….”

பக்க எண்ணையும் வரிசை எண்ணையும் சரிபார்த்தார் கும்பமுனி.

11. ஒரு தேர்தலில் வாக்காளர் கணக்கெடுப்பு முடிந்த பிறகு, மறுகணக்கெடுப்பு வருவதற்கு இடையில் தேர்தல் வந்தால், குறிப்பிட்ட தொகுதியின் இறந்த, ஊர் விட்டுச் சென்ற, வாக்களிக்க ஆரோக்கியம் அனுமதிக்காத வாக்காளர்களை எண்ணி எடுத்து அவற்றை கள்ள வாக்காளர் வாரியத்திடம் ஒப்படைத்தல் வேண்டும். ஆக, கள்ள வாக்காளர் வாரியம் அமைப்பது அத்யாவசியமானது என்பதும்அதற்கு தேர்தலில் தோற்றுப் போன கட்சிக்காரரை நியமிப்பதே சட்ட ரீதியானது என்பதும் அறிக.

12. இந்த ஏற்பாடுகள் எல்லாம் மிகுந்த செலவு. மேலும் ஆள், அம்பு, சேனை என்று ஏகப் பிரச்னைகள், நடைமுறைச்சிக்கல்கள். ஒரு நாள் உற்பத்தி, வியாபார இழப்பு. விவசாய முடக்கம். மேலும் மக்களுக்கு இரைச்சல், குப்பை, போக்குவரத்து நெரிசல், மூலக்கடுப்பு. இவற்றைத் தவிர்க்க தேர்தல் ஆணையம் மொத்த சட்டமன்ற உறுப்பினர் பதவிகளையும் ஏலத்தில் விடலாம். இன்று மறைமுகமாக அரசியலில் ஆள் பிடிக்கும் பன்னாட்டு, நாவலந்தீவு நன்னாட்டு பெருநிதிநிலை நிறுவனங்கள், அரசியல் கட்சிகளைப் போல நேரடியாகவே ஏலத்தில் பங்கு பெற்று, தங்களுக்கு விருப்பமானவர்களை நியமித்துக் கொள்ளலாம். எவரும், எங்கும் எதிர்த்துக் கேட்க முடியாது. அவ்விதம் நிறுவனங்களால் ஏலத்தில் பிடிக்கப்படும் உறுப்பினர்கள் மாநில நலன், தொகுதி நலன், தமது குடும்பத்தார் நலன்களுடன் அந்தந்த நிறுவனங்களின் நலன்களுக்காகவும் பாடுபடுவார்கள். மொத்தம் 294 தொகுதிகளையும் ஒரே கட்சி அல்லது ஒரே நிறுவனம் மொத்தமாக ஏலத்தில் பிடிக்க வசதி இருக்காது என்பதனால் இருபது இருபது தொகுதிகளாகப் பிரித்து ஏலம் விடலாம். எப்படியும் கூட்டணி ஆட்சிதான் என்கிறபடியால், நாடு அதனால் ஏற்படும் சிக்கல் எதனையும் உணர வாய்ப்பில்லை.

13. சமீபத்திய இடைத் தேர்தலுக்கு வெல்லும் வாய்ப்புடைய கட்சி செலவழித்த தொகை ஐம்பது கோடி என்கிறார்கள், விபரம் தெரிந்த

வட்டாரத்தார். மற்ற வேட்பாளர்களின் செலவு, அரசின் நிர்வாகச் செலவு, ஒருநாள் விடுமுறை காரணமாக தொழில் வருமான இழப்பு எல்லாம் கூட்டினால் தேர்தல் செலவுக்கு தொகுதிக்கு உத்தேசமாக நூறு கோடி ரூபாய் எனில், கண்ணகி மாநிலத்தின் மொத்த சட்ட மன்றத் தேர்தல் செலவு 29,400 கோடி. தோராயமான கணக்கில் வாக்காளருக்கு 9046 ரூபாய். இது நாவலந்தீவு வாசியின் ஆண்டின் சராசரி வருமானமான Per capita Income - ஐ விடவும் சில மடங்கு அதிகம். ஆனால் இது மக்கள் வரிப்பணம் அல்லது மக்களின் வாயில் இருந்து பிடுங்கிப் பறித்த பணம். இதை எதற்கு அநாவசியமாகச் செலவு செய்ய வேண்டும்? எனவே மொத்த சட்ட மன்ற உறுப்பினர்களையும் மத்திய தேர்தல் ஆணையமே நியமனம் செய்து விடலாம். மாநில ஆளுநர் நியமனம் என்பதொரு முன்மாதிரியும் நமக்கு உண்டு.

14. மாநில சட்ட மன்ற உறுப்பினர்களை நியமனம் செய்யும் போது, பதவிக்காலம் அவர்களது ஆயுட்காலம் என்றும் ஆயுட்காலம் முடிந்த பின்பு அவர்களது சட்டபூர்வமான அல்லது சட்ட பூர்வமற்ற வாரிசுக்கு என்றும் தீர்மானித்தால், தொடர்ந்து செலவுகளைத் தவிர்க்கலாம். மக்கள் நிம்மதியாக எப்போதும்போல பேன் பார்ப்பார்கள், பல் குத்துவார்கள், மாறி மாறிச் சொறிவார்கள், சினிமா, சின்னத்திரை பார்ப்பார்கள், சாப்பிடுவார்கள், உறங்குவார்கள், இனவிருத்தி செய்வார்கள்.

15. கண்ணகி மாநில 294 சட்டமன்ற உறுப்பினர்களில் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அவர்களுக்குள் 50 சதமானம் பெண்கள், 69 சதமானம் பிற்படுத்தப்பட்டோர், 30 சதமானம் குற்றப் பின்புலம் உடையவர், 48 சதமானம் சினிமாக்காரர், 10 சதமானம் முதிர்ந்த அரசியல்காரர்களின் வாரிசுகள் எனத் தமக்குள்ளே பிரித்துக் கொள்வது நல்லது. பின்பு உச்ச நீதி மன்றத்தின் நேரத்தைக் கெடுக்க தேவையற்ற வழக்குப் பதிவுகளைத் தவிர்க்கலாம். அங்கு நாவலந் தீவின் விடுதலைக்கு முன்பு பதிவான வழக்குகளே இன்னும் தீர்ப் பெழுதப் படாமற் கிடக்கின்றன என்கிறார்கள்.

16. பரீட்சார்த்தமாக எமது கண்ணகி மாநிலத்தில் இவற்றை அமல் படுத்தவும் தொடர்ந்து பிற மாநிலங்களுக்கு விரிவு படுத்தவும் பின்பு நாடாளுமன்றத் தேர்தலுக்கு செயல் படுத்தவும் செய்யலாம். மேற்கண்ட அமலாக்கங்களின் போது இந்தத் திட்டங்கள் எதிர்ப்படும் குறைகளையும் களையலாம்.

இடையில் ஒருமுறை செலவாதிக்குப் போக எழுந்தார் கும்பமுனி.

முறுக்கான் போட்டுத் துப்பினார். அடுக்களையில் தவசிப்பிள்ளை என்ன செய்கிறார் என்று எட்டிப் பார்த்தார். திரும்பிப் பார்த்த தவசிப்பிள்ளை கேட்டார்.

“பாட்டா, என்னா, தொயந்த எழுத்தாட்டுல்லா இருக்கு?”

“ஆமடே! இந்தக் கடிதம் நாட்டையே ஒரு குலுக்கு குலுக்கப் போகு பாரு...”

“ஏன், பூகம்பம் உண்டாயிருமா?"

“பின்னே, அவ்வளவு செறுக்கிவிள்ளைகளையும் செவளை செவளைண்ணுல்லா வாங்கீருக்கேன்.”

“அப்பம் இந்தச் சென்மத்திலே ஒரு பய ஒம்மைச் சீந்தமாட்டாம்.”

“சீந்தாண்டாம் ஓய்.... ஆனா கெவர்னர் பதவி கெடைச்சாலும் கெடைக்கும் பாத்துக்கோ.”

“இப்பமே நீரு கெவர்னர் மாதிரி தாலா!”

“ஓ! அப்பிடி வாறேரா? அதும் சரிதான்!”

கடிதத்தை முடித்துவிடலாம் என்று தோன்றியது. என்றாலும் ஒரு சரத்து விடுபட்டுப் போனதையும் உணர்ந்தார். சடாரென அதைஎழுதலானார்.

17 நூறு வாக்காளர்கள் தொகுதிக்கு எனில் அதில் ஐம்பத்திரண்டு பேர் வாக்களிப்பதும் நாற்பத்தெட்டுப் பேர் விடுமுறையைக் கொண்டாடியவாறு வீட்டில் உட்கார்ந்து சின்னத்திரையில் நடிகைகளின் குலுக்கல்களைக் காண்பதுவும் முறையன்று. இது இருபத்தேழு வாக்குகள் பெற்றவன் வென்று ஆண்டு அனுபவிக்கவும் இருபத்தைந்து வாக்குகள் பெற்றவன் நான்று கொண்டு நிற்கவும் ஏது செய்கிறது. அதாவது நூற்றுக்கு இருபத்தேழு வாக்குகளைப் பெற்றவன் மொத்த நாட்டையும் ஆள்கிறான். இதுதான் நாவலந்தீவின் ஜனநாயகம் என்பது எத்துணை வெட்கக்கேடு! எனவே வாக்களிப்பதைக் கட்டாயமாக்க வேண்டும். நாட்டில் எங்கும் எப்போதும் வாக்களிக்க வசதியும் வீட்டிலிருந்தவாறே வாக்களிக்க நடமாடும் வாக்குச் சாவடிகளும் வேண்டும். அப்படியும் வாக்களிக்காதவர்களுக்கு

குறைந்தது ஆறு மாதம் சிறைத் தண்டனை விதிக்கலாம். மேலும் வாக்களிப்பவர்களை ஊக்குவிக்க அவர்களுக்கு தலைக்கு ஒரு பிறவாமாமணி விருது வழங்கலாம். விருதுப் பட்டயத்தில் விருது பெறுபவரின் பெயரைப் பொறித்துவிட்டால், அது குப்பையில் கிடந்தால் அவர்மீது நடவடிக்கை எடுக்கத் தோதர்க இருக்கும்.

மேதகு ஐயா, ஒரு பரீட்சார்த்தமாகவே தற்போது மேற்கண்ட பரிந்துரைகளை உங்களுக்கு தெரிவிக்கிறேன். இதில் மக்கள் மனோபாவம் எப்படி இருக்கும் என்று நீங்கள் யோசிப்பதும் எமக்குப் புரிகின்றது. மக்களைப் பற்றி நீங்கள் கவலைப்படவே வேண்டாம். அவர்கள் வெயிலில் போட்டால் காயவும் நீரில் போட்டால் நனையவும் காற்றில் போட்டால் பறக்கவும் தீயில் போட்டால் கருகவும் தயாராக இருப்பவர்கள். அவர்களுக்கு வேண்டியது சொந்த ஆதாயம். நியாவிலைக் கடைகள் மூலம் தலைவார ஒரு சீப்பு இலவசமாகக் கொடுத்தால் கூட அவர்கள் அரசை வாழ்த்தவும் வணங்கவும் தயாராக இருப்பவர்கள். அதற்காக முட்டி, மோதி, இடிபட்டு, நெரிபட்டு, கேட்டை உடைத்து, சுவரேறிக் குதித்து, மிதிபட்டுச் சாவதையும் பொருட்படுத்த மாட்டாதவர்கள்.

மேலும் நீங்கள் ஊடகங்கள் பற்றியும் கவன்று தங்கள் பொன்னான உள்ளத்தைப் புண்படுத்திக் கொள்ள வேண்டாம். அரசியல் காரர்கள், சினிமாக்காரர்கள், பெருமுதலாளிகள், வியாபாரிகள், ஊடகக்காரர்கள் எல்லோரும் ஒன்றுக்குள் ஒன்றான ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள்தான். சொக்காரர்கள், தர்ப்பைப் புற்கள்.

இன்னுமொரு வேண்டுகோள்!

இதனை எழுதுகிற கும்பமுனியாகி நான் போக்கும் புகலும் அற்றவன், வயோதிகன், நோய்ப் பட்டவன், குடும்பம் குட்டி கிடையாது. ‘ஊரிலேன், காணி இல்லை, உறவு மற்றொருவரில்லை. அடித்துப் போட்டாலும், ஆசிட் வீசினாலும் நள்ளிரவில் ஆட்டோ வந்தாலும் ஏனென்று கேட்க நாதி இல்லாதவன். இரண்டு செல்லத் தட்டுகளையே என்னால் தாங்க இயலாது. எனவே எனது முகவரியைத் தாங்கள் ரகசியமாக வைத்துக்கொள்ள வேண்டும். முக அடையாளம் எனக்கு ஏற்கனவே கிடையாது என்பது உங்களுக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை.

எனது பரிந்துரைகளில் ஏதும் பொருளோ பயனோ இருப்பதாக நீங்கள்

கருதினால் சமீபத்தில் காலியாகும் சட்டமன்றத் தொகுதிகளில் ஒன்றுக்கு என்னை நியமனம் செய்யலாம். நாவலந் தீவின் எந்த மாநிலம் ஆனாலும் போதும். மருத்துவப்படிப்பு, ஐ.ஐ.டி, ஐ.ஐ. எம். போல இதிலும் தாங்களுக்கு என கோட்டா இருக்கும் தானே!

அவ்விதம் நியமனம் செய்யும் பட்சத்தில் எனது ஒரே சொந்தமும் பந்தமுமான தவசிப்பிள்ளை கண்ணுபிள்ளைய்யை, எனது பதவிக்காலம் முடியும் வரை எனது பிரதம உதவியாளராகவும் சமையற்காரராகவும் வைத்துக்கொள்ள அனுமதிக்க வேண்டும். எனது காலத்துக்குப் பிறகு எனது வாரிசாக தவசிப்பிள்ளையைத் தொடர்ந்து சட்டமன்ற உறுப்பினராகச் செயல்படவும் அனுமதிக்கக் கோருகிறேன்.

இங்ங்னம்

இந்த தேசத்துக்கு வேறேதும் செய்ய இயலாத

ஒய்வு பெற்ற ஏழை எழுத்தாளன்

கும்பமுனி

கழுதைச்சந்தை

131313133

மும்முரமாக எழுதிக் கொண்டிருந்த கும்பமுனி, சமீபகாலமாக நெடுநேரம் படித்தாலோ, எழுதினாலோ, வடியும் கண்ணின் நீரைத் துடைத்துக் கொண்டார். சாப்பிடக் கூப்பிட வந்த தவசிப்பிள்ளை, கடைசிப் பக்கத்தை எடுத்துப் படித்தார்.

“அப்பம் எம்.எல்.ஏ. வீட்டிலே விருந்து குடுத்தா, சுடுகஞ்சியும் காணத் துவையலுமா?”

“அதுக்கு என்ன ஓய்? அதுதானே நமது தேசிய உணவு?”

டிச்ம்பர் 2007

***

13. சங்கிலிப் பூதத்தான்

பெயர் சங்கிலிப் பூதத்தான் என்றாலும் அழைப்பது சங்கிலிப் பூவத்தான் எனும் மருவிய வழியில்தான். நீங்கள் எண்ணுவதுபோல, பூதத்தாழ்வானுக்கும் பூதத்தானுக்கும் எத்தொடர்பும் இல்லை. பூதத்தாழ்வான் வைணவ அடியான், காலத்தால் பிற்பட்டவன். கடல் மல்லையில் அவதரித்து நூறு பாசுரங்கள் அருளிச் செய்தவன். பூதம் என்பது பேய் பிசாசு அல்ல: இறைத்தூதன் அல்ல: கந்தர்வன் அல்ல. பூதம் என்பது ஈண்டு நிலம், நீர், காற்று, ஆகாயம், தீ எனும் பஞ்ச பூதமும் அல்ல. பூதம் என்பது சிவ கணம். சிவ கணங்கள் கோபத்தினாலோ சாபத்தினாலோ பூமிக்கு அனுப்பப்படும்போது அவை பூதங்களாகி விடுகின்றன.

தீயவர்களைத் தூக்கி அப்படியே விழுங்கும் பூதம் ஒன்றுண்டு. அது நாற்சந்தியில் நிற்கும் சதுக்கப்பூதம். அதற்கு இலக்கியச் சான்று உளது. அது நமது சங்கிலிப் பூதத்தானுக்கு பெரியப்பா மகன் என்பார்கள். இதைச் சொல்லும் என்வசம் ஆதாரம் ஏதும் கிடையாது.

அன்று லட்சம் பேருக்கு ஒன்று எனும் விகிதத்தில் சதுக்கப்பூதம் என்றொரு ஏற்பாடு இருந்திருக்கும் போல. தீயவர் எனில் கயவர், நயவஞ்சகர், ஏமாற்றுபவர், பித்தலாட்டம் செய்பவர், கொள்ளையர், திருடர், கொலைகாரர், காமக்கொடுரர், எத்தர் என நீண்டதொரு பட்டியல். அன்று லட்சம் பேருக்கு இருபது தீயவர் எனும் வீதம் இருந்திருக்கலாம்.... தீயவரை விழுங்கியே சதுக்கப்பூதம் பசியாற்றிக் கொள்ள வேண்டும். அன்றெல்லாம் அது ஆறாத பசியுடன் இருந்திருக்க வேண்டும்.

அந்த வீதம் நூற்றுக்கு இருபது எனும் விதத்தில் அதிகரித்துவிட்டதாலும் நகரங்கள் தொகை பெருகிவிட்டதாலும், நகரங்களில் மக்கட் தொகை பெருகிவிட்டதாலும், சதுக்கப் பூதங்கள் பணியில் புதியதாக நியமிக்கப் படாததாலும், ஊழியத்தில் இருந்த சதுக்கப் பூதங்கள் சில ஓய்வு பெற்றுவிட்டதாலும் சில சாப விமோசனம் பெற்று கைலாயத்தில் தாய் இலாகாவுக்குத் திரும்பி விட்டதாலும், இன்று தீயவரைக் கேள்வி கேட்பாரில்லை.

அரசாணை ஒன்றின் மூலம் மாநிலங்கள் புதிய சதுக்கப் பூதங்கள், நடமாடும் சதுக்கப் பூதங்கள், மகளிர் மட்டும் சதுக்கப் பூதங்கள்

பெருவழிப் பாதையில் விரையும் சதுக்கப் பூதங்கள் என நியமிக்கப்பட்டால் தீயவர் தொகை சற்றுக் குறையக்கூடும்.... ஆனால் அரசாணைகள் கைலாயத்தில் எடுபடுவதில்லை. உண்மையில் சனநாயக சோசலிசமதச் சார்பற்ற குடியரசில், பக்கத்து மாநிலத்திலேயே எடுபடுவதில்லை. மேலும் கையூட்டு வாங்காத சதுக்கப் பூதங்கள் பணியில் இருந்தால் அரசாணைகளை ஏவும் ஆளும் இனமே அழிந்து போகும் வாய்ப்பு அதிகம். ஆளும் இனம் என்பது, ஆள்கிற கட்சி, ஆண்ட கட்சி, ஆளப்போகிற கட்சி, ஆளவே போகாத கட்சி, அண்டிப் பிழைக்கும் கட்சி, அண்டிக் கெடுக்கும் கட்சி, தலைவரைத் தவிர ஆளே இல்லாத கட்சி, தலைவரே இல்லாத கட்சி, ஆழியில் எழும்பும் அலைபோல் உருவாகக் காத்திருக்கும் கட்சி என சகல பிரிவினரையும் உள்ளடக்கிய இனம்.

நாம் சங்கிலிப் பூதத்தான் கதையை விட்டு சதுக்கப் பூதத்தின் கதைக்கு நழுவி வந்துவிட்டோம். தவிர்த்து விட்டுத் தடத்துக்குத் திரும்பலாம்.

இருபத்தேழு தெய்வங்கள் என்பன நாட்டார் தெய்வங்களின் சிறு குறுந்தொகை. இந்த இருபத்தேழு உறுப்பினர்கள் இடத்துக்கு இடம் வேறுபடுவதும் உண்டு, எனினும் சிலர் மட்டும் நிரந்தர உறுப்பினர்கள். செக்யுரிட்டி கவுன்சில் போல. பெரும்பாலும் எல்லாச் சிற்றூர்களிலும் தென் மாவட்டங்களில் இந்த இருபத்தேழு தேவதைகளின் பீடங்கள் உண்டு. அஃதெப்படி ஒரே தேவதை ஒரே சமயத்தில் பல இடங்களில் குடியிருத்தல் இயலும் எனக் கேட்பது புரிகிறது. நீங்கள் வழிநடத்தப்பட்டு வருகிற விதத்தில் அந்தக் கேள்வி இயல்பானதுதான். இதில் எதிர்க்கேள்வி ஒன்றுண்டு. எவ்விதம் நீரும், நிலனும், காலும், தீநாக்கும், நீள்விசும்பும் ஒரே நேரத்தில் எங்கும் நின்று அருள் செய்கின்றன?

இருபத்தேழு தேவதைகளின் நிரந்தர உறுப்பினர்களில் ஒருத்தன் சங்கிலிப் பூதத்தான். அவனை சமஸ்தன் சங்கிலிப் பூதத்தான் எனகதைப் பாடல்களும் வில்லுப் பாட்டின் வெவ்வேறு வடிவங்களும் பாடும். சங்கிலிப் பூதத்தான் பூமிக்கு வந்தது பற்றி ஆறேழு பாடல் வடிவங்கள் உள்ளன என்பார்கள். அவை இப்போது அத்தியாவசியமானவை அல்ல. ஆனால் அவர் வாங்கி வந்த வரம் எனது கதைப் பிரதேசம்.

சிறு தெய்வங்கள் ஏதாவது காரணம் பற்றி, கோரிக்கை சார்ந்து, பூமியில் தோன்றும் போது அவர்களுக்கு பரமசிவனோ பார்வதியாளோ கை நிறைய, மடி நிறைய ஏகப்பட்ட வரங்கள் வழங்கி அனுப்புவார்கள்.

கொல்ல வரம், வெல்ல வரம் என்று.

சங்கிலிப் பூதத்தானின் வரம் பெரு நிதியம். கருப்பட்டி கருப்பட்டியாகத் தங்கக் கட்டிகள். அதிலும் உடங்குடி கருப்பட்டி என்றால் சின்ன வட்டுக்களாக பனந்தூர் நிறத்தில், சின்னத் தேங்காய் முறி அளவில் இருக்கும். சூரங்குடி கருப்பட்டி எனிலோ தேன்நிறத்தில் பருவட்டாக தொலிக்காத விம்மிப் புடைத்த பருந்தேங்காயைப் பாதியாக வெட்டி வைத்ததுபோல இருக்கும்.

பெரியதோர் கடாரம் நிறைய தங்கக் கருப்பட்டிகளாக பூதத்தானுக்கு வரம் அருளினார் முக்கண் முதல்வன். அதைப் பூதத்தான் தொலைத்துவிடாமல் இருக்க, கடாரத்தின் பக்கவாட்டில் இரு வளையங்கள் அமைத்து அந்த வளையங்களை அரையங்குல தங்கச் சங்கிலிகள் மூலம் இரு கால்களிலும் கிடந்த தங்கத் தண்டைகளோடு பிணைத்திருந்தார். ஆகப் பூதத்தானின் கழல்கள் தங்கம், சங்கிலி தங்கம், சங்கிலி முடிவின் வளையம் தங்கம், கடாரம் தங்கம், கடாரம் நிறைந்த கருப்பட்டித் தங்கம்.

அவற்றை கிராம் கணக்கிலோ, பவுன் கணக்கிலோ, கிலோ கணக்கிலோ சொல்வதென்பது எனக்கு சாத்தியம் இல்லை. சொக்கத் தங்கத்தின் சந்தை விலை மாத்திரம் இன்று கிராமுக்கு எண்ணூரற்றுத் தொண்ணூறு என்பது நினைவுக்கு வருகிறது.

கண்ணப்பப் பணிக்கரின் அறுத்தடிப்புக் களத்தில் இருபத்தேழு தேவதைகளுக்கும் பீடங்கள் இருந்தன. களம், வான் பெரிய களம். ஒரு பக்கம் மாட்டுத் தொழுவம். மறுபக்கம் இருபெரும் வைக்கோற்படப்புகள் கூட்டும் இடம். எதிரே உழவுச் சாமான்கள் போட்டு வைக்கும் புரை. உழவுச் சாமான்கள் எனில் பொடிக் கலப்பை, தொழிக்கலப்பை, கோடிக் கலப்பை, நுகம், வள்ளைக்கை, பொடி மரம், தொழிமரம், பொழித்தட்டுப் பலகை, கோடி மண்வெட்டி, கட்டை மண்வெட்டி, ஊடு மண்வெட்டி, களை பறண்டி, கோடரி, வெட்டுக் கத்தி, பன்னரிவாள், பொலியளவு மரக்கால், கொத்து மரக்கால், தொடைக்கயிறு, கொச்சக்கயிறு, எலிக்கலயங்கள், கடவம், பெட்டி, இறை வட்டி, குட்டை, தட்டுக் குட்டை, தவிட்டுச்சாக்கு, உப்புச்சாக்கு, பித்தளைப் போணி, செம்புக்குடம், காலிச்சாக்குகள், சாட்டைக் கம்பு, உழவு கம்பு, கலப்பைக் குத்திகள், காளைகளின் கழுத்து மணிகள், கொட்டம், வேப்பெண்ணெய்க் கிண்ணம்.

களத்தின் கன்னிமூலையில் வேப்பமரத்து மூட்டில் இடுப்பளவு உயரத்தில் மேடை அமைத்து பகரவடிவில் இருபத்தேழு சாமிகளுக்கும் பீடங்கள்.

சுடலை மாடன், சுடலைப் பேய்ச்சி, புலை மாடன், புலை மாடத்தி, கழுமாடன், முண்டன், இசக்கியம்மன், காளியம்மன், முத்துப் பட்டன், முத்துப் பேய்ச்சி, வியர்வை புத்திரன், மாடன்தம்புரான், பூதத்தான், சங்கிலி பூதத்தான் என மேலும் நீளுமோர் பட்டியல் அது.

உண்மையில் இருபத்தேழு பீடாதிபதிகளுக்கும் கண்ணப்பப் பணிக்கருக்கும் யாதொரு பந்தமும் இல்லை. அவர் அந்தக் களத்தை கும்பப் பூவில் வாங்கியது, பூமுகத்து வீட்டு மூத்தபிள்ளை குடும்பத்தாரிடம் இருந்து. அந்தக் குடும்பத்தில் இருபத்தேழு பீடங்களுக்கும் இருபத்தேழு சாமி கொண்டாடிகள் அவகாசிகள். சாமிகளுக்கான உடைகள், சல்லடம், கச்சை, பட்டம், பாய்ச்சல் கயிறு, தொப்பி முதலியனவும் முழு அங்கி, முகமலர், கண்மலர், கடயம், மாலை, திருநீற்றுக் கொப்பரை என்பனவும் ஆயுதங்களாக வெட்டரிவாள், வீச்சரிவாள், கத்தி, சூலம், தண்டம், குந்தம், ஈட்டி, கதை, சலாகை, சுருட்டு வாள் ஆகியனவும் அந்தந்த பீடம் கொண்டாடிகளான ஆராசனைக்காரர் வீடுகளின் அரங்குகளில் கன்னி மூலைகளில் சாத்திவைக்கப் பட்டும் சாமிப் பெட்டிகளினுள்ளும் கிடந்தன.

மூத்த பிள்ளை வகையறாக்கள் கால மாற்றங்களினால் விலையாதாரம், மறு ஆதாரம், ஈட்டாதாரம், ஒழிமுறி என எழுதி எழுதிச் சோர்ந்து போயினர். இந்தக் களம் கடைசிப் பொதுக் கையிருப்பு. இனி குடியிருக்கும் வீடுகளும் சோற்றுப் பாட்டுக்கான வயல்களும் பாக்கி. எல்லாச் சாமிகளும் தமது கொண்டாடிகளை தலையைப் பிடித்துத் தண்ணீரில் அமிழ்த்தி மூச்சு முட்டச் செய்து கொண்டிருந்தனர். அடிக்கடி ஒலிக்கும் அசரீரி ஒன்று, ‘சிவன் சொத்து குல நாசம்' என்று கூவிச் சென்றது.

மூத்தபிள்ளை வகையறாக்கள் அறுத்தடிப்புக் களத்தை விலை ஆதாரம் எழுதும்போது, கண்ணப்பப் பணிக்கரிடம் போட்டதோர் நிபந்தனை, சாமிகள் குடியிருக்கும் பீடங்களை இடித்து மாற்றக்கூடாது என்பதும் வழிபாட்டுக்கான தமது குடும்பத்தார் நடமாட்டத்தை கட்டுப் படுத்தலாகாது என்பதும்.

பீடம் என்பது சாமிக்கான உருவ அடையாளம். பெரும்பாலும்

சுடுசெங்கல் நட்டு, வெவ்வேறு உருவ வடிவங்களில் மண் சாந்து பூசி, மஞ்சணை அப்பியது. கூரை இல்லை, சுற்று அளி இல்லை, கதவு இல்லை, பூட்டும் இல்லை, திறப்பும் இல்லை. கால் சென்று மனையை அடைத்துக்கொண்டு கிடக்கிறது என்பதைத் தவிர சாமி பீடங்களினால் பணிக்கருக்கு வேறு தொந்தரவு ஏதும் இல்லை.

ஊர் அம்மன் கோயிலில் கொடை வந்தால் பீடங்களின் திருமேனி பூசி, புது மஞ்சணை சாத்தி, அரளிமாலை போட்டு, கமுகம் பூக்குலை சாய்த்து வைத்து, வாழை இலையில் தேங்காய், பழம், வெற்றிலை, பாக்கு, அவசியப்பட்டவருக்கு சுருட்டு, வாற்றுச் சாராயம் எனப் படைப்பார்கள். வீட்டில் பிறந்த நாள், நிச்சயதார்த்தம், ஆடிஅமாவாசை, தை அமாவாசை என்றால் அரிசிப் பாயசம் வைத்து சகல பீடங்களுக்கும் இலைத் துண்டுகளில் அரை அகப்பை படைப்பதுண்டு. எப்போதாவது பொங்கலிட்டு சேவல் அறுப்பதுண்டு. பாயசம் ஆறிய பிறகு, ஆள்நடமாட்டம் ஓய்ந்ததும் காக்கை, குருவி, மைனா கொத்திக் கொண்டு போகும்.

விருப்பம் போல் வழிபாடு செய்து கொள்ளும் உரிமையை கண்ணப்பப் பணிக்கர் அந்தக் குடும்பத்தினருக்கு வழங்கி இருந்தார். மேலப் பத்தில் சுடலைமாடன் தோப்பு கைமாறியபோது, மேலும் ஒரு தென்னங்கன்று வைக்கலாம் என்ற ஆசையில், தோப்பின் நடு நாயகமாக நின்ற சுடலைமாடன் கற்சிலையைப் பெயர்த்து வேலியோரம் போட்ட எட்டாவது நாள், தோப்பை வாங்கியவருக்கு நாக்கு இழுத்துக்கொண்டது என்ற கிலி கண்ணப்பப் பணிக்கர் மனதில் வேரூன்றி கப்பும் கவருமாக வளர்ந்திருந்தது.

பீடங்களுக்கு நிழலாக நின்ற வேம்பில் கும்பப் பூவில் குழையும் அரக்குவதில்லை. ஆடிமாதம் பழுத்து உதிரும் வேப்பம் பழங்கள் தின்ன கிளிகள் பறந்து வரும் கூட்டம் கூட்டமாக, பெரிய திருமொழி கூறுகிறது, 'வேம்பின் புழுவேம்பன்றி உண்ணாது' என.

அறுத்தடிப்புக் காலங்களில் பீடங்களின் மேடை அடிவாரத்தில், வேப்பமர நிழலில் துண்டு விரித்து காற்றாட அமரவும் அலுப்பாக இருந்தால் சற்றே கைமடித்துத் தலைக்கு வைத்துச் சாயவும் கண்ணயரவும் பணிக்கருக்குக் கொடுத்து வைத்திருந்தது.

சிலசமயம் அவிழ்த்துவிட்ட பசுங்கன்றுகள் பீட மேடையில் குதித்து ஏறி மஞ்சணையை முகர்ந்து பார்த்து, வாலுயர்த்தி மீண்டும் கீழே குதிக்கும்.

தீண்டக்காரிகள் பீடங்களின் முன்னால் நடமாடுவதில்லை, மூவந்திக் கருக்கலில் குளித்துத் தலை முழுகி, பூவைத்து வெள்ளி செவ்வாய்களில் பெண்கள் குறுக்கே நடமாடுவதில்லை.

சுடலை மாடன், கழு மாடன், புலை மாடன் போல சங்கிலிப் பூதத்தான் உயிர்ப்பலி கேட்கும் தேவதை அல்ல. அரிசிப் பாயசம் படைத்தாலே சந்தோசம் எதுக்களிக்கும் சைவச்சாமி. நிதியமே அவர் பேராயுதம், போராயுதம்.

மற்ற தேவதைகள் போலன்றி சங்கிலிப் பூதத்தான் உலா வருவதற்கான கால நிர்ணயம் இருந்தது. பால் போல் நிலாவடிக்க பார்வதியாள் பந்தடிக்கும் பின்னிரவுகளில் சந்தனமும் சீதளமும் குழைந்து மணமடிக்கும், தென்றல் பூப்பூவாய் உதிரும் நேரத்தில், நிலவன்றி மற்றெல்லாம் நீண்ட நித்திரை கொள்ளும் மூன்றாம் யாமத்தின் தொடக்க காலத்தில்....

கனத்த கடாரத்தை இழுத்துக்கொண்டு, கடாரமும் சங்கிலியும் மோதி, கடாரம் தரையில் உராய்ந்து 'சலங் சலங்'' கென ஒலி எழுப்பி, பூதத்தான் வீதி உலா வருவான். தமிழில் ஏகப்பட்ட உலாக்கள் உண்டு. மூவருலா, திருக்கயிலாய ஞான உலா, குலோத்துங்க சோழன் உலா என இன்று வரை யாரும் சங்கிலிப் பூதத்தான் உலாப் பாடவில்லை.

வரம் கோரிப் பெற்ற பெரு நிதியத்தை தொல்லாயிரம் ஆண்டுகள் இழுத்துத் திரிவதில் சலிப்புற்று தலை முழுகினால் போதும் என்ற விரக்தி கொப்பளிக்க சில போதுகளில் உலா வருவான். இந்தச் சிறிய தொரு கடாரத்துக்கே இந்தப் பாடு என்றால் சங்க நிதி பதும நிதி என உலகத்து நிதிகளைக் கையாளும் குபேரன் கதி என்ன என்று தோன்றும்.

சங்கிலிப் பூதத்தானைப் பார்த்தால் மற்ற இருபத்தாறு பீடத்துத் தேவதைகளுக்கும் சற்று அனுதாபம், சற்று எரிச்சல், சற்று இளக்காரம். அவன் உலாப் போகையில் எண்ணிரண்டு பதினாறு திக்குக்களிலும் திசை காவல் கொள்ளும் தெய்வங்களுக்கு கூடுதல் இளக்காரம். மற்றும் தேரடி மாடன், சூலைக்கரை மாடன், பாலத்தடி மாடன், கல்லுக்குழி மாடன், செக்கடி மாடன், மாட்டுத் தொழு மாடன், வண்டிப் புரை மாடன், படித்துறை மாடன், பன்றி மாடன், மாடாக்குழி மாடன் என எல்லா மாடன்களுக்கும் ‘கிளுகிளு’ வென அடக்கமான நகையொலி.

உலா முடிந்து திரும்பியதும் அனுசரணையாகக் கேட்பவள்

வண்டிமலைச்சி ஒருத்திதான்.

“என்னப்போ, இண்ணைக்கும் பாரம் தொலையல்லியா?" என்பாள்.

மற்ற பீடாதிபதிகள் எவருக்கும் கடாரம் வேண்டாம். அவரவர் சுமைகள் அவரவர்க்கு முண்டன் ஏழாண்டுகளாக கரகரத்த முக்காரம் மட்டும் செய்துகொண்டு கிடக்கிறான். பேய்ப்பாறை மந்திரவாதி, மலையாளத்தான், முண்டன் வாயைக் கட்டிப்போட்டு விட்டான். இன்னும் ஐந்தாண்டுகள் இருக்கின்றன, கெடு முடிந்து அவன் வாய் திறக்க சில நூற்றாண்டுகளுக்கு முன்பு காட்டாக் கடையில் இருந்து வந்தான் வேறொரு மந்திரவாதி. சங்கிலிப் பூதத்தான் அன்றே வீழ்ந்திருக்க வேண்டும் கண்ணியில். நல்லூழ், முத்துப் பட்டன் குரலில் வந்து விலக்கியது. இன்று நினைத்தாலும் சங்கிலிப் பூதத்தானுக்கு சங்கிலி உதறுகிறது.

பொதுவாகவே பூதத்தான் வகையறாக்களைப் பொதுமக்கள் அஞ்சுவதில்லை. நாச்சியார் புதுக்குளத்துக் கரையில் காவல் செய்யும் பூதத்தான், தாடகை மலைப் பத்தின் நடுவில் திரட்டில் இருக்கும் பூதத்தான், அம்மன் கோயில் பூதத்தான் என ஆங்கு ஒரு குடும்பக்காரர்கள் இருந்தனர். என்றாலும் ஒரு ஏளனம், வெறும் பச்சரிசிப் பாயசக்காரர்கள் என கொடுமையை அஞ்சுகிறவன் குணத்தைக் கொண்டாடுவதில்லை.

'கழலாடப் பேயாடு கானில் பிறங்க அனலேந்தித் தீயாடும்? சிவனோ எனில் துன்பம் தெரிந்தவனாகக் காணோம். இல்லை,தெரிந்தும் உள்நகை கொண்டு திரிந்தவாறும் ஆகும்.

எப்போது வேண்டுமானாலும் கைமாறலாம் கடாரத்தை. ஆனால் பெறுபவர் நல்லவராக இருத்தல் வேண்டும். அது ஆணானாலும் பெண்ணானாலும் கடாரம் இழுபடும் ஓசையில் துயில் நீத்து கண் விழியாமல் முன்னகர்ந்து வந்து, கூர்ங்கத்தி கொண்டு இடது கைச்சுண்டு விரல் கிழித்து சில சொட்டுக்கள் குருதி பலி செய்ய வேண்டும்.

நல்லவர் என்பதற்கு என்ன அடையாளம் என வினவ, அழலாட அங்கை சிவந்தவன் சொன்னான், தென் திசையில் தெய்வமாப்புலவன் எனவோர் சமண முனிவனுண்டு. ஆயிரம் ஆண்டு முந்திப் பிறந்ததனால் கழுவேறாமல் தப்பியவன், அவனிடம் போய்க் கேள் என்று.

சமணமுனி உரைத்தான் - நல்லவர் என்பார் கள்ளுண்ணாதவர், பிறன் மனை நோக்காதவர், புலால் மறுத்தவர், பொய்யுரையாதவர், எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டு ஒழுகுபவர், இடுக்கண்களைபவர், முகத்திரண்டு கண்ணுடையவர்….

நீண்டதொரு பட்டியல் இருந்தது வள்ளுவனிடம். இரண்டாயிரம் ஆண்டுகள் பிந்திப் பிறந்திருந்தால் குண்டெறிந்தாவது கொன்றிருப்பர். புலால் மறுத்தலில், கள்ளுண்ணாமையில் சக பீடாதிபதிகளே அடிபட்டுப் போய் விடுவார்கள்.

நல்லவர் சிலர் இல்லாமல் இல்லை. ஆனால் அவர்கள் ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்கினர். எவ்வகையிலும் பொருளாசை இல்லை அவர் வசம். ஆழ்ந்த துயிலில் இருந்த வேறு சில நல்லவருக்கு கடாரம் இழுபடும் ‘சலங் சலங்’ஓசையில் அறிதுயில் ஆயிற்று. சற்று ஆசையும் வந்தது. ஆனால் எந்த நல்லவன் உறங்கும்போது பக்கத்தில் கூர்ங்கத்தி வைத்துக்கொள்வான்? மேலும் இருட்டில் தப்பித் தடவி கத்தி எடுத்து, சங்கிலிப் பூதத்தான் முன்னால் போய் நின்று கத்தியை நிமிர்த்து விரலைக் கிழிக்கும்போது அயத்து மறந்து கண்ணைத் திறந்து விட்டால் நூறு மின்னல் ஜோதியின் முன்னால் கண்ணும் அவிந்து கருகியும் போய்விட மாட்டோமா?

சோம்பேறியான மற்றும் சிலர், “எல்லாம் கட்டுக் கதைங்கேன்… சங்கிலியாம், பூவத்தானாம், கிடாரமாம்…. சுத்தப் பைத்தாரப் பயக்கோ…. அப்படியே இருந்தாலும் நமக்கெல்லாமா கிடைக்கப் போகு? நம்ம யோக லெச்சணந்தான் தெரிஞ்சிருக்கே!” என்றார்கள்.

உறங்குபவரை எழுப்பி, வலியக் கொண்டு கொடுத்தாலும் தங்கக் கருப்பட்டியையும் பித்தளை என்று உரைத்துப் பார்ப்பார்கள்.

தாம் நல்லவர், 'நல்லவர் அன்றி வேறில்லை என்று சாதிக்கும் இனம் ஒன்றிருந்தது நாட்டில். ஆனால் அவர்களிடம் தலைக்குப்பத்துக் கடாரங்கள் அளவுக்கு முறைகேடாய்ச் சேர்த்த செல்வங்கள் இருந்தன. குட்டிக் குபேரர்கள்… பூதத்தானுக்கு இழுத்துத் திரிந்து அலுத்துவிட்டது. தப்பாகப் போய்விட்டது வரம் கேட்டது. வரம் கேட்பதிலும் நுணங்கிய தெரிவு வேண்டும். செல்வம் என்பது சிந்தையின் நிறைவே என்றிருக்க வேண்டும். முழுத் தேங்காயை குக்கல் கொண்டு நடந்ததைப் போல அடுத்தவனுக்கும் தராமல், தானும் தின்னாமல் –

'சே! என்ன நேரத்தில் வாயில் வந்ததோ, பெரு நிதியம் என்று? வேறேதோ மூல ஆதார சுருதி நாவில் நின்று இடறியதோ!'

'மாமலை அணைத்த கொண்மூப் போலவும் தாய் முலை தழுவிய குழவி போலவும்' நிலவொளியைத் தழுவிக் கிடக்கலாம் என்று தோன்றியது சங்கிலிப் பூதத்தானுக்கு.

பூழியான் ஊமைச் சிரிப்பாணி சிரித்துக்கொண்டுதான் வரம் அருளி இருப்பான். வரத்துக்கு விமோசன மாற்றுக் கேட்கவும் மறந்து போய்விட்டது. அந்த நேரத்தில் காலக்கெடுவும் கேட்க இயலவில்லை. இனியும் எத்தனை நூற்றாண்டுகள் இப்படித் தொடர்ந்து இழுத்துக் கொண்டு கிடப்பது!

நிலவொளியை நீங்க மனமில்லை. கைகளையும் கால்களையும் நாணமின்றி வீசி நடப்பது எக்காலம்? புன்னை கொல்லென்று வெண்முத்துக்களாய்ப் பூத்து மணத்தது. புன்னம் பூவை மாலை கட்டித் தலையில் இளையார் சூடுவதுமில்லை, வளையார் கொய்து மாலை கட்டி அணிவதும் இல்லை. என்றாலும் பருவந் தவறாது பூக்கிறது புன்னை. இரண்டாம் சாமங்களின் கதை முடிந்து பிச்சிப்பூவின் கசங்கிய வாசம் காற்றில் கலந்து கிடந்தது. பெருச்சாளிகள் இரண்டு எதிர்வந்து, மறுகி, ஓடிப் பொந்துக்குள் மறைந்தன.

திருவோட்டைத் தலைக்கு வைத்து, வீட்டுப் படிப்புரை ஒன்றில் பண்டாரம் ஒருத்தன் படுத்திருந்தான். குறட்டை ஒலி இரண்டாம் கட்டையில் பேசியது. காலம் அடித்துத் துவைத்த கருங்காலிக் கட்டை போலத் தெரியவில்லை. ஊன் தடித்து வளர்ந்திருந்தது. ஞானக் கண்ணால் சற்று உற்றுப் பார்த்தான் சங்கிலிப் பூதத்தான். அயலூரில் அவன் குடும்பமும் கல்யாணத்துக்கு நிற்கும் மூன்று பெருங் குமருகளும் தெரிந்தனர். துறவை ஒரு தொழில் போலச் செய்கிறான் போல. சேவையைப் பலரும் ஒரு தொழிலாகச் செய்வதைப்போல.

'எப்படியும் தொலைந்து போகட்டும்! திருவள்ளுவர் அகராதிப் படி நல்லவனாக எந்த மானுடன் கிடைப்பான்? அயல் தேசத்தில் ஞானியொருவன் பகலில் விளக்கு கொண்டு மனிதனைத் தேடினானாம். பண்டாரத்தின் தரித்திரமாவது நீங்கட்டும். உத்தேசமாக நல்லவனாகவே தெரிகிறான், வேடம் புனைந்ததையும் யாசகம்பெறுவதையும் தவிர, குறைந்தபட்ச அயோக்கியத் தனங்கள் செய்யாமல் இன்று வாழ்தல் இயலுமா? இன்னும் எத்தனை காலம் கடாரம் இழுப்பது' என்றெல்லாம்

எண்ணி பண்டாரத்தின் பக்கம் போய் நின்றான் சங்கிலிப் பூதத்தான்.

இலேசான அதட்டல் குரலில் சொன்னான், “வே! எந்திரியும்… கண்ணைத் தொறக்கப் படாது. சொல்லுகது படி செய்யும். நான் சங்கிலிப் பூதத்தானாக்கும்…. கடாரம் நெறைய கருப்பட்டி கருப்பட்டியாதங்கம் வச்சிருக்கேன்…. பிச்சாத்தி வச்சிருக்கேரா? எடுத்து கண்ணைத்தொறக்காம, இடது கைச் சுண்டு விரலைக் கீறி அஞ்சாறு சொட்டுரெத்தம் விடும்….”

அரை உறக்கத்தில் பண்டாரம் சொன்னான் - 'தங்கக் கருப்பட்டியை விக்க முடியுமா வே… பண்டாரம் கொண்டு குடுத்தா எவம் வாங்குவான்? புடிச்சு உள்ள் போட்டுருவான்…. ஆயிரம் ரூவாநோட்டுக் கெட்டா இருந்தாச் சொல்லும். உறக்கத்திலே செறைப்படுத்தாதையும்….”

சங்கிலிப் பூதத்தான் சற்று நேரம் பொறுத்துப் பார்த்தான். புரண்டு படுத்த பண்டாரம் ஒன்றரைக் கட்டையில் குறட்டைக்கு சுதி சேர்த்தான்.

மிகவும் சோர்வாக இருந்தது. மறு படிப்புரையில் சற்று நேரம் உட்கார்ந்தான். வயதான காலத்தில் ஒதம் பெருத்ததைப் போல, கால்களை அகட்டி நடந்த களைப்பு. ‘நிதியம்’ என்பதை ‘நீதி’ என்றோ 'காதி’ என்றோ கேட்டுப் பெற்றிருக்கலாம். அப்படித்தான்.அமைச்சுகளை செல்வாக்குப்படி கேட்டுப் பெறுகிறார்கள். அல்லது இராவணனைப் போல, முக்கோடி வாழ்நாளும் முயன்றுடைய பெருந்தவமும் முதல்வன் முன்னாள் ‘எக்கோடி யாராலும் வெலப்படாய்' என்றொரு வரம் கேட்டிருக்கலாம். எல்லாம் புத்திமோசம். என்றாலும் சொல்கிறார்கள், அரிசிப் பாயசம் குடிப்பவர்கள் சூது மிகக் கொண்டவர்கள் என.

செத்தாலும் ‘புரந்தார் கண் நீர் மல்கச்’ சாக வேண்டும். என்று செத்தொழிவான் இவன் என சொல்வாக்கு கேட்கக்கூடாது.

எப்போதும் சிவந்தவாறிருக்கும் சங்கிலிப் பூதத்தானின் கண்கள் மேலும் சிவந்தன. அது போதைச் சிவப்பல்ல, காமச் சிவப்பல்ல. நெடுநேரம் துழைந்து நீராடிய சிவப்பல்ல. நோவின் சிவப்பு. தொண்டைக் குழியிலிருந்து சிறியதொரு கேவல் பறிந்தது. பூதம் குலுங்கி அழுதது. காற்றொன்று கிளம்பி மரங்களைக் குலுக்கியது. புட்கள் அகாலத்தில் சப்தித்தன. குழந்தைகள் பாலுக்கு அழுதன. குமருகள் காமத் துடிப்பில் திடுக்கிட விழித்துத் திரும்பவும் துயின்றனர்.

மிகவும் சோர்ந்து துவண்ட முன்னொரு நாளில், சிவக்கட்டளையையும் மீறி, தீயாய் வெயில் கனலும் உச்சிப் பகற் பொழுதில் கடாரத்தை இழுத்துக்கொண்டு நடந்தான். நல்லவர் எனில் ஆணானால் என்ன, பெண்ணானால் என்ன? கடாரம் கை மாறினால் போதும். நல்லவர் வாழும் வீடுபோல் தோன்றிய வாசல் முன் சென்று, “அம்மா, தாயே! நான் சங்கிலிப் பூதத்தான் வந்திருக்கேன்” என்றான். உள்ளே –‘நூலா, தாலியா' என்றொரு மெகா சீரியலின் 10,497-வது எப்பி சோடு ஓடிக்கொண்டிருந்தது.

“கை சோலியாட்டு இருக்கேன், பொறவாட்டு வா” என்றொரு தாய்க்குரல் கேட்டது.

முளை அறைந்து கட்டப்பட்டது போலாகிவிட்டது. படிப்புரையில் சற்று கால் நீட்டிப் படுக்கவும் நீதமில்லை. அட்டினக்கால் போட்டு அமரவும் தோதில்லை. வட்டச் சம்மணம் போட்டு இருக்கவும் ஒக்காது. எப்போதும் சபரிமலை ஐயப்பன் போல யோக அமர்வு. அல்லது கால்களைத் தொங்கவிட்டு, படிப்புரையில் அமர்வதுபோல.

‘நாய் பெற்ற தெங்கம் பழம்’ என்றோர் வரி ஓடியது புந்தியில். நிலவு நீர்க்க ஆரம்பித்தது. இனி இவ்விதம் படிப்புரையில் அமர்ந்து களைப்பாற இயலாது. மேலும் உலாப் போவதும் உசிதமல்ல. கள வொழுக்கத்தார் தமது கூடடையும் நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது.

கால் சோர்ந்து, மெய் சோர்ந்து, மனம் சோர்ந்து, பீடங்கள் இருந்த கண்ணப்பப் பணிக்கர்களத்துக்குத் திரும்பினான் சங்கிலிப் பூதத்தான். மற்ற பீடாதிபதிகள் - உலா முடிந்து வந்தவர், உலாப் போகாதவர், உலாப் போகத் தேவை அற்றவர் என யாவரும் விழித்திருந்தனர். வேட்டை முடித்து, வெற்றிலைக் கொலுப் பூண்டு, உல்லாசமானதோர் மனநிலையில் இருந்தாள் வண்டி மலைச்சி. காற்று கனிந்து எறிந்தது.

வண்டி மலைச்சி, மிகுந்த கரிசனத்துடன் கேட்டாள்"என்ன மக்கா, இண்ணைக்கும் யாவாரம் ஆகல்லியா?"

“இல்ல சித்தி. வள்ளலார் சொன்னது போல, கடை விரித்தேன் கொள்வாரில்லை. வெட்டி அலைச்சலு நான் எங்கிண போயி முட்டட்டும். சொல்லு…. கெட்டவனுக்குக் குடுக்கப் பிடாது, நல்லவனுக்கு இது வேண்டாம். தில்லை மாநகர் சிற்றம்பலவன் நம்மளை இப்படி கண்ணியிலே கொருத்து விட்டுட்டாம் பாரு….”

“மக்கா, ஒண்ணு சொன்னா கேப்பியா? பேசாம கைலாயத்துக்கே திரும்பக் கொண்டுக்கிட்டுப் போயிரு.... அப்பந்தான் ஒனக்கு துன்பம் தீரும் பாத்துக்கோ.... இது ஈணவும் கழியாது நக்கவும் கழியாதுங்க கதையாட்டுல்லா இருக்கு....

“என்னுண்ணு கொண்டுக்கிட்டுப் போக சித்தி? எத்தன ஆயிரம்வருசமாச்சு? வழி கூட மறந்து போச்சு.... இப்படியாப்பட்ட பாவி ஆகீட்டேனே!”

“அதொண்ணும் பெரிய காரியமில்லே.... அப்பர் போன பாதை ஒண்ணு உண்டும். காரைக்கால் அம்மை போன பாதையும் ஒண்ணு உண்டும். யாரும் கேட்டா சொல்லுவா... மதுரைக்கு வழி வாயிலே... இண்ணைக்கு வேண்டாம். ரெம்ப சடைவாட்டுல்லா இருக்கும். நாளை பகல் பூரா ஒரு கண்ணுக்கு ஒறங்கு. ராத்திரி முதல் சாமம் முடிஞ்சதும் பொறப்பிடு.....”

'விண்ணோர் அமுதுண்டும் சாவ ஒருவரும்

உண்ணாத நஞ்சுண்டு இருந்து அருள்’

செய்யும் கைலாயத்தான் மட்டுமே தனது சுமையை இறக்க இயலும் என்று தோன்றியது சங்கிலிப் பூதத்தானுக்கு. எல்லோர் சுமையையும் அவன்தானே ஏற்றுகிறான், அல்லது இறக்குகிறான்.

கூடவே வேறொன்றும் தோன்றியது அவனுக்கு. கைலாயம் போய்விட்டால் திரும்பி வருவோமோ, மாட்டோமோ! இங்கு கண்ணப்பப் பணிக்கரின் களத்துப் பீடத்தை வேறு எவரும் ஆக்ரமிப்பு செய்துகொள்ள மாட்டார்களா?

மேலும் தை அமாவாசைக்கு இன்னும் ஆறேழு நாட்களே இருந்தன. கடைசியாக ஒரகப்பை அரிசிப் பாயசம் குடித்துவிட்டுத் தீர்மானிக்கலாம் என்றும் தோன்றியது.

நவம்பர் 2007

***

14. பழி கரப்பு அங்கதம்

முல்லைப் புங்கனூர் சங்கரலிங்க அண்ணாவி இசைப் பரம்பரையில் வந்தவர் வாகைக்குளம் முத்தநல்லாப்பிள்ளை எனும் மகாவித்வான். திருவிதாங்கூர் சித்திரைத் திருநாள் பாலராம வர்மா மகாராஜா அரசவையில் பாடி பட்டு சால்வையும் நவரத்தின கண்டி ஆரமும் சன்மானம் பெற்றவர். பஞ்சலிங்கமங்கலம் பாவநாசம் அவரது மூத்த புதல்வர். பாலபாடம் தகப்பனாரிடம், பலமான அஸ்திவாரம். மீதி சிட்சை திருநாவாய் பரம்பரையில் வந்த சிம்மம் சிவாநந்தம் பிள்ளையிடம். விசேடமான சில கீர்த்தனைகளை காளிகேசநல்லூர் கந்தையா பிள்ளை பாகவதரிடமும் அழகிய மங்கலத்து யக்ஞ நாராயண சாஸ்திரிகளிடமும் கற்றுத் தேர்ந்தார். வேய்ங் குழலிலும் பரிச்சயம் உண்டு என்றாலும் வாய்ப்பாட்டுத்தான் பிரதானம்.

ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபதில் இருந்து இசையுலகின் சக்ரவர்த்தி அவர் கிரீடமும் செங்கோலும் சிம்மாசனமும் கொடியும் குடையும் முரசும் பட்டத்து யானையும் புரவியும் இல்லாவிட்டால் என்ன? பஞ்சம் பாட்டில் பேரரசர்தான்? சினிமாப் பாட்டைத் தாண்டி இசை கேட்பவர்களுக்கு அவர் பெயர் தெரியாமல் இருக்க நியாயமில்லை. இன்றும் இசையுலகில் பயபக்தியுடன் உச்சரிக்கப் படும் பெயர்களில் ஒன்று பஞ்சம்.

மதுரை சோமசுந்தரத்துக்குப் பிறகு பெருந்திரளான ரசிகப் பட்டாளம் உடையவர் பஞ்சம். இளவயதில் பூதலிங்க சுவாமி கோயில் பிரகாரத்தில் பாடியதைக் கேட்டு, பூதப்பாண்டி சோணாசல அண்ணாவி தோளோடு தழுவிக்கொண்டு “சிங்கம் டா” என்று சொன்னதாகச் சொல்வார்கள்.

கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, நாமக்கல் கவிஞர் பாடல்கள் சிலவற்றை சுரப்படுத்திப் பாடி அவற்றைப் பிராபல்யப் படுத்திய பெருமை பஞ்சத்துக்கு உண்டு. பஞ்சலிங்க மங்கலம் என்றாலும் பாவநாசம் என்றாலும் இசைப் பிரியர்கள் அறிவார்கள். என்றாலும் அவரை வெகு செல்லமாக 'ரஸிகாஸ்’ அழைக்கும் பெயர் பஞ்சம் என்பது. இங்கு பஞ்சம் என்பதை வறுமை எனும் பொருளில் கையாளாமல் ஐந்து எனும் பொருளை 'வாசகாஸ்’ எடுத்துக்கொள்ள

குருநாதர் பாடிக்காட்டிய வரியில் நின்று பிறழாமல் பாடுவார்கள். குரு நாதனுக்கு எந்த இடத்தில் எப்படி சங்கதி விழுந்ததோ சீடனுக்கும் அந்த இடத்தில் அப்படியே சங்கதி விழும். தும்மல்கூட விழும்.

பஞ்சலிங்கமங்கலமோ வெகு கல்பனைகள் கொண்டவர். நிறைய வித்வான்கள் தனக்கு தமிழ் எழுதப் படிக்கத் தெரியாது என்பதையே குடியரசுத் தலைவர் விருதுபோல் சட்டையில் கொருத்துத் திரிபவர்கள். ஆனால் பஞ்சலிங்கம் சொந்தமாகக் கீர்த்தனைகள் இயற்றவும் சுரப்படுத்தவும் பாடிப் பிரபலப்படுத்தவும் புலமை உடையவர்.

சென்னையில், ஒரு டிசம்பர் சங்கீத சீசனில் வெவ்வேறு சபாக்களில் வெவ்வேறு பாடகிகள் “என்றைக்கு சிவ க்ருபை வருமோ?” என்று பாடியது கேட்கக் கிடைத்திருக்கிறது. ஆனால் அது, என்றைக்கு ரேஷனில் கிஷ்ணாயில் வருமோ எனும் பாவத்தில் இருந்தது. ஆனால் பஞ்சம் அப்படியல்ல. சுத்தமான பாவம் அவரிடம் பெருக்கெடுத்துப் பாயும். இங்கும் ஒரு சிறு குறிப்பு. பாவம் என்பதை 'பாக்கு’ போல் உச்சரித்துப் பொருள் கொளாமல், 'பாம்பே’ போல் உச்சரித்துப் பொருள் கொளல் வேண்டும்.

சுத்தமான இசைப்புலமை போல, பஞ்சத்துக்கு நல்ல மொழி ஆர்வமும் உண்டு. சில சமயம் பொங்கல், புத்தாண்டு, தீபாவளி மலர்களில் அவரது கவிதைகளை நீங்கள் கண்ணுற்றிருக்கலாம். பெரும் பான்மையான நமது தொழில்முறைக் கவிஞர்கள் எழுதுவதை விட அது மோசமாக இருக்காது. குடியரசுத் தலைவர்கள், பல்கலைக்கழகத்துணை வேந்தர்கள், நீதிபதிகளின் மனைவிகள், மருமகள்கள் எழுதுவதையும் நீங்கள் கணக்கில் எடுத்துக்கொள்ளலாம்.

என்றாலும் பஞ்சம் சமயங்களில் தனது ஆங்கில அறிவையும் புலப்படுத்த பிரயாசைப்படுவார். இன்று சங்கீத உலகில் அஃதோர் குணப்படுத்த முடியாத சமூக வியாதிபோலப் பரந்து விட்டது. நூற்றுக்கு நூறு சதவீதம் தமிழ் தெரிந்தவர் சபையில், The next composition is of Thyagaraja, in the raga Atana, set to Adi Thala என்பார் பஞ்சம். தெலுங்கு கன்னட கீர்த்தனைகளையும் மராத்தி 'அபங்’களையும் கேட்டுப் புரிந்துகொள்கிறவர்கள் தானே எனும் எண்ணம் எழாதோ என்னவோ! இல்லை சான் ஃபிரான்சிஸ் கோவில் பாடிக்கொண்டிருப்பதாகத் தோன்றுமோ என்னவோ? கர்நாடக இசை மும்மூர்த்திகள் ரசிகர்களின் திருச்செவி சாற்ற வேண்டும்!

மூத்த சங்கீத வித்வான், பிதாமகன், ஆயிரம் பிறை கண்ட கணியான் குளம் சின்னையா பாகவதர், பஞ்சத்தைப் பற்றிக் கூறிய பாராட்டு, “நல்லாப் பாடவும் செய்கிறான், ஏகமா சம்பாதிக்கவும் செய்கிறான்” என்பது.

பஞ்சம் போய் வராத மேநாடு இல்லை. இந்தியக் கடவுச் சீட்டுசெலாவணி ஆகிற எல்லா நாட்டுக்கும் போய் வந்திருக்கிறார். இன்னும் ஐக்கிய நாடுகள் சபையில் பாடுவதற்கான வாய்ப்பு மட்டும் வரவில்லை. நாடாளுமன்றத்தில், சட்டமன்றங்களில், மடாதிபதிகளின் சந்நிதானத்தில், ஆதீனங்களில், வெளிநாட்டுத் தலைவர்களுக்கான விருந்துகளில்….

பஞ்சத்துக்கு குறை ஒன்றுமில்லை. மூன்று மக்களுக்கும் தனித் தனிப் பங்களாக்கள். தனித்தனி நவீன சொகுசு ஊர்திகள், நல்ல நிலையில் செய்து கொடுக்கப்பட்ட திருமணம், பேரன் பேத்திகள்…

வாட்டசாட்டமான தோற்றப் பொலிவும், முக வசீகரமும், நிறைந்து குலுங்கும் பெருஞ்சிரிப்பும், பஞ்சம் உண்மையில் இசைச் சக்கரவர்த்திதான். பிற இசைச் சக்கரவர்த்திகளான ராஜரத்தினம் பிள்ளை, தியாகராஜ பாகவதர் போல, தங்கத் தட்டில் பால் கஞ்சி குடிக்கக் கொடுத்து வைத்தவர் தான்.

சம்பிரதாயமாகச் சொல்வார்கள் - போன பிறவியில் பஞ்சம் கலைவாணிக்கு தேனில் அபிஷேகம் செய்து புண்ணியம் ஈட்டி இருப்பார் என எல்லோர்க்கும் அது வாய்ப்பதில்லை. எத்தனை ஆயிரம் ஆண்டுகளாக ஷெனாய் ஊதுகிறார்கள்? எல்லோர் வாத்தியத் திலுமா பண்டிட் பிஸ்மில்லா கானின் தேனருவி பொழிந்தது? எத்தனை ஆயிரம் காலமாக வேய்ங் குழல் ஊதுகிறார்கள்? அதெங்ஙனம் பண்டிட் ரோணு மஜூம்தார் அல்லது பண்டிட் ஹரி பிரசாத் சௌராஸ்யா ஊதும்போது தேனாய்ப் பொழிகிறது? இஞ்சியும் எலுமிச்சையயும் சேர்த்துப் பிழிந்தது. எனவே திகட்டுவதில்லை.

பஞ்சத்துக்கு சங்கீதப் பரிசாரகக் கலாநிதி பட்டம் வழங்கிக் கௌரவித்த இசை சத் சங்கத்தில் அவர் ஆப்ரிக்க இசைக் குறிப்பு ஒன்றில் மோகனத்தின் சாயலும் சீன இசைக் குறிப்பு ஒன்றில் தோடியின் சாயலும் இருப்பதை பாடிக் காட்டி நிறுவியவர்.

சொல்வார்கள், சரஸ்வதி கடாட்சம் பூரணமாய்ப் பெற்றவர்களுக்கு மகாலட்சுமியின் கடைக்கண் பார்வை கிட்டுவதில்லை என. பஞ்சம் அதற்குமொரு விதிவிலக்கு என்றாகி விட்டது.

குவாலியர் கரானா அல்லது பனாரஸ் கரானாவைச் சேர்ந்த இந்துஸ்தானி பாடகர் ஒரு கச்சேரிக்கு ஒன்றரை லட்சம் வாங்கும் போது

பஞ்சம் ஒரு லட்சம் வாங்குவதைக் குறைகாண முடியாது. மேலும் அஃதோர் Demand and Supply theory.பஞ்சம் வந்து பாடுவதை ஒரு கௌரவமாகக் கருதும்போது, அதற்கான விலையைக் கோருவது அநியாயமாகாது. மேலும் அது ஒரு 'காதல் காலறுவானே' அல்லது ‘நேசமான நீசனே' என்று சினிமாவில் பாடுகிறவர் வாங்கும் தொகையை விடக் குறைவானதுதான்.

ஒன்று உறுதி. பஞ்சம் கச்சேரி எனில் அரைமணிக்கூர் முன்னால் போக முடியவில்லை என்றால் எத்தா பெரிய அரங்கம் என்றாலும் நின்று கொண்டுதான் கேட்க வேண்டியதிருக்கும். மேலும் பஞ்சம் கச்சேரி தொடங்குமுன் தனது ஒன்பது கட்டளைகளை முதலிலேயே சொல்லி விடுவார்.

1. செல்ஃபோனை switch off/silent mode – ல் வைத்து கொள்ள வேண்டும்.

2. தனி ஆவர்த்தனத்தின் போது எழுந்து போகக்கூடாது.

3. இரத்த அழுத்தம் அல்லது நீரிழிவு உடையவர் மாத்திரை சாப்பிடும், உணவு அருந்தும் வேளை வந்தால், ஒரு கீர்த்தனை முடிந்து அடுத்து தொடங்குமுன் எழுந்து போகலாமே தவிர பாட்டின் நடுவே போகக்கூடாது.

4. பாடும் போது ரஸிகாஸ் தமக்குள் உரையாடக் கூடாது. கொட்டாவி, ஏப்பம், குசு, பெருமூச்சு ஆகியன சத்தமாக விடக்கூடாது.

5. பிடித்த பாடல்கள் கேட்டு சீட்டு அனுப்பக் கூடாது.

6. புகைப்படம் எடுப்போர் குறுக்க மறுக்க நடக்கக்கூடாது.

7. பாடும்போது மறைவாய் யாரும் பதிவு செய்யலாகாது.

8. கண்டிப்பாய் ஆட்டோகிராஃப் செய்யப்படமாட்டாது.

9. கச்சேரி முடிந்ததும் யாரும் காலில் விழலாகாது.

பஞ்சம் நல்ல பக்குவத்தில் உண்பவர். அதை விவரிக்கப் போனால் அது

தனிக்கதையாகும். அதுபோல் பஞ்சம் வாங்கிய பட்டங்கள்-விருதுகளை விவரிக்கப் போனாலும். அவர் கடைசியாக வாங்கிய பட்டங்கள் சங்கீதக் கலாநிதி, பத்ம ஸ்ரீ என்பன.

அந்த நகரில் ஆயுத பூஜையன்று அனுமத் கான சபாவில் பஞ்சம் கச்சேரி. அங்கவர் கரகரப்பிரியாவில் பாடிய தியாகராஜ கீர்த்தனை ‘ராம நீஸமான மெவரு ரகுவம்ஸோத் தாரக’ கேட்டு அனுமனே வந்து கை கட்டி நின்றிருக்கக்கூடும். அப்படியொரு குழைவு, பாவம், பளிங்கு போன்ற நீரோட்டம். கச்சேரி கேட்க வந்திருந்த ரஸிகாஸ் யாவரும் எழுந்து நின்று கரவொலி எழுப்பினார்கள்.

மறுநாள் பஞ்சத்துக்கு முழு ஓய்வு. சங்கீத உபாசகரும் மூன்று நூற்பாலைகளுக்குச் சொந்தக்காரருமான சத்தனப்பள்ளி சத்யவீர அன்னம நாயக்கர் விருந்தினர் விடுதியில் தங்கி இருந்தார். சமையலுக்கு பாலக்காட்டு ராமனுண்ணி எடுபிடிக்கு அன்னம நாயக்கரின் கான்டசாகாரை ஓட்டும் பாக்கியநாதன். அடுத்த நாள் பாலக்காட்டுப் பக்கமிருந்த நூரணி கிராமத்துக் கோயிலில் பஞ்சத்துக்கு இன்னுமொரு கச்சேரி இருந்தது. அதையும் முடித்த பிறகே அவருக்கு சென்னை புறப்பாடு.

வழக்கம் போல எழுந்து, தோட்டத்தில் ஒரு மணிக்கூர் நடந்து, குளித்து , பூசனைகள் முடிந்து உணவருந்திய பிறகு, குளிரூட்டப்பட்டவிடுதி முன்னறையில் அமர்ந்து பஞ்சம் பக்கவாத்தியக்காரர்களுடன் கொசுசான வம்பளப்பில் இருந்தார்.

“அண்ணா, நேத்து சபை சிலுத்துப் போச்சுண்ணா…. பொன்னவிர் மேனி சுபத்திரை மாதைப் புறங்கொண்டு போவதற்கேண்ணு எடுத்து நாட்டை, காம்போதி, சாமா, அமிர்தவர்ஷிணி, சகானா, கீரவாணிண்ணு போயிண்டே இருந்தேளோல்லியோ, நிறைப் பேரு ரஸிகாஸ் கண்ணத் துடைச்சுண்டே இருந்தா…. எனக்கே புல்லரிச்சுப் போச்சுண்ணா” என்றார் கஞ்சிரா வாசிப்பவர்.

"ஆமாமா…. எனக்கும் வாசிக்கவே கை ஓடல்லே” என்றார் மிருதங்கம்.

வாசலில் சிறு கூட்டம் ஒன்று நிழலாடியது. வழக்கம் போல் நேரில் கண்டு வணங்க வரும் உள்ளூர் புரவலரோ, வசதி படைத்த ரஸிகாசோ என நினைந்து தலை நிமிர்த்திப் பார்த்தார் பஞ்சம்.

பருவெண் கோடுடைய மதமறக்களிறு போல், நிமிர்ந்த நடையும் நேர்கொண்ட பார்வையும், அகன்று உயர்ந்த தோள்களும் பரந்த மார்புமாய் தூய நல் வெள்ளை வேட்டி, முழுக்கைச் சட்டை, அங்கவஸ்திரம் தரித்து, நெற்றியில் சந்தன குங்குமப் பொட்டுக் கொலுவுடன் பார்த்த மாத்திரத்தில் எவரும் எழுந்து நின்று கை கூப்பும் தோரணையுடனும் முக வசீகரத்துடனும் நேமிநாதன் உள்ளே நுழைந்தார். அவர் பின்னால் சற்று மிதமான கூச்சத்துடன் உள்ளூர் இசைக் கல்லூரியின் பேராசிரியர், தொடர்ந்து ஐந்தாறு மாணவர்கள்.

“அண்ணா வாங்கோ…. நானே வரலாம்ணு இருந்தேன்…. இவா படுத்தற பாடு தாங்கல…. நல்லதாப் போச்சு… வாங்கோ, உக்காருங்கோ…." என்றார் பஞ்சம்.

அவருக்குத் தெரியும் எத்தனை பெரிய வித்வானாக இருந்தாலும் கோவை இசையுலகில் நேமிநாதனன்றி ஒரு ஸ்வரமும் அசையாது என மேலும் நேமிநாதன் முதல் தலைமுறை தேசத் தலைவர் போல, கைப் பொருள் இழந்து, வேள்வி போல் அந்நகரில் இசை வளர்த்துக் கொண்டிருந்தார். எதையும் முகத்துக்கு நேரே சொல்கிற நேர்மையும் துணிவும் சுதந்திரமும் உடையவர். நினைத்திருந்தால் நான்கு நூற்பாலைகளுக்கு அவரும் சொந்தக்காரராக ஆகியிருக்க இயலும். அவரோ ‘தில்லை வாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன் திருநீல கண்டத்துக் குயவனார்க்கு அடியேன்’ என இசைக்கும், இசைவாணருக்கும் அடிமையாகிக் கிடந்தார். வேண்டுமானால் நான் எனும் ஆணவந்தள்ளலும்-இசைஞாலத்தைத் தானெனக் கொள்ளலும்’ என்று புதுப்பாட்டுப் பாடலாம்.

இருக்கையில் அமர்ந்த நேமிநாதன், பேராசிரியரையும் கை காட்டி அமரச் சொன்னார்.

"ஆகாரமெல்லாம் ஆச்சா…. வசதி எல்லாம் சரியா இருக்கா?” என்று ஆரம்பித்த நேமிநாதன் சொன்னார் "நேத்து கச்சேரி பிரமாதம்…. முகாரி நேத்துப் போலப் பாடிக் கேட்டு ரொம்ப நாளாச்சு சபையும் ரொம்ப ரசிச்சுக் கேட்டா…..”

“எல்லாம் உங்க ஆசீர்வாதம்” என்றார் அடக்கமாகப் பஞ்சம்.

“இவரைத் தெரியுமா? கோபி கிருஷ்ண பாகவதர்…. நம்ப இசைக் கல்லூரித் தலைவர். அங்க நிக்கிறவங்களெல்லாம் மாணவர்கள்….

உங்ககிட்டே ஒரு கோரிக்கையோடவந்திருக்கேன்….."

“என்னது, பெரிய வார்த்தையெல்லாம் பேசிண்டு…. என்ன வானாலும் சொல்லுங்கோ…. செஞ்சுப்புடலாம்…..”

“பசங்க எல்லாம் ஆசைப்படறா…. அவங்க கல்லூரிக்கு வந்து நீங்க ஒரு லெக்சர் டெமான்ஸ்ட்ரேஷன் குடுக்கணும்… உங்களுக்கு சௌகர்யமான நேரத்திலே…. ஒரு மணி நேரம் போதும்…..”

“அதுக்கென்ன, செஞ்சுப்புடுவோம்…." எனச் சொல்லி பஞ்சம் புன்னகைத்தார். தொடர்ந்து கை விரல்களையும் ஐந்து முறை விரித்து குவித்துக் காட்டினார்.

நேமிநாதன் கற்பூரம் போலத் தீப்பற்றிக் கொள்ளும் புத்திசாலி. தண்ணீரிலும் தடம் பார்ப்பவர். எனவே பஞ்சத்தின் சைகையைக் கண்டதுபோல் காட்டிக் கொள்ளாமல், “பசங்க எல்லாம் சேர்ந்து பத்தாயிரம் வசூல் பண்ணி வச்சிருக்கா. எதோ அவாளால முடிஞ்ச மரியாதை. நீங்க அவசியம் வந்து அவாளை அனுக்கிரகம் பண்ணணும்…..”

“என்ன நேமி அண்ணா…. சரியாக் கவனிக்கல்லியோ?” என்று மறுமுறையும் விளக்கு அணைந்தணைந்து எரிவது போல், ஐந்து முறை பத்து விரல்களையும் விரித்துக் குவித்துக் காட்டினார் பஞ்சம்.

“அவ்வளவெல்லாம் இவாளால முடியாது… சங்கீதம்சொல்லிக்க வாற பசங்க எப்படியாப்பட்ட வீட்டுப் பிள்ளைகளாஇருப்பா…. உங்களுக்குத் தெரியாததா…. நீங்க பெரிய மனசு பண்ணணும்…..”

“அதான் பாதியாக் குறச்சுச் சொல்றேன். அவாள் வச்சிருக்கப்பட்ட தொகைக்கு நம்மால் ஆகாது. அதுக்குத் தக்கன உள்ள வித்வானாப் பாத்துக்கிடட்டும்.”

நேமிநாதனுக்கு ஒன்றும் சொல்ல வாய் வரவில்லை. முகம் பூத்து வெளிறியது. சுற்றி நின்ற பேராசிரியரை, மாணவர்களை, பக்க வாத்தியக்காரர்களைப் பார்த்தார். கண்கள் பொங்கி வந்தன. சற்றுமங்கியும் வந்தன.

‘வெம்மடங்கல் வெகுண்டனைய சினமடங்க

&&&மனமடங்க வினையம் வீயத்

தெம்மடங்கல் பொருதடக்கைச் செயலடங்க

&&&மயலடங்க ஆற்றல் தேய….”

என்று ஓடியது பாடல்.

ஜயந்த ஸ்ரீ ராகத்தில் 'மறு கேல ரா ஒ ராகவா’ என்றொரு வரியோடியது நேமிநாதன் உதடுகளில்,

சடாரென எழுந்து நின்று கை கூப்பினார். “அப்ப உத்தரவு வாங்கிக்கிடவா” என்றார். இலேசாகச் சிரித்தபடி பஞ்சம் கரங் குவித்தார்.

திட்டமிட்டதற்கு மாறாக, இந்த இடத்தில் கதையை நிப்பாட்டிக் கொள்ளவே தோன்றுகிறது இக்கணத்தில். சில சமயங்களில் உண்மை, புனைவு போல் எதிர்ப்பட்டு பரிகசித்துச் சிரிக்கிறது. இனிமேல் எழுத நேரும் வரிகளில் பழி கரந்து உறைகிறதென்பதும் யானறிவேன். ஆனால் உண்மையை எருமைச் சாணத்தில் பொதிந்து ஒளித்து வைக்க இயலுமா?

மறுநாள் பாலக்காட்டில் கச்சேரியை முடித்துவிட்டு, உணவருந்தி, கான்டசா காரின் முன்னிருக்கையில் சாய்ந்து தூங்கியவாறு பஞ்சம் விருந்தினர் விடுதிக்குத் திரும்பிக் கொண்டிருந்தார். பக்க வாத்தியக்காரர்கள் அன்றிரவே ரயிலில் சென்னைக்குப் புறப்படுவார் கள். பஞ்சத்துக்கு மறுநாள் காலையில் நகரில் இருந்து விமானத்தில் சென்னை செல்ல ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

நள்ளிரவு பன்னிரண்டரை மணிக்கு க.க. சாவடி தாண்டி, மரப்பாலமும் தாண்டி, மதுக்கரைக்கு சற்று முன்னால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ட்ரெய்லர் லாரி ஒன்றின் கீழே அதிவேகமாக வந்த கான்டசாபுக முயற்சி செய்ததில் பஞ்சம் தலையுடைந்து தலத்திலேயே குருதிப் பெருக்கில் கிடந்தார். தப்பிய சாரதி பாக்கியநாதன், தகவல் சொல்லி ஆம்புலன்ஸ் வந்து நகரின் பிரதான மருந்துவமனை செல்லுமுன் காலம் காத்து நிற்காமல் நகர்ந்து போய்விட்டது.

உயிர் எழுத்து – டிசம்பர் 2007

***

15. மணமானவருக்கு மட்டும்

ஜனவரி ஒன்றாம் தேதி அந்த விளம்பரம் வந்தது. அனைத்து ஆங்கில, தமிழ், தேசிய, பிராந்திய நாளிதழ்களின் இறுதிப்பக்கத்தில், முழுப்பக்க, வண்ண விளம்பரமாக. ஒரே விளம்பர நிறுவனம் கொடுத்திருந்த காரணத்தால், விளம்பர வாசகங்களில் அச்சுப் பிசகவில்லை. அச்சுப்பிழைகளும் இல்லை.

SUPER DUPER GRAND MEGA EXCHANGE OFFER

FIRST TIME IN INDIAN HISTORY

முந்துங்கள்! துன்பம் சிந்துங்கள்!! இன்பம் அருந்துங்கள்!!! வாழ்க்கையின் நேரான துணையைத் தேர்வு செய்ய மீண்டுமோர் நல்வாய்ப்பு!

ஒருவேளை கடைசி வாய்ப்பாகக் கூட இருக்கலாம் உள்ளுக்குள் வைத்துப் புழுங்குவதை வேருடனும் வேரடி மண்ணுடனும் பிடுங்கி வீசுங்கள் வெளியே!

எதற்கு அச்சம்?

எதற்கு நாணம்?

மடம் என்றால் என்ன?

தழைத்து வளரும் புதிய பசிய அன்புச் செடியொன்றை

ஊன்றுங்கள் நெஞ்சங்களின் நடுவே!

திருமணமான ஆடவரே பெண்டிரே!!

வாழ்க்கையைத் திருத்தியமைத்துக்கொள்ள, தமிழர் திருநாளின்மூன்று விடுமுறை நாட்களையும் பயன்படுத்திக் கொள்ளுங்கள். வடவர் அதைக் கரிநாள் என்பார்கள்.

தமிழருக்கு அது சிரிநாள்…..

வாழ்ந்ததும் அலுத்ததும் அழுததும் போதும்.... வெறுத்தது போதும், வெந்து வேக்காடு ஆனதும் போதும்!!!

இருக்கும் நாட்கள் இன்னும் கொஞ்சம்.

தரிசுகளைக் கைவிட்டு அன்பு பயிராகும் விளை நிலம் கொள்வீர்! ஆணென்ன, பெண்ணென்ன? அன்பு தழைக்க, இன்பம் கொழிக்க, அறிவிப்புகள், காலமானோர், நகரில் நடப்பவை, நடக்க இருப்பவை. நுழைவுத் தேர்வுக்குப் படிப்பதைப் போல. அவர் எதைப் படித்தாலும் அப்படித்தான். மஸ்தான் சாகிபு பாடலானாலும் சரி இரயில்வே கால அட்டவணையானாலும் சரி.

கும்பமுனிக்கு மடம் என்றால் என்ன எனும் கேள்வி மிகவும் பிடித்திருந்தது. சங்கர மடம், சாமியார் மடம், கள்ளர் மடம், மோர் மடம், சந்தைமடம், நாற்கால்மடம், கஞ்சிமடம்.... ஏதோ ஒரு மடம். இந்த மடம் இல்லாவிட்டால் சந்திமடம் என்று ஆகிவிட்டது போலும் மாப்பிள்ளை-பெண்டாட்டி காரியங்கள். தவசிப்பிள்ளை கண்ணுபிள்ளை அடுக்களையில் கடமுடா என்று அம்மியில் துண்டுத் தேங்காயை வைத்து நசுக்கிக் கொண்டிருந்தார். காலையில் காணத்துவையலும் கஞ்சியுமாக இருக்கும்.

“ஓய், கண்ணுவிள்ளை, கொஞ்சம் இஞ்ச வாரும்....”

“என்ன பாட்டா? பாம்பு கடிச்ச மாரி அவயம் போடுகேரு...."

“இன்னா பேப்பர்லே என்ன போட்டிருக்கான், பாத்தேரா? நீரு என்ன பாப்பேரு.... அதுக்கு எழுதப் படிக்கத் தெரியணும்லா!”

“என்ன போட்டிருக்கான்? கெழவி சமைஞ்சாண்ணா? நீரே படிச்சுச் சொல்லும்....”

“மாப்பிளையும் பொண்டாட்டியும் பழசைக் குடுத்துக்கிட்டு புதுசு வாங்கிக்கிடலாமாம்"

“அது எப்படிப் பாட்டா... காலம்பற என்னமாந் தோணும் ஒமக்கு.... வெயிலு ஏற ஆரம்பிச்சாச்சுல்லா?”

“உள்ளது தாம்டே! பழைய டி.வி. குடுத்துக்கிட்டு கூடக் கொஞ்சம் பணம்

குடுத்து புதுசு வேண்டுகாள்ளா அத மாரி!"

"டி.வி, பிரிச்சுண்ணு அது சாமானம்லா பாட்டா! மாப்பிள்ளையும் பொண்டாட்டியும் அப்பிடியா?"

"எலே, அசை துப்பப்பட்ட கெழட்டுக் காளையைக் குடுத்துக்கிட்டு கூடக்கொஞ்சம் பணமும் குடுத்து ரெண்டு பல்லு காளையங்கண்ணு சீவலப்பேரி சந்தையில் வேண்டிக்கிட்டு வாறாம்லாடே அத மாரி."

"அப்பம் கெழவி, கெழவனை மாத்திக்கிட்டு கொமரனைக் கூட்டிக்கிட்டு வரலாம்னா சொல்லு கேரு?"

"ஆமா! ஆமா! அதே மாரி கெழவனும் கெழவியை மாத்தீட்டு கொமரியைக் கூட்டியாரலாம் பாத்துக்கோ...."

"நல்ல கோளுல்லா... அப்பம் மேக்கொண்டு துட்டு குடுத்தா என்ன வேணும்னலும் ஆகலாம்ங்கேரு! ஆனா மாட்டுக்கு வெலைமதிக்கது மாரி, மாத்தப் போற மாப்பிளைக்கும் பொஞ்சாதிக்கும் எப்பிடி பாட்டா வெலை வைப்பா?"

"அதுக்குத் தானடா கம்ப்யூட்டர் இருக்கு!"

"அது எப்படி பாட்டா? ஆளைக் கொண்டு அதுக்கு முன்னே நெறுத்துனா அது வெல வச்சுச் சொல்லீருமாக்கும்?"

"அதுக்கெல்லாம் வழி வச்சிருப்பாம்டா.... என்னா ஏதுண்ணு போயிப் பாத்தால்லா தெரியும்! வாய்ப்பா வந்துண்ணு வச்சுக்கோ, நமக்கும் ஒண்ணு புடிச்சுக்கிட்டு வரலாம்லா?"

"அதுக்கு உம்ம கிட்ட மாத்ததுக்கு பழசு இருக்கா?"

"எல்லாம் வழிவச்சிருப்பாம்டா! தோதுப்போல ஒனக்கும் ஒண்ணு பாத்துக்கிடுவோம்"

"பணத்துக்கு எங்க போக?"

"அப்பம் ஆசை இருக்கு தாயோளிக்கு... பணம் என்னடா பணம்? பாத்துக்கிடலாம்....'

திடல் நிரம்பி வழிந்தது. கும்பமுனிக்கு ஆச்சரியமாக இருந்தது. தோளில் தொங்கிய பைகளிலிருந்து தலை நீட்டும் தண்ணீர் போத்தல்களுடன், வெள்ளெழுத்துக் கண்ணாடிகளுடன், புதிதாய் பொருத்திய பல் செட்டுகளின் அசைவுகளுடன், வாதக்கால்களுடன், பித்த வெடிப்புக்களுடன் நிக்கோடின் கறைகளுடன், வெற்றிலை பாக்குக்காவியுடன், பழஞ்செருப்புக்களுடன், காம்புக் குடைகளுடன் தனக்கு முன் நகரும் தொப்பைகளுடன், தன்னைப் பின்தொடரும் புட்டங்களுடன், குனிய நிமிர முடியா இடுப்புக்களுடன், நரைத்த தலைமயிருடன், கருஞ்சாயம் பூசிய கேசங்களுடன், சின்னக் கொண்டைகளுடன், வழுக்கையுடன், வெளி விழுந்த பற்களுடன், பொடிக்கறை கொண்ட துண்டுடன், காதில் அணிந்த செவிட்டு மெஷின்களுடன், ஆசன வாயை அடைத்துத் தைத்து பக்கவாட்டில் பொருத்திய மலஜல பைகளுடன், நீரிழிவுடன், இரத்த அழுத்தத்துடன், பைபாஸ் செய்யப்பட்ட, வால்வ் புதிதாய்ப் பொருத்தப்பட்ட, ஸ்டென்ட் நுழைக்கப் பட்ட, பேஸ் மேக்கர் வைக்கப்பட்ட இரத்த நாளங்களுடன், வயிற்றுப் பொருமலுடன், வாயுத் தொந்தரவுடன், பல்வலியுடன், தோல் வியாதிகளுடன், புரோ ஸ்டேட் கிளான்ட் உடன் இரத்தம் போக்கும் கருப்பையுடன், கருப்பை நீக்கப்பட்ட வயிற்றுடன் ஆடவரும் பெண்டிரும் தம்பதிகளாய் குறுக்கும் நெறுக்கும் கவுன்டருக்குக் கவுன்டர் திரிந்து கொண்டிருந்தனர். ஆங்காங்கே அமைக்கப்பட்டிருந்த மியாமி கடற்கரை நிழற் குடையின் கீழ் மேசை நாற்காலிகள் போட்டு, டை கட்டிய அலுவலர்கள் அமர்ந்திருந்தனர். கழுத்தில் மாட்டிய செல்ஃபோன்களும் வாயருகில் ஊசலாடிய மைக்ரோஃபோனுடனும் மீசை மழித்த சிவந்த நவயுவர்கள்.

பெண்ணின் ஆணின் வயது பிரித்து கவுன்டர்கள் அமைக்கப் பட்டிருந்தன. வயது 20-35, 35-40, 45-50, 50-60, 60-80 என இந்துக்கள், கிறிஸ்துவர்கள், இஸ்லாமியர்கள் என மதரீதியாகவோ, குடி ரீதியாகவோ பிரிவினைகள் இல்லை. எம்மதமும் சம்மதம் என்பதோ, தன் மதமே சம்மதம் என்பதோ அவரவர் விருப்பம் சார்ந்தது. அசல் சான்றிதழ்கள் சமர்ப்பித்து, ஆராயப்பட்டு, பணம் கட்டிய பின் டோக்கன் பெற்றவர்கள், வரிசைப்படி தங்கள் அழைப்பு வரும்வரை நிழலுக்காகப் போடப்பட்டிருந்த சாமியானாவில் அமர்ந்திருந்தனர். டோக்கன் எண்ணுடையவர்களை விளிக்கவும் பொது அறிவிப்புக்களுக்காகவும் ஒலிபெருக்கி வசதிகள் செய்யப்பட்டிருந்தன.

டோக்கன்கள் தனித்தனியாக வாங்கியிருப்பதாலும் தனித்தனியாகவே

அழைப்பு வரும் என்பதாலும், தனித்தனியாக அமர்ந்து அவரவர் மனதுக்குள் கதைத்துக் கொண்டிருந்தனர். ஒரு வேளை, சேர்ந்து அமர இனியொரு வாய்ப்பு வராமற் கூடப் போகலாம் அல்லவா? அதை நினைத்து பெரும்பாலான தம்பதியினர் இறுதி நினைவுகூரலாக, உறுப்புவழி, கைவழி, வாய்வழி (வாய் எனில் அதில் ஆசனமும் அடங்கும்) புணர்ச்சியில் ஈடுபட்ட களைப்பிலும் இருந்தனர்.

முதல் கட்டமாக, டோக்கன் பெற்றவருக்கான வாசிப்புக்கு என சுற்றறிக்கையில் கீழ்க்காணும் விவரங்கள் தரப்பட்டிருந்தன.

1. எங்கள் அமர்வுகளின் மூலம், கணவன்-மனைவி இரு பாலருடைய மண முறிவு ஒப்பந்தம், அரசாணை எண். த. நா. ம. ஒ. ச / முத. அமை. 2006 / அ.இ.அ.தி.மு.க. / தி.மு. க / ம.தி.மு. க / தே.தி.மு.க./ தி.க/ 2948317674825925340/ அ.ஆ.இ.ஈ. உ. ஊ.எ.ஏ. ஐ.ஒ.ஓ. ஔ. ஃ/246 நாள் 01-01-2006-ன் படி எல்லா சர்வ தேசிய நீதி மன்றத்திலும் செல்லத்தக்கதாகும்.

2. பெற்றுக்கொண்ட மண முறிவு ஒப்பந்தம் உடனுக்குடன் கணினி மூலம் பதிவு செய்யப்பட்டு சான்றிதழ், இரு படிகள் மட்டும் வழங்கப்படும்.

3. பெற்றுக்கொள்ளப் போகும் புது வாழ்வு ஒப்பந்தம் உடனுக்குடன் பதிவு செய்யப்பட்டு சான்றிதழ், ஒரு படி மட்டும் வழங்கப்படும்.

4. தாலியணிதல், சிலுவையணிதல், கருமணிமாலை அணிதல், மாலை மாற்றல் சடங்குகள் திடலில் கண்டிப்பாய் செய்யப்பட மாட்டாது.

5. அவரவர் வசதிபோல் பின்னால் மண்டபங்களிலோ, கோயில்தேவாலயம் பள்ளிவாசல்களிலோ மேற்கண்டவற்றைச் செய்து கொள்ளலாம். தங்கள் சொந்தச் செலவில் விருந்து கொடுப்பது பற்றியும் எந்தக் கட்டுப்பாடும் இல்லை.

6. புது வாழ்வு ஒப்பந்தம் ஆனவர் தங்கள் விருப்பம் போல் மத மாற்றம் செய்து கொள்ளலாம். புதிதாய் சுன்னத் செய்துகொள்ளும் புதுமண ஆடவர், செய்து கொள்ளுமுன்தங்கள் இரத்தத்தின் சர்க்கரை அளவினைப் பரிசோதித்து கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ள அறிவுறுத்தப் படுகிறார்கள். கல்யாணப் பண்டத்தின் பாதுகாப்புக்கு அது உகந்தது.

7. மண முறிவு ஒப்பந்தம் ஆன பிறகு, அன்பளிப்பாக, 20லிட்டர் பிடிக்கக் கூடிய பிளாஸ்டிக் வாளி தலைக்கு ஒன்று தரப்படும்.

8. புதுமண ஒப்பந்தம் ஆன பிறகு, கோவை, மதுரை, திருநெல்வேலி, சேலம், திருச்சி, விழுப்புரம், சென்னை ஆகிய நகரங்களில் அமைந்துள்ள குதூகலம், கொண்டாட்டம், அற்புதம், ஆனந்தம், காரிடி, பேரிடி, வண்ண மின்னல் ஆகிய தலங்களுக்கான நுழைவுச் சீட்டு இரண்டு அன்பளிப்பாக வழங்கப் பெறும். அன்பளிப்பு நுழைவுச் சீட்டு மட்டும்தானே தவிர, உணவு, பானங்கள், தங்கும் அறை, கழிப்பிடங்கள், மதுச்சாலை, ஆணுறை ஆகியவற்றுக்கு கட்டணங்கள் உண்டு.

9. பிரிந்து போகிற தம்பதியினருக்கு வயதுக்கு வந்த பிள்ளைகள் இருந்தால், அவர்கள் எந்தப் பெற்றோருடன் அல்லது தனியாக இருப்பார்கள் என்பதற்கான ஒப்புதல் கடிதங்கள், அத்தாட்சி செய்யப் பட்டது, கைவசம் வைத்திருக்க வேண்டும்.

10. வயதுக்கு வராத குழந்தைகள் எனில், அரசாணை எண்: த.நா.ம.ஒ.ச./ முத அமை. 2006/ பா. ஜ. க / அ.இ. மு. லீ/ கு.க/ பி. சோ. க/ பு: சோ.க/ அ.இ.பா.பி/ த.தே. க/ வி.சி/ பா.ம.க./ வி.மு/ த.பா/ இ.தே.கா.1,2,3,4,5,6,7,8,9,10,11,12,13/ 29483176748259253 40/ க.ச.ட.த.ப.ற.ய.ரல.வ.ழ, ளங்.ஞ.ண.ந.ம.ன./247 நாள் 01-01-06-ன் படி அரசு குழந்தைகள் காப்பகங்களில் ஒப்படைக்கப்பட்டு, 18-வயது பருவம் எய்துவது வரையிலான காலம் கணக்கிடப்பட்டு அதற்கான தொகை முழுவதும் மொத்தமாக வசூலிக்கப்படும். வசூலிக்கப்படும் தொகைக்கு வட்டி கிடையாது M.B.C, D.N.C., S.C LD மற்றும் S.T. வகுப்பினருக்கு கட்டண விலக்கு அளிக்கப்படுகிறது.

11. குழந்தைகளின் கல்விச் செலவுகள் வசூலிக்கப்பட்ட தொகையில் அடங்கும். 18-வயதுக்குப்பிறகு குடியரசு தினத்தன்று திறந்து விடப்படுவார்கள். பின்பு அவரவர் பாட்டை அவரவர் பார்த்துக் கொள்ள வேண்டும்.

12. குழந்தைகளை அரசுக் காப்பகத்தில் ப்படைக்கும் போது, அவர்களின் மதம், சாதி, உட்பிரிவுகளின் சான்றிதழ்கள், ஆண்/பெண் சான்றிதழ்கள் (அலிகளுக்கு அனுமதி இல்லை- பிற அரசு சட்ட திட்டங்களுக்கு இணங்க) அவர்கள் பெயரில் இருக்கும் சொத்துக்கள் பற்றிய ஆவணங்கள், காப்பீட்டுப் பத்திரங்கள், வைப்புநிதிப் பத்திரங்கள் ஆகியவற்றின் அசல்கள் ஒப்படைக்கப்படவேண்டும். நகல்கள்

ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

13. ஆண் குழந்தைகள் எனில் முப்புரிநூல் அணிபவர்கள், சுன்னத் செய்தவர்கள் என்பதற்கும் கிறித்துவ சமயத்து ஆண் பெண்கள் ஞானஸ்நானம் பெற்றவர்கள் என்பதற்கும் அத்தாட்சி வைத்திருக்க வேண்டும்.

14. பெண் குழந்தைகள் எனில், அவர்கள் பருவம் எய்திய பின் எவ்வகை சாமத்தியச் சடங்குகள் நடத்தப்பட வேண்டும் என்பதற்கும் ஆண் குழந்தைகள் எனில் திருமணம் ஆகும்போது அணியும் தாலி வகை பற்றியும் விருப்பக் கடிதங்கள் தரப்படல் வேண்டும்.

15. குழந்தைகளின் ஆரோக்கியம், உணவு (சைவம் அல்லது. அசைவம்), சீருடை, சோப்பு, சீப்பு, எண்ணைய், பற்பசை தேவைகளைக் காப்பகங்கள் கவனித்துக் கொள்ளும். கல்விக்கு தகுதி சார்ந்தும் ஒதுக்கீடு சார்ந்தும் விருப்பம் சார்ந்தும் முன்னுரிமை தரப்படும். எந்த முன்னுறுதியும் இந்த வகையில் காப்பகங்கள் தர இயலாது.

16. அவரவர் விருப்பம் சார்ந்து, விபூதி/குங்குமம்/சாந்து/ சந்தனம்/ மந்திரித்த எண்ணெய்/ பிற மதச் சின்னங்கள் தரித்தல் அனுமதிக்கப்படும். கட்டாய மதமாற்றம், இனமாற்றம், குழுமாற்றம் ஆகியன அரசால் தடை செய்யப்பட்டுள்ளன.

17. குழந்தைகளுக்கு அடித்தல், கிள்ளுதல், பிராண்டுதல், தள்ளுதல், கடித்தல், முட்டுதல், மோதுதல், மிதித்தல், மயிரைப் பிடித்தல் ஆகிய போர்ப் பயிற்சிகள் கண்டிப்பாக விலக்கப் பட்டுள்ளன.

18. பிறந்த நாள் கொண்டாட்டங்கள் மதப் பெருநாட்கள் அனுமதிக்கப்படும். சாதி சார்ந்த , உட்பிரிவுகள் சார்ந்த சிறு நாட்கள் கொண்டாட அனுமதி இல்லை.

19. காப்பகங்கள் சார்ந்து அவ்வப்போது அரசு விடுக்கும் தற்காலிக/ நிரந்தர ஆணைகள் முழுதாகவும் கண்டிப்பாகவும் விதிவிலக்குகள் இன்றியும் நடைமுறைப் படுத்தப்படும்.

20. காப்பகக் குழந்தைகள் பற்றிய எந்த வழக்கையும் ஏற்று விசாரித்துத் தீர்ப்பு வழங்க அரசு ஏற்படுத்தும் முறையீட்டகம் முழு அதிகாரம் கொண்டது. பிற நீதி மன்றங்களுக்கு காப்பகங்களின் மீது எந்த

அதிகாரமும் இல்லை.

21. காப்பகக் குழந்தைகளுக்குதற்செயலாக ஏற்படும் விபத்துகள், அதனால் ஏற்படும் அங்கக் குறைவுகள், மரணங்கள், நோய்கள், நோய் மரணங்கள், பாம்புக்கடி, தேள்கடி, விஷ உணவு, விஷச் சாராயம், காப்பகம்-பள்ளிக்கூடம் தீப்பிடித்தல், பேருந்து பள்ளத்தில் பாய்தல், கூரை இடிந்து விழுதல், உணவுப் பங்கீட்டின் போது நிகழும் நெரிசல், வெள்ளப்பெருக்கு, பூகம்பம், கொள்ளை நோய், ஆழிப் பேரலை, எரிமலை, பட்டாசு வெடித்தல், வெயில் தாக்குதல் ஆகியவற்றால் ஏற்படும் மரணங்களுக்கும் காப்பகங்கள் பொறுப்பாக மாட்டா.

22. மேற்கண்ட ஷரத்துக்களை ஒப்புக்கொண்டு, நடைமுறைப் பெற்றோர் இருவரும் சம்மதித்து அதற்கான படிவம் எண். 39 ஆ.பகுதி.போ.வில் ஒப்புதல் கையெழுத்து இட வேண்டும்.

23. மேற்படி ஷரத்துக்களில் குறிக்கப் பெறாத நிபந்தனைகளுக் கும் நடைமுறைப் பெற்றோர் கட்டுப்பட்டவர் ஆவார்கள்.

24. பதினெட்டு வயது திகைந்தபின் குழந்தைகள் காப்பகங்களிலிருந்து விடுவிக்கப்பட்டபின் அவர்கள் தத்தம் புத்தி போல் பிழைத்துக்கொள்ள வேண்டும்.

காப்பகக் குழந்தைகள் என்பதால், அவர்கள் அரசுப் பள்ளிகள், கல்லூரிகள், அரசுப் பணிகள், நகராட்சி/ மாநகராட்சி உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர், வாரியத் தலைமை ஆகியவற்றுக்கு முன்னுரிமை கோர இயலாது.

25. காப்பகத்தில் ஆணுக்கும் பெண்ணுக்கும் தனிப்பிரிவுகள் உண்டு. எனினும் பள்ளிகள், விளையாட்டு மைதானங்கள் இருபாலருக்கும் பொதுவானவை. எனவே நடப்பில் உள்ள தமிழ்ப் பண்பாட்டின் படி, பத்து வயது முதலே மாணவர் மத்தியில் தோன்றும் காதல்களைக் காப்பகம் ஊக்குவிக்கவோ, பேணவோ செய்யாது. எனினும் பதினெட்டு வயதுக்கு மேல் திருமணம் செய்து கொள்ள குறுக்கே நிற்காது. களவொழக்கத்தின் பாற்பட்ட கூட்டிக்கொண்டு ஓடிப்போதல், கரந்து உறைதல், குஷ்பு இஸம் போன்ற நிகழ்வுகளுக்கு காப்பகம் பொறுப்பு ஏற்காது.

படித்த முடித்த தம்பதியினரிடம் சுற்றறிக்கைப் படியொன்று வாங்கி,

கும்பமுனி கூர்ந்து படித்தார்.

தினமும் இட்லி அல்லது தோசை அல்லது சப்பாத்தி எத்தனை தருவார்கள், எத்தனை முறை நாளில் ஒன்றுக்கும் ரெண்டுக்கும் போகலாம் என்பன தவிர்த்து தவல்கள் பூரணமாக இருந்ததாக அவருக்குத் தோன்றியது.

வயது, பால் பிரிவுகளுக்கு ஆட்பட்டு எண்பது கவுன்டர்கள்இருந்தன. பதிவு அதிகமாக இருந்த பிரிவுகளுக்கு நெரிசலைச் சமாளிக்க கூடுதல் கவுன்டர்கள் இருந்தன. கவுன்டர்களின் பொறுப்பான ஆலோசனை அதிகாரிகளை பானங்களுக்கோ, உணவுக்கோ, இயற்கை உபாதைகளுக்கோ விடுவிக்க மாற்று அதிகாரிகள் இருந்தனர். எல்லா கவுன்டர்களின் கணினிகள் நெட்வொர்க் மையம் ஒன்றில் இணைக்கப்பட்டு, அந்த மையங்கள் நாடு முழுதும் நடக்கும் பிற மையங்களோடு இணைக்கப்பட்டு, தலைநகரில் இருக்கும் மாமையத்தின் கட்டுப்பாட்டில் இருந்தன. கிட்டத்தட்ட பொறியியற் கல்லூரி கவுன்சிலிங் போல என வைத்துக் கொள்ளுங்கள்.

மைதானத்துக்கு வெளியே ஏழெட்டுக் குழுக்கள் ஏற்படுத்திய சிறு சலசலப்பை காவலர்கள் கட்டுப்படுத்திக் கொண்டிருந்தனர். கவுன்டர்களுக்கு கவுண்டர் என்று ஒரு சாதிப் பெயரை மட்டும் வைக்கக்கூடாது என்றும் நாயக்கர், செட்டியார், பிள்ளைமார், மறவர், வன்னியர், பார்ப்பனர், நாடார், கோனார், சாம்பவர், பள்ளர், வண்ணார், குயவர், நாவிதர், சக்கிலியர், முதலியார், முக்குவர், பரவர் போன்ற சாதிப் பெயர்களையும் வைக்கவேண்டும் என்பதுவே கோரிக்கை.

கோஷ அட்டைகளைத் தாங்கி அந்தந்த சாதியினர் தனித் தனியாகவும் கூட்டாகவும் இடைவெளிவிட்டும் விடாமலும் கூச்சல் போட்டு அறப்போர் நிகழ்த்திக் கொண்டிருந்தனர்.

மாவட்ட ஆட்சித்தலைவர் வந்து அனைத்துச் சாதிக்குழுக்களிடமும் தனித்தனியாகப் பேச்சு வார்த்தை நடத்தி, ‘கவுன்டர்’ எனும் தமிழ்ப் பெயர்ப்பலகைகளை எடுத்துவிட்டு COUNTER என்று ஆங்கிலப் பெயர்ப்பலகைகளை வைப்பதாக வாக்குறுதி கொடுத்ததன் பேரில், அறப் போர் கைவிடப்பட்டது.

எங்கும் பலத்த காவல் துறையினர் கண்காணிப்பு.

தீயணைப்பு வண்டிகள்.

குடிநீர் விநியோகம்.

வாசலில் நின்றபடி வீட்டு உபயோகப் பொருட்களின் அங்காடிகள் துண்டுப் பிரசுரங்களாக விநியோகித்த காகிதங்கள் மைதானம் முழுக்கப் பறந்துகொண்டிருந்தன.

திருமண மண்டபங்கள், ஆடையகங்கள், நகைக் கடைகள், கேட்டரிங் சர்வீசுகள், பயண ஏஜென்சிகள் தத்தம் விசிட்டிங் கார்டுகளை நீட்டிக்கொண்டு நின்றனர். ஓரிரவு தங்கினால் மற்றோர் இரவு இலவசம் என்றன தங்கும் விடுதிகள்.

அவசர அவசரமாக, பதிவான அன்றே மாலை மாற்றிக் கொள்வோர் வசதிக்கென மைதான முகப்பில் இருந்த மாரியாயி கோயிலில் 24 மணி நேர சேவை இருந்தது. ஆயத்த தாலிக் கடைகள், மாலைக்கடைகள், ஆடையகங்கள் தோன்றின. சிற்றுண்டி, பேருண்டிக் கடைகள் வந்தன. நடமாடும் புரோகிதர் நாவிதர் வண்ணார் தத்தம் உபகரணங்களுடன் ஆள் பிடிக்க அலைந்தனர்.

வெயில் கடுமையாகக் கொளுத்த ஆரம்பித்தது.

டோக்கன் எண். 248 A, 248 B என அறிவிப்பு வந்ததும் கும்பமுனியிடம் இருந்த சுற்றறிக்கை நகலைப் பிடுங்கிக்கொண்டு ஒருவர் எழுந்தார். நடக்க ஆரம்பிக்குமுன் தீர்க்கமாக முகத்தை வைத்துக் கொண்டனர்.

'இருக்காதா பின்னே பத்து முப்பது வருசம் சேந்து வாழ்ந்தது சும்மாவா? பிரிவென்பது பெருங்காடல்லவா?' என்றோடியது கும்பமுனியின் சிந்தனை. மனைவியரில் ஒருத்தி தற்செயலாய், இன்னும் சில மணித் துளிகளில் கழற்றப் போகும் தாலியைத் தொட்டுப்பார்த்துக் கொண்டாள். சுண்டைக் கடித்து அழுகையை அடக்கப் பார்த்தாள். பிரித்தலின் கொடுங்கரம் பிடரியில் கை கொடுத்துத் தள்ளியது. இனி, தாலியறுத்தவள், மறுதாலி கட்டியவள் போல தாலி கழற்றியவள் என்றொரு சொற்றொடர் தமிழில் உருவாகும்.

கும்பமுனியின் கதையெழுதும் புத்தி நீள யோசித்துக்கொண்டு போயிற்று, மேல் வலிக்காமல் –

“இரண்டே பிள்ளைகள்தான். மகன் ஃபிலடெல்ஃபியாவில் கணினிப் பொறியாளராக இருக்கிறான். மகள் சிட்னியில் வானவியல் ஆராய்ச்சியில் இருக்கிறாள். அவரவர் குடும்பத்துடன், தலைக்கு ஒரு காருடன், தனித்தனிப் படுக்கை அறையுடன், தனித்தனி வங்கிக் கணக்குகளுடன், சூடாக்கிச் சூடாக்கிச் சாப்பிட்டுக் கொண்டு.

பேரன் பேத்திகள் சொந்த மண்ணைப் பார்த்ததே இல்லை. நாட்டுக்கு வந்து ஒன்பது ஆண்டுகள் ஆகிவிட்டன. எல்லாம் சுகம். சௌக்கியம். நல்லாருக்கீங்களா?

யாரையும் யாரும் கட்டுப்படுத்த இயலாது. ஒய்வு பெற்ற தம்பதிகள் இருவரும் வங்கிப்பணியில் இருந்தனர் முன்பு போதுமான ஓய்வூதியம், காப்புத் தொகைகள், சொந்த வீடு. சேர்ந்து வாழ்ந்து அலுத்துப் போய்விட்டது.

சாப்பிடுகிறீர்களா?

ஃபோன் பில் கட்ட வேண்டாமா?

விளக்கை அணைக்கவா?

எண்ணி மூன்று சொற்றொடர்கள் தினத்துக்கு எழுவது, நடப்பது, உண்பது, உறங்குவது, டி.வி. பார்ப்பது என்பதைத் தாண்டிய அட்டவணைகளும் இல்லை.

தனித் தனியாக முதியோர் இல்லத்தில் சேர்ந்து விடலாமா என்று யோசித்துக் கொண்டிருந்தபோது வாராது வந்த மாமணிபோல், காட்சிப்பட்ட விளம்பரம்.

மௌனமாக ஒருநாள். மறுநாள் கூட்டாக, மூன்றாம் நாள் மறுபடியும் தனித்தனியாக யோசித்தபின் பத்துக்கு ஒன்பது பொருத்தம் இருந்தது மகா எக்சேஞ் ஆஃபரைப் பயன்படுத்திக்கொள்ள வைப்பு நிதிகளை, ஆபரணங்களை, வீட்டை, உபயோகப் பொருட்களை, பாத்திர பண்டங்களை எப்படிப் பிரித்துக்கொள்வது என்பதிலும் ஒரு ஒத்த தீர்ப்புக்கு வந்திருந்தனர். இருவருக்குமே எந்த வழக்கும் இல்லை. உனக்கு எது வேண்டுமோ எடுத்துக்கொள் என்பதே இருவரின் முழக்கமாக இருந்தது.

எல்லாம் அலுத்துப் போயிற்று. சாக ஆசையும் இல்லை. சாவென்பது என்ன?

தொடர்ச்சி அறுதல்.

எதன் தொடர்ச்சி? சம்பவங்களின், உரையாடல்களின், பகிர்தலின், கொடுத்தலின், பெற்றுக்கொள்ளலின், மறுத்தலின் தொடர்ச்சியா? யார் எதைத் தொடர்கிறார்கள்? எல்லாம் தொடர்பு அறுந்து போன வாழ்க்கை. வாலறுந்த நரி, தும்பறுந்த பட்டம். வேரற்ற மின்சார விளக்குக் கம்பம். ' கும்பமு னி சடாரென தலையைஉதறிக்கொண்டார். போகிற போக்கு சரியில்லை. மறுபடியுமொருகதை எழுதும் உத்தேசமில்லை.

கும்பமுனி நடந்து திரிந்த பாதையில், கருப்புக்கண்ணாடி அணிந்த ஒருவர் குறுக்கிட்டார். சம வயதுதான். தலையில் கொஞ்சம் அதிகம் முடி இருந்தது.

சார் மன்னிக்கணும்… என் டோக்கன் நம்பர் 250A. எம் பொஞ்சாதி டோக்கன் நம்பர் 250 B. அவ, அதோ, தெரிஞ்சவளோட பேசீட்டிருக்கா…. இப்ப கூப்பிட்டிருவான்… எனக்கு கொஞ்சம் அவசரமா டாய்லட் போணும். நேத்து லாஸ்ட் சப்பர்… வயத்துக்கு ஒத்துக்கல்லே போல்ருக்கு.. . டோக்கன் நம்பர் கூப்பிட்டா போயி என்னாண்ணு கேளுங்கோ… பாரம் நிறைக்கச் சொல்லுவான். வேறென்ன? கொஞ்சம் பாத்து பண்ணுங்கோ. முடிஞ்சதுக்கப்புறம் இதே இடத்திலே நில்லுங்கோ. டோக்கனைப் பிடிங்கோ…. கொஞ்சம் அவசரம்…. இப்ப வந்திருவேன்…..”

கும்பமுனியைப் பேசவே விடவில்லை. அவர் தெளிந்து நிமிர்ந்த போது, அறிவிப்புக் கேட்டது. 'டோக்கன் நம்பர் 250 A, கவுன்டர் நம்பர்13. டோக்கன் நம்பர் 250 B கவுன்டர் நம்பர் 67."

தனது கவுன்டரை நோக்கி நடந்தார் கும்பமுனி.

“வாருங்கள் மிஸ்டர் திருமலைசாமி. உட்காருங்கள்.

இந்தப் படிவத்தை ஐந்தே நிமிடங்களில் பூர்த்தி செய்து விடலாம். பெண்களுக்கான பகுதியை நீங்கள் தொடவேண்டியதில்லை. உங்கள் மனைவியிடம் நீங்கள் காணும் போதாமைகளை வெளிப்படையாகக் குறிப்பிடுங்கள். அவர்களது மதிப்புப் புள்ளிகளைக் கணக்கிட உங்கள்

விடைகளும் உங்கள் மதிப்புப் புள்ளிகளை கணக்கிட அவர்களது விடைகளும் பயன் படுத்திக்கொள்ளப்படும். நீங்கள் எதற்கும் கூச்சப் பட கூடாது. After all, whose life is it anyway?”

"சரிங்க ஐயா.”

“வயது, செல்வநிலை, ஆரோக்கியம், நிறம், உயரம், எடை, தொந்தி, தோற்றம், நரை, விழுந்த அல்லது விழப்போகும் அல்லது பிடுங்கப்பட்ட பற்கள், மருத்துவ வரலாறு, உணவுப் பழக்கம், உடை விருப்பம், மது, புகை, பொடி, வெற்றிலைப் பழக்கங்கள் என அனைத்துக்கும் கூட்டல் புள்ளிகள், கழித்தல் புள்ளிகள் உண்டு. மொத்தமாக, உங்கள் மனைவியின் விடைகளும் மதிப்பிடப்பட்டு உங்களுக்கு தகுதிப் புள்ளிகள் வழங்கப்படும். உங்கள் எதிர்பார்ப்புகள், புதிய இணை சேர்பவரிடம் நீங்கள் விரும்புபவை அனைத்துக்கும் புள்ளிகள் வழங்கப்பட்டு கணினி உங்களுக்குத் தகுதியான பத்துப் பெண்களை சிபாரிசு செய்யும். அதில் நீங்கள் நேர்முகம் கண்டு தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம்.

சரியா? இனி படிவத்தை நிரப்புங்கள்!

கும்பமுனி படிவத்தை நிரப்பத் துவங்கினார். ஏற்கனவே கொடுக்கப்பட்டிருந்த தன்- குறிப்பின் அடிப்படையில் தரப்பட்ட விவரங்கள் படிவத்தில் அச்சாகி இருந்தன.

பெயர் : க.திருமலைசாமி
வயது : 63
கல்வித் தகுதி : எம். ஏ (ஆங்கிலம்)
பணி : பேராசிரியர் (ஓய்வு)
செல்வங்கள் : வீடு, 15 இலட்சம் ரொக்கம்
உயரம்/ எடை/ மார்பளவு/ இடுப்பளவு/ இருக்கை அளவு
168 cm 73kg. 95cm. 99cm. 97cm
நோய்கள் (டிக் செய்க) : இரத்த அழுத்தம்/ நீரிழிவு/ இதய நோய்/ டி.பி/ பால்நோய்/ எய்ட்ஸ் ஆஸ்த்துமா/ மூலம்

பற்கள்- மேல்வரிசை	: பிடுங்கப்பட்டது/ஆடுவது
கீழ் வரிசை	:
பார்வை	: இடது கண்/ வலது கண்
கேள் திறன்	: இடது காது/ வலது காது
அங்கவீனங்கள்	:
	பிறப்பில்..............................
	இடையில்..............................
உணவு	: சைவம்/ அசைவம்
அசைவம் எனில்	: ஆடு/ மாடு/ பன்றி/கோழி/ மீன்/முட்டை/ பிற
உணவு வேளைகள்	: மூன்று/ நான்கு/ ஐந்து/ விழித்திருக்கும்போது/ இரண்டு மணிக்கொரு முறை
மது	: விஸ்கி/ பிராந்தி / ரம்/ ஜின்/ வோட்கா / ஒயின்/ சாராயம்/ பீர்/ கள்/ அரிஷ்டம்/ சல்பேட்டா
புகை	: சிகரெட்/பீடி/ சுருட்டு/ பைப் / ஹூக்கா
தாம்பூலம்	: வெற்றிலை பாக்கு/ புகையிலை/ பான்/பான்பராக்
பொடி (இட்லிப் பொடி அல்ல மூக்குப்பொடி)	:
பாலுறவுத் தேவை	: எப்போதும் வேண்டாம்/ ஆறுமாதம்/ மூன்றுமாதம்/ இரண்டுமாதம்/ மாதந்தோறும்/ மாதமிருமுறை/ வாரந்தோறும்/ தினமும்/ தினம் இரண்டுக்குக் குறையாமல்
பாலுறவு- உறுப்பு	: யோனி/ குதம்/ வாய்/ கை
செய்முறை (Please Specify)	:
குளியல்	: தினம் இருமுறை / தினமும்/

	வாரந்தோறும்/ மாதந்தோறும் /எப்போதாவது/ குளிப்பதே இல்லை
பல்தேய்த்தல்	: தினமும் / தோன்றும் போது
சிறுநீர் கழித்தல்	: நான்கு மணிக்கூர்/ இரண்டு மணிக்கூர்/ தோன்றும் போதெல்லாம்
மலம் கழித்தல்	: காலையும் மாலையும் / காலையில் மட்டும்/ மாலையில் மட்டும் / ஒவ்வொரு உணவுக்குப் பின்னும் / எப்போதாவது / எனிமா மூலம்
உறங்கும்நேரம்	:
விழிக்கும் நேரம்	:
பருகும் பானம்	: காப்பி/தேநீர்/இரண்டும்/ மோர்/ பழரசம்/ தண்ணீர்
விருப்பமான மெகா சீரியல்	: சித்தி / அன்னை / மாமியார்/ சின்னவீடு / கமங்கலி / தாலி/ வளைகாப்பு / மஞ்சள் குங்குமம்/ பாசம் / பல்லுக்குப் பல்/ கண்ணுக்குக் கண்/ களவே இன்பம்/ மூன்று காதலர்கள்/
பிடித்தமான நடிகை (ஆண்களுக்கு மட்டும்)	: 1. 2. 3.
பிடித்தமான நடிகர் (பெண்களுக்கு மட்டும்)	: 1. 2. 3.
மனைவியிடம் காணும் குறைகள் (ஆண்களுக்கு மட்டும்)	: 1. எப்போதும் மெகா சீரியல் 2. பாலுறவில் நாட்டமின்மை 3. பெருடல் (மார்பு, இடுப்பு, இருக்கை) 4. குறட்டை 5. ஏப்பம் 6. குசு விடுதல்

7. வாய் நாற்றம்

8. சளசளப்பு

9. சமையல் கட்டேட சதம்

10. புடவை, நகை, பாத்திரப் பைத்தியம்

11. பிற (Specify)

கணவரிடம் காணும் குறைகள் (பெண்களுக்கு மட்டும்) :

1. எப்போதும் பாலுறவு நாட்டம்
2. பெருந்தீனி
3. சாம்பார் குடித்தல்
4. குறட்டை
5. ஏப்பம்
6. குசு விடுதல்
7. பல் குத்துதல்
8. மூக்கு நோண்டுதல்
9. காது குடைதல்
10. தொந்தி
11. வாய் நாற்றம்
12. புறுபுறுப்பு / சளசளப்பு
13. சீரியல் காண மறுத்தல்
14. ஊர் சுற்றுதல்
15. குடி/புகை/பொடி/ தாம்பூலம்
16. நொறுக்குத் தீனி
17. பிற பெண்களின் வாய் பார்த்தல் / சில்மிஷம்/ பரத்தை நாட்டம் / சின்ன வீடு
18. சில்லறைத் திருட்டு
19. மேதாவி மனப்பான்மை
20. செய்தித் தாளை மூன்று முறை வாசித்தல்
21. இன்ன பிற (Specify)

எதிர்பார்ப்பு - புதிய துணைவி (ஆண்களுக்கு) :

1.
2.

3.

எதிர்பார்ப்பு - புதிய துணைவர் : 1.
(பெண்களுக்கு) 2.
3.

சுதந்திரம் வழங்கப்பட்டால்/
தண்டனை இல்லை என்றால்/
ரகசியம் பேணப்பட்டால்/
கொல்வீர்களா? : மனைவியை / கணவரை

ஐந்து பேரைக் கொல்ல
அரசு அனுமதித்தால் யாரைக்
கொல்வீர்கள் : பெயர் குற்றம்
1.
2.
3.
4.
5.

நீங்கள் விரும்பும் அடுத்த
முதலமைச்சர் : ஜெயலலிதா/ கருணாநிதி/
ராமதாசு/ விஜயகாந்த்/
விவேக்/ வடிவேலு/ குஷ்பு/
ஸ்டாலின்/சசிகலா/
ப. சிதம்பரம் / ஜி.கே. வாசன் /
பழ.நெடுமாறன்/
ஆர்.நல்லகண்ணு / எம்.ஜி.ஆர்

நீங்கள் விரும்பும்அடுத்த
தலைமை அமைச்சர் : அத்வானி/ சோனியா /
பிரியங்கா/ ராகுல் / சுஷ்மா
ஸ்வராஜ் / முரளி மனோகர்
ஜோஷி / சரத் பவார் / லல்லு
பிரசாத் யாதவ் / முலாயம் சிங்
யாதவ் / மம்தா பானர்ஜி / உமா
பாரதி / கருணாகரன் /
மாயாவதி / சுர்ஜித் சிங்
பர்னாலா / மகாத்மா காந்தி

நீங்கள் விரும்பும் அடுத்த குடியரசுத் தலைவர்	: அமிதாப் பச்சன் / தங்கர் பச்சான் / வாலி / வைரமுத்து / சாலமன் பாப்பையா / வீரப்பன் எனும் பெயருடைய எவரும் /திருக்கணங்குடி செல்லாரி

சில கேள்விகளுக்கு நொடிப் பொழுதும் சில கேள்விகளுக்கு நெடு நேரமும் ஆயிற்று கும்பமுனிக்கு. பெயரை மறுபடி திருப்பிப் பார்த்து தோராயமாக ஒரு கையெழுத்தும் போட்டார்.

கும்பமுனியின் மனதில் கிரிமினல் எண்ணம் ஒன்று மின்னலடித்தது. மேலும் அவர் இலக்கியவாதி அல்லவா! வயது, தோற்றம், முக அமைப்பு எல்லாம் பொருந்திவரும் என்றும் தோன்றியது. புகைப் படத்தை இனிமேல் யார் ஆய்வு செய்து கொண்டிருக்கப் போகிறார்கள்? கும்பமுனிக்கு கருப்புக் கண்ணாடிக்காரரின் மனைவியைச் சந்திக்கும் வாய்ப்பு எங்கே அமையப் போகிறது இனி?

ஆலோசனை அலுவலர், படிவங்களை வாங்கிப் பார்த்துவிட்டு, தன் முன்னால் இருந்த கணினியின் பொத்தான்களைத் தட்டினார். கோன் பனேங்கா குரோர்பதி அமிதாப் பச்சன் பாணியில் சற்று நேரம் கூர்ந்து பார்த்தார். கும்ப முனியின் முகத்தை ஆராய்ச்சி செய்தார். காத்திருந்தார். கும்பமுனியின் கைகளைப் பற்றிக் குலுக்கினார்.

“வாழ்த்துக்கள் மிஸ்டர். திருமலைசாமி. முதல் கட்டமாக உங்கள் மணமுறிவு பதிவு செய்யப்பட்டுவிட்டது. இனிமேல் நீங்கள் anyoung, eligible, rich, bachelor, உங்களுக்கு 748.79 புள்ளிகள் வழங்கப்பட்டுள்ளன 740க்கு ம் 750க்கும் இடையிலான புள்ளித் தகுதிப் பிரிவில் வருகிறீர்கள். இனி இந்த டோக்கனை மறந்து விடுங்கள். உங்கள் புதிய பதிவு எண் K4013 இதோ வைத்துக் கொள்ளுங்கள். இந்த எண்ணைச் சொல்லி 94-வது கவுன்டரில் மண் முறிவுச் சான்றிதழும், 106-வது கவுன்டரில் நாளை நேர்முகத்துக்கான புதிய டோக்கனையும் பெற்றுக் கொள்ளுங்கள். புதிய இணையாகச் சேர வருபவரின் தோற்றம், வயது, செல்வநிலை, ஆரோக்கியம் பார்த்து தெரிந்து கொள்ளுங்கள். எல்லாம் ஒத்துப் போனால் நாளை முற்பகலில் நீங்கள் புது மணமகன். Wish you a very happy newly married life. உங்கள் புதிய பதிவு எண்ணைச் சொல்லி 139-வது கவுன்டரில் மணமுறிவுக்கான எங்கள் அன்பளிப்பான பிளாஸ்டிக் பக்கட் பெற்றுக் கொள்ளுங்கள்”

பிளாஸ்டிக் பக்கெட்டும் கையுமாகச் சற்று நேரம் கும்பமுனி அலை பாய்ந்தார். மனது படை குதிரையாகப் பாய்ந்தது. துரோகம் என்றால் என்ன, பச்சைத் துரோகம் என்றால் என்ன, நம்பிக்கைத் துரோகம் என்றால் என்ன? எல்லாம் சொற்கள், மறுபடியும் சொற்கள்.... கோபுரம் உயரமா, கோபுரத்தின் பக்கம் நிற்கும் மரம் உயரமா? நின்று பார்க்கும் இடத்தின் வாக்கு.... வாக்கு என்பது உண்மையா மெய்ம்மையா? கும்பமுனிக்கு வீட்டுக்குப் போகலாம் என்று தோன்றியது.